
# புண்ணியம் ஆம் பாவம் போம்!



## வல்லிக்கண்ணன்

பத்மா பதிப்பகம்

# புண்ணியம் ஆம் பாவம்போம்!

(கதைக் கொத்து)

வல்லிக்கண்ணன்

பத்மா பதிப்பகம்
21, (ப. எ. 10), லோகநாதன் நகர் இரண்டாம் தெரு,
(100 அடி ரோடு, ராவுத்தர் பிலிம்ஸ் எதிரில்)
சூளைமேடு, சென்னை - 600 094.

## நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புண்ணியம் ஆம் பாவம்போம்! |
| நூலாசிரியர் | : | வல்லிக்கண்ணன் |
| மொழி | : | தமிழ் |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | பத்மா பதிப்பகம்<br>21, (ப.எ10), லோகநாதன் நகர்,<br>இரண்டாம் தெரு,<br>சூளைமேடு, சென்னை - 94.<br>தொலைபேசி : 4832680/4816311 |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, டிசம்பர், 2000 |
| பக்கங்கள் | : | 248 |
| நூல் அளவு | : | 18.5 x 12.5 செ.மீ. |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| தாள் | : | 10.5 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | கார்டுபோர்டு |
| ஒளி அச்சுக் கோவை | : | விக்னேஷ்வர் கிராபிக்ஸ்<br>142, பெரிய தெரு,<br>சென்னை - 600 005.<br>போன் : 8510852 |
| அச்சிட்டோர் | : | மணி ஆப்செட்<br>112, பெல்ஸ் ரோடு,<br>சென்னை - 600 005.<br>போன் : 8555249, 8558186 |

**விலை : ரூ. 65.00**

# கதைகளைப் பற்றி...

**வா**ழ்க்கையும் மனித இயல்புகளும் தினசரி எவ்வளவோ உண்மைகளை கற்றுத் தருகின்றன.

வாழ்க்கை மிகப் பரந்தது. ஆழமானது. விதம் விதமான அம்சங்களைக் கொண்டது. புதிரானது. சிக்கல்கள் மிகுந்தது. துன்பங்களும் சந்தோஷங்களும் நிறைந்தது. மனிதர்களை பலப்பல விதங்களில் பாதிப்பது. கொடுமையானது. இதம் தருவது. வேடிக்கையானது. முரண்கள் மிக்கது. ஆகவே சுவாரசியமானது.

வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிற மனிதர்களும் சுவாரசியமானவர்கள் விதம் விதமான இயல்புகளும் போக்குகளும் உடையவர்கள். உணர்ச்சிகளால் இயங்குகிறவர்கள் - இயக்குவிக்கப்படுகிறவர்கள்.

உணர்ச்சிகள் பலப்பல. ஒவ்வொரு உணர்ச்சியும் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரித்தான் பாதிக்க வேண்டும் என்பதில்லை. ஒரே உணர்வு ஒரு மனிதனை எல்லா நேரங்களிலும் ஒரே ரீதியில் தான் பாதிக்கும் என்பதும் இல்லை.

அதே போல வாழ்க்கையின் நிகழ்வுகளும் மனிதரை பல விதங்களில் பாதிக்கின்றன. ஒரே மாதிரியான நிகழ்வுகள்

வெவ்வேறு சமயங்களில் ஒருவரை வெவ்வேறு விதமாக பாதிக்கின்றன. அவர் அவர்களுடைய குறிப்பிட்ட நேரத்திய மனநிலை சூழ்நிலை, பக்கத் துணை முதலியவற்றைச் சார்ந்து அமையக்கூடிய விஷயம் அது.

இப்படி எல்லாம் இருப்பதனால், வாழ்க்கையை ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பவர்களுக்கு வாழ்க்கை ஒரு நாடகமாகவும், ரசிக்க வேண்டிய விளையாட்டாகவும் தோன்றுகிறது.

நான் வாழ்க்கைச் சுழல்களில் சுழிப்புகளில் - அனுபவச் சிக்கல்களில் - ஆழ்ந்து விடாது, வாழ்வின் ஓரத்தில் நின்று, வாழ்க்கையையும் மனிதர்களையும் வேடிக்கை பார்த்து வருகிறேன். அவை எழுப்புகிற எனது மன அலைகளையும் எண்ண ஓட்டங்களையும் சுவையாக எழுத்தில் பதிவு செய்து வந்திருக்கிறேன். சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள் என்ற வடிவங்களில்.

நான் பலநூறு சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். விதம் விதமான கதைகள். உருவத்திலும் உள்ளடக்கத்திலும் நடையிலும் ரகம் ரகமானவை. உணர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் தரும் கதைகள். மனிதர்களின் விந்தைப் போக்குகளையும் விசித்திரச் செயல்பாடுகளையும் விபரீதக் கற்பனைகளையும் விநோதமான நம்பிக்கைகளையும் விதம் விதமான அனுபவங்களையும் வெளிப்படுத்துகிற கதைகள்.

மனிதமனம் ஒரு அபூர்வ விஷயம். அதிசய சக்திகள் கொண்டது. அது மனிதர்களை எப்படி எப்படி எல்லாமோ ஆட்டி வைக்கிறது. அவற்றை சித்திரிக்கிற சொற்சித்திரங்கள் என் கதைகளில் மிகப் பல.

அன்பையும் மனிதநேயத்தையும் வலியுறுத்தும் கதைகள், வாழ்வின் வெறுமையையும் அர்த்தமற்ற தன்மை

யையும் சுட்டிக் காட்டும் கதைகள். மனிதரின் உயர்பண்பு களைக் கூறும் கதைகளைப் போலவே, அவர்களது பண்பாட்டுச் சிதைவுகளையும் சிறுமைக் குணங்களையும் எடுத்துக்காட்டும் கதைகளையும் எழுதியிருக்கிறேன்.

அப்படிப்பட்ட பலவிதமான கதைகளையும் இந்தத் தொகுப்பில் காணலாம். இவை வாழ்க்கை மற்றும் மனிதர்கள் பற்றிய யதார்த்த சித்திரிப்புகள்.

இத்தொகுப்பில் உள்ள கதைகள், இதுவரை வெளிவந்திருக்கிற எனது ஏனைய சிறுகதைத் தொகுப்புகளில் இடம் பெற்றிராத கதைகள் ஆகும். இவற்றை நன்கு தொகுத்து, அழகான முறையில் புத்தகமாகப் பிரசுரித்துள்ள பத்மா பதிப்பகத்துக்கும், என் இனிய நண்பர் ஜி. நடராஜன் அவர்களுக்கும் என் நன்றி உரியது.

- வல்லிக் கண்ணன்

# பதிப்புரை

'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்', 'எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்', 'அடக்கம் அமரருள் உய்க்கும்' போன்ற குறள் வரிகளுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகவும், எளிமைக்கும், தன்னடக்கத்திற்கும் இலக்கண மாகவும் திகழ்ந்து வருபவர் திரு. வல்லிக்கண்ணன் அவர்கள்.

தனது 16 வயதில் எழுத ஆரம்பித்த திரு. வல்லிக் கண்ணன் தமது 81 வயதிலும் எழுத்துப் பணியைத் தொய்வில்லாது தொடர்ந்து வருகிறார். எழுத்தையே வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்ட இவரது சிந்தனைகள் பலருக்கும் வாழ வழிகாட்டுவதாக அமைந்துள்ளன. இவரது படைப்புகள் வெறும் பொழுதுபோக்கு நூல்களாக இல்லாமல், எக்காலத்துக்கும் உகந்த கருத்துக் கருவூலங்களாகவும், புத்துணர்வையும், பகுத்தறிவையும் ஊட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

இவர் ஒரு படைப்பாளி மட்டுமல்ல, சிறந்த படிப்பாளி யும் கூட. அண்மையில் வெளிவந்த புதிய இளம் எழுத்தாளர் களின் படைப்புகளையும் கூடப் படித்திருப்பார். படித்த கையோடு அவர்களுக்குப் பாராட்டுக் கடிதமும் எழுதி யிருப்பார். அடுத்தவரை உற்சாகப்படுத்துவதில் இவருக்கு நிகர் இவரே!

'காய்தல் உவத்தல் அகற்றி', விருப்பு வெறுப்பின்றி திறனாய்வு செய்யும் இயல்பினர் இவர். இத்தகு சிறந்த அறிஞர் திரு. வல்லிக்கண்ணன் அவர்களது தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளை வெளியிடுவதில் பத்மா பதிப்பகம் பெருமிதம் கொள்கிறது. வெளியிட அனுமதி தந்தமைக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

அன்புடன்,

**U.S.S.R. G. நடராஜன்**

**பத்மா பதிப்பகம்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மனிதர்கள்? | 9 |
| 2. | சின்னவளும், பெரியவளும் | 14 |
| 3. | கனவு | 25 |
| 4. | சிறுகுறும்பு | 35 |
| 5. | பெரியவர்கள் | 41 |
| 6. | ஜாலியும் ஜோலியும் | 48 |
| 7. | பயந்தவன் | 59 |
| 8. | எங்கும் போகாதவனின் அற்புத யாத்திரைகள் | 69 |
| 9. | தொலைந்து போன சொர்க்கம் | 77 |
| 10. | அதே நேரத்தில்... | 88 |
| 11. | ஒரு தெரு | 98 |
| 12. | புண்ணியம் ஆம், பாவம் போம்! | 104 |
| 13. | ஞானோதயம் | 114 |
| 14. | எல்லைவெளி | 123 |
| 15. | செல்லரிக்கும் நெஞ்சு | 134 |
| 16. | வாழ்க்கைப் போராட்டம் | 149 |
| 17. | மனம் செய்யும் வேலை | 159 |

| | | |
|---|---|---|
| 18. | மனநிறைவு | 171 |
| 19. | வெளிச்சம் | 179 |
| 20. | முதுகெலும்பு இல்லாதவன் | 187 |
| 21. | காகித ராஜா | 195 |
| 22. | காலமும் கடவுளும் | 200 |
| 23. | ரொம்பப் பெரியவர் | 205 |
| 24. | வள்ளலின் கேடயம் | 209 |
| 25. | ஆறும், அழகிய சொக்கரும் | 214 |
| 26. | மனநிலை | 221 |
| 27. | மன தைரியம்! | 228 |
| 28. | மீனுக்குட்டி | 236 |
| 29. | பிறப்பு | 246 |

# 1. மனிதர்கள்?

திடீரென்று தீ பிடித்துக் கொண்டது. குப் என்று பற்றிய தீ செந்நாக்குகளை நீட்டி நீட்டிப் பாய்ந்தது. காய்ந்து முருகியிருந்த ஓலைக் கொட்டகையில் குபு குபு என்று படர்ந்து கூத்திட்டது.

உள்ளே வேடிக்கையாகப் பார்த்திருந்தவர்கள் நிலைமையை புரிந்து கொள்வதற்கு சிறிது நேரம் பிடித்தது.

'தீ' 'தீ புடிச்சிட்டுது.. கொட்டகை பத்தி எரியுது.'

பதறிய குரல்கள் வெளியிலிருந்துதான் வெடித்தன முதலில். தொடர்ந்து உள்ளே தெறித்துச் சிதறின. உடனடியாகப் பரபரப்பு, பதட்டம், பயபீதி, கூச்சல், ஓலம், அலறல் - குரல்கள் கதம்பமாகிக் குழம்பிப் புரண்டன.

அமைதியாய், ஒழுங்காய், சோம்பல் சுகத்தோடு உட்கார்ந்திருந்த கூட்டம் கலவரமும் பயமும் உயிராசையும் மண்டிக் குழம்பும் மனித மந்தையாக மாறியது. சுய நலம் வெறித்தனமாகத் தாண்டவம் புரியலாயிற்று. 'நாம் தப்பிப் பிழைக்கணும்... நாம் உயிரோடு தப்பிக்கணும்' இதுவே

ஒவ்வொரு உருவத்தினுள்ளும் பொங்கிய இயக்கு சக்தியாக அமைந்தது. முண்டியடித்து முன்னேறி, இடித்து நெருக்கி, சாடிச் சமட்டி, சமரிட்டு, குத்தித் தள்ளி மிதித்துத்துவைத்து, 'எனக்கு வழி எனக்கு வழி' 'நான் வெளியேறணுமே - நான் வெளியேறணுமே - நான் தப்பிப் பிழைக்கணுமே' என்ற தவிப்போடு படபடத்துக் குழம்பி, குழப்பத்தை அதிகப் படுத்தித் திணறித் திண்டாடியது கும்பல்.

குறுகலான வாசலிலே பெரும் நெருக்கடி, இடித்து மோதல்கள் கூச்சல் கூப்பாடுகள் போராட்டங்கள்.

மனிதப் பிராணிகள் படுகிற அவதிகளை, பீதியடைந்து படுகிற பாடுகளை, பரஸ்பரம் படுத்திக் கொள்கிற வேதனை களை எல்லாம் பார்த்துச் சிரித்துக் கெக்கலிப்பதுபோல் தீ தாவித் தாவிப் பரவியது. செந்நாக்குகள் எட்டிய இடங்களை எல்லாம் தொட்டன. முன்னே முன்னே நீண்டன, சுழன்றன.

தீ - தீ என்ற கூச்சல் மேலோங்கி நின்றது. தப்பி வெளியேறப் போராடிய மனிதர்களின் வெறிக்கூச்சல் - பய ஓலம் - ஏலாக் குரல், சோக அரற்றல் பயங்கரமாகப் பரவியது.

மனிதர்கள் செயலற்றுப் போன நிலை அங்கே.

பொழுது போக்காக திரைப்படம் பார்க்க உள்ளே குழுமியிருந்தவர்கள் திடீர்த் தீ விபத்தில் சிக்கித் திணறுவதை வேடிக்கை பார்க்கத் திரண்டவர்கள் வெளியே நின்று ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே சாவின் துயரக் கூச்சல். வெளியே வேடிக்கை பார்க்கக் கூடியவர்களின்கொக்கரிப்பு. பாதுகாப்பு முயற்சி களில் முனைந்தோரின் பரபரப்பு வேறு.

எல்லோரையும் அலட்சியப் படுத்தியபடி தீ வெறி வேகத்தோடு வேட்டையாடிக் கொண்டிருந்தது. சினந்து

சிரித்தது. சீறி விழுங்கியது. தப்பியவர்களை தப்ப விட்ட ஆங்காரம் மீதுற, தப்ப முயன்றவர்களைப் பற்றிச் சுவைக்கத் துடிப்பது போல் துள்ளிப் பாய்ந்தது. சுழன்றது. பரவியது. பெருகியது. இரைச்சலிட்டது. ஒளி பாய்ச்சியது. ஓங்கி ஓங்கி வளர்ந்தது.

உயிருக்குப் போராடிய மனிதர்களின் பரபரப்பும் பாய்ச் சலும், முண்டியடித்தலும் முட்டி மோதலும், விழுதலும் எழுதலும் வெளியே பாய்ந்து ஓடுதலும், வெறி வேகமும் மூர்க்கத்தனமும் குருட்டு இயக்கமும பெற்றிருந்தன. 'நான் தப்பிப் பிழைக்கணும்... எப்படியும் வெளியே போகணும்'. இதுவே ஒவ்வொரு உருவத்தினுள்ளும் இயங்கிய உந்து சக்தியாயிற்று.

மூங்கில்கள் வெடித்தன. ஓலைகள் எரிந்து, சரிந்து, உள்ளே விழுந்தன. பக்கத்தட்டிகள் பற்றி எரிந்தன. தீக்கு நல்ல கொண்டாட்டம். குறும்புத் தனமாக விளையாடியது. ஆண்கள், பெண்களின் உடைகளைச் சீண்டியது. உடம்பைத் தொட்டு ருசித்தது.

உயிர் தப்ப விரைவோர் குருட்டு வேகத்தோடு பாய்ந் தனர். தீயிடமிருந்து தப்ப முண்டி முன்னேறினர்.

வாசல் வழி வெளியே வந்தவர்களைப் பார்த்து ஓ - ஓ என்று ஆரவாரித்தது வெளியே வேடிக்கை பார்த்து நின்ற மனிதக்கும்பல்.

பதறியடித்துப் பாய்ந்து வந்தது ஒரு பெண் உருவம். தீ சுவைத்த சீலையை பீதியோடு உதறி எறிந்து, மேலே தீயாய் சிரித்த ஜாக்கெட்டைப் பிய்த்து எறிந்து, பேய் மாதிரி வந்தாள் ஒருத்தி. 'நான் தப்பணுமே - தப்பிப் பிழைக்கணுமே!' இது தான் அவளது உள்ளத்தின் மந்திர உச்சாடனமாக அமைந் திருக்கிறது.

வெளியே நின்றவர்களுக்கு எதிர்பாராத வேடிக்கை அது.

'ஏய் அம்மணக்குண்டிப் பொம்பிளை! - ஏஹே, முண்டக் கட்டை பொண்ணுடோய்...'

அவிழ்த்துப் போட்டுவிட்டு ஆடுவதை பணம் கொடுத்துப் பார்க்கப் பறவாப் பறக்கும் சுபாவத்தினர் சும்மா கிடைக்கிற காட்சியை 'ரசிக்காமல்' விட்டு விடுவார்களா? சூழ்நிலை, சமய சந்தர்ப்பம்? ஆங், அதுகளை கவனிக்க இதுவா நேரம்?

வெளியே முண்டி நெருக்கியது கும்பல் ஆடையற்ற பெண் உருவத்தைக் கண்ணாறக் காண்பதற்காக! உற்சாகக் கூச்சல் வேறு. 'ஓகோய்! டோடோய்!' என்ற பரிகாசக் கூவல்கள்.

வேட்டை நாய்களிடையே அகப்பட்டுக் கொண்ட அப்பி ராணி முயல் மாதிரி விழித்தாள் அவள். திகைத்துத் திண்டாடினாள்.

அம்மணக் குண்டி டோடோய்! ஆட்டாம்புழுக்கை டோடோய்! தென்னமரத்திலே தேரோட்டம் திரும்பிப் பார்த்தா நாயோட்டம்!

எவனோ ஒரு வீணன் நெடுங் குரலில் கத்தினான். விசிலடித்துப் பழக்கப்பட்ட வீணர்கள் 'உய்.. உய் - உய்' என்று வாயினால் சீட்டி அடித்தார்கள். கெக்கலித்தனர் பற்பலர்.

வெளிச்சத்தைக் கண்டு மிரண்ட மூஞ்சூறு மாதிரி அவள் செயல் திறம் இழந்து திகைத்து நின்றாள். உந்தித் தள்ளிய உயிராசை மழுங்கி விட்டது. இப்போது உடலில் ஊறியிருந்த மான வெட்க உணர்வுகள் வலுவாக இயங்க, அவள் நாணிக்

குழம்பும் பெண் ஆனாள். வெறித்தனமாய் இடித்து நெருக்கி, வேட்கைப் பார்வையால் தன் உடம்பை மேய்ந்து நிற்கும் மந்தை அவளுக்கு பீதி தந்தது.

சட்டென்று திரும்பி சடாரெனத் தீயினுள் ஓடிப்போனாள் அந்தப் பெண்.

எரியும் கொட்டகை ஏற்றுக் கொண்டது அவளை. கோணல் மாணல் பற்களைக் காட்டி கோரச் சிரிப்புச் சிரித்தது செந்தீ.

# 2. சின்னவரும், பெரியவரும்

''அணைக்காதே! விளக்கை அணைக்காதே!'' - அடித் தொண்டையில் அலறினாள் வள்ளி. அதில் மேலோங்கி ஒலித்தது அச்சம்.

''ஏன்? ஏன் அணைக்கப்படாது?'' என்று கத்தினார் பெரியவர்; ஐந்து வயது வள்ளியின் தாத்தா அவர்.

''பயமாயிருக்கு!''

''என்னட்டி பயம்?''

''இருட்டைக் கண்டாலே எனக்கு பயம்தான். நீ விளக்கை அணைக்காதேயின்னா அணையாமல் இரேன்! இப்ப எதுக்கு விளக்கை அணைக்கப் போறே?'' என்று வாதாடினாள் அவள்.

''விளக்கு எரிஞ்சா தூக்கம் வராது. அதுக்குத்தான்.''

பெரிதாக எரிந்து கொண்டிருந்த அரிக்கன் விளக்கின் திரியை உள்ளுக்குள் இறக்கிச் சுருக்குவதற்காக அவர் கையை நீட்டினார்.

அவள் அலறினாள்: ''அணைக்காதே ஐயோ, அணைக் காதேயேன்!''

அவர் வறண்ட சிரிப்பு சிந்தினார். "நல்ல புள்ளெதான் போ! அஞ்சு வயசுப் புள்ளெக்கி பயம் ஏன்னட்டி பயம்? இருட்டு என்ன உன்னை முழுங்கியா போடும்?" என்றார்.

வள்ளி ஒன்றும் பேசவில்லை. வெறும் தரையில் படுத்துக் கிடந்தாள்.

அது சுமாரான வீடு. சத்திரம் மாதிரிப் பெரியதாகவும் இல்லை; போதுமான வசதிகள் இல்லாத சின்ன வீடும் இல்லை. பழங்காலத்து வீடு. எலெக்ட்ரிக் லைட் கிடையாது. இப்போது வீட்டில் தாத்தாவும் பேத்தியும்தான். அப்பா, அம்மா எல்லோரும் வெளியூர் போயிருந்தார்கள். வள்ளி அவர்களோடு வரமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டாள். அவள் நோக்கில் அது பெரிய வீடுதான். ஆகவே, பெரிய இடத்தில், தாத்தாவுக்குத் துணை பேத்தி; பேத்திக்குத் துணை தாத்தா என்ற நிலை.

அவள் தனியாக இருப்பது இதுதான் முதல் தடவை. இன்றுதான் முதல் நாள்.

பகலில் எப்படியோ பொழுது போய்விட்டது. இரவு தான் தொல்லையாகவும் வேதனையாகவும் தோன்றியது பெரியவருக்கு. அதாவது, இரவில் சிறுமி தொல்லையாக மாறி, தொணதொணக்க ஆரம்பித்திருந்தாள்.

விளக்கு எரிந்துகொண்டிருந்தது. "ஏட்டி, விரிப்பிலே படேன். கீழே படுத்தபடி தூங்கிப் போயிராதே!" என்று எச்சரித்தார் பாட்டனார்.

"மாட்டேன். எனக்கு தூக்கம் வரலே" என்று சொல்லி வள்ளி எழுந்து உட்கார்ந்தாள். "உனக்கு தூக்கம் வருதா, தாத்தா?"

"இல்லை."

''அப்பம் ஒரு கதை சொல்லேன்!''

அவர் ஆரம்பித்தார் - செட்டியார் கடையில் வடை திருடிய காக்கா கதைதான்.

''இந்தக் கதை வேண்டாம். இது தான் எனக்குத் தெரியுமே. அம்மா சொல்லியிருக்கா. அப்பா சொல்லி யாச்சு. நீயும் எத்தனையோ தடவை சொல்லியிருக்கே..''

''சரி. வேறே கதை சொல்லுதேன்'' என்று தலையைச் சொறிந்தார் தாத்தா. ''நீ படுத்துக்கோ. நானும் பக்கத்திலே படுத்துக்கிடுதேன். விளக்கை அணைக்கவேண்டாம். கொஞ்சமா எரியும்படி சுருக்கி வைக்கலாம், என்ன?'' என்று குழைந்தார்.

வள்ளி மறுக்கவில்லை. அவரும் அப்படியே செய்தார். படுத்தார். கதை சொல்லலானார். சித்திரக்குள்ளன் கதை: ''ஒரு அப்பா அம்மாவுக்கு ஏழு பிள்ளைகள். கடைசிப்பிள்ளை ரொம்பவும் குள்ளம். அதனாலே, சித்திரக் குள்ளன்னு பேரு. வீட்டிலே ரொம்பவும் கஷ்டம். சோத்துக்கு வழியில்லே. அரைவயிறு, கால் வயிறு சாப்பாடு கூடக் கிடைக்கல்லே. அப்பாவும் அம்மாவும் யோசிச்சாங்க. பிள்ளைகளைக் கூட்டிக் கிட்டுப் போயி, பக்கத்துக் காட்டிலே விட்டுப் போட்டு வந்திரணும்னு முடிவுபண்ணினாங்க. அவங்க ராத்திரி வேளையிலே இப்படி ரகசியம் பேசியதை, குள்ளன் மட்டும் கவனிச்சுக் கேட்டக்கிட்டிருந்தான். மத்தப் பிள்ளைகள்ளாம் தூங்கிட்டுது. குள்ளப்பயலுக்கு தூக்கமே வரலே. விடியறதுக்கு முன்னாடி எழுந்திருச்சான். வெள்ளைக் கல்லுகளாப் பார்த்துப் பொறுக்கி, மடி நிறையக் கட்டிக் கிட்டான்...''

''எதுக்கு?''

''கதையிலே அது வரும். நீ பேசாம கேளு... எல்லாரும்

எழுந்திருச்சதும், பிள்ளைகளையெல்லாம் அப்பா கூப்பிட்டாரு. உங்களுக்கு வேடிக்கை காட்டப் போறேன்னு சொல்லி, காட்டுக்குக் கூட்டிட்டுப் போனாரு. பிள்ளைகள் எல்லாரும் அங்கேயும் இங்கேயும் அலைஞ்சு விளையாடினாங்க. அவங்களுக்குத் தெரியாம, அவரு மறைஞ்சு மறைஞ்சு வீட்டுக்கு வந்துட்டாரு...''

''அம்மா.'' என்று தீனக்குரல் கொடுத்தாள் வள்ளி.

''அம்மா வீட்டிலே இருந்தாள்..''

''இல்லே. அம்மா, எங்கம்மா எப்பம் வருவா?'' - அழுகையின் சாயல் தென்பட்டது இதில்.

''ஏன்ட்டி, இப்ப என்ன வந்துது?''

''அந்தப் புள்ளைக, பாவம், காட்டிலே என்ன செய்யும்? அப்பா அம்மா இல்லாமே?''

அவசரம் அவசரமாகத் தொடர்ந்தார் தாத்தா: ''அதுக்குத்தான் குள்ளப்பயல் ஒரு தந்திரம் பண்ணிப் போட்டானே? அவன் மடி நிறைய வெள்ளைக்கல்லு சேர்த்து வச்சிருந்தானில்லே? அதையெல்லாம் என்ன செய்தான்னு நெனச்சே? அப்பா எல்லாரையும் கூட்டிக்கிட்டு, காட்டை நோக்கிப் போகையிலே, அவன் பின்னாலே நடந்தான். வழி நெடுக, வீட்டிலேயிருந்து காடு வரை, அந்தக் கல்லுகளை ஒண்ணு ஒண்ணா தரையிலே வீசிக்கிட்டு வந்தான்; அடையாளமா இருக்குமின்னு, சாயங்காலம், அண்ணன் மாரெல்லாம் அப்பாவைக் காணோமேன்னு அழுதாங்க. ''வீட்டுக்கு வழி தெரியாதே, எப்படிப்போறது?''ன்னு அழுதாங்க. குள்ளன் மட்டும் அழாமே, ''நான் கூட்டிக்கிட்டுப் போறேன். வாங்கன்னு தைரியமாப் பேசினான் காலையிலே, வழி நெடுக வீசிவெச்ச வெள்ளைக் கல்லுகளை அடையாளம் பார்த்துக்கிட்டு அவன் முன்னாலே நடந்தான். எல்லாரும் அவன் பின்னாலேயே போனாங்க. வீடு வந்து சேர்ந்து

ட்டாங்க...''

''கதை போதும்'' என்றாள் வள்ளி.

''கதை முடியல்லே. இன்னும் நிறைய இருக்கு.''

''இது வேண்டாம். வேறே கதை சொல்லு. இல்லேன்னா, எனக்கு அழுகை வந்திரும்.''

அவள் அழுவதை தாத்தா வரவேற்கத் தயாராக இல்லை. வேறு கதைகளைச் சொன்னார். ,வழக்கமான குழந்தைக் கதைகள்தான்... ஆனால் வள்ளியின் நினைப்பு குள்ளன் கதையிலேயே நிலைத்து நின்றது என்பது அவள் கேட்ட கேள்வியிலிருந்து புரிந்தது. ''அம்மாவும் அப்பாவும் பொல்லாதவங்கதான். சின்னப் பையன்களை காட்டிலே விட்டுட்டா அவங்க என்ன செய்வாங்க? பயமா இருக்காது? பாம்பு கீம்பு கடிக்க வராது?''

அவள் பார்வை அங்கும் இங்கும் அலைபாய்ந்தது. திடீரென்று கத்தினாள்: ''விளக்கைப் பெரிசாத் தூண்டு. அதோ பாம்புமாதிரி என்னமோ தெரியுது...''

''சும்மா இருட்டீ. இங்கே பூச்சி கீச்சி எதுவும் வராது'' என்று அதட்டினார் பெரியவர்.

''அந்தா நீயே பாரு. சுவரு மூலையிலே. தூணுக்கு அந்தப் பக்கம்...''

அவர் எழுந்து விளக்கைத் தூண்டினார். சிறுமி காட்டிய மூலையில் பார்த்தார். பழங் கயிறு ஒன்று கிடந்தது. அவளுக்குத் தைரியம் கூறினார்.

''விளக்கு இப்படியே எரியட்டும். சுருக்க வேண்டாம்'' என்று அவள் கட்டளையிட்டாள்.

''சரிசரி. கண்ணை மூடிக்கிட்டு படுத்திரு. தூக்கம் தானா வந்திரும். பயம் ஓடிப்போயிரும்'' என்று உபதேசித்தார்.

விளக்கில் எண்ணெய் தான் இல்லையோ, அல்லது வேறு கோளாறு தானோ. டபுக், டபுக் என்று ஒளி இரண்டு மூன்று தரம் திரியில் குதித்தது.

''இது ஏன் இப்படி குதிக்குது?'' என்று ஆச்சர்யப் பட்டாள் வள்ளி. அவள் கேட்டு வாய் மூடுவதற்குள், விளக்கு அணைந்துவிட்டது. மண்ணெண்ணெய் நாற்றம் எங்கும் நிறைந்து நின்றது. ''தாத்தா, விளக்கு அணஞ்சி போச்சே?'' என்றாள் அவள்.

''ஆமா ஆமா. எண்ணெய் இருந்திருக்காது. அதுனாலே என்ன? தூங்க வேண்டிய நேரம்தானே?''

வள்ளி சிறிதுநேரம் பேசாமல் கிடந்தாள். பிறகு தொணதொணப்பைத் தொடர்ந்தாள்.

''அங்கே என்னமோ சத்தம் கேக்குதே, அது என்னதா யிருக்கும்? எலியா இருக்குமோ? அல்லது, பூனையா? நம்ம மேலே வந்து விழுமோ?'' என்றாள். ''தாத்தா, அப்பாவும் அம்மையும் என்னை விட்டுட்டுப் போயிருவாங்களோ? அவங்க திரும்பி வரலேன்னு சொன்னா, நான் என்ன பண்ணுவேன்?''

பெரியவருக்கு எரிச்சல் வந்தது. ''ஏண்டி, வாயை மூடிக் கிட்டுக் கிடக்க மாட்டே? நீயும் உங்க அம்மைகூடப் போயி ருக்க வேண்டியதுதானே? இங்கேயே தான் இருப்பேன்னு ஏன் அடம்புடிச்சே?'' என்று வெடுவெடுத்தார்.

வள்ளி வாய் திறக்கவில்லை. ஆனால் தூங்கவும் இல்லை. வெளியே, தொழுவத்தின் தகரக் கொட்டகை மீது டப்டுப் என்று ஓசை எழுந்தது. பருமனான மழைத் துளிகள் விழுந்தன. ''தாத்தா... தாத்தா'' என்று மெதுவாகக் குரல் கொடுத்தாள் வள்ளி!

''ஊம்ங்?''

''அது என்ன சத்தம்? திருட்டுப் பயல் போலிருக்கு!''

மழை சடசடவென்று பெய்யத் தொடங்கியது. ''மழை தான் பெய்யுது, தகரத்து மேலே மழை விழுற சத்தம்தான்...'' சிறிது நேரத்தில் மழை நின்று விட்டது. நாய் குரைத்தது. இன்னொரு நாய் பதிலுக்குக் குரைத்தது.

''தாத்தா...''

அவர் பேசவில்லை. தூக்கக் கிறக்கம்.

''பயமாருக்கே... அம்மா!''

ஆந்தையின் அலறல் கோரமாகக் கேட்டது. இருட்டில் வீட்டினுள் எது எதுவோ நடமாடுவதுபோல் தோன்றியது அவளுக்கு கள்ளப்பயல் பேய் பூனை பாம்பு - அவள் மனம் தறி கெட்டு ஓடியது.

''தாத்தா தாத்தா..''

எலி ஒன்று விழுந்தடித்து ஓடிவந்து அவள்மீது ஏறிக் குதித்துத் துள்ளிச் சென்றது. ''தாத்தா!'' என்று பயங்கரமாகக் கூச்சலிட்டாள் அவள். அவர் என்னவோ ஏதோ என்று திடுக்கிட்டுப் பதறி எழுந்தார்.

''மேலே என்னமோ விழுந்து ஓடிச்சு'' என்று பயத்தோடு புலம்பினாள் பேத்தி.

''எலியாயிருக்கும்... இப்படி என் பக்கத்திலே வந்து படுத்துக்கோ'' என்று அவர் அவளை அருகில் அழைத்து தைரியம் ஊட்டினார். எனினும் அவள் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டுதான் இருந்தது.

''இருட்டைக் கண்டு சின்னப்புள்ளைக்கு ஏன்தான் இந்தப் பயமோ? குப்புறப் படுத்து தலையணையிலே

முகத்தைப் புதைச்சு கண்ணை சிக்னு மூடிக்கோ; பயம் தெரியாது'' என்று உபதேசித்தார் பெரியவர்.

அவள் அவ்வாறே கிடந்தாள். ஆயினும் அவளுக்குத் தூக்கம் வர வெகு நேரம் பிடித்தது...

விடிந்ததும் தாத்தா எழுந்து அவர் வேலைகளைக் கவனிக்கப் போனார்.

வள்ளி எழுந்தபோது வெயில் வந்திருந்தது. குருவிகள் தத்தியும் பறந்தும் விளையாடிக் கொண்டிருந்தன. ஒரு கோழி வீட்டுக்குள் வந்தது. அதை வெளியே துரத்திக்கொண்டு ஓடினாள். பூனை ஒன்று ஒரு சுவர் மீது சோம்பலாகப் படுத்திருந்தது. அதைப் பார்ப்பதற்கு இப்போது அவளுக்கு பயம் எதுவுமேயில்லை. ''அடி, குத்து!'' என்று கூட விரட்டினாள்.

தோட்டத்துப் பக்கம் போனாள். செம்பருத்திச் செடியில் பூக்கள் நிறைந்திருந்தன. அந்தச் செம்மை அவள் கவனத்தைக் கவர்ந்தது. சில பூக்களைப் பறிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. முயற்சி செய்தாள், எட்டவில்லை. பெரு விரல் களை ஊன்றி நின்று, எம்பிப் பார்த்தாள்; ஊகூங். அங்கே ஒரு கட்டை கிடந்தது அவள் பார்வையில் பட்டது. அதன் மீது ஏறி நின்று, முன்னே வளைந்து, கையை நீட்டி, செடியைப் பிடித்து இழுத்தாள்.

''ஏட்டி ஏட்டி, அங்கே என்ன செய்யுதே? கீழே விழுந்திரப்போறே'' என்று பதட்டத்துடன் எச்சரித்தவாறு தாத்தா அங்கே வந்து சேர்ந்தார்.

''பூப் பறிக்கேன்!'' - பெருமை குமிழியிட்டது அவள் பதிலில்.

''இப்படி முன்னாலே வளைஞ்சா, கீழேதான் விழுவே. மூக்கிலே அடிபடும்'' என்றார் அவர். ''கட்டை சரியாக இல்லை. இது மகுடிச்சு நீ கீழே விழுந்திருவே!''

அவள் வெற்றிகரமாக இரண்டு பூக்களைப் பறித்து விட்டாள். அந்தப் பெருமையிலும் மகிழ்விலும், மேலே யிருந்து ''தொபுக்கடீர்'' என்று கீழே குதித்தாள்; சிரித்தாள்.

அவர் பயந்துவிட்டார். ''ஏட்டி, இப்படிக் குதிக்கலாமா? காலு கையி முறிஞ்சிதுன்னா?'' என்றார்.

''எனக்குத்தான் அடிபடலியே!'' என்று கூவியபடி, அவள் குதித்தாள்; ஓடினாள்.

''ஏ வள்ளி! ஏட்டி! மெதுவாப் போ. மழை பெஞ்ச தரை; வழுக்கி விட்டிரும். கீழே விழுந்து முழங்காலைப் பேர்த்துக்கிட்டு அழப்போறே!'' என்று கலவரத்தோடு நல்ல வார்த்தைகள் சொன்னார்.

அவள் ஏன் கேட்கிறாள்! ஓடினாள். அங்கிருந்த கிணற்றை எட்டிப் பார்த்தாள். கிணற்றைச் சுற்றிக் கட்டியிருந்த துவளத்தின் மீது உன்னிச் சாய்ந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

பெரியவருக்கு உண்மையாகவே பயம். ''சே, இந்தப் புள்ளெ எத்தினி தொல்லை தருது! சனியன்! கொஞ்ச நேரம் கூடச் சும்மா இருக்கமாட்டேன்குதே!'' - மனம் அலுத்துக் கொண்டது. அவர் வேகமாகக் கிணற்றருகே போனார். ''ஏட்டி, உனக்கு பயமாயில்லே? கிணத்தை இப்படி எட்டிப் பார்க்கியே, உள்ளே விழுந்தா என்ன செய்வே?'' என்றார்.

''தண்ணி ஆழத்திலே கிடக்குது. தெரியமாட்டேன்குது. அதுதான் எட்டிப் பார்த்தேன்'' என்று சகஜமாகப் பேசி. தரை மீது கால் பதிந்து நின்றாள் வள்ளி.

''கிணத்தை எல்லாம் எட்டிப் பார்க்கப்படாது. ஆமா'' என்று சிரத்தையோடு உபதேசித்தார் அவர்.

அவள் கீழே விழுந்து, காயப்பட்டு, அழப்போகிறாள் என்று தாத்தா பயந்துகொண்டு அவள் பின்னாலேயே போனார். அடிக்கொரு தரம் தன் பயத்தை ஒலிபரப்பிக் கொண்டிருந்தார். எச்சரித்தார்; மிரட்டினார்.

ஒரு நாய் ஓடி வந்தது. அவள் ஒரு கல்லை எடுத்து அதன் மேலே வீசி எறிந்தாள். கல் நாய் மீது படவில்லை.

''ஏட்டி, நாய் உன்னை கடிச்சுப்போடும்'' என்றார் பெரியவர்.

''அது ஒண்ணும் கடிக்காது. அது தான் ஓடியே போயிட்டுதே. நாயைக் கண்டா எனக்கு பயமே கிடையாது. தெரியுமா?'' என்று ஜம்பம் அடித்தாள் சிறுமி.

''நாயிட்டே எல்லாம் சேட்டை பண்ணப்படாது. ஒரு சமயம் இல்லாட்டி ஒரு சமயம் லபக்குனு கடிச்சிரும்!'

வள்ளி எதிர்ப்புரை கூறவில்லை. சுவர் மீது சார்த்தப் பட்டிருந்த ஏணி அவள் கவனத்தைக் கவர்ந்தது. ஓடிப்போய் அதன் படியில் கால் வைத்து ஏறினாள். மூன்று படிகள் ஏறிவிட்டாள்.

அதன் பிறகு தான் தாத்தா கவனித்தார். பதறினார். ''ஏட்டி ஏட்டி, கீழே இறங்கு. கால் தவறி விழப்போறே. ஏணியே சரிஞ்சிரும்... சே, இந்தப் புள்ளை என்ன பாடு படுத்துது!'' என்று எரிச்சலோடு குறிப்பிட்டார்.

''ஏன் தான் நீ இப்படி பயப்படுறியோ?'' என்று கேட்ட படி கீழே குதித்தாள் வள்ளி.

''இப்படி எல்லாம் குதிக்கப்படாதுன்னு எத்தனை தடவை சொல்றது? காலு கையி முறிஞ்சிரப் போகுதுட்டீ!'' என்று பெரியவர் கத்தினார்.

அவருக்கு வேறு அலுவல் எதுவோ வந்தது. ''வள்ளி, வீட்டுக்குள்ளே போ நான் இதோ வாறேன்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

வள்ளி குதித்துக் கொண்டே உள்ளே போனாள். சிறிது நேரத்துக்குப் பிறகு அவள் தலை மொட்டை மாடியில் தென் பட்டது. அங்கே திடுதிடுவென ஓடினாள். குட்டையான கைப்பிடிச் சுவர் மீது படுத்தபடி தோட்டத்தை எட்டிப் பார்த்து, ''தாத்தா! ஏ தாத்தா!'' என்று கத்தினாள்.

தோட்டத்தில் நின்று நிமிர்ந்து பார்த்த பெரியவர் நிஜமாகவே பயந்து போனார். ''இந்தப் புள்ளை தட்டட்டிக் கவுதத்தின் மேலே ஏறி எட்டிப் பார்க்குதே! கால் தவறிக் கீழே விழுந்தால் என்ன ஆகிறது?'' - எனவே கோபமாகக் கூப்பாடு போட்டார். ''அங்கே ஏன்ட்டி போனே? அந்தச் சுவரு மேலே ஏன் ஏறி நிக்கிறே? கீழே விழுந்தா, செத்தே போவையேட்டி''

வள்ளி கலகலவெனச் சிரித்தாள். ''என்ன தாத்தா நீ! வெளிச்சமா இருக்கிற நேரத்திலே, கண்டதுக்கெல்லாம் இப்படிப் பயந்து சாகிறே'' என்று கேலி வேறு பேசினாள். ''நான் சின்னப்புள்ளெ. இருட்டைக் கண்டு பயப்படுவேன். அது சரி, நீ பெரிய ஆளு. வெளிச்சத்திலும், வெறும் வெளி யிலும் பயப்படுறது நல்லாவே இல்லே!'' என்று பெரிய மனுஷி தோரணையில் பேசினாள்.

''இந்தச் சின்னச் சவத்தை என்ன பண்ணுதுன்னே புரியலியே!'' என்று மனம் குழம்பிய பெரியவர், செய்யும் வகை அறியாது, தலையைச் சொறிந்து கொண்டு நின்றார்.

''பேன் கடிக்குதா, தாத்தா? மொட்டைத் தலையிலே பேனு எப்படி வந்தது? இந்தா வாறேன். வந்து, பேன் கிடக்குதான்னு பாக்கிறேன்'' என்று சொன்ன வள்ளியின் தலை மறைந்தது. அவள் ஓடிவரும் சத்தம் திம்திம் என்று கேட்டது.

# 3. கனவு

இரவுகளை நான் பெரிதும் விரும்புகிறேன். அவை நிம்மதியாகத் தூங்குவதற்குத் துணைபுரிவதால்.

தூக்கத்தை நான் மிகுதியும் நேசிக்கிறேன். அது கனவுகள் நிகழ அரங்கம் அமைத்துத் தருவதால்.

கனவுகளை நான் காதலிக்கிறேன். அற்புதமான, இனிமை நிறைந்த, கிளர்ச்சி ஊட்டும், அனுபவங்களுக்கு அவை ஆதாரமாக இருப்பதனால்.

இரவு நேரங்களை நான் எவ்வளவு ஆர்வத்தோடு வரவேற்கிறேன் என்பது எவருக்கும் தெரியாது. தெரிந்தாலும், ஏன் அப்படி வரவேற்கிறேன் என்பது அவர்களுக்குப் புரியாது.

புதிய பிரதேசங்களுக்குப் பிரயாணம்போகச் சித்தமாகிற சிறுவனுக்கு உண்டாகிற பரபரப்பும், உளக்கிளர்ச்சியும், எதிர்பார்த்தலும், அவாவும் எனக்கு எழுகின்றன! ஒவ்வொரு இரவிலும் தூங்கப் போவதற்கு முன்னால்.

'தூக்கம் - அது இனியது; அது நன்று; அது வாழ்க!'' என்று என் மனம் இசைக்கிறது. தூக்கம் உடலுக்கு ஓய்வு

தரும், உள்ளத்துக்கு இதம் அளிக்கும் என்பதனால் அல்ல. எனக்குப் பரவசமூட்டும் புதிய புதிய உலகங்களுக்குள் புகுவதற்கு உரிய இன்ப வாசலை அது திறந்து விடுகிறது என்பதனால் தான்.

அர்த்தமற்ற, சாரமில்லாத, இயந்திர ரீதியாகிவிட்ட, வறண்ட இந்த வாழ்க்கையைவிட வர்ணமயமானதாகவும், பசுமை நிறைந்ததாகவும், கிளுகிளுப்பு ஊட்டுவதாகவும், புதுமைகள் மிகுந்ததாகவும் இருக்கிறது கனவுலக வாழ்வு. அன்றாடச் சாதாரண வாழ்வைவிடச் சுவைமிகுந்த அற்புத அனுபவங்கள் நிறைந்து காணப்படுகிறது என் கனவு வாழ்க்கை. ஆகா, என்னென்ன புதுமைகள்! எவ்வளவு இனிமைகள்..!

ஒரு பூங்கா. ஒரு மூலையில் பெரிய செடி. அதில் ஒரே ஒரு மொட்டு. பெரியதா. ஒரு இளநீர் அளவு பெரியது. உமது தலை அளவு பெரியது. வெள்ளை வெளேர் என்று. நேரம் ஆக ஆக அதன் நிறம் மாறுகிறது. மாறிக்கொண்டே போகிறது. இதழ்கள் விரியும்பொழுது, அந்தப் பூவின் நிறம் மனோகரமான - கண்ணுக்கு இனிய - ரோஸ் கலராகி விடுகிறது. ரொம்ப அகலமான பூ. சுகந்த வாசனை ஒன்று பரவுகிறது. நான் அதையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதிலிருந்து ஒரு குழந்தை முகம் எட்டிப் பார்க்கிறது. குறுகுறு விழிகள். கபடமில்லாது சிரிக்கும் பிஞ்சு உதடுகள். அது 'இங்கே வா!' என்று என்னை அழைக்கிறது. ஒரு கையை நீட்டுகிறது. 'இதில் என்ன வைத்திருக்கிறேன். தெரியுமா?' என்று கேட்கிறது. தெரியாது. எனக்கு எப்படி தெரியும்? 'சும்மா யோாசிச்சுச் சொல்லேன்!' நான் எது எதையோ குறிப்பிடுகிறேன். அது குறும்பாகச் சிரித்தபடி தலையை ஆட்டிக்கொண்டே இருக்கிறது. முடிவாக, கையை விரித்து, 'ஒண்ணுமே இல்லை. நான் உன்னை ஏமாத்திப்போட்டேன். பார்த்தியா!' என்று சொல்லிச் சிரிக்கிறது. குலுங்கி குலுங்கிச்

சிரிக்கிறது. அந்த வாண்டுப் பயபுள்ளெ மீது எனக்குக் கோபம் வரவில்லை. அதன் சிரிப்பு முகம் மிகக் கவர்ச்சிகரமாக இருக்கிறது. அதன் ஒளிநிறை விழிகள் வெகு இனியன. அதையே பார்த்துக் கொண்டு, அதோடு சேர்ந்து நானும் சிரிக்கிறேன். திடீரென்று அது எதையோ கண்டு மிரள்கிறது. பயப்படுகிறது. அதன் முகம் பீதியைக் காட்டுகிறது. நான் சுற்றுமுற்றும் பார்க்கிறேன். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. அந்தக் குழந்தை அழுகிறது. ஓவென்று அலறுகிறது. பார்வைக்கு இனிய ரோஸ் நிறமாக மலர்ந்திருந்த பூவிதழ்கள் ரத்தச் சிவப்பாக மாறுகின்றன. நீலம் படர்கிறது அதில் என் கண் முன்னாலேயே அந்தப் பூ கன்னக் கருமை நிறம் பெற்றுவிடுகிறது. இப்போது குழந்தை முகத்தைக் காண வே காணோம். பெரிய பூ வாட்டமுற்று, கவிழ்ந்த தலைபோல், லொவுக்கென்று சாய்கிறது...

ஒரு சமயம், நான் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தேன். கனவில்தான், அது எந்த ஊர் நதிக்கரை என்று தெரியவில்லை. வளைந்தும் நெளிந்தும், ஒரு இடத்தில் விசாலமாயும், இன்னொரு இடத்தில் குறுகியும் கிடந்த ஆற்றில் தண்ணீர் அதிகம் ஓடவில்லை. சில வளைவுகளில், காட்டுப் பூச் செடிகள் பலநிற மலர்களைத் தாங்கியவாறு பசுமையாக நின்றன. ஒன்றிரு இடங்களில், பாறைகள் மொழுமொழு வென்று உருண்டு திரண்டு வளர்ந்து நின்றன. ஆட்கள் யாரும் தென்படவேயில்லை. நல்லவெயில் நேரம். வானம் நீலமாய் பிரகாசித்தது. நான் மணலில் நடந்தேன், எங்கு போவது என்ற குறிக்கோள் இல்லாமல். ஆற்றோர அழகுகளும் அமைதியும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. திடீரென்று ஒரு சிறு பெண் என் பக்கத்தில் நின்றாள். அவள் எங்கிருந்து, எப்படி வந்தாள் என்ற திகைப்பு எனக்கு. நீலநிறப் பாவாடையும், வெள்ளைச் சட்டையும் அணிந்து, இரட்டைச் சடையும் சிவப்புச் சாந்துப் பொட்டுமாக, சுமாரான கவர்ச்சித் தன்மை கொண்ட முகத்தினளாய் விளங்கினாள். பன்னிரண்டு பதின்மூன்று

வயசிருக்கும். 'நீ எங்க வீட்டுக்கு வராமல்தானே போறே? உன்னைக் கூப்பிடத்தான் நான் வந்தேன்' என்றாள். நீ யார், உங்க வீடு எங்கே இருக்கு; எனக்குத் தெரியவே தெரியாதே என்றேன். 'தெரியும் தெரியும்' என்று கூறி, தலையை ஆட்டினாள். 'வா, இப்பவே வா, இல்லைன்னா வெள்ளம் வந்து உன்னை இழுத்துக் கிட்டுப் போயிரும்'' என்றாள். வெள்ளமாவது, இப்பவாவது, வாறதாவது! நான் சிரித்தேன். அந்தப் பெண் 'ஐயோ, வாயேன். சீக்கிரம் வாயேன்!' என்று அவசரத்தோடு கூறி, என்னை கையைப்பிடித்து இழுத்து, கரைமீது கொண்டு சேர்த்தாள். அங்கிருந்த மாமரம் ஒன்றின் மேல் ஏறி, ஒரு கிளையில் உட்கார்ந்து, கவலையற்றுக் கால்களை ஆட்டிக்கொண்டிருந்தாள். ஏதோ ஒருவிதமான ஓசை தொடர்ந்து கேட்டது. ஆற்றின் பக்கம் பார்த்தேன், பெரும் வெள்ளம் முட்டி மோதி முன்னேறி வந்தது. ஆற்றை நிரப்பி, இக் கரைகளையும் தொட்டுத் தடவியவாறு, மதம் பிடித்த யானை போல் வெறிவேகத்தோடு முன்னே முன்னே போய்க் கொண்டிருந்தது. என் உடம்பில் ஒரு சிலிர்ப்பு. என் உள்ளத்தில் பதைபதைப்பு. என்னைக் காப்பாற்றிய அந்தச் சிறுமி யார்? அவளுக்கு இது எப்படித் தெரிந்தது? அவளிடம் கேட்கலாம் என்று துடிப்போடு திரும்பினேன். அங்கே பெண்ணையும் காணவில்லை; யாரையும் காணவில்லை! மீன் கொத்திப் பறவை ஒன்று கவலையில்லாமல், வெள்ளத்தையே பார்த்துக் கொண்டிருந்தது.....

இதைவிட விசித்திரமான, விநோதமான, அபூதமான, அதீதமான கனவு அனுபவங்களும் எனக்கு அவ்வவ்போது ஏற்பட்டது உண்டு.

- நல்ல வெயில் வேளை. சுட்டெரிக்கிறது வெயில். தார் ரோடுகளில் தார் இளகி நிற்கிறது. நான் நடக்கிறேன். பரந்த பெருவெளி. வெண் மணல் பரப்பு. சட்டென்று வானத்திலிருந்து நீலம் நீலமாகச் சொட்டுகள் விழுவதை

உணர்கிறேன். மழையோ என்று பார்த்தால் இல்லை. சிறிது நேரத்தில் புரிகிறது. நீலவானமே இளகி வடிகிறது. அந்த நீலம் ஈயத்தைக் காய்ச்சி, ஊற்றியதுபோல, மணல் வெளி எல்லாம் பரவிப் படிகிறது. பளீரென்று நீலப் பரப்பாகி விடுகிறது சூழ்நிலை. அங்கே போனால் அந்த இடம் கொதிக்கும குழம்புமயமாக இருக்குமா; என் மீதும் அந்த நீல உருக்கு விழுந்து படியுமா; அது என்னைப் பொசுக்குமோ; இந்த இடத்திலும் வானம் உருகிக் கொட்டுமோ? இப்படி அநேக சந்தேக அலைகள் என் மனசில். நான் திரும்பி ஓட ஆரம்பிக்கிறேன். நீல உருக்கு ஆறெனப் புரண்டு என் பின்னாலேயே வருகிறது. நான் ஒரு பள்ளத்தில் விழுகிறேன். அந்த நீல அனல் வெள்ளம் வந்து அதனுள் பாய்ந்து என்னையும் மூழ்கடித்துவிடுமே என்ற பய உணர்வு என்னை அலறிக்கொண்டு விழித்தெழச் செய்கிறது.

- விநோதமான குட்டி யானை. அதன் கண்கள் பளிச் பளிச்சென்று மின்னுகின்றன. அது துதிக்கையை ஆட்டிக் கொண்டு என் பக்கம் வருகிறது. முதலில் வேடிக்கை யாகத்தான் இருந்தது. ஆனால் அதன் கண்களில் குரூரம் மின்வெட்டியது. அது என்னைக் கொல்ல வருகிறது என்று எனக்குப் படவும், நான் பயந்து ஓட முயல்கிறேன். கால்கள் நடக்கும் சக்தியை இழந்துவிட்டன. நான் செயல் இழந்து அலறுகிறேன். அந்தக் கொடிய குட்டி யானை, வெறியும் விஷமமும் கலந்த சிரிப்பொளி அதன் வெண்மையான வட்டச் சிறுவிழிகளில் மின்பொறி எனத் தெறிக்க, துதிக்கையை உயர்த்திக்கொண்டு என்னை நெருங்கி விட்டது. உடல் பதற நான் விழிப்புறுகிறேன்.

- ஒரு பெண் என்னை வரவேற்று உபசரிக்கிறாள். காலத்துக்கு ஏற்ற சட்டை நான் அணிந்திருக்கவில்லை என்று சொல்லி, ஒரு புதுச் சட்டை தருகிறாள். வெளிர் நீல நிறத்தில், மினுமினு என்று ஜோராகத்தான் இருக்கிறது. அதை

அணிகிறேன். அது கழுத்தை நெரிக்கிறது. உடம்போடு ஒட்டி, அனலாய் தகிக்கிறது. விஷம் மாதிரிக் கொல்லுகிறது. நான் வேதனை தாளாமல் கத்துகிறேன். அவள் உல்லாசமாகக் கைகொட்டிச் சிரிக்கிறாள். நான் சட்டையைக் கிழித்தெறிய முயல்கிறேன். தீப்பட்டதுபோல் கைகள் காந்துகின்றன. நான் அலறிக்கொண்டு விழிக்கிறேன்....

இந்தவிதமான பயப்படுத்தும் கனவுகள்கூட, அனுபவிக்கும் வேளையில், தனியானதாரு கவர்ச்சித் தன்மையோடு விளங்குகின்றன என்பதையும் நான் கூறத்தான் வேண்டும்.

பய உணர்வைத் தூண்டிவிடாத அதீதமான கனவுகளையும் நான் அனுபவிக்கத்தான் செய்கிறேன்..

நள்ளிரவு. ஊர் சவ உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. நல்ல நிலவு. பட்டப்பகல்போல் நிலா காய்கிறது. ஒளியும், கட்டிடங்களின் நிழலும் அற்றுக் கோலங்களாய் பிணைந்து கிடக்கிற ஒரு தெரு. திடீரென்று கோரமான கூச்சல்கள் காதில் விழுகின்றன. மேலே இருந்து வருவதுபோல் தெரிகிறது. இரைச்சல்கள் நெருங்கி வருகின்றன. யாரோ யாருடனோ சண்டைபிடிப்பதுபோல. நான் மேலே பார்க்கிறேன். வான வெளியில் பறந்து முன்னேறுகின்றன விசித்திரப் பிராணிகள். தீநிறக் குதிரை ஒன்று. பளபளக்கும் சிறகுகள் பெற்றது. அதன் முகம் சீட்டுக்கட்டில் உள்ள ராஜா தலை மாதிரி. மூக்கு, முழி, தொங்கிப் புரளும் தலைமுடி எல்லாம். அது மவுனமாக வருகிறது. அதன் பக்கத்தில், அதோடு கத்திச் சண்டை போட்டபடி வரும் ஒரு மிருகம். குதிரை அல்ல. உடம்பு வெண்மை நிறம். பால் வெள்ளை இல்லை. லேசாகக் காப்பி கலக்கப்பட்ட பாலின் வர்ணம் என்று சொல்லலாம். கிளாவர் ராணியின் மூஞ்சி. சிடுசிடுவென்று. சண்டைக் குணத்தைப் பிரதிபலிக்கிறது... அது வெறித்தனமாகக் கத்திக்கொண்டு, ராஜாக் குதிரையை கடிக்க முயல்கிறது. குதிரை கனைத்துக்

கொண்டு விலகிச்செல்கிறது. பின்னாலேயே மிகப் பெரிய ராட்சஸப் பறவை ஒன்று. கழுகு மாதிரி. அது உற்சாகமாகக் கதறிக்கொண்டு வருகிறது. அதன் கீச்சொலி மிகத் தெளிவாக எங்கும் பாய்கிறது... இந்தச் சத்தம் எல்லாம் இந்த ஊரில் ஒருவரைக்கூட எழுப்பி விடவில்லையே என்ற வியப்பு எனக்கு. அம்மூன்றும் மிகவும் தணிவாகத்தான் பறந்து செல்கின்றன. பறவை தன் கழுத்தை கீழ்நோக்கி நீட்டுகிறது. விகாரமான கழுத்து. ஒரு வீட்டின் மொட்டை மாடிச் சிறு சுவர் மீது தொட்டிகளில் விநோதம் விநோதமான செடிகள். அவற்றிடையே பசலைக்கொடி போன்ற செடி ஒன்று. நெளியும் புழுக்கள் போல. அதை அந்தப் பறவை கவ்வி இழுக்கிறது. வேகமாக இழுக்கிறது. பசியகொடி நீண்டு நீண்டு, தொட்டியை விட்டவிடாது, பறவையின் மூக்கைச் சுற்றியும், கழுத்தைச் சுற்றியும் வளர்ந்து நெளிந்து... அதன் பிடி இறுகியது போலும். பறவை வேதனையோடு அலறியது. அந்த ஒலி வெட்ட வெளியில் வெகு தெளிவாக, உலோகத் தொனியென, சிதறிப் பரவியது. மற்ற இரு மிருகங்களும் அதைக் கவனியாமலே போய் விட்டன. பறவையும் கொடியை அறுத்துக்கொண்டு, அது கழுத்தைச் சுற்றியும் வெறும் வெளியிலும் மஞ்சள் கலந்தோடும் பச்சை நிறம் கொண்ட ஒல்லிய பாம்பெனத் துவள, அலறியபடி பாய்ந்து செல்கிறது. இன்னும் எவரும் விழிக்கக் காணோமே என்று நான் சுற்றுமுற்றும் பார்க்கிறேன்...

- ஆங்காரமாக முட்டி மோதுகிற அலைகள் புரண்டு விழுந்து, பின்வாங்கும் அற்புதத்தை கவனித்தபடி நிற்கிறேன். ஆச்சர்யம்! திடுமென வந்து வீழ்ந்து, நிலந்தடவும் வெண் நுரையாய் வெறும் நீராய் உருண்டு உள்வாங்கிய அலைகள் உள்ளே உள்ளே போயின. கடலே உள்வாங்கியது. நீர் வற்றிக் கொண்டே போகிறது. கடலின் தரை அடிமட்டம், அதன் நானாவிதப்பொருள்களோடு, சிப்பிகளோடு, பூச்சி புழுக் களோடு, பாசிக்கொடிகள் இனம் தெரியாப் பூண்டுகளோடு,

திடீரெனத் தண்ணீர் வறண்டு பலவகை மீன்களோடு எல்லாம் கண்ணில் படுகிறது. நான் அங்கெல்லாம் நடக்கும் ஆசையோடு உள்ளே இறங்குகிறேன்.

இப்படி எத்தனையோ கனவுகளை சொல்லலாம். அவை அனைத்தும் நிச்சயமானவையாக, உணர்வுகளை பாதிப் பனவாக உள்ளன. இதனால் அநேக சந்தர்ப்பங்களில் விழிப்பு நிலையில் எனக்குக் குழப்பம் ஏற்படுவது உண்டு. கனவுகளில் நிகழ்ந்தவற்றை, நிஜமாகவே வாழ்க்கையில் என்றோ நடந்ததாக எண்ணிக்கொண்டும், கனவில் சந்தித்தவர்களை உண்மையில் எப்பவோ சந்தித்ததாக மயங்கியும், சிலபேரிடம் சில விஷயங்களைப் பற்றிப் பேச, அவர்கள் விவரம் புரியாது முழிக்க, நான் விழுந்து விழுந்து சிரிக்கவும், எனக்கு மூளையில் ஏதோ கோளாறு என்று நம்பிக்கொண்டு, அவர்கள் என்னைப் பார்த்துவிட்டு, பரஸ்பரம் பரிமாறிக்கொள்கிற பார்வை இருக்கிறதே, - ஹஹஹ்ஹா! ஒரே தமாஷ் தான்போ!

சில கனவுகள், நிச்சயமாக அவை கனவுகள்தான் என்ற உணர்வு இருந்தபோதிலும், என்றாவது விழிப்பு நிலையில் பிரத்தியட்சமாக எதிர்ப்படக்கூடும் என்றொரு குறுகுறுப்பை உள்ளத்தில் ஏற்படுத்தி விடுகின்றன.

அப்படித்தான் ஒரு கனவு - அதை நான் மறக்க முடிவதே யில்லை. அது திரும்பத் திரும்ப மூன்று, நான்கு தடவைகள் தோன்றிவிட்டன. அதனாலேயே அது உறுதியாக ஒருநாள் வாழ்க்கையின் நிச்சய நிகழ்ச்சியாக உருப்பெறும் என்ற நம்பிக்கை என்னுள் வளர்ந்து வருகிறது.

ஒரு தனி வீடு, பசுமையான, குளுமையான, இனிய சூழ்நிலை. வருகிற வழிநெடுகிலும், மனோரம்மியமான பூக்கள் மலர்ந்து திகழும் அருமையான செடிகள். இது வரையிலும் நான் பார்த்திராத இடம். அந்த இடமும் வீடும் எனக்கு மிகுதியும் பிடித்திருக்கின்றன. கதவு பூட்டியிருக்

கவில்லை. திறந்துகொண்டு நான் உள்ளே போகிறேன். எங்கும் இனிமையான மணம் நிலவுகிறது. வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அறை அறையாகப் போய் பார்க்கிறேன். 'வாங்க. உட்காருங்க' என்று மென்மையான குரல் காதில் விழுகிறது. யார் பேசுவது? எங்கிருந்து பேசுகி றார்கள்? தெரியவில்லை. வசதியான ஒரு நாற்காலியில் அமர்கிறேன். மேஜைமீது காப்பி டம்ளர் தோன்றுகிறது. கமகமவென்று வாசனை பரப்பும், சூடான, ஸ்ட்ராங்கான காப்பி. அங்கே எப்படி வந்தது? யார் கொண்டுவந்து வைத்தது? விளங்கவில்லை. காப்பியை குடிக்கிறேன். யார் அது? எப்படியும் கண்டு பிடித்துவிடுவேன். ஆனால் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே முதலில். சுகமான படுக்கை பரப்பிய கட்டிலில் படுக்கிறேன். தூங்கிப் போகிறேன்...

ஒவ்வொரு தடவையும் இதே கதைதான். ஒரு நாளாவது, ரெஸ்ட் எடுக்காமல் உடனடியாகத் தேடிப் பார்ப் போமே என்கிற எண்ணம் எனக்கு ஏனோ தோன்றுவதில்லை. அது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. நிஜமாகவே அப்படி ஒரு இடத்துள் என்றாவது ஒருநாள் நான் பிரவேசிக்க நேரிட்டால், அங்கும் இதெல்லாம் நிகழ்ந்தால், அப்பவும் நான் ஆர்வத்தோடு, அறியும் அவாவோடு, தேடிப் பார்க்காமல், படுத்துத் தூங்கிவிடுவேன்போலும் என்றொரு நினைப்பு என்னுள் நெளிகிறது. இதை சோதித்து அறிவ தற்காகவேனும், அந்தக் கனவு நிஜமாகவே நடந்தாக வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

விசித்திரமான ஆசை என்று தானே நினைக்கிறீர். இல்லையா? இதைவிட விநோதமானது - தமாஷானது - சமீபத்தில் நிகழ்ந்தது. கனவில்தான். வேறு விஷயங்களை நான் ஏன் வர்ணிக்கப்போகிறேன்?

*எனக்குக் கல்யாணம் நடைபெறுகிறது. நண்பர்கள் இரண்டு பேர் என்னோடு இருக்கிறார்கள். 'ஏன் பிரதர் சந்தோஷம் இல்லாமல் இருக்கிறீர்கள்?' என்று ஒருவர் கேட்கிறார். எனக்கு உண்மையில் ரொம்ப வருத்தம் தான். சே, கல்யாணம் என்று ஒன்று நடந்து, ஒரு பெண் வந்து விட்டாள். அவளோடு பழகி, அவளை 'ஃபிரண்ட்புடிச்சு' அவள் விருப்பு வெறுப்புகளை அறிந்து, அவளை மகிழ்வித் தாக வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. சீண்ட்ரம் புடிச்ச எழவுதான். இவ்வாறு என் மனம் குழம்பித் தவித்துக்கொண்டிருந்தது. அவசரமாக ஒரு நபர் வந்தார். கல்யாணப்பெண், அவளுடைய 'பாய் ஃபிரண்டோடு' ஒரு காரில் ஏறி எங்கோ போய்விட்டாள்; திரும்பி வரமாட்டாள் போல் தெரியுது என்று பரபரப்போடு பேசினார். நான் மகிழ்ச்சி அடைந்தேன். பிரச்னை இவ்வளவு சுலபமாகத் தீர்ந்துவிடும் என்பது தெரியாமல் வீணாக மனசைக் குழப்பிக்கொண்டு தவித்தேனே. விட்டது சனியன், விட்டது சனியன்! நம்மை விட்டு விட்டதடா என்று உற்சாகமாகக் கத்தினேன். அதைக் கொண்டாட நண்பர்களோடு பெரிய ஓட்டல் ஒன்றைத் தேடிப்போகிறேன்...*

*இதுவரை பொறுமையாகப் படித்திருந்தால், உமக்கு நிச்சயமாக ஒரு எண்ணம் தோன்றியிருக்கும்: இவன் உளநிலை சரியாக இல்லை; எங்கோ ஏதோ கோளாறு இருக்கிறது என்று எண்ணினோமே அது சரிதான். இப்போது அது உறுதிப்பட்டுவிட்டது... இப்படி நீர் எண்ணுகிறீர். இல்லையா?*

*அஹஹ்ஹா! நீர் எண்ணுவது சரியாகவே இருந்து விடலாம். நான் ஏன் உமது திருப்தியைக் கெடுக்க வேண்டும்?*

# 4. சிறுகுறும்பு

'உமக்குப்பார்க்கும் கண்களும் ரசிக்கும் மனமும் இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்' என்றது சிதம்பரத்தின் மனக்குறளி.

'பார்வை என்பது எல்லோருக்கும் இயல்பாக அமைந்த ஒரு திறன். ஆனால், பார்ப்பது என்பது தனிப்பட்ட கலை!' என்றும் அது குறிப்பிட்டது.

சிதம்பரம் அப்போது ஓடும்ரயிலின் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் தூங்காமல் உட்கார்ந்திருந்தான். கூட்டம் நிறைந்த சூழ்நிலைதான்.

அவன் வண்டி வண்டியாகத் தேடி, ஒரு பெட்டியைத் தேர்ந்து, உள்ளே புகுந்து, இடம் பிடித்து, ஜன்னல் ஓரத்து மூலையில் சுகமாகச் சாய்ந்திருந்தபோது, அந்தச் சூழல் வறண்டதாகத் தான் இருந்தது. பிறகு ஒரு பிரயாணி, தன் மனைவி, குழந்தை, பெட்டிகள் சகிதம் வந்து சேர்ந்தான்.

'இவனுடைய சகோதரியோ என்று எண்ணத் தூண்டும் முகத்தோற்றம் இவளுக்கு இருக்கிறது' என்று சிதம்பரம் நினைத்தான். 'இவர்கள் இங்கே வந்து சேர்ந்ததனால் அதிகமான இடைஞ்சல் எதுவும் ஏற்பட்டு விடவில்லை!' என்று விமர்சித்தது அவன் மனம்.

பட்டாடையும் பளபளப்பும் பெற்றிருந்த அந்த இளம்பெண் வறண்ட இடத்துக்குக் குளுமையும், கலரும், கவர்ச்சியும் சேர்த்தாள். அதனால் அவனுக்குச் சிறிது மகிழ்ச்சி கூட.

இதை எண்ணி அவன் மகிழ்வுற்றிருந்த வேளையில் வந்து சேர்ந்தது ஒரு கும்பல். தெற்குக் கடைசி ஊர் ஒன்றிலிருந்து திருப்பதிக்கு வந்து விட்டு, மறுபடியும் சொந்த ஊருக்குப் பிரயாணமாகும் பெரிய குடும்பம் அது. குடும்பத் தலைவன், தலைவி, மாமியார், அம்மா, குழந்தைகள், பெரிய பெரிய பெட்டிகள், படுக்கைகள், மூட்டை முடிச்சுகள் எல்லாமாகச் சேர்ந்து இடம் முழுவதையும் அடைத்துக் கொண்டு நெருக்கடி வளர்ப்பதில் ஆர்வம் காட்டியது அக்கூட்டம்.

சிறிது நேரம் வரைதான். பிறகு, மணி ஆக ஆக, வண்டி ஓட ஓட, இரவு நேரப் பயணிகள் எப்படி எப்படியோ விழுந்து கிடந்து, தூங்குவதில் உற்சாகம் காட்டுவது இயல்பு எனும் பொது விதி அங்கும் ஆட்சி புரியலாயிற்று.

அகலமில்லாத பெஞ்சுகளில், கிடைத்த இடத்தில், ஒடுங்கியும் கோணியும் படுத்துக் கிடந்தும், திரும்பியும் ஓய்வு பெற்றுக் கொண்டிருந்தார்கள் அவர்கள். அப்படித் தூங்குகிற வர்கள் திரும்புகிறபோதும், மீண்டும் மறு பக்கம் பார்த்துப் புரண்டு தூங்குகிற போதும் பெண்களின் பலவிதத்தூக்க நிலைத் தோற்றங்களைக் கண்டு ரசிக்கக் கூடிய வாய்ப்பு விழித்துக் கொண்டிருக்கும் பிரயாணியான சிதம்பரத்துக்குக் கிட்டியது.

அதனால்தான் அவன் மனம் பார்வை விஷயமாக எண்ண அலை வீச நேர்ந்தது.

'மனைவி எனும் ஒருத்தியோடு தனி அறையில் தூங்கும் பழக்கமுடைய ஆண் கண்டு களிப்பதைவிட அதிகப் படியான

அழகுக் காட்சிகளை, இன்டிரஸ்டிங் போஸ்களை, அன்-இன்டன்ஷன்ல் வெளிச்சங்களை, அதாவது வேண்டுமென்றே செய்யப்படாத - தன்னினைவற்றுத் தானே நிகழ்ந்து விடுகிற - திரை நீக்கங்களை, விதம் விதமான பெண்களிடம் பார்த்து இன்புறும் பாக்கியம் இரவு நேர ரயிலில் தூங்காது விழித்திருக்கும் வீணனுக்கு வந்து சேர்கிறதே' என்று அவன் எண்ணிக் கொண்டான்.

அவன் பார்வை எதிர் பெஞ்சு மீது படிந்தது. கண்களைப் பிடித்திழுத்து அங்கேயே நின்று விடும்படி செய்யும் தோற்றம்தான்.

நீலப்பட்டு உடுத்திய உருவம். எடுப்பான பருவத் திரட்சிகளையும் பிடிப்புக்களையும், நெளிவுவளைவுகளையும் பெற்றிருந்த பெண். மினுமினுக்கும் வெண்மை என்றும் சொல்ல முடியாத, மஞ்சள் என்றும் கொள்ள முடியாத, ஆயினும் தாழம்பூ நிறம் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்க வைக்கும் நிறத்தைக் கொண்டிருந்த யுவதிபடுத்துக் கிடந்த ஒடுங்கல் தோற்றம் அவனைக் கிறக்கியது. அவள் திரும்பிப் படுத்த கோலமும், முன் புற அழகு காட்டிய நிலையும், ஆழ் துயில் பயின்ற எழில் முகத்து அமைதிக் கொலுவும் காணுந்தோறும் காணுந் தோறும், மீண்டும் மீண்டும் காணவேண்டும் எனும் ஆசையைத் தூண்டும் அற்புத இனிமைகளாகத் திகழ்ந்தன.

சிதம்பரம் மற்றவர்களையும் கவனித்தான்.

அந்தக் குடும்பத்தின் இளம் பெண் அழகியுமல்ல; அலங்காரியும் அல்ல. குரூபியுமல்ல; கோரமும் இல்லை. கண்டு சகிக்கக்கூடிய சராசரிப் பெண். தூங்கும் நிலையில் அவளிடம் ஒரு வசீகரம் சூழ்ந்திருந்தது. சிதம்பரம் இருந்த பெஞ்சில் தான் அவள் தூங்கிக் கிடந்தாள்.

எதிர்ப்பெஞ்சில் துயில் புரிந்த அழகி, தலைமாட்டில் கணவனும், கால்பக்கம் எவளோ ஒருத்தியும் இருக்க, கால்களை மடக்கி, தானே ஒடுங்கிக் கோணிக் கிடக்க நேர்ந்தது. இந்தப் பெஞ்சில், சிதம்பரத்தின் அருகில், தூங்கியவளுக்கு நல்ல வசதி.

அவள் தலைமாட்டில், சாளரத்தை ஒட்டி, அவன் ஒடுங்கி யிருந்தான். பெஞ்சில் இடம் பிடித்து அமர்ந்திருந்த மற்றவர்கள் கீழே பலகைப் பரப்பிலும், மேலே கட்டை களிலும் படுக்கப்போய்விட்டார்கள். எனவே, அந்தப் பெண் கால்களை நீட்டிச் சுகமாகப் படுத்துத் தூங்க முடிந்தது. வாயினால் ஊதி ஊதி, உள்ளே காற்றைப் புகச் செய்து பருமனாக்கிக் கொள்ளக்கூடிய ரப்பர் தலையணை வேறு வைத்திருந்தாள் அவள். ஓடும் வண்டியின் அசைவு காரணமாக அவளது உணர்வற்ற உடல் நகர்ந்து மெது மெதுவாக அவனைத் தொட நெருங்கிக்கொண்டிருந்தது. அவள் தலை அவனைத் தொட்டும் விட்டது. தடித்த சடைப் பின்னல் தலையை அழுத்தியிருக்கும் போலும். அவள் விழிக்காமலே, அதை எடுத்துப் பின்னால் தலைக்கு மேல் வீசினாள். அப்படி வீசிய வேகத்தில் அது நெளிந்து வந்து சிதம்பரத்தின் மடிமீது விழுந்தது. மினுமினுக்கும் கருநாகம் போன்ற குழற் பின்னல் அது.

அதைத் தொட வேண்டும் என்ற ஆசை சிதம்பரத்துக்கு எழுந்தது. அவ்வாறு தொட்டால் அவள் விழித்து விடுவாளோ என்ற பயமும் சந்தேகமும் கூடவே தோன்றின. தூங்கும் பெண்ணின் கூந்தலைத் தொடுவதனால் அவள் உணர்வு விழிப்பு பெறப்போவதில்லை என்று துணிந்தான் அவன்.

பெண்ணின் கூந்தல் அழகு, அதன் மென்மை, இனிமை முதலியன பற்றியும், அதை விரும்புவதாலும் பிடித்து இழுப்பதாலும் ஏற்படக்கூடிய மகிழ்ச்சி பற்றியும் அவன்

எங்கெங்கோ எவ்வளவு எவ்வளவோ படித்திருந்தான். அது வரை அப்படி யொரு சுகானுபவம் அவனுக்கு ஏற்பட்ட தில்லை. இப்போது அதை அனுபவித்து உணர்ந்தால் என்ன? அவன் மனக்குறளி தூண்டியது.

நெஞ்சில் சிறு பதைப்புடன், அவன், நெடுகிலும் பார்வை எறிந்தான். எல்லோரும் அயர்ந்து துயிலில் ஆழ்ந்து கிடந்தனர்.

ஆயினும் அவன் சிறிது தயங்கினான். பிறகு துணிந்து விரல்களைத் தன் மடிமீது கிடந்த சடைப்பின்னல் மீது வைத்தான். லேசாகத் தொட்டு, யாரும் கவனிக்கவில்லை என்று நிச்சயம் செய்துகொண்ட பிறகு அன்பாக, மிருதுவாகத் தடவினான். பின்னலின் நுனியிலிருந்து, அகலமான மேல் பகுதிவரை மெதுவாக வருடினான். அவனுக்கு ஏதோ ஏமாந்து விட்டதுபோன்ற உணர்வே ஏற்பட்டது.

தூங்கிக் கிடக்கும் எவளோ ஒருத்தியின் துவண்டு கிடக்கிற கூந்தலைத் தொடுவதிலோ தடவிக் கொடுப்பதிலோ எவ்விதமான இன்பமும் இல்லை என்ற ஞானோதயம் அவனுக்கு உண்டாயிற்று. உணர்வற்ற அந்த 'மயிர்க்' கற்றையை எடுத்துத் தூங்கும் தலையருகே தலையணைமீது போட்டான்.

நெளிந்து துவளும் பின்னல் பார்வைக்கு இனிய அழகுக் காட்சி யாகத்தான் விழுந்து கிடந்தது.

அவன்அந்தப் பின்னலையும், அது அணி செய்த தலை யையும், அமைதியாய் உறங்கிய முகத்தையும் பார்த்தபடியே இருந்தான். அவனது மனம் அமைதியாய் இல்லை. அது குறு குறுத்துக்கொண்டிருந்தது, விழித்த நிலையில் உணர்ச்சி களைப் பிரதிபலிக்கும் கண்ணோடு, முகத்தோடு, பெண் பார்த்துக் கொண்டிருக்க, அவளுடைய கூந்தலை விரல்களால் நீவுவதிலும், பின்னலைப் பிடித்து இழுப்பதிலும்,

சேட்டைகள் செய்வதிலும் - அதனால் அவள் காட்டுகிற ஆனந்தம் உளக் கிளர்ச்சி, உணர்வுச் சலனம் காரணமாக - தடவுகிறவனுக்கு இன்ப உணர்வும் மகிழ்ச்சியும் ஏற்படக் கூடும். அவ்வாறு இனிய சிறு விளையாட்டுக்கு உள்ளா கிறவள் உமது காதலுக்கு உரியவளாகவும், உம்மிடம் ஆசை காட்டுகிறவளாகவும், பிணங்கியும் இணங்கியும் விளை யாடும் இனியையாகவும் இருந்தால், இந்தத் தடவல், நீவல், வருடல் வகையறாக்களின் சுவையும் ரசனையும் அதிகரிக்கும்.

இந்தவிதமாக ரகசியம் பேசியது சிதம்பரத்தின் உள்ளம்.

நேரமோ நள்ளிரவு. இடம் குறுகலான அறை போன்ற ரயில் பெட்டி. சுற்றிலும் ஆட்கள் உண்டு என்றாலும் அவர்களோ தூக்கத்தால் உணர்விழந்து விட்ட கட்டைகள். எதிரே வசியப்போஸ் காட்டிக்கிடக்கும் பளபளப் பட்டாடை மினுமினு மங்கை. அருகிலே - மிக நெருக்கத்தில் - போதிய கவர்ச்சி உடைய இளம் பெண்ணின் தூக்கநிலை.

மூடியிருக்கும் அவள் கண்களும், மூடுண்ட நிலையில் தென்பட்ட கை விரல்களும், ஒத்த வளைகளை அணிந்த தந்தநிறக் கையும் அதிகக் கவர்ச்சியுடன் விளங்கின.

இவற்றையெல்லாம் ரசித்துக்கொண்டிருந்த இளைஞ னின் மனம் இஷ்டம்போல் கனவுகளையும் நினைவுகளையும் சிருஷ்டித்துக் களித்தது. எதிர் பெஞ்சில் தூங்கிக் கிடந்த இளம் பெண்ணின் மாம்பழக் கன்னங்களைத்தடவிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையை அவன் உள்ளம் விதைத்தது.

மனம் ஒரு குரங்கு என்றால், சிறு குறும்புகள் செய்வது அதன் இயல்பாகத்தானே அமையும்.

ஆனாலும், சிதம்பரம் துணியவில்லை. அவன் தூங்கவும் இல்லை.

வண்டி ஓடிக்கொண்டே இருந்தது.

# 5. பெரியவர்கள்

மேல்நிலைப் பள்ளி ஒன்றில்.

எட்டாவது வகுப்பு. புவியியல் பாடம் நடக்கும்நேரம்.

ஆசிரியர் ஆராவமுதன் தேசப்படத்தை சுட்டிக்காட்டி, பாடநூலில் உள்ள பகுதிகளை வாசித்து விளக்கிக் கொண்டிருக்கிறார்.

ஒரு பெஞ்சில் இரண்டு பேர், அவர் முகத்தைப் பார்க்காமல், பாடத்தையும் கவனிக்காமல், டெஸ்கின் மீது ஒரு நோட்டை வைத்து சுவாரஸ்யமாக எதையோ பார்த்தபடி இருக்கிறார்கள்.

ஆசிரியரின் பருந்துப் பார்வை அவர்களைக் கொத்தியது.

'அங்கே என்ன நடக்கிறது? அது என்ன? இங்கே கொண்டு வா!' உத்திரவுகள் உதிர்ந்தன இடிக்குரலில்.

சம்பந்தப்பட்ட பையன்கள் தயங்கினர். மற்ற மாணவர்களின் கண்கள் அவர்கள் பக்கம் புரண்டு, பலவிதப் பார்வைகளால் அவர்களைத் தொட்டன.

'பாலச்சந்திரன்! நோட்டை இங்கே எடுத்து வா. உம்...'

ஆசிரியரின் அதட்டல் உறுமலாகத் தெறித்தது.

'இல்லே, நான் அங்கே வரவா?'

பாலச்சந்திரன் தயங்கித் தயங்கி ஆசிரியர் முன்னே வந்தான். எடுத்து வந்த பாடநோட்டை அவரிடம் நீட்டினான்.

ஆராவமுதன் அதை வாங்கிப் புரட்டினார்.

பாட நோட்டினுள் படங்கள், சினிமா நடிகையரின் கவர்ச்சித் தோற்றங்கள். ஜெயமாலினியும் சிலுக்கு ஸ்மிதாவும் அவரவர் உடல் வளப்பத்தை வசீகரமாக, மினுமினு வர்ணங்களில், வெளிச்சமிட்டபடி மோகப் பார்வையும் மோகனப் புன்னகையும் சிதறிக் கொண்டிருந் தார்கள். ஜெயமாலினி உடம்பில் மிகக் குறைவான துணியே ஒட்டி நின்றது. சிலுக்கு நின்ற போஸ்கள் கிறங்க வைப்பதாய் தோன்றின.

ஆசிரியர் படங்களைப் பார்த்தார். பையனை உற்றுப் பார்த்தார்.

'இதுதான் படிக்கிற லட்சணமோ? இதை மாதிரி அசிங்கமான படங்களை நோட்டில் வைத்துக்கொண்டு, பாட நேரத்தில் பார்த்து ரசிக்கிறீர்களாகும்? யாரிடம் கவர்ச்சி அம்சம் அதிகம் இருக்கு என்று ஆராய்ச்சி நடத்தினீர்களோ?' அவருடைய அதட்டல் கனத்த குரலாய் வெடித்தது.

'வறண்ட புவிஇயலை விட ரசமான அழகியல் ஆய்வு ஸார் இது!' - குறும்பன் ஒருவன் குரல் கொடுத்தான்.

வகுப்பு முழுதும் வெடிச் சிரிப்பில் கலீரிட்டது.

'அமைதி!' என்றார் ஆசிரியர்.

'இதுக்கு உன்னை தலைமை ஆசிரியரிடம் அனுப்பணும். இந்தத் தடவை மன்னிக்கிறேன். இனி இப்படி நடக்கக்கூடாது. சரி போ' என்று கடுகடுப்பாகப் பேசினார் அவர். படங்களை எடுத்து மேஜை இழுப்பறையில் வைத்து விட்டு, நோட்டை மாணவனிடம் கொடுத்தார்.

மீண்டும் பாடம் தொடர்ந்தது.

தலைமை ஆசிரியர் நித்தியானந்தம் அந்தப் பக்கம் வந்தார்.

சீவாத தலையும் சிரிக்காத முகமுமாய் காட்சிதரும் சீரியஸ் பேர்வழி அவர். கண்டிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் பெயர் எடுத்தவர். பையன்களின் ஒழுக்கமும் பள்ளியின் நற்பெயரும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் கருத்தாக இருப்பவர். குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் கடுமையான தண்டனை கொடுக்கத் தயங்காதவர். 'ஏ ஒன் கடுவன் பூனை' என்பது மாணவர்கள் அவருக்கு வைத்துள்ள செல்லப் பெயர்.

வந்தவர், 'இங்கே ஏதோ சத்தம் எழுந்ததே? என்ன விஷயம்?' என்று ஆசிரியரை விசாரித்தார்.

'ஒரு நகைச்சுவை. பையன்கள் ரசித்துச் சிரித்தார்கள்.' என்றார் ஆராவமுதன்.

'உம். அமைதி முக்கியம்' என்ற பெரிய ஆசிரியர், எழுந்து நின்ற பையன்களைப் பார்வையால் அளந்தார். தலையை ஆட்டி விட்டு நகர்ந்தார்.

பத்தாம் வகுப்பின் பக்கம் நடந்த தலைமை ஆசிரியர். சன்னல் அருகே வந்தபோது, உள்ளே கடைசி வரிசையில் பரபரப்பும் சலசலப்பும் ஏற்பட்டதை கவனித்து விட்டார்.

பெரியபையன் ஒருவன் ஒரு புத்தகத்தை இன்னொரு சிறுவன் பக்கமாக வீசி எறிய, அதை மற்றவன் டெஸ்க்

அறையினுள் பதுக்கினான். வேக வேலைதான். ஆயினும், தலைமை ஆசிரியரின் பார்வை வீச்சில் அது பட்டு விட்டது.

வேகமாக வகுப்பினுள் புகுந்தார் அவர். அவசரமாக அந்த வரிசையை அணுகி, டெஸ்கைத் திறந்தார்.

அவருடைய கைத்தூண்டிலில் அந்தப் புத்தகம் சிக்கி வெளியே வந்தது.

பார்த்தார். செக்ஸ் கதைகள். உரிய படங்களுடன்.

அந்தப் புத்தகத்தால் பையனின் மூஞ்சியில் அறைந்தார் தலைமை ஆசிரியர்.

பக்கத்தில் நின்ற சின்னப் பையனுக்குத் தான் அடி விழுந்தது.

'என்னிது இல்லை ஸார்... அவன் புக்தான்' அவன்தான் என்று பையன் முணு முணுத்தான்.

பெரிய பையனையும் அவன் சகாக்களையும் கோபமாக முறைத்தார் பெரிய ஆசிரியர்.

'கிளாஸ் முடிந்ததும் மூன்று பேரும் என் ரூமுக்கு வாங்க' என்று உத்திரவிட்டார். புத்தகத்துடன் வெளியே நடந்தார்.

போகிற போதே, வகுப்பு ஆசிரியரைப் பார்த்து, 'கிளாஸை நன்றாக கவனிச்சு, டிஸிப்ளினை நிலை நிறுத் தணும். படிக்கிற பையன்கள் ஒழுங்காக இல்லையென்றால், ஸ்கூலின் பெயர் என்ன ஆகும்?' என்று கூறி நடந்தார்.

வகுப்பு நேரம் முடிந்ததும், தவறு செய்து பிடிபட்ட மூன்று மாணவர்களும் தலைமை ஆசிரியர் அறையை நோக்கி நடந்தார்கள். பதைபதைக்கும் நெஞ்சோடு. பயம் மண்டும் நினைப்புகளோடு.

கடுவன் பூனை என்ன தண்டனை கொடுக்குமோ என்ற அச்சம் அவர்களை தயங்கித் தயங்கி நடக்க வைத்தது. பூனை மாதிரி மெதுவாக நடந்தார்கள். மிரளமிரள விழித்துக் கொண்டு போனார்கள். நேரே அறைக்குள் நுழையாமல், அஞ்சி ஒதுங்கி நின்று உள்ளே பார்த்தபடி நேரம் போக்கினார்கள்.

உள்ளே பெரிய ஆசிரியர் சுவாரஸ்யமாக ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். வெளியே பையன்கள் வந்து நின்றது கூட அவருக்குப் புலனாகவில்லை.

அப்படி அவர் படித்தது தன்னுடைய செக்ஸ் கதைப் புத்தகம்தான் என்பதை பெரிய பையன் கவனித்துவிட்டான். அவனுக்கு சிரிப்பு வந்தது.

இதற்குள், வெளியே யிருந்து வந்த பியூன், 'என்ன இங்கே நிற்கிறீங்க?' என்று பையன்களைக் கேட்டது தலைமை ஆசிரியர் காதுகளையும் தொட்டது.

அவர் அவசரம் அவசரமாக அந்தப் புத்தகத்தை மேஜை மேல் வைத்தார். அதன் மேலே வேறொரு பெரிய நூலை வைத்தார். பையன்களை நோக்கி 'உம்' என்றார்.

மாணவர்கள் பயந்த பாவனை காட்டி தலைகுனிந்து நின்றார்கள்.

'நீங்க செய்தது பெரிய தப்பு. இத மாதிரிப் புத்தகங்களை எல்லாம் நீங்கள் படிக்கக் கூடாது. அதிலும், வகுப்பிலே வைத்து, பாடம் நடக்கிறபோது, பாடத்தை கவனிக்காமல் ஆபாசப் புத்தகங்களைப் படிப்பதென்றால், உங்களுக்கு எவ்வளவு திமிரு இருக்கணும்? செச்சே, ஒழுக்கம் எவ்வளவு தூரம் கெட்டப் போயிருக்கு! நான் இதை மன்னிக்க முடியாது. ஆளுக்கு அஞ்சு ரூபா ஃபைன். நாளைக்கே கட்டணும்.'

கண்டிப்புடன் பேசினார் தலைமை ஆசிரியர்.

'சார், மன்னிக்கணும் சார். இனிமேல் இப்படி செய்ய மாட்டேன் சார்.'

ஒவ்வொரு பையனும் மந்திரம்போல் இதைச் சொன்னான்.

'இப்ப செய்ததுக்காகத்தான் இந்தத் தண்டனை. இனி மேலும் செய்தால் நான் ரொம்பக் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். எனக்கு ஒழுக்கமும் கட்டப்பாடும் ரொம்ப முக்கியம்' என்று பெரியவர் திடமாக அறிவித்தார்.

பையன்கள் மவுனமாக நின்றார்கள்.

'நிற்கிறதிலே பிரயோசனமில்லே. அபராதம் கட்ட வேண்டியதுதான். போங்க' என்று முடிவாகச் சொன்னார் அவர்.

மாணவர்கள் தலை குனிந்தபடி வெளியேறினார்கள்.

வீட்டுக்குப் புறப்பட்டபோது, தலைமை ஆசிரியர் நித்தியானந்தம் ஞாபகமாக அந்தப் புத்தகத்தை எடுத்துத் தனது பைக்குள் வைத்துக்கொண்டார். அமைதியாக இருந்து படித்து ரசிப்பதற்காகத்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, எட்டாம் வகுப்பு மாணவன் ஒருவன், கவர்ச்சிப் படங்களைப் பறிகொடுத்த பையனிடமும் மற்றும் சில சிநேகிதர்களிடமும் ஒரு சுவையான தகவலை அறிவித்தான்.

'நான் காம்போசிஷன் நோட்டுகளை ஸார்வாள் வீட்டிலே கொண்டு சேர்ப்பதற்காக நேற்று சாயங்காலம் போனேனா? ஸார் மேஜை மேலே ஸாரோட சொந்த நோட்டு இருந்தது. புரட்டிப் பார்த்தேன். ஜெயமாலினி படத்தையும் சிலுக்கு படத்தையும் அந்த நோட்டிலே ஆராவமுதன் சார்

ஒட்டி வச்சிருக்காரு. இதுகளை விடக் கவர்ச்சியான படங்கள், டிரஸே இல்லாத பெண்கள் படங்கள் கூட அந்த நோட்டிலே இருந்தன!'

'சிறியோர் செய்யும் சிறுபிழை பலவும்
பெரியோர் செய்யின் தவறே ஆகா!' என்று நீட்டி இழுத்துச் சொன்னான் இன்னொரு மாணவன்.

❀

# 6. ஜாலியும் ஜோலியும்

*(கால வேகத்தையும் வாழ்வின் போக்கையும் சித்தரிக்கும் ஒரு 'டாக்குமெண்டரி')*

## ரேடியோ அலறல்

முனஞ்சிப் பட்டி முருகய்யா, செவந்தான் பாளையம் அவினாசி, குடியலூர் இசக்கி முத்து, பாலூர் எழுமலை நண்பர்கள், பாப்பாக்குடி சுப்புசாமி சகோதரர்கள், முசிரி கருப்பசாமி, தேவனூர் ராமுவும் நண்பர்களும் விரும்பிக் கேட்டிருப்பது...

'வாழ்க்கை என்பது ஜாலி
அதை அனுபவிப்பதே நம் ஜோலி'
சினிமா சங்கீதம் ஜமாய்க்கிறது!

## குடும்பக் காட்சி

'அக்கா சினிமாவுக்கு வாறியா?'

'மாமி, இன்னிக்குக் கண்டிப்பாய் போகவேண்டியது தான்!'

'அக்கா, இந்தப் படத்திலே பாரு, எம்.ஜி ரொம்ப ஷோக்கா வாறாரு'

'ஜெயலலிதா பிரமாதமா டிரஸ் பண்ணியிருக்கிறதாப் பேசிக்கிட்டாங்க' - இது மாமியின் குரல்.

'என்கிட்டே காசு இல்லையே மாலா!' - அக்காவின் குறைபாடு.

'நான் தாறேனக்கா' தங்கச்சியின் தாராளம்.

'உன்னிடம் ஏது காசு?'

'ஸ்கூலுக்குப்போக, பஸ்ஸுக்கு, டிபனுக்குண்ணு தாற காசை எல்லாம் சேர்த்து வச்சிருக்கேன். மாமி'

'அப்போ தினம் நடந்து போயி, நடந்தா வாறே?' டிபன் எதுவும் திங்கிறது இல்லையா?'

'அப்புறம் சினிமா பார்க்க முடியாதே. மாமி!'

இப்போது 11 மணி. 6 மணி ஆட்டத்துக்குப் போகலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

12 மணி - சினிமாவைப் பற்றி பேச்சு தொடர்கிறது.

1 மணி - மேற்படி பேச்சு நீடிக்கிறது.

2, 3, 4 மணி - சினிமாப் பேச்சு ஓயவில்லை.

4.30 சிங்காரிப்பு நடக்கிறது.

'நேரமாச்சு! நேரமாச்சு!' என்று அவசரப்படுத்தும் ஒலிகள்.

5 மணிக்கு எல்லோரும் சினிமாவுக்கு போகிறார்கள்.

## திருவாளர் கடனர்

மிஸ்டர் ராம் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர். ஒரு கம்பெனியில் உத்தியோகம். மாதச் சம்பளம் முந்நூறு ரூபாய் அது அவர் செலவுக்கும் குடும்பச் செலவுக்கும் பற்ற வில்லை. ஆகவே, நண்பர்கள், தெரிந்தவர்கள் வேண்டியவர்கள். புதிதாக அறிமுகமாகிறவர்கள் எல்லோரிடமும் அஞ்சு, பத்து, இருபது என்று ஆளுக்குத் தக்கபடி - சமயத்துக்குத் தக்கபடி - கடன் கேட்டு வாங்கி விடுவார். ஏதாவது காரணம் சொல்லி, எப்படியாவது கடன் வாங்கி, கவலை இல்லாமல் செலவு பண்ணவேண்டியது. அவருடைய வாழ்க்கை வண்டி இப்படியே ஓடுகிறது.

மிஸ்டர் ராம் அவசரம் அவசரமாக சந்திரனைத் தேடி வருகிறார். சந்திரன் புதிதாக அறிமுகமான நண்பர்.

'வாங்க சார். ஏது இந்த வெயிலிலே இவ்வளவு தூரம்?'

'ஒரு உதவி செய்யணும். மறுக்கப்படாது.'

'என்ன?'

'அர்ஜண்டா பத்து ரூபா வேணும். மாசம் பிறந்து, சம்பளம் வாங்கித் தந்து விடுகிறேன். வீட்டிலே அரிசி இல்லே. ரேஷன் வாங்கி ஆகணும். அதுக்குத்தான் - ரெண்டு மூணு இடத்திலே கேட்டுப் பார்த்தேன். புரளலே. உங்களை தொந்தரவு பண்ணப் படாதுன்னு நெனைப்பு. ஆனாலும், பாருங்க. கடைசியா உங்க உதவியை நாடித்தான் வர வேண்டியதாச்சு..'

ராம் ரகசியமாகவும், ஸீரியஸாகவும், குரலில் ஏற்ற இறக்கங்கள் காட்டிப் பேசுகிறார்.

நண்பர் 'அதனால் என்ன!' என்று சொல்லி, பத்து ரூபாய் கொடுக்கிறார்.

'தேங்ஸ் சார். ரொம்ப நன்றி, வீட்டிலே காத்துக்கிட்டிருப்பா. நான் போய் தான்ரேஷன் கடைக்குப் போகணும். வாறேன். சார்!' என்று கூறிவிட்டு ராம் வெளியேறுகிறார்.

அப்புறம் -

மிஸ்டர் ராம் 'ஓட்டல் வெளிச்சப் பிரகாச'த்தில் காணப் படுகிறார். பாதாம் அல்வா சாப்பிட்டபடியே, மசால் தோசைக்கு ஆர்டர் பண்ணிவிட்டு, மகிழ்ச்சியோடு அப்படியும் இப்படியும் பார்க்கிறார்.

அவருடைய நண்பர் ஒருவர் வருகிறார். 'ஹல்லோ மிஸ்டர் ராம்!'

'ஹல்லோ, ஹல்லோ! என்ன? என்ன விசேஷம்? டிபன் பண்ணுங்களேன்!'

'வேண்டாம், வேண்டாம், இப்பதான் சாப்பிட்டேன்'

'வெறும் காபியாவது?'

'இடமில்லை. ராம்'

'ஒரு கப் காப்பிக்கு எப்போதும் இடம் உண்டு - ஒரு காப்பி கொண்டாடப்பா முதல்லே!' என்று ராம் ஆர்டர் பண்ணுகிறார்.

நண்பர் சினிமாக்கள் பற்றிப் பேசுகிறார். வாரக் கணக்கில் கும்பலைக் கவர்ந்திழுக்கும் ஒரு படம்பற்றி சுவையாகக் கூறுகிறார்.

'அப்ப பார்த்திட வேண்டியதுதான்!' இது ராம்.

டிபன் ஆயிட்டங்கள் முடிந்ததும் ராம் பில்படி பணம் கொடுத்துவிட்டு நண்பரோடு நடக்கிறார். இருவரும் பஸ் பிடித்து, தியேட்டருக்குப் போகிறார்கள்.

பெரும் கூட்டம். நீளப் பெரும் க்யூ.

'1.60 டிக்கட் கிடைக்காது போலிருக்கே' என்கிறார் நண்பர். இன்னொரு நாள் தான் வரணும்!

'2.50 க்கே போகலாம். வாங்க. அங்கே ஆளே இல்லை!'

மிஸ்டர் ராம் ஜம்பமாக ஐந்து ரூபாய் நோட்டை நீட்டி, இரண்டு டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டு. நண்பர் தொடர, மிடுக்காக நடந்து உள்ளே போகிறார்.

ரேஷன், அரிசி வகையராக்களின் நினைப்பே அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

## திரையும் இருட்டும்

திரையில் ஸெக்ஸியான ஆட்டங்கள். குதிப்புகள் குட்டிகளும் குமரர்களும் குஷி அனுபவிக்கிறார்கள்.

ஒரு சுவரில் 'கிஸ் கிஸ் கிளப்' என்று ஒரு போர்டு பளிச்சிடுகிறது.

படம் பார்க்கிறவர்களில் சில நாகரிக யுவதிகள் கிளு கிளுத்துச் சிரிப்பது அங்கும் இங்குமாக இருட்டில் தெறித்து விழுகிறது.

ஒரு ஓரத்தில் இரண்டு பேர்.

யுவனும் யுவதியும். ஸ்கூட்டர் ரோமியோ காலேஜ் ஜூலியட்டுடன் படம் பார்க்க வந்திருக்கிறான்.

அவள் களுக்கென்று சிரிக்கிறாள். அவன் தோளருகே தலை வருகிறது.

'என்ன?' அவனுக்குக் கிளர்ச்சி.

'கிஸ் கிஸ்'

அவள் கிளப் என்று உச்சரிப்பதற்குள் அவன் இன்ட்ரஸ்டிங்காக ஒரு கிஸ் பதித்து விடுகிறான்.

## நிழலும் நிஜமும்

ஒரு தியேட்டரின் முகப்பில் வர்ணப் படம் பெரிசாக பளிச்சென வரையப்பட்டுள்ளது. ஒருவன் படுத்திருக்கிறான். அவன் காதலி அவன் கழுத்தைப் பற்றியபடி தன் முகத்தை அவனுடைய முகத்தருகே வைக்கிறாள்.

'ஆபாசம் தேடிகள் சுற்றி அலைந்து பார்த்தபோது, இது அவர்கள் பார்வையில் 'ஆபாசம்' என்று பட்டுவிட்டது. ஆட்சேபம் கிளப்பி, பெரிய படத்தில் பெண்ணுக்கு பச்சை வர்ணம் பூசி அழிக்கும்படி பண்ணி விட்டார்கள்.

பெரிய விளம்பரத் தட்டி விசித்திரமாய் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

இதைக் காண்கிற காமிராப் பார்வை விரைந்து கடல்புறம் மணல் வெளியில் பாய்கிறது. அங்கே சுவாரஸ்யமான காட்சிகள்.

சூழ்நிலை மறந்து தம்மிலே தாமேயாகி இருக்கும் காதல் ஜோடிகள். பல ரகமானவர்கள்.

சாயங்காலம் 5.30 மணிதான். வெளிச்சம் நிறையவே இருக்கிறது.

ஒரு ஜோடி.

நீலப் பட்டாடை அணிந்த, கவர்ச்சி நிறைந்த, இளம் பெண். அவளுக்கேற்ற அன்பன். அவளே துடிப்பாய், முனைப்பாய், ஆர்வமாய், ஆசையாய் செயல்புரிகிறாள். அவனை நெருக்கி இடித்து கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். அவன் மேலே சாயகிறாள். முகத்தின் பக்கம் முகம் கொண்டு

போகிறாள். அவன் மணலில் படுத்துவிடுகிறான். அவள் சிரித்துக்கொண்டு, அவன்மார்பு மேல்சாய்ந்து கிச்சு கிச்சு மூட்டுகிறாள்.

சற்று தள்ளி இன்னொரு ஜோடி. சுமாரான தோற்றம் பெற்ற சுமார் நபர்கள். அவளும் அவனும் அவர்களுக்கு மிகச் சுவாரஸ்யமான உணர்ச்சி விளையாட்டில் ஈடுபட்டிருக் கிறார்கள். அவன் உடலில் அவள் கை வேலைசெய்து கொண்டிருக்கிறது.

'அடல்ட்ஸ் ஒன்லி' படங்களில் கூடக் காட்டமுடியாத காணப்படாத - 'அனங்க ரங்க' விளையாட்டு!

சுற்றுப் புறத்தில் இருப்பவர்கள், மணலில் நடந்து போகிறவர்கள். பார்வை அவர்களைத் தொடாமல் இல்லை. அவர்களிடமிருந்து ஒருவிதமான சிரிப்பு உதிராமல் இல்லை. என்றாலும், அவ்விருவரும் அவர்கள் விளையாட்டில் மிகுந்த ஈடுபாட்டுடன் ஆழ்ந்திருப்பதை எதுவும் தடை செய்வ தாயில்லை.

'எது ஆபாசம்? எங்கே ஆபாசம் இருக்கிறது? எப்படி எப்படி ஆபாசம் காணப்படுகிறது?' என்று ஆராய்ந்து அலசிப் பார்த்து மூடி மறைக்கும்படி உத்திரவு போடத் தவிக்கும் 'ஆபாசம் தேடிகள்' அந்தப் பக்கம் வந்து கண்ணோட்டம் விடுவதுமில்லை!

## பெண்கள் முன்னேற்றம்

மாலை 5.30 மணி

பல அலுவலகங்களிலிருந்தும் ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக வெளி வருகிறார்கள். பலராய், சிலராய் தனித்தனியாய் நடந்து போகிறார்கள். அநேகர் பஸ் ஸ்டாப்பில் நிற்கிறார்கள்.

நான்கு பெண்கள் ஸ்டைலுக்கும் நாகரிக முற்போக்குக்கும் சரியான எடுத்துக்காட்டுகள்.

'நம்ம வசந்தா விஷயம் தெரியுமோ?' என்றாள் கீதா. 'தெரியாதே' 'என்ன சமாச்சாரம்' 'அவள் என்ன செய்தாள்?' என்று வெடித்தன கமலா, சுந்தரி, சரஸ்வதி குரல்கள்.

'ஸ்கூட்டர்வாலா ஒருவன் கூடச் சுற்றிக் கொண்டிருந்தாள் இல்லையோ? இப்போ அவனை விட்டுவிட்டாள். அம்பாசடர் காரில் அடிக்கடி போகும் அதிர்ஷ்டம் அவளுக்குக் கிடைத்திருக்கிறது!' என்று கீதா சொன்னாள்.

'பரவால்லியே!' என்றாள் சுந்தரி.

'அவள் துணிந்தவள்தான்' என்று கமலா சென்னாள்.

'துணிவு உள்ளவர்களுக்குத்தான் அதிர்ஷ்டமும் துணை புரியுமாம்!' என்று சரஸ்வதி வருத்தத்தோடு குறிப்பிட்டாள். தனக்குத் துணிச்சலும் போதாது, அதிர்ஷ்டமும் இல்லை என்ற குறை அவளுக்கு என்றுமே உண்டு.

'வசந்தா லைஃபை என்ஜாய் பண்ணணும்கிற ஐடியா உடையவள். அதுக்குத்தக்கபடி வாய்ப்புகளையும், வசதிகளையும் தேடிக்கொள்ள அவள் தயங்குவதே கிடையாது!' இது கீதா.

இரண்டு பெண்கள் அவ்வழியே போனார்கள் நாகரிக வளர்ச்சியின் அளவுகோல்கள் அவர்கள்.

தமிழ்நாட்டுப் பெண்மணிகள் எட்டு கஜம் சீலையை உடம்பில் வரிந்து வரிந்து கட்டிக் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்த காலம் எப்பவோ போய்விட்டது. ஆறு கஜம் புடவை போதும் என்று அணிந்து திரிவது சகஜமாகியுள்ளது. அதுகூட அதிகம். ஐந்து கஜமே போதும் என்று நவயுவதிகள் தீர்மானித்து, நழுவி நழுவி விழும் இயல் புடைய மினுமினுச்

சேலைகளை உடம்பில் சுற்றிக்கொண்டு, தோளில் கைக் குட்டை மாதிரிக் கிடக்கும் பகுதியை எடுத்து இழுத்து வெளிச்சம் போட்டபடி காட்சிதருகிறார்கள். இவ்விரண்டு பெண்களும் இந்த ரகத்தினர்தான்.

இதே லெட்சணத்தில் தோற்றம் காட்டிய சிங்காரி ஒருத்தி, அன்பன் ஒருவனைக் கட்டிப் பிடித்தபடி, ஸ்கூட்டர் பின்பக்கத்தில் உல்லாசச் சவாரி போனாள். அவள் தோளில் தொத்திக் கிடந்த சீலையின் சிறு பகுதி காற்றில் பறந்து, 'இங்கே பாருங்கள்! கண் பெற்ற பயன் பெறுங்கள்!' என்று சைகை செய்வது போல், விளம்பரமாய் துள்ளிக் கொண் டிருந்தது.

உத்தியோகப் பெண்கள் நால்வரும் பெருமூச் செறிந்தார்கள். 'நாமும் இது மாதிரித்தான் ஸேரி கட்டிக் கொள்ளணும் இனிமேல். ஜாக்கெட்டை இன்னும் கொஞ்சம் கூடச் சிறிதாக்கிக் கொள்ளணும்' என்று தீர்மானித்தார்கள்.

பஸ் வந்து சேர்ந்தது. சரிநிகர்சமானமாக' எல்லோ ருடனும் போட்டிபோட்டு இடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறி 'ஸ்டாண்டிங்' பயணிகளானார்கள் அவர்கள்.

## ஒளிமயமான எதிர்காலம்

நாகரிகப் பெரு நகரத்தில், மிக நாகரிகமான ஒரு ஓட்டல், அதன் நிர்வாகம் அனுமதிக்கிற நபர்கள் தான் - அவர்கள் நிர்ணயிக்கிற உடைகளில்தான் - உள்ளே பிரவேசிக்க முடியும். அங்கே உள்ளே தீனிவகைகளும் குடி தினுசுகளும் குட்டிகளின் குதியாட்டமும் எப்படி எப்படி இருக்கும் என்பதை அங்கு போய் வருகிற அதிர்ஷ்டசாலிகளே அறிவர்.

விசேச நாட்டிய நிகழ்ச்சி என்று சில தினங்களில் நீக்ரோ மங்கையோ; ஜப்பானிய அழகியோ, பாரிஸ் பியூட்டியோ, பர்மா சிங்காரியோ அல்லது வேறு எந்நாட்டினளோ

ஆடுவாள். இதை விளம்பரப்படுத்தும் போட்டோக்கள் வெளியே காட்சி தருவது உண்டு. அவற்றில் உள்ள நாட்டிய பாவங்களும், ஆடை அலங்கோலங்களும் சீமான்களின் ஆசையையும் உணர்ச்சிக் கிளுகிளுப்பையும் தூண்டு வனவாகவே இருக்கும்.

இங்கு பெரும்பணக்காரர்களும் புதுப் பணக்காரர்களும், சமூகத்தின் மேல் தட்டில் உள்ளவர்களும், அவர்களைக் காப்பி அடிப்பவர்களும், அந்தஸ்திலும் நாகரிகத்திலும் உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொள்ள ஆசைப்படுகிற வர்களும், 'இன்னவரன்ன பிறரும்' வருவது வழக்கம். பணத்தை அலட்சியமாகக் காலி பண்ணுவது அவர்களது பொழுதுபோக்கு.

அந்த ஓட்டலினுள்ளிருந்து இரண்டு வாலிபர்கள் வெளியே வருகிறார்கள், பெரிய மனுஷத்தனப் பம்மாத்துப் பேர்வழிகள்.

'இப்ப பரவால்லே, இந்த ஸிட்டியிலே நைட் லைஃபிலும் ஜீவ களை ஏற்பட்டு வருது' ஒருவன் திருப் தியோடு சொன்னான்.

'என்னா பிரதர் பிரயோஜனம்! பெண்கள் இன்னும் துணிந்து வரலியே. எங்கே போனாலும் நீரும் நானும், நம்மைப் போன்ற பிரதர்களும் தானே நிறைய நிறையக் கூடுகிறோம். ஜாலியா ஜோடி சேர, டான்ஸ் பண்ண, ஸ்வீட் நத்திங்ஸ் பேசி இனிமையாப் பொழுது போக்க, சொசைட்டி கர்ள்ஸ் எங்கே வாறாங்க? இந்த ஸிட்டி இன்னும் எவ்வளவோ முன்னேறணும், பிரதர்!' மற்றவரின் குறைபாடு இது.

'பத்து வருஷங்களுக்கு முன்னாலே இதே ஸிட்டி இருண்டு போயி, அழுது வடிஞ்சுது, இல்லையா? இப்ப சமீப

காலத்திலே எவ்வளவு வேகமாக முன்னேறியிருக்கு பாரும். இன்னும் அஞ்சு வருஷத்துக்குள்ளே இதுவும் டில்லி, பம்பாய், கல்கத்தா மாதிரி பிரமாதமாக இருக்கும். அன்று நைட் லைஃபை என்ஜாய் பண்ண சொசைட்டிப் பெண்களும் ரொம்ப நிறையவே வருவார்கள். நம் நகரத்துக்கு நல்ல எதிர்காலம் இருக்குது, பிரதர்!' என்று உறுதியாகச் சொன்னார் முதல் அண்ணாத்தை.

## இசை முழக்கம்

கல்யாண வீடு ஒன்றிலிருந்து கிளம்பும் இசைத் தட்டு சங்கீதம், ஒலி பெருக்கி மூலம் காதை அறுக்கும் கூச்சலாய் பரவுகிறது.

'வாழ்க்கை என்பது ஜாலி!
அதை அனுபவிப்பதே நம் ஜோலி!

# 7. பயந்தவன்

கொலைவணிகர் புரத்திலே கொலை வணிகர் குலத்திலே அவன் பிறந்திருக்கக் கூடாது.

ஆனால், எங்கே எப்பொழுது யார் பிறக்க வேண்டும் என்பது அவரவர் எண்ணத்தைப் பொருத்து ஏற்படுகிற விளைவா என்ன!

அப்படி அவன் பிறந்த பிறகு அவனுக்கு அச் சூழ்நிலைக்குத் தேவையான மனப் பண்பு இல்லாமல் போனதுதான் இயற்கை அவனுக்குச் செய்த வஞ்சகம் என்று சொல்ல வேண்டும்.

பொதுவாக, வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு, ஒருவன் மனிதத் தன்மையை இழந்து விடவேண்டும் என்கிற நியதியை வாழ்வின் கதியும் உலகப் போக்கும் நிர்ணயித் திருக்கிறபோது. கொலையையே உயிர் வாழ்வதற்கு உதவிபுரிகிற உத்தியோக மாகப் பாவிக்கும் குலத்தில் வந்த அவன், அந்த வாணிபத்தைத் தந்தைக்குப் பிறகு பெற்றுக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய கடமைக்கு உள்ளான அவன், உணர்ச்சிகள் அலை மோதாத இதயம் பெற்றிருக்க

வேண்டும். ஆனால், இயற்கை அவன்நெஞ்சைக் கல்லாக்க வில்லையே!

அந்தத் தொழிலைச் செய்வதற்குத் தேவையான உடலுரம் அவனிடமிருந்தது. உள்ளத்து உறுதியும் இல்லாமல் போகவில்லை. எனினும் மனிதத் தன்மை தனது வலிமையை அதிகம் காட்டிவிட்டது.

மனிதன் செய்கிற குற்றங்களுக்கேற்பத் தண்டனை அளிக்கும் சட்டம் மகத்தான குற்றத்துக்கு விதிக்கும் மகத்தான தண்டனை குற்றவாளியைச் சாகடிப்பது தான். அதனால் குற்றம் செய்தவனுக்கு எந்த விதமான போதனையும் செய்ய முடியாமல் போனாலும், குற்றம் செய்ய விரும்புகிற வர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக - பாடம் கற்பிக்கும் சாதனையாக - சட்டம நிர்ணயித்துள்ள விதி இது. அதன்படி 'சீட்டுக் கிழிக்க' ப்பட்டவனைக் கயிற்றிலே தூக்கி ஊசலாடச் செய்கிற திருப்பணியை புரிந்து வந்தவர்கள் பரம்பரையாகத் தோன்றிய குலத்தில் வந்த அவனுக்கு அக்னிப் பரீட்சையாக இருந்தது முதல் தூக்கு.

தூக்குத் தண்டனைக்கு உள்ளானவர்கள் காற்றிலே தொங்கும் காட்சியை - அப்படி அவர்களைத் தொங்க விடுகிற சடங்கை - அவன் பார்த்திருக்கிறான். அக்காட்சிகளைக் காட்டியும், அச்சடங்கைச் செய்ய வேண்டிய முறைகளைப் பற்றியும் அவன் தந்தை அவனுக்கு விளக்கியிருக்கிறார். அவன் குடும்பத்தில் வந்த ஒருவர் ஒரே நாளில் பதினைந்து பேரைத் தூக்கிவிட்டு, அதன் பிறகு கூடக் கலக்காமலும் வருந்தாமலும் இருந்த தீரத்தைச் சிலர் மெச்சியதுண்டு.

என்றாலும் அவனுக்குத் துணைபுரியவில்லை முந்திய குலப்பெருமையெல்லாம். கடமையை நிறைவேற்ற வேண்டி யிருக்கிறதே என்ற உதைப்பு அவனுக்கு சில தினங்களாகவே பிறந்திருந்தது.

ஒரு மனிதனைக் கொல்ல வேண்டும். தனக்கு எவ்விதமான தீங்கோ பயமோ செய்திராத - செய்ய வேண்டும் என்ற எண்ணமே கொண்டிராத ஒரு அப்பாவி மனிதனை, சட்டத்தின் பெயரால் கழுவி லேற்றிக் காற்றிலே ஆடவிட அவன் ஒரு கருவியாக வேண்டும். ஏன்? மனிதகுலத்தின் தீராத துடிப்பை எழுப்பும் வயிற்றுக்கு வகை செய்வதற்கு ஏதாவது ஒரு தொழில் பார்க்க வேண்டியதுதானே என்ற நோக்கத்தோடு இந்தத் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தியவர்களின் வாரிசாகப் பிறந்து விட்டதனால்; அவர்களது சுவட்டிலே சென்று தன்னுடைய - தன்னை நம்பி யிருப்பவர்களுடைய் - வாழ்வுப் பிரச்னைக்கு சிறு மாற்றுக் காண இசைந்ததனால்.

அவனுக்குத் தெரியும்...

அவனுடைய முன்னோர்கள் அடிக்கடி சொல்லி வந்திருப்பது தான்: 'அநியாயமாக நாம் யாரையாவது கொன்றால், அது பாபம். பொருளாசையினாலோ, வேறு ஆசைகளாலோ யாரையாவது நாம் வலியப்போய் கொன்றால் அது பெரிய பாபம் தான். ஆனால் நியாயமும் சட்டமும் தீர்ப்புக் கூறி, நீ உலகத்தில் வாழ அருகதை யற்றவன்; இந்த சமுதாயத்திலே உன்னை விட்டு வைத்திருப்பது தப்பு; நீ சுதந்திரமாகத் திரிந்தால் அது சகோதர மனிதர்களுக்கு ஆபத்தையே விளைவிக்கும்: அதனால் உனது கணக்கைத் தீர்த்து விடுகிறோம்: நீ சாகவேண்டியதுதான் என்று முடிவு கட்டி விடுகிற ஒருவனைத் தண்டனைக்கு உள்ளாக்குவது பாபமா? அப்படியே அது பாபமாக இருந்தாலும்கூட, அது நம் தலையில் படியாது. தீர்ப்புக் கூறுகிறவர்கள் பேரிலும் விழாது. சட்டம், நீதி முதலிய வைகளையே சேரும்..'

இது சரிதானா? அவனுக்கு புரியவில்லை. அவன் படித்தவன் அல்ல. படிக்க வழி ஏது அவனுக்கு? அவனைப்

படிக்க வைக்க வகை ஏது அவனது பெற்றோருக்கு? அதனால் அவன் புரியாத புதிர்களை வைத்துக் குழப்பிக் கொண்டு கலங்கியலைந்தான்.

கொலைத் தண்டனையை நிறைவேற்றத் தான் ஒரு கருவி என்றால் - தொங்குகிற மனிதனின் கழுத்தை இறுக்குகிற முடிச்சுக் கயிறு போல தூக்கு மரம் போலத் தானும் ஒரு கருவி மாத்திரமே யென்றால்... சட்டத்திற்கு, சட்டத்தை நிர்வகிக் கிறவர்களுக்கு வளைந்து கொடுக்கிற துணைதான் என்றால், மற்றவர்கள் தன்னை, தன்னைச் சேர்ந்தவர்களை, தன் குலத்தை அகௌரவமாக, வெறுப்புக்கும், அர்த்தமற்ற பயத்துக்கும் இலக்காக்கி ஒதுக்கி வைப்பது ஏன்? விஷ ஜந்துக் களைக் கண்டு விலகிப் போவது போல் நகர்ந்து தூரப் போவதேன்? தங்களை ஒதுக்கித் தனியிடத்திலே தள்ளி பிட்டது ஏன்?

அவனுக்கு விளங்கவில்லை. அமைதியற்ற ஆழ்கடலில் ஆரவாரித்துப் புரண்டு தலைதூக்கும் அலைகளைப் போல் ஆயிரமா யிரம் 'ஏன்?'கள் எழுந்து அவன் எண்ணத்தை உலுக்கி, அர்த்தம் காண முடியாத பிரச்னைகளை ஆட்டிப் புடைத்து அவனை அலைக்கழிக்கும்.

தன் மனச்சாட்சியை திருப்திப்படுத்த அவன் மதபோதகரை நாடினான். அவர் சொன்னார்: 'மகனே, கொலை செய்வது பாபம்தான். உயிரை அழிப்பது கொலை தான் என்றாலும் எல்லா அழிப்பும் கொலையாகி விடாது. அதனால் எல்லாம் பாபமல்ல, உணவுக்காக உயிர்களைக் கொல்லுவதும், ஆராய்ச்சிக்காக உயிர்வதை செய்வதும் பாபமல்ல. நாட்டைக் காப்பாற்றவும், யுத்தத்தினாலும் அழிவு வேலையில் முனைவது பாபமல்ல. கொல்ல வேண்டும் என்கிற நோக்கமேயில்லாமல், தன்னையறியாமலே கொலைக்கு உள்ளாகிற செயலைச் செய்து விடுவதும்

பாபமல்ல. நீதானிருக்கிறாய். உனக்கு உபயோகமற்ற ஒரு ஆயுதத்தை வீசி எறிகிறாய். அது தற்செயலாக ஒருவன் மீது பட்டு அவன் இறந்து போகிறான். அது தெய்வ சங்கல்பம். நீ அவனைக் கொல்ல வேணும் என்று நினைத்தாயா? கிடையாது. வேணுமென்றே ஆயுதத்தை வீசினாயா? இல்லை. ஆகவே, உன் செயல் ஒரு உயிரின் மரணத்துக்குக் காரணமாகயிருந்தாலும்கூட, உன் செய்கை பாபமான தல்ல. அது போல்தான் நீதிக்காக உன் கடமையைச் செய்வதும், இவையெல்லாம் சாஸ்திரங்களால் அனுமதிக்கப்பட்டவை தான். ஆகையினால், மகனே, அஞ்சாதே. மனம் கலங்காதே. கர்த்தர் உன்னைக் காத்தருள்வார்.'

போதகரின் விளக்கவுரை அவனுக்குப் பிடித்திருந்தது. ஆனால் அவன் மனத்துக்கு அமைதி தரவில்லை.

'மனிதனை மனிதன் ஏன்கொல்ல வேண்டும்? அது எதன் பெயராலும் இருக்கட்டும். மதம், நியாயம், யுத்தம், தேச நன்மை - எதானால் என்ன? விளைவு உயிர்க்கொலை தானே? சகோதர உயிரை ஒழிப்பது கொலை... அது பாபம் தான்.. சட்டம், நியாயம், தண்டனை என்பதெல்லாம் மனிதரில் சிலர் - சந்தர்ப்ப வசத்தால் உயர்ந்து விட்டவர்கள் - தங்களுக்கு சாதகமாக ஏற்படுத்திக்கொண்டவை தானே? தாங்கள் விரும்பாதவர்களை ஒழித்துக் கட்ட உபயோகிக்கிற கருவிகள் தானே இவை?''

அவன் படித்தவனல்ல. எனினும் அவன் சிந்தனை விழிப்புற்றிருந்தது. எண்ணக் குமுறல் அவன் சிந்தனையை ஒருமுகப்படுத்தி ஓடத் தூண்டிக் கொண்டிருந்தது.

'மனிதனை மனிதன் கொல்லாமல் இருக்கலாம். ஒரு பாபத்தைத் தீர்க்க, தீர்க்க முடியாத மகாப்பெரிய பாபம் ஒன்றைச் செய்வது தான் பிராயச்சித்தமா? மனிதவர்க்கம் அறியாமையால் செய்து வருகிற தவறுகளைத்தீர்க்க

முறியடிக்க - உதவும் சரியான மாற்றுகள் தாமா தூக்குத் தண்டனை, ஜெயிலடைப்பு, யுத்தக் கொலைகள் எல்லாம்?'

அவனால் விடை காண முடியாது, அவன் சிந்தனை அதற்கு மேல் வேலை செய்யாதுதான்.

தான் தனது கடமையை நிறைவேற்ற ஒருவனைத் தூக்கிலேற்றியாக வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் அவனை சித்திரவதை செய்து கொண்டிருந்தது. ஒரு வாரம் பாரமான தினங்களாக உருண்டு, மனப்பழுவை அதிகமாக்கும் ஒரே நாளாகி, அதுவும் தேய்ந்து ஒரே இரவு என்ற கடைசிப் படியில் கலந்தது.

அந்த இரவு தாங்க முடியாத சோதனைக் காலம் - சாகப் ;பாகிற குற்றவாளிக்கும் அவனைக் கொல்ல வேண்டிய ;பரான அவனுக்கும்.

குற்றவாளி தூக்கமற்று, நாலு சுவர்களுக்குமிடையே, அங்குமிங்கும் அலைந்தான். ஒரே ஒரு இரவுதான் இனி அவனது வாழ்வின் எல்லை. வாழ்வு இயல்பான தனது எல்லையைத் தொடுமுன்பே சட்டமும் சந்தர்ப்பமும் செய்த சதிகளினாலே அவனது காலம் திடீரென்று சேதம் செய்யப்படுகிறது. அவன் உள்ளத்து அரங்கிலே எத்தனை எத்தனையோ எண்ணக் கூத்துகள். நிறைவேறாது - கிட்டவே கிட்டாது - என்று உறுதியாகத் தெரிந்தாலும் கூட மனம் நீள விடுகிற அல்ப ஆசைக் கனவுகள்... அவனுக்கு அமைதி யில்லை.

'கொலை'யை வயிற்றுப் பிழைப்புக்கு வகை செய்யும் வாணிபமாக ஏற்றுக் கொண்டுள்ள குடும்பத்தில் பிறந்த 'கொலைகார'னுக்கும் அமைதியில்லை. இரவில் உணவு செல்லவில்லை, பசி இருந்தது. சாப்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து, ஒரு கவளம் சோறை உள்ளே தள்ளியதுமே யாரோ தொண்டையைப் பிடித்து இறுக்குவது

போலிருந்தது, பிரமைதான். புரையேறி, நாசித் துவாரம் வழியாக ஒரு பருக்கை வெளியே வந்தது. கண்களில் நீர்கட்டி, தொண்டையில் பசபசப்பு மிகுந்தது... சே! தன் கையினால் மண்டையில் லேசாகத் தட்டிக் கொண்டு தண்ணீர் குடித்தான். உணவை எடுத்து மூடி வைத்து விட்டு உட்கார்ந்தான்.

புகை கக்கிக் கொண்டு செங்கொழுந்து பாம்பு நாக்குப் போல் நீண்டு உள்வாங்கிப் பின்மேல் நீண்டு நெளிந்தாட ஒளிச்சுடர் வளர்த்து நின்ற 'காடா விளக்கு' அவன் நிழலை பூதாகாரமாகச் சுவரிலே சித்திரித்தது. சுடர் ஆட்டத்துக்கேற்ப நிழல் மங்கியும் இருண்டும் தெரிந்தது, உடலினின்று பிரிந்த ஆவி மாதிரி... 'ஆமாம். இயற்கை மரணம் எய்தினால் உயிர் என்னாகும்? இப்படி பலவந்தமாக உயிரைப் பிரிக்கும்போது, உயிர் என்னாகிறது?' அவன் மனம் சுலபமாகக் கேள்வி கேட்டு விட்டது. பதில்? விடை காண முடியாது அவனைக் குழப்புகிற எண்ணற்ற புதிர்களோடு இன்னும் சில பிரச்னைகள்!...

இரவு ஊர்ந்து கொண்டிருந்தது.

அவன் தூங்கவில்லை. ஆனால் கிரக்கம் இமைகளை கனமாக்கி, மூடிச் சொருக வைத்தது. முடிவற்ற எண்ணம் தெளிவிலாச் சாயைகளைச் சித்த வெளியிலே நிழலாட விட்டது... அந்தக் குற்றவாளி செத்து அவனது உயிர் ஆவியாய், அடிமுடியற்ற பூதமாய், அமைதியில்லாப் பிசாசாகி சுத்த சூன்ய வெளியிலே சுழன்று, அவனைப் பழிவாங்க வந்து, அவன் கழுத்தை நெரிக்கிறது... அதன் எலும்புக் கைவிரல்கள் தூக்குக் கயிற்றின் முடிச்சு போல் காட்சி தருகின்றன... அவன் குரல்வளையில் அமுக்கி இறுக்குகின்றன. அவன் அலறியடித்து விழிக்கிறான். உடல் நடுங்குகிறது. சே, என்ன பயங்கரமான கனவு!

அதைவிட பயங்கரமாக முன் நிற்கிறது விடியற் காலையில் நடக்க வேண்டிய சடங்கின் நினைவு. சே, என்ன பிழைப்பு இது! என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது இப்படித் தொழில் செய்து ஜீவிக்க!

அவன் உள்ளத்து உதைப்பு அதிகரித்தது.

நேரம் ஓடியது.

அவன்வெளியே வந்து பார்த்தான். இரவின் குளிர். வானத்தின் எண்ணிலா வெள்ளிகளின் ஒளிக்கூட்டம். எங்கோ, தூக்கம் கலைந்த - அல்லது, விடிந்து விட்டது என்று ஏமாந்த - ஒரு பறவையின் ஒற்றைக்குரல்...

இன்னும் நேரம் கிடக்கிறது என்று நினைத்தான். உள்ளே வந்து கதவை அடைத்து, விளக்கைப் பெரிதாகத் தூண்டி விட்டு உட்கார்ந்தான். அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

'இது நியாயமேயல்ல. பாபம் தான். இந்த வேலை வேண்டாமென்று சொல்லி விடலாமா? ஆனால், கடைசி நேரத்தில் சொன்னால்? அதிகாரிகள் தன்மீதுதான் பாய்வார்கள்...'

அவனால் திட்டமாக எந்த விதமான முடிவுக்கும் வர முடியவில்லை. ஒரே யோசனையை வைத்துக் கொண்டு திண்டாடி மயங்கினான். விடிந்தது.

அதிகாரிகள் செய்ய வேண்டியவற்றை முறைப்படி செய்தார்கள். பலியிடத் தயாராக நிறுத்தப்படும் ஆடு போல் வந்து நின்ற குற்றவாளியை அவன் பார்த்தான். தனக்கு 'கொலைகாரன்' என்ற பெயரை ஊர்ஜிதமாக்கப் போகிற அந்த ஆசாமியை அவன் முன்பு கண்டதில்லை. அவன் யாரோ! என்ன குற்றம் செய்தானா? பாபி. தன்னைப் பாபத்துக்கு ஆளாக்குகிற ஒரு பாபி!

அவனது உள்ளம் கலங்கியது. கைகள் நடுங்கின. தேகத்தில் சிறு பதட்டம்.

குற்றவாளி மேடைமீது ஏறி நின்றான். அவன் முகத்தை மறைத்து ஒரு கறுப்புத் துணி விழுந்தது.

'நல்ல வேளை. துணி இல்லாவிட்டால், இவன் முகம் என்னைக் குறை கூறும். கழுத்தைக் கயிறு இறுக்க இறுக்க, விம்மிப் புடைக்கிற நரம்புகளும், கோணும் உதடுகளும், பிதுங்கும் கண்களும் - அம்மா, காணச் சகிக்காது. என்னைப் பழிவாங்கத் துடிப்பவைபோல, பயமுறுத்த முழிப்பவை போல, சே, நினைக்கவே பயமாயிருக்கிறது...'

தன்னால் இது ஆகாது என்று சொல்லி விடலாமா என்று எண்ணினான் மறுபடியும். ஆனால் வேளை தவறி விட்டது. இனி முடியாது...

அதிகாரம் சைகை செய்தது. அவன் இதயம் துடிக்க, கைகள் நடுங்க, தனது வேலையைச் செய்தான்.

குற்றவாளியின் கால்கள் நிற்கும் தளம் இழந்தன. ஆடின... அவனே ஆடித் தொங்கினான், கயிற்று முடிச்சு கழுத்திலே இறுக்க.

ஊசலிடும் அவனைப் பார்க்கத் திராணியில்லாமல், அவன் - கொலைக்குத் துணைபுரிவதைப் பிழைப்பாக ஏற்றுக் கொண்டு அல்லாடிய அவன் - தலை குனிந்தான். அவன் தலை கொதித்தது. உடல் கொதித்தது. உள்ளமும் கொதித்தது.

தான் கால் பதித்து நின்ற இடமே பெயர்ந்து விழ, தானே அந்தரத்தில் தொங்குவதாக ஒரு நினைப்பு... அவன் தலை சுழன்றது. அவன் சமாளித்து நிற்க முயன்றான். அவன் காதருகிலே நீரருவி பொங்கிப் பாய்ந்து விழுவது போல் பேரோசை எழுந்தது... அவன் தள்ளாடி விழுந்தான்.

'ஐய்யய்யோ! இவனுக்கு என்ன?... என்ன இப்படி!...'

'இரத்தக் கொதிப்பாக இருக்குமோ?'

'காக்காவலிப்பு கண்டா வந்திருக்குமோ!'

'பலவீனம்'

'இது தான் முதல் தடவை. பயந்திருப்பான். பாவம் எப்பவுமே அவன் ஒரு மாதிரி...'

'தண்ணி கொண்டா... தண்ணி!' 'இரும்பைக் கையிலே கொடுத்துப்பாருங்க. சாவிக் கொத்து இருந்தாலும் போதும். காக்கா வலிப்புக்கு...'

'ஆஸ்பத்திரிக்கு' 'டாக்டரய்யா..' ஐயோ பாவம்!'

அவனைப் பற்றி பலர் பலவிதம் பேசினார்கள். யார் என்னசொல்கிறார்கள் என்று அறியும் துடிப்பு அவனுக்கு இல்லை. அவன் உயிர்த் துடிப்பே ஒடுங்கி விட்டது. மனிதத்தன்மையை இழந்து விடவேண்டும் என்று கூறுகிற வாழ்வின் ஓட்டத்திலே நிமிர்ந்து நிற்க முடியாமல், மனச்சாட்சியால் கால்வாரி விடப்பட்ட அந்த மனிதனுக்கு 'மாரடைப்பினால் மரணம்' என்று முடிவு கூறினார் டாக்டர்.

# 8. எங்கும் போகாதவனின் அற்புத யாத்திரைகள்

அவன் எப்பொழுதம் அதே இடத்தில் தான் காட்சி அளித்தான். அங்கேயே முளைத்தெழுந்து நிலைபெற்று விட்டது மாதிரி. சாப்பாட்டு நேரம் தவிர, இதர நேரங்களில் எல்லாம், அவன் அங்கேயே உட்கார்ந்திருப்பான். அனைத்தையும் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளையார் போல.

அந்த இடம் வசதியாக இருந்தது. நிழலுக்கும் காற்றுக்கும் பஞ்சம் இல்லை. அவனுக்கும் சாப்பாட்டுக்குக் கவலை இல்லை. வேலை செய்தாக வேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை. பொழுது போக வேண்டுமே? அதற்காக, ரஸ்தாவைப் பார்த்தபடி, அதே இடத்தில் உட்கார்ந்திருப்பான்.

அது போக்குவரத்து மிகுந்த பெரிய ரஸ்தா ஒன்றும் இல்லை. ஊரும் சுமாரான ஊர்தான். அவனும் சாதாரண ஆசாமி என்று சொல்லப் படவேண்டிய தோற்றமே கொண்டிருந்தான்.

'ஏனய்யா இங்கேயே இருக்கிறீர்? சும்மா இப்படி எங்காவது போய் வருவது தானே?' என்று ஒருவர் கேட்டார்.

'எங்கே போக? இந்த ஊரிலே எங்கே போய், என்ன செய்து, எப்படிப் பொழுது போக்க முடியும்?' என்று அவன் கேள்விகளை அடுக்கினான்.

'வெளியூர் எங்காவது போய் வருவது? உம்மிடம் வசதிகள் இல்லையா என்ன? ஜாலி யாக டூர் கிளம்பி, பல இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு வருவதுதானே?' என்றார் மற்றவர்.

'எதுக்காகப் போகணும்? ஏன் போகணும்னு கேட்கிறேன்' என்று அவன் ஓங்கிக் கேட்டான்.

'பொழுது போகும். நாலு இடங்களைப் பார்த்த மாதிரியும் இருக்கும்.'

'பொழுது போகலேன்னு நான் யார் கிட்டேயும் முணுமுணுத்தேனா?' என்று கேட்டான் அவன். 'நாலு இடங்களைப் பார்க்கறதினாலே என்ன கிடைச்சிடும்? என்கிட்டே எத்தனையோ பேரு இப்படிக் கேட்டாச்சு. தாஜ் மகாலைப் பார்க்க வேண்டாமா? காஷ்மீரைப் பார்க்க வேணாமாய்யா என்றெல்லாம் கேட்பாங்க. பௌர்ணமி நிலவிலே தாஜ் மகாலைப் பார்க்கக் கொடுத்து வச்சிருக் கணும்; இமயமலையின் பனி படர்ந்த சிகரங்களிலே சூரிய ஒளி செய்கிற ஜாலங்களைப் பார்ப்பது கண்களுக்குக் கிடைக்கும் பாக்கியமாகும் என்றெல்லாம் ஒருவன் அளந்தான். நான் சொன்னேன் - வேய் இங்கே வாரும். எங்க ஊர் கோபுரத்தின் தங்கக் கலசத்திலே சூரிய ஒளி பட்டுத் தெறிக்கிற அற்புதத்தை நீரு பார்த்திருக்கீரா? இந்த ஊரு ஆழ்ந்து தூங்கிக் கிடக்கிற நடு ராத்திரி சமயத்திலே, பால் போல நிலா எங்கும் பரவியிருக்கிறபோது தோன்றுகிற

மோகன அமைதியை ரசித்திருக்கிரா? பின்னேப் போட்டுப் பேசுதீரே! ஒருவன் எல்லாத்தையும் பார்த்திட முடியாது. நீரு வடதுருவத்துக்குப் போனீரா? துருவப் பிரதேசத்திலே அற்புதமாக ஒளி வீசுமாமே, ஆரோரா பொரியலீசோ என்னமோன்னு, வர்ண மயமான வெளிச்சங்கள், அதை நீரு ரசித்தது உண்டா? இப்படி நானும் கேட்க முடியும்னேன். அப்புறம் அவன் ஏன் வாயைத் திறக்கான்!...'

அவன் பாட்டுக்குப் பேசிக்கொண்டே போனான். கேள்வி கேட்டவர். 'ஆசாமிக்கு உள்ளுக்குள்ளே ஸம்திங் ராங். இவனிட்டேப் போயி பேச்சுக் கொடுத்தேனே! என் புத்தியை செருப்பாலே அடிக்கணும்' என்று தன்னையே நொந்துகொள்ளும் உள்ளத்தவராய், வழி யோடு போனார்.

அவன்தானே சிரித்துக் கொண்டான்.

'பின்னே என்னங்கேன்? எல்லாரும் எல்லாத்தையும் பார்த்திட முடியாது. இந்தப் பக்கத்திலே கொஞ்சம் தள்ளி பல ஊருக இருக்கு. அங்கெல்லாம் ரயில் நாகரிகம் எட்டிக்கூடப் பார்க்கலே. மோட்டார் கார் கூட அநேக ஊர்களை ஒதுக்கி விட்டுத்தான் போகுது. அங்கே உள்ள பெரியவர்கள்லே அநேகம் பேரு ரயில் வண்டியில் ஏறினதே கிடையாது. ரயிலை கண்ணால் பார்த்திராதவங்ககூட அங்கே இருக் கிறாங்க. அப்படி இருக்கையிலே.. அஹறஹற'

அவன் மனம் நடந்துகொண்டிருந்தது, எண்ணத் தடத்தில். அது எப்போதும் விழிப்புடன் இருக்கும்.

- ஒரு சமயம் ஒருத்தன் எழுதியிருந்ததைப் படிச்சேன். பம்பாய் என்கிற மகாப் பெரிய நகரத்திலே சில தெருக்கள். 'சிவப்பு விளக்குப் பிரதேசம்'னு போட்டிருந்தான். அங்கே நெருக்கமான வீடுகள். ஒவ்வொரு வீட்டிலும் எத்தனையோ பெண்கள். உணர்ச்சி அரிப்பும் மன அரிப்பும் கொண்டு, தேடி வருகிற ஆண்களின் அந்தப் பசியைத் தீர்த்துவிடுவதைத்

தொழிலாக உடையவர்கள். அவர்களில் அநேகர், இருண்ட வீடுகளின் காற்றோட்ட மில்லாத அறைகளிலேயே பிறந்து, அங்கேயே வளர்ந்து, பெரியவர்களாகி, அந்தத் தொழிலை மேற்கொள்கிறார்கள். அதிலேயே அடிபட்டு, சீக்கிரமே செத்தும் போகிறார்கள். அவர்கள் ஒரு நாள் கூட நீல வானத்தைக் கண்டது கிடையாது. நட்சத்திரங்கள் பூத்துக் குலுங்குகிற இரவின் அழகை வானின் கீழ் நின்று பார்த்தது கிடையாது. இப்படி எல்லாம் எழுதியிருந்தான். அதைப் படிக்கையில் என் மனசை என்னவோ செய்தது. இப்படியும் மனிச சென்மங்கள் வாழுது பார்த்தியான்னு ஒரு நெனைப்பு. இப்படி எல்லாம் இருக்கிறப்போ, ஏய் நீ அங்கே போகலியா - இங்கே போகலியா - இந்த இடத்திலேயே குந்தி இருக்கலாமான்னு கேட்கிறதே வீணத்தனம் இல்லையா?...

அவன் குமுறிய கோபத்தால் சிறிது உறுமிக் கொண்டான். அவன் கண்கள், ரோடு வழியே போய்க் கொண்டிருந்த ஒரு வண்டியைத் தொடர்ந்தன. சற்றுத் தள்ளி ஓடிய ஒரு நாயின்கூட ஓடின. தொலைவில் நின்ற கன்றுக்குட்டி அருகில் நின்றன. ஒரு பெண் பின்னாலேயே போயின.

அவன் மனசுக்கும் கண்கள் இருந்தன. அவை கூர்மையான சக்தி பெற்றிருந்தன.

- அவள் போகிறாள். தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டு நிற்கும் பெண்ணோடு பேசுவதற்காக நிற்கிறாள். பிறகு நடக்கிறாள்... ஆற்றங்கரைப் பக்கம் போவாள், அங்கே காடாக வளர்ந்து கிடக்கும் முள் மரங்கள் மத்தியில், நிதானமாகச் சென்று, விறகுக்காகக் கொம்புகளை வெட்டுவாள். வெட்டிக் கொண்டே இருப்பாள். அவளுக்கே அலுத்துப் போன பிறகு, ஒரு கட்டுக்குப்போதும் என்று தோன்றும். வெட்டுவதை நிறுத்துவாள். உட்காருவாள்.

வெற்றிலை போட்டுக்கொள்ளுவாள். வெட்டப்பட்ட கம்புகளையும் குச்சிகளையும் சேர்த்து ஒன்றாக்கி, நாரை வைத்துக் கட்டாகக் கட்டி, தலைமீது சிரமப்பட்டு தூக்கி எடுத்துக்கொண்டு, சுமந்து வருவாள். சுமை தலையை அழுத்த, பசி வயிற்றைக் கிள்ள, களைப்பு உடலைத் துன்புறுத்த வீட்டிலே போய் இனிமேல் கஞ்சி காய்ச்சணுமே என்ற நினைப்பு மனசை அழுத்த அவள் நடந்து வருவாள்... அப்போது அந்தி நேரம். மேல்வானம் ரொம்ப அழகாக இருக்கும். சிவப்பும் ரோஸூம் தகத்தகப் பொன் மயமும்... ஆகா, அதை எத்தனை பேர் ரசிக்கப் போறாங்க?...

அவன் சிந்தித்தான்: 'வாழ்க்கை எப்படி எப்படியோ அமைந்து கிடக்கு. மனுஷங்க எப்படி எப்படி எல்லாமோ வாழ்கிறாங்க. ஒரு ஊரிலே, கொஞ்சம் பேரு சேர்ந்துக்கிட்டு, தனி இனமா ஒதுங்கி வாழணும்; நம்ம வீடுகள் எல்லாம் பெரிய கோட்டைக்குள்ளே இருக்கணும்னு திட்டமிட்டு, அப்படியே மண்ணாலே கோட்டை வளைஞ்சுக்கிட்டாங்க. நாங்க கோட்டைப் பிள்ளைமார்னு சொல்லிக்கிட்டாங்க. அந்தப் பெருமை பெண்களை கைதிகள் போல வாழச் செய்யும் ஏற்பாடாகி விடது. ஆண்கள் வெளியே வரலாம். ஊர் சுற்றலாம், போகலாம். பெண்கள் - சிறுமிகள் கூட - கோட்டைக்கு வெளியே வர முடியாது. அங்கேயே பிறப்பு, வளர்வது, கல்யாணம் ஆவது, பிள்ளை பெறுவது, சாவது எல்லாம். வெளியேயிருந்து இதர இன ஆண்கள் உள்ளே போகக்கூடாது. அனுமதி பெற்று, பெண்கள் போய் வரலாம்.. யோசிச்சுப் பாரு. இயல்புக்கு மாறுபட்ட வாழ்க்கை வாழ நேர்ந்துவிட்ட பெண்கள், சிறுமிகள் ஓடும் நதியை, திரியும் மிருகங்களை, மனிதர்களை, கடைத் தெருக்களை, திருவிழாக் கூட்டத்தை, ரயில் வண்டித் தொடரை - எதையும் பார்த்ததில்லை. பார்க்க முடியாது. என்ன வாழ்க்கை அது!'

அவன் பெருமூச் செறிந்தான்.

ரோட்டில் ஒரு கட்டை வண்டி போனது. அதை ஓட்டிச் சென்றவன் கரு மெழுகினால் செய்து உருட்டித் திரட்டப் பெற்ற உருவமென மினுமினுத்தான். முரட்டு ஆள். பெரிய மீசை.

- இவன் எமனுக்குத் தம்பிபோலும். இவன் அப்பன் செத்துப்போனான். அவன் இவன் மாதிரி இருந்ததில்லை. இவனுடைய தாத்தா உயரமாக, பருமனாக இருந்தார். அவருக்கு அப்பனை எனக்குத் தெரியாது. அவனும் இவனைப்போல் கட்டை வண்டி ஓட்டிச் சென்றிருந் திருப்பான். அல்லது, அப்படி ஓட்ட ஒரு ஆளை நியமித் திருக்கக்கூடிய பண வசதி பெற்றவனாக இருந்தாலும் இருந்திருக்கலாம். அப்படி இருக்க முடியாது என யார் சொல்லக்கூடும்? அவனுக்குத் தாத்தா...

அவனுடைய மனம் காலம், வெளி அனைத்தையும் கடந்து, எங்கெங்கோ பறந்து திரியக் கூடிய ஆற்றலும் அருவச் சிறகுகளும் பெற்றிருந்தது.

இப்போது அது தன் வேலையைக் காட்டியது. பசும்பரப்பிலே ஜிவ் - ஜிவ் எனத் தாவிப் பாயும் தத்துக் கிளி மாதிரித் திரிந்தது. இளம் வெயிலில், வெறும் வெளியில், மிதந்து கிண்ணென மேலேறி, மீண்டும் நீந்தி, திரும்பவும் உய்யென்று மேலே மேலே பாய்ந்து நீலவானை நோக்கி உல்லாசமாகப் பறக்கும் சின்னஞ்சிறு குருவி போல அது விளையாடிக் களித்தது...

- இவனுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா... இப்படிப்பட்ட முன்னோர்கள் எப்படி எப்படி வாழ்ந்திருப் பார்கள் என்று தரிசித்தது. அந்தக் கிளையில் ஒருவன் பாண்டிய மன்னர் காலத்தில் இருந்திருப்பான். 'பாண்டிய

மன்னரில் ஒருவனாகவே கூட இருந்திருக்கலாம். அது சாத்தியமில்லை என்று நீர் எப்படிச் சொல்ல முடியும்?' பாண்டியன் படை வீரர்களில் ஒருவனாக இருக்கக் கூடும். சாதாரணக் குடிமகனாகவே இருந்திருக்கலாம். நாளங் காடியில் சாமான்கள் விற்கிறவனாகவோ, வாங்குகிற வனாகவோ... கொற்கைக் கடலில் முத்துக் குளிப்பவனாக, அல்லது கடற்கரையில் குவிக்கப்பட்டுள்ள முத்தக்களை விற்பனை செய்யும் வணிகனாக... ஏன், கொள்ளைக் காரனாகக்கூட இருந்திருக்கலாம். அவனுக்கும் தாத்தா... சிருஷ்டியின் துவக்கத்திலிருந்து பின்னி வருகிற அறாத சங்கிலியின் முடிவற்ற கண்ணிகள் தானே இன்று திரிகிற மனிதப் பிறவிகள்? ஆகவே, ஒவ்வொருவனின் முன்னோனும் எல்லாக் காலத்திலும் இருந்திருக்க வேண்டும் தானே?

அவன் மனம் வேறு கதியில் ஓடியது. தாண்டிக் குதித்தது-

இப்போது இங்கே ரொம்ப அமைதியாக இருக்கிறது. எங்காவது கலாட்டா நடந்து கொண்டிருக்கும். எவனாவது எவனையாவது குத்திக் கொன்றிருப்பான். ஏதாவது ஒரு காரணத்தினால் ஒருவன் தற்கொலை செய்வதில் முனைந் திருப்பான். இயல்பான சாவு செத்தவன் வீட்டில் 'எடு - கெடத்து' என்று பரபரப்பும், அழுகையும் புலம்பலும் இருக்கும். பல இடங்களில், இரவில் பூத்த அல்லி மலர்கள் இன்னும் சிரித்துக் கொண்டிருக்கும். வாய்க்கால் ஓரத்துச் செவ்வரளிப் புதர்களில் சிவப்பு நட்சத்திரங்களாய் பூக்கள் ஒளிரும். ரயில்கள் ஓடிக்கொண்டே இருக்கும். பஸ்கள், சைக்கிள்கள், கார்கள், லாரிகள், ஸ்கூட்டர்கள் வகையரா எங்கெங்கோ, எவர் எவராலோ இயக்கப்பெற்று, அலையும். எங்காவது மழை பெய்து கொண்டுதானிருக்கும். மழையில் நனைகிறவர்களும் இருப்பார்கள். ஆபீஸ்களில் வேலைகள் நடக்கும். ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் படுத்திருப்பார்கள்.

விபத்துகள், கல்யாணங்கள், காம லீலைகள், காதல் விளையாட்டுக்கள், பிள்ளைப்பேறுகள் நடக்கின்றன, நடந்துகொண்டே இருக்கின்றன.

அவன் அதே இடத்தில் இருந்தான். கால உணர்வற்று. கடமையின் தூண்டுதல் இன்றி. காண்பவர் பார்வையில் சாதாரணச் சோம்பேறி போல் தோன்றிய அவன் உண்மையில் அதே இடத்தில் இல்லை.

# 9. தொலைந்து போன சொர்க்கம்

**பா**லுப்பிள்ளைக்கு - அவருடைய முழுப்பெயர் பால் வண்ணம் பிள்ளை. அப்படி யாரும் அவரை அழைப்பதுமில்லை. குறிப்பிடுவதும் இல்லை - அந்த நினைப்பு தீராத தாகமாய், பெரும் தவிப்பாய் தீவிர ஏக்கமாக வளர்ந்து வந்தது.

அந்த நினைப்பின் வித்து, அவர் தாமிரவர்ணி ஆற்றோரத்து சிறு கிராமத்தைவிட்டு வெளியேறி, உத்தியோக நிமித்தம் ஊர் ஊராகச் சென்று, முடிவில் பட்டணத்தில் குடியேறிய காலம் தொட்டே அவருடைய உள்ளத்தில் ஆழப்பதிந்து வேரோடியிருந்தது. பட்டணவாசம் அதை கப்பும் கவருமாகத் தழைத்து வளரச் செய்தது.

இதெல்லாம் ஒரு ஊரா? இங்கே வாழ்வது எல்லாம் ஒரு வாழ்க்கையா? தாமிரவர்ணி ஆற்றங்கரை ஊருக்கு, அங்கே வாழ்வதற்கு, ஈடு இணை உண்டுமா? ஆற்றிலே குளிப்பதே ஒரு சுகம். அது தனிரக இன்பம். அப்புறம், அமைதியான, வளமான அந்தக் கிராம வாழ்க்கை! ஆகா, ஆகா!

இப்படி தன்னுள்தானே சொக்கிப் போவது பாலுப் பிள்ளையின் இயல்பு ஆகிவிட்டது. பலப்பல வருடங் களாக.

தாமிரவர்ணிக் கரை மீது இருந்த மீனாட்சி புரத்தில் அவர் வசித்த காலமே மிக இனிமையான காலம் - அவருடைய வாழ்க்கையின் பொற்காலம் ஆகும் என்று பாலுப்பிள்ளை கருதினார். அந்நாட்களின் நினைவுகளை அசை போடுவதிலே அவருக்கு அலுப்பு சலிப்பு ஏற்படுவதேயில்லை.

மீனாட்சிபுரம், ஆற்றை ஒட்டி அமைந்த அழகான ஊர். ஆற்றில் பெரும் மணல் பரப்பு. பார்வைபடும் இடம் எல்லாம் மணல். பக்கத்திலேயே கைலாசபுரம். ஆற்று மணலில் தைப்பூச மண்டபம். அதன் மகிமையே தனி. அந்தக் காலத்தில் பிள்ளை இளைஞனாக இருந்தபோது, அங்கேதான் பெரிய பெரிய தலைவர்களின் கூட்டங்கள் நடைபெறும். ஜவகர்லால் நேரு, கமலா நேருவுடனும் இந்திராவுடனும் அந்த மணல் பரப்பில், தைப்பூச மண்டபத்தில் அமைக்கப் பட்டிருந்த விசேஷ மேடையில் தோன்றி மக்களை மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்திய காட்சியை மறக்க முடியுமா? அது நடந்தும் அம்பத்து மூணு அம்பத்து நால வருஷம் இருக்குமே! என்ன கூட்டம்! எவ்வளவு ஜனங்கள்...

இப்படி அவருடைய நினைவு 'ஜிலு ஜிலு' என்று நகர்ந்து கொண்டிருக்கும்.

ஆற்றில் மணல்பரப்பு அவருடைய வாழ்க்கையில் மிக ஒட்டி உறவாடிய ஒரு களம் ஆக இருந்தது அந்தக் காலத்தில். அவரும் அவரைப் போன்ற இளவட்டங்களும் அங்க சடுகுடு விளையாடிக் களிப்பார்கள். மாலை நேரங்களில் - நிலாக் காலத்தில் இரவில் வெகு நேரம்வரை மணலில் அமர்ந்து மனம் மகிழப் பேசி பொழுது போக்குவார்கள். அப்போது

ஒரு வாரப் பத்திரிகையில் ஒருவர் யோகாசனப் பயிற்சி பற்றி சுவாரஸ்யமாகக் கட்டுரை எழுதி வந்தார். அதைப் படித்த பாலுப்பிள்ளையும், இரண்டு மூன்று நண்பர்களும் ஆர்வத்தோடு ஆசனங்கள் செய்து பழகினார்கள். அதற்கும் ஆற்றங்கரை மணல் வசதி செய்து கொடுத்தது.

பாலுப்பிள்ளை, அவரைக் காணவருகிறவர்களிடம் எல்லாம் இந்தப் பெருமைகளை அளப்பது உண்டு. 'திரும்பவும் மீனாட்சிபுரம் வாழ்க்கை சித்திக்குமா என்று என் மனம் ஏங்குகிறது' என்று முத்தாய்ப்பாகச் சொல்லுவார் அவர்.

சில வருடங்களுக்கு முன்பு அவரை சந்தித்த சுயம்புலிங்கத்திடம் பாலுப்பிள்ளை இதைச் சொன்னார்.

சுயம்பு சிரித்தார். கிண்டலாக சொன்னார். ''மீனாட்சி புரத்தில் திரும்பவும் வாழ்கிற வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கலாம். ஆனால், மீனாட்சி புரம், கைலாசபுரம், சிந்து பூந்துறை, கொக்கிரகுளம் எல்லாமே - தாமிர வர்ணியை அடுத்துள்ள திருநெல்வேலி வட்டாரத்து ஊர்கள் எல்லாமே இப்ப பழைய ஊர்களாக இல்லையே என்ற ஏக்கம் உங்களைத் தொத்திக் கொள்ளும்!''

''அதென்ன அப்படிச் சொல்லிப் போட்டீக?'' என்றார் பிள்ளை. கொக்கிரகுளத்துக்குப் போகிற. சாலையில் ஓங்கி வளர்ந்த மருதமரங்கள் பற்றியும், வீரராகவபுரத்தில் இந்துக் கல்லூரியை ஒட்டி மதுரை ரோடின் அழகு, அங்கு நின்ற பெரிய பெரிய மரங்கள், பக்கத்து மாந்தோப்புகள் பற்றியும், சிந்து பூந்துறையின் ரோஜாத் தோட்டங்கள் பற்றியும் தன்னை மறந்த லயத்தோடு பேசினார்.

''நீங்க நம்ம ஊர்ப்பக்கம் வந்து எத்தனையோ வருஷங்கள் ஆச்சு... இப்ப ஒரு தடவை கட்டாயம் வந்து

பாருங்க!'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டுப் போனார் சுயம்பு.

பாலுப்பிள்ளை அப்படி வரத்தான் செய்தார். பகீரென்றது அவருக்கு. திருநெல்வேலி ஜங்ஷன் நாகரிகப் பெரும் நகரமாக வளர்ந்திருந்தது. மருதமரங்கள், மாந்தோப்புகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போயிருந்தன. எவ்வளவு கடைகள்! எத்தனை எத்தனை பஸ்கள்! என்ன கூட்டம்! சதா தேனடை யில் மொய்க்கும் ஈக்கள் மாதிரி, புற்றுகளில் சஞ்சரிக்கும் எறும்புகள் போல, ஜனங்கள் நெருக்கி மோதி சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள்...

இதைவிட அவருக்கு அதிர்ச்சி தந்தது ஆற்றங்கரை, அழகு குலைந்து, மணல் பரப்பு மறைந்து, மண்டி வளர்ந்த நீர்க்கருவையும், எருக்கஞ் செடிகளும், இதரவகைச் செடிகளுமாக, ஆறு ஆறாகவே இல்லையே? தைப்பூச மண்டபம் தனது பொலிவை இழந்துவிட்டு, வேலிகள் கம்பிகள் போர்த்து என்னமோ மாதிரி இருந்தது. எங்கும் குடிசைகள், சாக்கடை நீரோட்டம், அசிங்கம்...

சகிக்க முடியவில்லை அவரால். மீனாட்சிபுரம், கைலாசபுரம், சிந்து பூந்துறை முதலிய சிற்றூர்கள், தத்தமது தனித்துவம் இழந்து, ஜங்ஷன் என்ற நாகரிக மையத்தின் நீண்டு பரவிய அங்கங்களாக மாறியிருந்தன.

மீனாட்சிபுரம் ஆற்றங்கரையில் அவர் மணலைத் தேடினார். மணல் பரப்பு எங்குமே இல்லை. கொக்கிர குளம் பாலத்தின் கீழே ஆறு சாக்கடை போல் தேங்கி நின்றது. நகரச் சாக்கடை நீர் பல இடங்களில் வந்து ஆற்றில் கலந்து கொண்டுமிருந்தது.

பாலுப்பிள்ளை பெருமூச்செறிந்தார். அவருக்குப் பழக்கமான ஆற்றங்கரைப்பாதை வழியே நடந்து பார்த்தார்.

பல இடங்களில் பாதை 'தூர்ந்துபோய்' விட்டது. தடமே இல்லை.

ஒவ்வோர் ஊருக்கும் பஸ் போக்குவரத்து ஏற்பட்டு விட்டதால், நடந்து போகிற பழக்கத்தை மனிதர்கள் துறந்து விட்டார்கள். அதனால், ஆற்றங்கரை பாதைக்கு அவசியம் இல்லாது போய்விட்டது. முட்செடிகள் மண்டி விட்டன.

பாலுப்பிள்ளை சிரமப்பட்டு நடந்து பார்த்தார். முன்பு அழகுடன் தென்பட்ட சிற்றூர்கள் - ஆற்றை ஒட்டியுள்ளவை - இப்போது அழகு குலைந்தே காணப்பட்டன. எங்கும் நீர்க்கருவை மரங்கள். ஆற்றில் மணல்வெளி அருகிப்போச்சு, புதர்புதராக என்னென்னவோ செடிகள் கும்பலிட்டு வளர்ந்து ஆற்றை அதன் அழகை - கெடுத்துக் கொண்டிருந்தன.

பாலுப்பிள்ளை மனவேதனையோடு பட்டணம் திரும்பினார். என்றாலும் அவர் தனது ஆசையை, நினைப்பை துறந்துவிடத் தயாராக இல்லை. தாமிரவர்ணி ஆற்றோரத்து ஊர் ஒன்றில் தனது வாழ்வின் கடைசிக் கட்டத்தை அமைதியாய், சந்தோஷமாய் கழிக்க வேண்டும் என்ற ஏக்கம் அவரை உறுத்திக் கொண்டேயிருந்தது.

அவருக்கும் வயது ஆகிவிட்டது. இனிமேலும் உழைக்க முடியாது. உழைக்க வேண்டிய அவசியமும் இல்லை என்ற கட்டம் வந்தது.

நாகரிக நகரத்தின் எல்லைகளைத் தாண்டி, முழுவதும் கிராமத்தன்மைகளையே பெற்றிருக்கும், ஒரு ஊரை - தாமிர வர்ணிக் கரையோரச் சிற்றூரை - அவர் தேர்ந்தெடுத்தார், மனைவியோடு அவ்வூருக்கு வந்து சேர்ந்தார்.

பாலுப்பிள்ளை பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண் டிருந்த காலத்தில், அந்த ஊரிலிருந்து சில பையன்கள் 'ஒத்தை

மாட்டு வண்டி'யில் பாளையங்கோட்டைக்கு வந்து கல்வி கற்றார்கள். அவர்களில் சிலபேர் சுறுசுறுப்பாக இருந்தது இல்லை. அப்போதெல்லாம் தமிழ்பண்டிதர் சுவாரஸ்யமாகச் சொல்லுவார்:

''காலையிலே எழுந்து, ஆற்றில் குளித்துவிட்டு, மலையாள மரவையில் பழையசோறை எடுத்துப் போட்டு, உங்க ஊர் கட்டித் தயிரை ஊற்றி, திருகப் பிசைஞ்சு, சுண்டக்கறியும் வச்சுக்கிட்டு சாப்பிட்டால் தேவா மிர்தமா இருக்கும். அப்படிச் சாப்பிட்டுப் போட்டு பள்ளிக் கூடத்துக்கு வந்தால், தூக்கம் வரும். பின்னே படிப்பா வரும்?'' என்பார்.

பாலுப்பிள்ளை இதை அடிக்கடி எண்ணி ரசிப்பது உண்டு.

அந்த ஊரும் பிள்ளையின் நினைவில் நிலைபெற்றிருந்த குளுகுளு ஊராக இல்லை இப்போது. முன்புமோருக்கும் தயிருக்கும் பிரசித்தி பெற்றிருந்த ஊரில், இப்போது பாலும் மோரும் கிடைப்பதே சிரமமாக இருந்தது. இரவில் ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் பண்ணையில் கொண்டு போய், மாடுகளைக் கறந்து, பால் முழுவதையும் அங்கேயே விற்று விடுவார்கள். கிராமங்களில் கிடைக்கிற பால் பூராவும் 'கேன் கேன்' ஆக நகரங்களுக்கு - ஓட்டல்களுக்குப்போய் விடுகிறது. கிராமத்தில் பால் தட்டுப்பாடு - மோர் கிடைப் பதில்லை - நெய் என்கிற பேச்சுக்கே இடம் இல்லை.

அங்கே வந்து சேர்ந்த இரண்டு நாட்களிலேயே பாலுப்பிள்ளை இதை உணர்ந்து கொண்டார். வீட்டோடு மாட்டை நிறுத்தி, பால் கறந்து, சில வீடுகளுக்கு வாடிக்கை யாகப் பால் ஊற்றுகிற ஓர் அம்மாளிடம் பாலுக்கு ஏற்பாடு செய்தார்.

அந்த அம்மாள் தந்த பால் தண்ணீர் அதிகம் கலந்ததாக இருந்தது. இதை அவர் அந்த அம்மாளிடம் சொன்னார்.

அவள் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டு, ''நாளை முதல் உங்களுக்குத் தர நம்மகிட்டே பால் இல்லை. கள்ளிச்சொட்டு மாதிரி பால் கறந்து கொடுக்கிறவங்க கிட்டேயே வாங்கிக்கிடுங்க!'' என்று சொல்லி விட்டாள்.

அப்புறம் பிள்ளையின் மனைவி அந்த அம்மாளின் 'நாடியைப் பிடித்துத் தாங்காதகுறையாக' கெஞ்சி வேண்டி, தொடர்ந்து பால் ஊற்றும்படி ஏற்பாடு செய்தாள்.

இப்படிப்பட்ட மனித சுபாவங்கள் பாலுப்பிள்ளைக்குப் புதியனவாகத் தோன்றின. கிராம மக்களிடம் 'முன்னொரு காலத்தில்' அன்பையும் பிரியத்தையும், பரோப காரத்தையும் மனித நேயத்தையுமே கண்டு அனுபவித்திருந்தார் அவர். உறவுமுறை இல்லாதவர்கள் கூட 'சொந்தக்காரர்கள்' போல் வாஞ்சையுடன் பழகினார்கள்; உதவி புரிந்தார்கள். காய்கறிகள், விளை பொருள்களை அண்டை அயல் வீடுகளுக்குத் தாராளமாக வழங்கினார்கள். 'தன்னிறைவு' பெற்றிருந்தது கிராமம்... எதையும் காசாக்க வேண்டும், எப்படியும் பணம் பண்ணவேண்டும் என்ற நகர மனோபாவம் பஸ் நாகரிகத்துடன் எல்லா கிராமங்களிலும் புகுந்து விட்டதாக பாலுப்பிள்ளை கருதினார்.

அவ்வூரில் ஒரு கடை. பலசரக்குக் கடை. டவுனில் மூன்றாம் தரச் சரக்குகளை வாங்கி வந்து, டவுன் கடைகளில் முதல் தரச் சரக்குகளின் விலைக்கு விற்றுக் கொண்டிருந்தார் கடைக்காரர். அவர் கடையிலும் வியாபாரம் நடந்து கொண்டுதான் இருந்தது.

''இங்கே சாமான் வாங்குவதற்கு மனம் இல்லாதவர்கள் டவுன் பஸ்ஸிலே போயி டவுனிலேயே வாங்கிக் கிடட்டுமே!

யாரு வேண்டாமுங்கா? பஸ் சார்ஜ், அலைச்சல், வாங்கி ஸ்டாக் பண்ணி விக்கிறதுக்கு கூலி, இதுகளை எல்லாம் சேர்த்து வச்சுதான் நாங்க விலை நிர்ணயிப்போம்'' என்று அவர் பேசுவார்.

''அவர் சொல்வதும் நியாயம் தானே?'' என்று அவருக்குப் பரிந்து பேசவும் ஊரில் ஆட்கள் இருந்தார்கள்.

தேவையான பொருட்கள், தேவைப்படுகிற சமயங்களில் கிராமத்தில் கிடைப்பதில்லை. இது பாலுப்பிள்ளைக்குப்புரிவதற்கு வெகுநாட்கள் தேவைப்படவில்லை.

''எல்லா காலங்களிலும் எந்த நேரத்திலும் பட்டணத்தில் பூ முதல் எல்லாச் சாமான்களும் கிடைக்கின்றன. கையில் பணம் இருக்கவேண்டும். அதுதான் முக்கியம். கிராமத்தில் பணத்தை வச்சுக்கிட்டு சாமான்களுக்காக அலைந்தாலும் கிடைக்கிற வழியாயில்லையே?'' என்று அவர் தன் மனைவியிடம் குறைபட்டுக் கொள்வது வழக்கமாகி விட்டது.

முன்பு ஒவ்வொரு கிராமத்திலும் செக்கு இருந்தது. அதில் எண்ணெய் ஆட்டுகிற ஓசை ஒருவித இசைத் தன்மையுடன் நாள் முழுதும் கேட்டுக் கொண்டிருக்கும். நயமான நல்லெண்ணெய் உள்ளூரிலேயே கிடைத்தது. இப்போது அப்படி இல்லை. எண்ணெய் வாங்குவதற்கு டவுனுக்குத்தான் போகவேண்டும்.

ஒருநாள் ஏதோ கனமான சாமானை நகர்த்தி வைப்பதற்காக, தெருவோடு போன ஒருவனை அவர் அழைத்தார். முன்புபோல எவனும் சிரித்த முகத்தோடு வந்து அன்புடன் உதவுவான் என்றே அவர் எண்ணியிருந்தார்.

ஆனால், அந்த ஆள் பேசாமலேயே நடந்தான்.

''ஐயா, உம்மைத்தான். இங்கே வந்து...''

''எனக்கு சோலி இருக்கு!'' என்று வெடுப்பாகச் சொல்லி விட்டுப் போனான் அவன். தொடர்ந்து, ''கூலி அவுத்துக் கொடுத்திடுற மாதிரித் தான்! வேலை செய்யணுமாம் வேலை!'' என்று முணுமுணுத்துக் கொண்டே நடந்தான்.

இதுபோல் பல அனுபவங்கள் நேர்ந்தன.

ஊரில் மரங்கள் அதிகம் காணப்படவில்லை. நின்ற மரங்களிலும், ஆட்டுக்குக் குழை பறிப்பது. விறகுக்கு குச்சி முறிப்பது என்று சிலர் அவ்வப்போது தங்கள் கைவரிசை களைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

தெருவில் நின்ற வேப்பமரம் ஒன்றின்மீது ஏறி, கிளை களை முறித்துப் போட்டுக் கொண்டிருந்தான் ஒரு பையன்.

''ஏய், ஏன் மரத்தை நாசப்படுத்தறே?'' என்று அதட்டினார் பிள்ளை.

அவன் பயமோ, மரியாதை உணர்வோ காட்டவில்லை. ''உமக்கென்ன? நீரு வச்சு வளர்த்த மரமா இது?'' என்று எடக்காகச் சொல்லெறிந்துவிட்டு, தனது வேலையைத் தொடர்ந்து செய்தான்.

ஊரை அழகாகப் பேணுவது, ஊர் சொத்தைப் பாதுகாப்பது என்கிற உணர்வுகளைவிட, அழிவு வேலை பண்ணுவதிலும் அசிங்கப்படுத்துவதிலுமே மக்களுக்கு ஆர்வம் இருப்பதை பிள்ளை புரிந்து கொண்டார்.

எந்த கிராமமும் சுத்தமாக இல்லை. ஊருக்குள் பிரவேசிக்கிற வழியிலும், ஊரை விட்டு வெளியே செல்கிற எல்லையிலும், பாதையின் இருபுறங்களிலும் மலக்காடுதான். தெருக்களின் ஓரங்களும் ஜனங்கள் மலம் கழிக்கிற

இடங்களாகவே அமைந்துள்ளன. தெருக்களின் மத்தியில் சாக்கடை ஓடுகிறது.

பாலுப்பிள்ளை முகம் சுளித்து, மனசுக்குள் புழுங்குவது தவிர வேறு என்ன செய்ய முடியும்? காலம் மாறிவிட்டது என்பது சரிதான். அத்துடன் மனிதர்களின் போக்குகளும் மாறிக் கொண்டிருக்கின்றன. வறுமையும் சோம்பேறித் தனமும் வளர்வதை அவர் கண்டார்.

கிராமவாசிகளும் நகரமோகம் கொண்டு, நகரமக்களின் உடை அலங்காரங்களையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்றத் துடிப்பதையும், அநேகர் நகரங்களிலேயே வசிக்க ஆசைப்படுவதையும் அவர் அறிந்தார்.

'வேலை இருக்கிறதோ இல்லையோ, கிராமவாசிகள் பஸ்களில் பயணம் செய்து நகரங்களுக்குப் போகிறார்கள்; அங்கே சுற்றுகிறார்கள்; ஓட்டலில் சாப்பிடுகிறார்கள்; சினிமா பார்க்கிறார்கள். 'பணக்கஷ்டம் அது இது' என்கிறார்கள். ஆனால் எப்பவும் பஸ்கள், ஓட்டல்கள், சினிமாத் தியேட் டர்களில் கூட்டமும் நெருக்கடியுமாகத்தானே இருக்கிறது? ஜனங்களுக்கு இதுக்கெல்லாம் பணம் கிடைத்துக் கொண்டு தானே இருக்கிறது!' என்று அவர் அதிசயித்தார்.

பாலுப்பிள்ளைக்கு தபாலில் வந்த பத்திரிகைகளில் ஒன்றில் ஒரு சிறப்புக் கட்டுரை இருந்தது. கிராமங்களின் உயர்வுபற்றி ஒருவர் அளந்திருந்தார்.

'இந்தியாவின் ஆத்மா அதன் கிராமங்களில்தான் இருக்கிறது' என்று கூறி கிராமங்கள், கிராம மக்கள், அவர்களது பண்புகள் பற்றி எல்லாம் உற்சாகமாக எழுதப் பட்டிருந்தது அந்தக் கட்டுரையில்.

'நகரத்தின் வசதி நிறைந்த அறைக்குள். மின்விசிறியின் கீழே அமர்ந்து, உடம்பிலே பிடியாது எழுதுகிறவர்கள் இப்படித்தான் எழுதுவார்கள். இப்படி உயர்வாகப் பேசுகிறவர்கள் இன்றைய கிராமங்களை எட்டிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்' என்று எண்ணினார் பிள்ளை.

இன்றைய இந்தியாவின் ஆத்மா அதன் கிராமங்களிலும் இல்லை; நகரங்களிலும் இல்லை; அது திரிசங்கு நிலையிலே எங்கோ ஊசலாடிக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் மனம் பேசியது.

# 10. அதே நேரத்தில்...

முன்னிரவு.

நாகரிகப் பெருநகரம் ஒளி அலங்காரங்களால் பகட்டிக் கொண்டிருந்த வேளை.

தெருக்களில் ஜனநடமாட்டமும் வாகனங்களின் இயக்கமும் அதிகம்தான்.

எவ்வளவோ ஜனங்கள்! எத்தனை தினுசு மனிதர்கள்! ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ பிரச்னைகள், குழப்பங்கள், தாகங்கள், தவிப்புகள். ஏக்கங்கள், ஆசைகள் - உணர்வுச் சுழிப்புகள்! நாகரிகம் மினுக்கி மின்னும் நவநாகரிக தடபுடல் ஓட்டல் ஒன்றின், பலவித ஒளிகளும் பூத்துக் குலுங்கும் 'ரூஃப் கார் டனில்' கலகலப்பும் களிப்பும் கவலையற்ற தன்மையும் நிலவின.

மூலை மேஜை ஒன்றைச் சுற்றி ஐந்துபேர். ஒவ்வொருவருக்கும் தனித்தனிப் பிரச்னைகள், கவலைகள், எண்ண ஓட்டங்கள் இருந்த போதிலும், அந்த நேரத்தில் உல்லாசிகளாகவும் உற்சாகிகளாகவும் காட்சியளித்தனர். 'ஜாலி பிரதர்கள்!' அவர்கள் பேச்சு இதை விளம்பரப்படுத்திக்

கொண்டிருந்தது. அவர்கள் கண்கள் எதெதையோ வியந்து ரசித்துக் களிப்புற்று நீந்தின.

சிதம்பரம், ஒரு மூலையில் ஆனந்த உருவங்களாய் அமர்ந்து, தீனி இன்பத்தையும், இனிய உளறல்களையும் ரசித்துச் சுவைத்துக் கொண்டிருந்த காதல் ஜோடி ஒன்றை அடிக்கடி பார்த்து, உள்ளத்தில் பொறுமினான்: 'இந்தத் தடிப்ப சங்களோடு வீண்பொழுது போக்க நேர்ந்து விட்டது. இல்லாவிட்டால், லலிதாவோடு ஏதாவது படம் பார்க்கப் போயிருக்கலாம். படத்துக்கு இல்லையென்றாலும், சும்மா பீச் பக்கம் போயிருக்கலாம். ரொம்ப ஜாலியாக இருந்திருக்கும்!'

சாமிநாதன், சற்று தள்ளி ஒரு மேஜையில், நான்கு பேர்களாக இருந்தும் பெரும்கும்பல் மாதிரிக் கலகலப்பு உண்டாக்கி, அர்த்தமில்லாமல் சிரித்து, குஷியாகக் காட்சி தந்த யுவதிகளைப் பார்த்து விட்டு, 'நாம் இப்படிச் சேர்ந்திருப்பதைவிட, அவர்களைப் போல் அலங்காரிகள் சிலரையும் சேர்த்துக் கொண்டு டின்னருக்கு ஏற்பாடு பண்ணியிருக்க வேண்டும். அப்போது இந்த விருந்தின் சுவையும் இன்பமும் அதிகரித்திருக்கும்' என்று அபிப்பிராயம் அறிவித்தான்.

அதை ஆரவாரமாக வரவேற்ற சந்திரன் 'அடுத்த தடவை அப்படியே அரேன்ஜ் செய்தால் போச்சு!' என்று சொல்லி வைத்தான். அவன் மனம் அவன் வேலை செய்யும் கம்பெனியில் பணிபுரியும் புஷ்பா, சாந்தா, கோகிலா வகையராவை எண்ணத் தொடங்கியது. ஐந்து பேர்களே வேண்டும் என்பதில்லை. சும்மா பேசிச் சிரித்துப்பொழுது போக்கத்தானே. மூன்று பேரே போதும். பெரும் கூட்டம் கூட்டுவானேன்? நம்ம அஞ்சு பேரிலே ஒன்றிரண்டு பேரை 'கட்' பண்ணி விட்டலாம். இந்த உம்மணா மூஞ்சி சோழுப் பயல் அது மாதிரி விருந்துகளுக்கு லாயக்கே இல்லை.

இருக்கிற உற்சாகத்தையும் கெடுத்துப் போடுவான். சரியான 'கில் ஜாய்' அவனை கூப்பிடவே கூடாது...

சோமு, தனியாக எதையும் பார்க்காமல், ஆனாலும் விசாலப் பார்வையால் அனைத்தையும் விழுங்கியவாறு இருந்தான். அவன் சுபாவமே ஒரு மாதிரி. எதையும் 'ஸீரியஸாக' எடுத்துக் கொள்வதில்லை. 'பார்க்கப்போனால் எதிலும் ஒண்ணுமேயில்லை. அர்த்தமற்றது. இன்றையப் பொழுதின் இந்த வேளை இப்படிக் கழிந்ததாக்கும். சந்தோஷம். இனி எப்போ எது என்னவாறு நடக்கும் என்று நான் ஏன் மனசை அலட்டிக் கொள்ள வேணும்? நடக்கிறது நடக்கிறபடி நடக்கட்டுமே!' என்று அவன் அடிக்கடி நண்பர் களை 'போரடி'த்திருக்கிறான். இப்போதும் அதுபோல் ஞான மொழி ஏதேனும் உதிர்க்கலாமா என்று ஒரு எண்ணம் அவன் உள்ளத்தில் திரண்டது. அதை அமுக்கிவிட்டு, 'ப்சா!' என்று அலட்சிய ஒலிக்குறி சிந்திச் சும்மாயிருந்தான்.

நாராயணன், தன் மனைவி அன்று சீக்கிரமே வீடு வந்து சேரும்படி சொல்லி அனுப்பியிருந்ததை இப்போது திடீரென்று நினைத்துக் கொண்டான். நோயால் கஷ்டப்படும் குழந்தையை டாக்டரிடம் கொண்டுபோய் காட்டவேண்டும் என்று சொல்லியிருந்தாள். ஏதோ ஒரு டானிக் வாங்கிவரும் படியும் சொன்னாள். 'போகிற பாதையில் மருந்துக் கடை ஏதாவது திறந்திருக்காமலா போகும்? எல்லாக் கடையும் அடைச் சிருந்தால், ட்வெண்டி ஃபோர் அவர்ஸ் சர்வீஸ் - த்ரூ அவுட்டே அண்ட் நைட் என்று வெளிச்சம் போட்டுக் கொண்டு, வியாபாரம் செய்கிற தடியன் ஷாப்புக்குப் போகவேண்டியதுதான். விலை கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். உம்: போறான்!'' என்று எண்ணிக்கொண்டான். உதட்டளவில் என்னென்னவோ பேச்சுகள் உதிர்ந்தன. நேரம் ஓடியது.

நாராயணன்தான் அவசரப் பட்டான். 'நேரமாச்சு. நான் மெடிகல் ஷாப்புக்குப் போகணும். மருந்து வாங்கிக் கொண்டு சீக்கிரம் வீடு சேரணும். இப்ப போனால்தான் பஸ் கிடைக்கும்.'

'ஆமாமா. பஸ்ஸுக்கு வேறே காத்து நிற்கணுமே!' என்று ஒவ்வொருவரும் முணு முணுத்தார்கள். எழுந்தார்கள் கடைசி முறையாக, ரூஃப் கார்டனின் ஒளிமயமான காட்சியை - ஒளி வெள்ளத்தில் நனைந்தபடி மினுமினுத்துக் கொண்டிருந்த நாகரிக நங்கையரையும் அவர்களுக்கு ஏற்ற துணைவர்களாய் விளங்கப்போட்டியிட்ட ஆண்களையும் - பார்வையால் தொட்டுத்தடவி, ஏக்க மூச்சு சிதறினார்கள். பீடாவைக் குதப்பியவாறே கீழே இறங்கினார்கள்.

அப்படியும் அவர்கள் பிரிந்து அவரவர் திசையில் செல்வதற்கு மேலும் கால்மணி நேரம் தேவைப்பட்டது.

நாராயணன்தான் முதலில் ஓடினான். 'அதோ அதோ! பஸ் வந்துவிட்டது!' என்று கையை ஆட்டியவாறே ஓடினான்.

அவன் ஓடிப்போவதையும் ஊர்ந்து செல்ல ஆரம்பித்த பஸ்ஸில் வேகமாகத் தொத்திக் கொண்டதையும் மற்றவர்கள் பார்த்தார்கள். 'இது என்ன அவசரமோ! தேவையற்றது. இந்த பஸ்போனால் இன்னொரு பஸ். இடை நேரத்திலே தலையா போய்விடும்? இல்லை, பூகம்பம் வந்து இவன் வீடே அஸ்தமிச்சுப் போகுமா? சுத்த மடத்தனம்!' என்று சோமு நினைத்தான். ஆனால், வெளியே சொல்லவில்லை.

சிதம்பரம் வாட்சைப் பார்த்தான்... இன்னும் நேரம் கிடக்கு. இப்பவே போனாலும், லலிதாவைக் கூட்டிக் கொண்டு ஹாயா வாக் போகலாம். ஏதாவது ஃபிலிமுக்குப் போனாலும் போகலாம்.. அப்போ நான் வரேன். நாளை பார்ப்போம்!' என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.

'பிரதர். நீர் எந்தப்பக்கம்?' என்று சந்திரன் கேட்கவும், 'ப்சா!' என்று அலட்சிய ஒலி சிதறினான் சோமு. 'ஆல்வேய்ஸ் வீட் டு ரோம்னு சொல் லி வச்சான். அது அந்த காலம்! இப்போ. ஆல்வேய்ஸ் வீட் டு ஸோம்ஸ் ரூம்! சோமுவின் ரூமுக்கு எந்தப் பாதையில் போனால் என்ன!' என்று அறிவித் தான்.

'ஸோரி, எப்படியாவது போம்!' என்று சொல்லிவிட்டு, சந்திரனும் சாமிநாதனும் ஒரு திசையில் நடந்தார்கள். கை கோத்தபடி, ஜாலியாகப் பேசியவாறு நடந்தகொண்டிருந்த இருவரையும் கவனித்து நின்ற சோமு சிரித்தான். 'பெட்டைக் கிறுக்குப் புடிச்ச பயலுக. இப்ப சினிமா விடுறடைம். தியேட்டர்களுக்குள்ளேயிருந்து கலர்கள் நிறையவே வரும். மோப்பம் பிடிக்கப்போறானுக. ஸோரியோ, ஸ்கர்ட்டோ கிடைக்குமான்னு கண் தூண்டில் வீசிக்காத்து நிற்பானுக. வீணப் பயலுக!' என்று அவன் மனம் விசிலடித்துக் கனைத்தது.

'இப்பவே ரூமுக்குப் போயி என்ன செய்ய? மணி ஒன்பது தான் ஆகுது. இப்படி சும்மா இந்த ரோட்டிலே கொஞ்ச தூரம் நடந்துவிட்டு...'

அவன் கால்கள் தாமாகவே இயங்குவனபோல் நடந்து கொண்டிருந்தன.

ரோடில் பகல்நேரப் பரபரப்பும், போக்குவரத்து நெருக் கடியும் இல்லை. ஒன்றிரண்டு கார்களே போய் வந்தன... பகல் நேரம் என்றால் எண்ணித் தொலையாது. நாய் பெருத்த மாதிரி கார்கள் பெருத்துப் போச்சு. பகலில் அதுவும் ஆபீஸ்களுக்குப் போகிற - அல்லது, ஆபீஸ் நேரம் முடிந்து எல்லோரும் வீடு திரும்புகிற வேளையில் - ரோடின் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் போவதற்கு வெகுநேரம் காத்து நிற்கவேண்டும். இப்ப எத்தனை தடவை வேண்டுமானாலும்

அப்படியும் இப்படியும் நடந்துபோய் வரலாம்... ஸிட்டியில் சைக்கிள்களும் பெருத்துப் போச்சு. ஜனப் பெருக்கம் அதிகம்.

அந்த வட்டாரத்தில் உள்ள மூன்று தியேட்டர்களும் ஒன்றை அடுத்து ஒன்றாய், ஆட்களை - படம் பார்க்கப் பொறுமையோடு இருந்து விட்டு முடிவில் அவசரமும் ஆத்திரமுமாய் வெளியேறும் ஆண்கள் பெண்களை - தெருவில் பரவவிட்டன. அடுத்த காட்சிக்குப்போகிறவர்கள் முட்டி மோதிக்கொண்டு பதட்டமாக முன்னேறினார்கள். கார்கள். காதை அறுக்கும் ஒலிகளை எழுப்பியவாறு, ஜனவெள்ளத்தை வெட்டி முன்னேறி வேகம் பெற முயன்று கொண்டிருந்தன.

விருப்பம் இல்லாமலே பெரும் கும்பலில் சிக்கிக் கொண்ட சோமுவுக்கு அது வேடிக்கையாகவும் இருந்தது. சினிமா பார்த்துவிட்டுத் திரும்புகிற சந்தோஷத்தில் அற்புத அழகாய் பூத்துக் குலுங்கிய இனிய பெண் முகங்கள் அவனுக்கு நேர் எதிராக வந்து, அவனை ஒதுக்கிவிட்டு அப்பால் நகர்வதும், பகட்டும் வர்ணஜாலங்களை உடைகளில் ஏந்தி மினுக்கிக்கொண்டு அசைந்து நகர்ந்துவரும் வகை வகையான பெண் உருவங்கள் மோதுவனபோல் தோன்றி, நெருங்கி நின்று, துணியால் தடவியபடி விலகிச் செல்வதும் கிளுகிளுப்பூட்டும் இனிய அனுபவங்களாகப் பட்டன அவனுக்கு.

'இந்தவிதச் சிறுசிறு இனிமைகளைத் தேடித்தான் சந்திரனும் சாமிநாதனும் போகிறார்கள். நான் தேடாமலே இவை வலிய வந்த மகிழ்வு தருகின்றன' என்று அவன் எண்ணினான்.

தள்ளுவண்டியில் வைத்து வேர்க்கடலை, பட்டாணி விற்கும் ஒருவனிடம் வேர்கடலை வாங்கிக் கொண்டு,

ஒவ்வொரு கடலையாய் வாயில் போட்டுச் சுவைத்தபடி மெது நடை நடந்தான்.

பெருகி வந்த ஜனவெள்ளம் போனசுவடு புரியாதபடி வடிந்திருந்தது. ரோடுகள் வெறிச்சிட்டக் கிடந்தன.

வேர்க்கடலையைத் தின்று தீர்த்த பிறகு, பொட்டலம் கட்டியிருந்த தாளில் சுவையான செய்தி ஏதாவது தென்படாதா என்ற பசியுடன் அதை விரித்துப் பார்த்தான். ரசமான துணுக்கு அவன் பார்வையில் பட்டது.

''ஒரு நிமிஷம் என்று அல்பமாகக் கருதப்படுகிற நேரத்தில் உலகத்தில் எவ்வளவோ காரியங்கள் நடைபெற்று விடுகின்றன. உதாரணமாக, ஒரு நிமிஷ நேரத்தில், அறுபது கோடிப் பேர் கொட்டாவி விடுகிறார்கள். நூறு பேர் செத்துப் போகிறார்கள். முப்பத்திநாலு திருமணங்கள் நடைபெறுகின்றன. நூற்றுப்பதினான்கு குழந்தைகள் பிறக்கின்றன. இரண்டு லட்சத்து எண்பதாயிரம் டெலிபோன் 'கால்'கள் கூப்பிடப் படுகின்றன. அறுபதுலட்சம் சிகரெட்டுகள் புகைக்கப்படுகின்றன. ஆறுலட்சத்து முப்பதாயிரம் காலன் மது குடிக்கப்படுகிறது. நாலாயிரம் டன் உணவுப் பொருள் தின்று தீர்க்கப்படுகிறது...''

'பேஷ் பேஷ்!' என்று ரசித்தான் சோமு. இது மாதிரியான புள்ளி விவரங்களையெல்லாம் எபபடித்தான் சேகரிக்கிறாங் களோ தெரியலே, இந்த நாகரிகப் பெருநகரத்தில் மட்டும், ஒரு நிமிஷத்தில் எத்தனை கப் காப்பி விழுங்கப்படுகிறது, எத்தனை ஆயிரம் இட்லி குளோஸ் செய்யப்படுகிறது. எவ்வளவு காலன் சாம்பார் காலி ஆகிறது என்று எந்த ஆராய்ச்சியாளனாவது கணக்கிட்டுச் சொன்னால், அவனுக்கு ஸ்பெஷலாக ஒரு சிலை நிறுத்த ஏற்பாடு செய்யலாம்!

'ஐடியா!' என்று தன் எண்ணத்தைத் தானே பாராட்டி மகிழ்ந்தான் அவன்.

இரவு ஒளிக் கோலங்களுடன் அற்புதமாக விளங்கியது. சிவப்பு, பச்சை, நீல நிறக் குழல் எழுத்துக்களாய் மினுக்கும் பலரக விளம்பர நியான் விளக்குகள். பிரகாசமான 'மெர்குரி வேப்பரைஸ்ட்' விளக்குகள். நீள நீளமான ப்ளோரசன்ட் விளக்குகள்... ஒளி சிமிட்டிச் சிமிட்டி எரியும் விளம்பர வெளிச்சங்கள்... ஒரு உயர்ந்த கட்டிடத்தின் உச்சியிலே தீ எழுத்துக்கள் ஓடிக்கொண்டே இருப்பதுபோல் ஒளி ஜாலம் காட்டும் செவ்வொளி விளம்பர ஏற்பாடு...

'ஏய், என்ன வேலைகள் எல்லாம் செய்றானுக எலெக்ட்ரிக் லைட்டினாலே!' என்று வியந்து போனான் சோமு.

ஒரு சரக்கின் விளம்பரத்துக்கு அடுத்து இன்னொன்று, அதை அடுத்து வேறொன்று... மற்றுமொன்று... மேலும் வேறே... இப்படி வேகம் வேகமாய் ஓடும் தீ நிற எழுத்துக் களில் அடுத்தடுத்து என்ன வருகிறது, எத்தனை வரும் என்று நின்று கவனித்தான். முதலில் கண்ட விளம்பரமே திரும்ப வந்ததும், தொடர்ச்சியாக பழைய வரிசையே தோன்றவும், 'அற்புதம்தான்!' என்று எண்ணியவாறு ரஸ்தாவில் இறங்கினான். பெரிய ரோடைக் கடக்கும்போது கூட, ஓடும் தீ ஒளி எழுத்துக்களை வேடிக்கையாக அண்ணாந்து பார்த்தவாறே நடந்தான்.

அவன் அப்படி நடப்பதைப் பார்க்காத கண்மூடி வேக ஓட்ட மோட்டார் ஒன்று அவனை மோதிக் கீழே தள்ளி அவன் மீது ஏறிக்கொண்டு சென்றது. வெறி வேகத்தில் அதை ஓட்டி வந்த மனிதன் மனிதத் தன்மையோடோ, நாகரிக விதி முறைகளின் படியோ செயல்புரிய விரும்பவில்லை. அவனுக்கு என்ன வெறியோ, என்ன அவசரமோ! காரை நிறுத்தாமல், திரும்பிப் பார்க்காமல், வேகமாக, மேலும் வேகமாக - ஓட்டிச்சென்று எங்கோ மறைந்து விட்டான்.

மோட்டாரின் வேக ஓட்டத்தை வியக்கும் சக்தி சோமுவுக்கு இருக்கவில்லை. அவன் செத்தே போனான். இந்த நிமிஷத்தில் இன்னும் தொண்ணூற்றொன்பது பேர் உயிரை விட்டிருப்பார்கள் என்று எண்ணும் சக்தி அவனுக்கு இருந்திருந்தால் - அவன் கடைசிச் சிந்தனை நெளிந்து மறைந்திருக்கலாம்.

அவனோடு சேர்ந்து உல்லாசமாக விருந்து உண்டவர்கள் இன்னும் அவரவர் இருப்பிடம் போய் சேரவே இல்லை.

அந்த நேரத்தில் -

நாராயணன் ஒரு மருத்துக் கடையில் நின்று கொண்டிருந்தான். 'நல்ல வேளை டானிக் வாங்கியாச்சு!' என்ற திருப்தி அவனுக்கு.

சிதம்பரம், லலிதாவைத் தேடிப்போய், அவள் வீட்டில் இல்லை; சில ஃபிரண்ட்ஸோடு சினிமாவுக்குப் போயிருக்கிறாள் என்று கேள்விப்பட்டு, ஏமாற்றத்தோடு ஒரு வீதியில் நடந்து கொண்டிருந்தான். 'யார் கூடப் போயிருப்பா? ஃபிரண்ட்ஸ் என்றால் சிநேகிதிகளா? சிநேகிதன்களா?' என்ற பிரச்னையை வைத்து அவன் மனம் ஆராய்ந்து கொண்டிருந்தது.

சந்திரனும் சாமிநாதனும் சிகரெட் பிடித்தவாறே ஹாயாக நடந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ரசனைக்கு அருமையான விருந்துகள் கிடைத்துக் கொண்டதானிருந்தன. 'சினிமாவைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட, படம் பார்த்து விட்டு வெளியே வருகிறவங்களைப் பார்ப்பதிலே தான் அதிக இனிமை இருக்கு. நான் அவ்வளவாய் படம் பார்ப்பது கிடையாது. ஆனால், படம் பார்த்துவிட்டு வெளியே வாறவங்களை ரசிக்கும் வாய்ப்பை நான் அடிக்கடி ஏற்படுத்திக் கொள்வது உண்டு' என்று சந்திரன் சொன்னான்.

'ஆமாமா... அது சரி' என்று முணு முணுத்தான் சாமிநாதன்.

ஒவ்வொருவருக்கும் எத்தனையோ கவலைகள், வெவ்வேறு ஈடுபாடுகள்! 'நேற்றிருந்தான், இன்றில்லை என்று சொல்லும்படியான பெருமையை உடைய' இந்த உலகத்தில் நேரே நேரரே காண்கிறபோதுதான் மற்றவர் பற்றிய நினைப்பும் உணர்வும் ஏற்படும். இதர நேரங்களில் அவரவர் அலுவல்களே அவரவருக்குப் பெரிசு!

சோமு உயிரோடு நடந்து கொண்டிருந்தால் அவ்வேளையில் இப்படித்தான் எண்ணியிருப்பான்!

# 11. ஒரு தெரு

சாதாரணமான தெரு தான் அது. எங்கும் உள்ளது போலவே வீடுகள், சுவர்கள், சன்னல்கள், வாசல்கள் எல்லாம்.

ஒரு புறம் வரிசையாக மின்விளக்குக் கம்பங்கள். மறு பக்கம் ஒன்றிரண்டு மரங்கள். தார் போட்டபாதைதான்.

காலமும் அனுபவமும் மனித உடலில் பதித்து விடுகிற முத்திரைகளைப் போலவே அந்தப் பாதையின் பரப்பிலும் மேடு பள்ளங்கள் தாறுமாறாகப்படிந்து கிடந்தன.

'நான் இந்த வழியை தேர்ந்தெடுதத்திருப்பதன் காரணம் இங்கு ஜன நடமாட்டம் அதிகம் இல்லை என்பது தான்' என்று ராமமூர்த்தி அடிக்கடி எண்ணிக்கொள்வது உண்டு.

அந்தத் தெருவின் வழியாக தினந்தோறும் மூன்று நான்கு தடவைகளாவது போய் வருவான் அவன். அப்போதும் சரி யாராவது விசாரிக்கும்போதும் சரி அவன் சொன்ன பதில், 'நகரத்தில் உள்ள எல்லா வீதிகளையும் போல் தான் இதுவும். சர்வ சாதாரணமான தெரு' என்பதுதான்.

அப்படிப்பட்ட சாதாரணத் தெருவின் சர்வ சாதாரண மான வீடு ஒன்றின் சன்னலுக்குப் பின்னால் ஒரு சமயம் ஒரு அதிசயம் தலை காட்டியது.

'அசாதாரண அழகு படைத்த பெண்' என்று ராம மூர்த்தியின் உள்ளம் பேசியது. அவள் கண்கள் அற்புத ரசத்தை உள்ளடக்கிய கவிதைகளே யாகும் என்றது அவனுடைய ரசிகமனம்.

அன்று முதல் அந்த சன்னல் மாத்திரம் பிற சாளரங் களைவிட முக்கியத்துவம் பெற்ற தாய், அதிவிசேஷ மானதாய், அழகை உள்ளடக்கிய ஒரு வலை போலவும் அவன் பார்வையைக் கவர்ந்து இழுக்கும் காந்தம் போலவும் விளங்கியது.

ஒருநாள் அவ்வீட்டின் வாசல்படியில் அழகு முழு உருவம் கொண்டு நின்றது. அதன் நிலையிலே ஒய்யாரம் மிளிர்ந்தது. அதனுடைய சிறு அசைவில் கூட ஒயில் மின்னியது.

'எழில் நிறை ஓவியம் இவள் தோற்றம், பொருள் புதை காவியம் இவள் பார்வை' என்று வியந்தது ராமமூர்த்தியின் உள்ளம். அவன் நல்ல ரசிகன்.

தினம் அவசியத்தோடு மூன்று நான்கு தடவைகள் அவ்வீதி வழியே போய்வந்து கொண்டிருந்த ராமமூர்த்தி, அவசியம் இல்லாமலே ஆறேழு முறைகள் அப்படியும் இப்படியும் அலையலானான். அவன் நடை விணாய் போவதில்லை.

அந்த அழகுப் பெண் சாளரத்துச் சந்திரி கையாகக் காட்சி தராத சமயங்களில் எல்லாம் படி ஓரத்துப் பதுமையாக நின்றாள். பார்வைக்கும் விருந்தானாள். பார்த்து, மகிழ்ந்து, இளம் சிரிப்புச் சித்திரித்து இனிமையாக விளங்கினாள்.

அபூர்வமாக எப்பொழுதாவது அவனுக்கு எதிரே நடந்து வருவதும் உண்டு. எங்காவது கடை, சிநேகிதி வீடு, தபாலா பீஸ் என்று போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருப்பாள்.

'ஆகா, இவள் நடை மிக அழகு! நீள் சடை அசைவுற, நடைபயில் மயிலென மயிலென இவள்வருவது அற்புதமான காட்சி' என வியக்கும் அவன் உள்ளம்.

ராமமூர்த்தியின் ரசிகமனம், என்றோ படித்துக் களித்த பாடல்களை இடம் - பொருள் - ஏவல்களுக்கு ஏற்றபடியும் தனது இஷ்டம் போலவும் திரித்தும் பிரித்தும், கூட்டியும் குறைத்தும் புலம்பும் பண்பு உடையதுதான்.

சந்தர்ப்பங்கள் எப்படி எப்படியோ உதவின. அந்த அழகி வெறும் பார்வைப் பொருளாக இருந்த நிலை மாறி, சிரிப்புப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் நிலைமையை அடைந்தாள். ஒன்றிரண்டு வார்த்தைகள் 'வாய் உபசாரமாகப்' பேசத் தொடங்கி, விரைவிலேயே அவனும் அவளும் சகஜமாகப் பேசவும் அருகருகே நடக்கவும் கூடிய அளவுக்கு பழக்கம் முற்றியது.

அப்போதெல்லாம் அந்தத் தெரு தனது சாதாரணத் தன்மையிலிருந்து உயர்ந்து ஓங்கி விட்டது. அவன் கருத்திலே தான்.

அழுகுணித் தோற்றம் உடைய இலைகளின் நடுவில் திடீரென அழகிய மொக்கு முகிழ்த்து, ஈடு இணை இல்லாத மோகன மலராகப் பூத்து தனித் தன்மையோடு திகழ்வது மாதிரி அந்தத் தெருவும் சோபை பெற்றது. அவன் பார்வை யில் தான்.

இதர வீதிகளில் நின்ற எலெக்ட்ரிக் கம்பங்களை விட அத் தெருவில் காணப்பட்ட கம்பங்கள் கலைநயம் உடையனவாகவும், அவற்றில் இரவு வேளையில் எரியும்

விளக்குகள் மற்றவற்றைக் காட்டிலும் அதிகப் பிரகாசம் பெற்று விளங்குவதாகவும் அவனுக்குத் தோன்றின. 'மற்றவை வெறும் விளக்குகள். இவை ஒளி சிரிக்கும் குமிழ் வடிவப் பூக்கள் போல் அல்லவா இருக்கின்றன!' என்று எண்ணும் அவன் மனம்.

அந்தத் தெருவில் நின்ற ஒன்றிரண்டு மரங்கள்கூட, கைதேர்ந்த ஓவியன் கலைத் திறமையோடு தீட்டும் காட்சியில் சேர்த்து விடுகிற தனிரக மரங்கள் மாதிரித்தான் அவன் பார்வையில் பட்டன.

அவள் பெயர் சாந்தா என அறிந்து கொண்டான் அவன்.

சாந்தாவைக் கண்டது முதல்ராமமூர்த்தியின் உள்ளம் சாந்தியை இழந்து தவித்தது. அவளோடு பேசும்போது, அவள் சிரிப்பதைப் பார்க்கும்போது, தானும் உடன் சிரித்து மகிழ்கிறபோது அவளோடு சேர்ந்து நடக்கிற போது - இப்படிப்பல சந்தர்ப்பங்களிலும் அவன் உள்ளத்தில் அலைமோதிய உணர்வுச் சுழிப்புகள் பல ரகமாகும்.

'இந்தத் தெரு இனியது. ரொம்ப அழகானது. இதில் நடந்து போகிற போது உண்டாகிற சுகமும் இதமும், இனிமையும் மகிழ்வும் தனி ரகமானவை' என்று அவன் நினைத்தான். சாந்தா அருகே, அவளோடு பேசிக் கொண்டு, அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஒன்றும் இல்லாததற் கெல்லாம் சிரித்துச் சிரித்து மகிழ்ந்து மெதுவாக நடக்கிறபோது, வெயில் கூட நிலவின் குளுமையைப் பெற்று விட்டதாகத்தான் தோன்றும் அவனுக்கு.

திடிரென்று நிலைமையிலே மாறுதல் ஏற்பட்டது. சாந்தா போய் விட்டாள். அவளுக்குக் கல்யாணத்துக்கு ஏற்பாடாகியிருந்தது.

முழுதும் மலர்வதற்கு முன்னமே கிள்ளி எறியப்பட்ட புஷ்பம் போல் துவண்டுவிட்டது அவன் உள்ளம். அவனுள் அரும்பி வந்த ஆசை கருகி விட்டது. அதைக் கருக்கி விட்டது காலம்.

'அவள் ஏமாற்றி விட்டாள்' என்று குமைந்தான். என்றுமே அவள் அவனுக்கு நம்பிக்கை அளித்ததில்லை என்னும் உண்மையை அவனது ஆத்திரம் திரையிட்டு மறைத்திருந்தது.

அந்தத் தெரு வழியாக அவன் நடந்தபோது மரங்களும், விளக்குகளும், சுவர்களும், பாதையும் அவனைப் பரிகசிப்பது போல் தென்பட்டன - அவனுக்குத்தான்.

விசேஷம் பெற்றிருந்த வீடு வெறுமையாக நின்றது. அதிமுக்கியத்துவம் கொண்டிருந்த சன்னல் பாாழாய். படு சூன்யமாய் காட்சி அளித்தது. அழகியின் நினைவு பல விதமான நிழல்களாக நெளிந்தது அவன் உள்ள அரங்கிலே, அவள் நடையும் நொடிப்பும், அசைவும் சிரிப்பும். பேச்சும் பரிவும் - எல்லாம் வேதனை தரும நிழல்களாகக் குதித் தாடின.

சாதாரணத் தன்மையிலிருந்து உயர்ந்து, கனவுலக இனிமையோடு திகழ்ந்த அந்தத் தெரு இப்போது தாழ்ந்து படுவீழ்ச்சியுற்ற பாழும் பரப்பாகி விட்டது - அவன் அபிப்பிராயத்தில் தான்.

ஆகவே அவன் அந்தத் தெரு வழியே போவதையே நிறுத்தி விட்டான்.

'ஏது, அந்தப் பக்கம் வருவதே இல்லை?' என்று கேட்பவர்களுக்கெல்லாம் ராமமூர்த்தி சொன்ன பதில் இது தான்: 'வரவர அந்தத் தெரு மோசமாகி விட்டது. எல்லாத் தெருக்களையும் போல் அசிங்கமாய், கும்பலும் நெருக்

கடியும் குப்பையுமாய் ஆகி விட்டது. அப்புறம் எந்தப் பாதை வழியாகப் போனால் தான் என்ன?'

நரகத்தை சொர்க்கமாகக் காட்டுவதும், சொர்க்கத்தை நரகமாக மாற்றுவதும் மனம் தான் என்கிற உண்மையை ராமமூர்த்தி மூலம் உணர்த்திய பிரமாணம் ஆகிவிட்ட அந்தத் தெரு வழக்கம்போல் கிடந்தது. நாகரிக நகரின் பெரும்பாலான தெருக்களைப் போன்ற சாதாரணத் தெரு தான் அதுவும்.

# 12. புண்ணியம் ஆம், பாவம் போம்!

கஷ்டங்கள் அதிகரிக்கிற போது, கடவுள் நினைப்பு இயல்பாக எழுகிறது மக்களுக்கு, கடவுள் நினைப்பு மனசோடு, வீட்டோடு நிற்கும்படி அவர்களை விடுவது கிடையாது. கீர்த்திபெற்ற மூர்த்திகள் கோயில் கொண்டிருக்கும் திருத் தலங்களுக்கு ஒரு தடவையோ பல தடவையோ, போகும் படி அந்த உணர்வு பலரைத் தூண்டி விடுகிறது. அப்படிப் பட்ட உணர்வினால் அலைக்கழிக் கப்படும் எத்தனை எத்தனையோ நபர்களில் அப்பாவி சிவகாமி நாதனும் ஒருவன்.

சிவகாமிநாதன் 'அதிர்ஷ்டம் இல்லாதவன்' அவனுடைய எண்ணம் இது. அது தனக்கு வாய்த்த பெயரி லேயே காணக்கிடக்கிறதாக ஒரு மனக்குறை என்றுமே அவனுக்கு உண்டு. அது அழகான பெயர்தான்.

ஆனால் எந்த அழகான முழுப்பெயரையும் யாராவது பூரணமாக உச்சரிக்கிறார்களா என்ன? இஷ்டம்போல் சிதைக்கிறார்களே! சிவகாமிநாதனை வாய்நிறைய அந்தப்

பெயரைச் சொல்லி யார் கூப்பிட்டார்கள்? 'ஏ சிவகாமி!' 'பொம்பிளைப் புள்ளெயை' கூப்பிடுவது மாதிரிக் கூப்பிடு கிறார்களே என்ற வருத்தம் அவனை அரித்துக் கொண்டிருந்தது.

சில எடக்குப் பேர்வழிகள் 'ஏட்டி சிவகாமி' என்றுகூட அழைத்தார்கள். கிண்டலாகத்தான். ஆயினும், அப்படி அழைப்பதற்கு வசதியாக அமைந்திருந்தது அவன்பெயர். 'ஏ.டி.' என்ற 'தலை எழுத்து' அவன் பெயருக்கு வாய்த் திருந்தது. ஆலம்பட்டி திருவடியா பிள்ளை மகன் என்பதைக் குறிக்க, முதல் எழுத்துக்களை ஆங்கிலத்தில் எழுதிவைத்த தன் வினை அது.

இந்த விதமான சிறுசிறு விஷயங்கள் பலவும் சேர்ந்து பையனுக்கு ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துவந்திருந்தன. அவன் வளர்ந்து பெரியவனாகி, உத்தியோகம் பார்க்க ஆரம்பித்த பிறகும் அந்த மனக்குறை அவனைவிட்டு விலகவில்லை. கல்யாணம் ஆனபிறகும் அது மாறவில்லை. அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக வந்துசேர்ந்த பாக்கியம் அவனுக்கு மனமாற்றமோ வாழ்வில் பாக்கியமோ கொண்டுவந்தவிடவில்லை.

மாறாக, புதிய குழப்பங்களுக்கும் மனக் குறை களுக்குமே வழிசெய்தாள் அவள். வீட்டில், அவள் உறவில் காணமுடியாத அமைதியையும் ஆனந்தத்தையும் சிவகாமி நாதன் மதச் சம்பந்தமான புத்தகங்களிலும் பிரசங்கங்களிலும் காணமுயன்றான். வாழ்க்கையின் வெறுமையும் வேதனையும் அவனை கோயில்களுக்கு இட்டுச் சென்றன; புண்ணியம் பெற்றுத் தரும் திருத்தலம் எனச்சிறப்புப் பெற்ற ஊர்களுக்குத் தள்ளிச்சென்றன.

முக்கியமாக ஒரு புண்ணிய க்ஷேத்திரம்' அவன் மனசுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அங்குள்ள திருமுருகன் சக்தி

வாய்ந்த கடவுள் எனும் நம்பிக்கை எங்கும் பரவியிருந்தது. அதனால் தூரா தொலையில் உள்ள ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள் அங்கே வந்து சாமிதரிசனம் செய்து, உடனடியாக வோ, சில தினங்கள் தங்கிய பிறகோ, திரும்பிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். பக்கத்து ஊர்களில் உள்ளவர்களும் அந்த மாவட்டத்தின் வேறு வேறு இடங்களைச் சேர்ந்தவர்களம் 'மாதாந்தம்' என்று கடைசி வெள்ளிக்கிழமை தோறும் முருகன் கோயிலக்குச் செல்வதை ஒரு பழக்கமாக்கிக்கொண்டார்கள். பக்தி முற்றிய அல்லது, பணக் கொழுப்பு முற்றிய - அன்றி, வேறு ஏதோ காரணம் முற்றிப் போன - சிலபேர்கள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அங்கே போவதை ஒரு விரதமாக மேற்கொண்டிருந்தார்கள்.

சிவகாமிநாதன் 'அப்பன் முருகனால்' கவரப்பட்டு விட்டான் என்றே சொல்லவேண்டும். 'கண்டதும் காதல்' விவகாரம்தான்!' முருகன் திருமுன்னிலையில் நின்றபோது அவன் உள்ளத்தில் அமைதியும் ஆனந்தமும் நிறைந்ததை அவன் உணர்ந்தான்.

'முருகா முருகா' என்று உச்சரித்தவாறு, பக்தி பரவசத்தினால் முகம்மலர்ச்சியுற்று விளங்க அவன் பிரகாரத்தைச் சுற்றி வந்தபோது, அவன் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

அவனுக்கு முன்னே சில அடிகளுக்கு அப்பால், இளம் பெண் ஒருத்தி போனாள். நீராடி விட்டு, ஈரச் சீலையை நன்றாகப்பிழியாமல் உடலில் அவசரக்கட்டாகச் சுற்றியிருந்தாள். துணி உடலின் சில பகுதிகளில் ஒட்டிக்கொண்டு நயம் சேர்த்த அழகையும், அவள் நடக்கையில் ஏற்பட்ட பின்னழகுக் கோலத்தையும், நீர் முத்துக்கள் துளிர்த்துநின்ற ச்ருமத்தின் மினுமினுப்பையும் தண்ணீர் சொட்டியவாறு

தொங்கிய கூந்தல் நெளிவுகளையும் ரசித்து மகிழ்ந்தவாறு மெதுவாக நடந்தான் சிவகாமிநாதன். இவள் முகம் எப்படி இருக்குமோ என்று அவன் நினைத்தான்.

தனது எண்ணத்துக்கு 'எலெக்ட்ரிக் தனம்' உண்டு என்பது அவனது நம்பிக்கைகளில் ஒன்று. இப்போதும் அந்த நம்பிக்கைக்கு வலு அளிப்பது போல், அவன் நினைத்த உடனேயே, அவள் முதுகில் யாரோ தொட்டுத் தட்டியதால் திடுக்கிட்டவள்போல, அந்தப் பெண் திரும்பிப் பார்த்தாள். கவர்ச்சிக்கும் 'பொல்லாத கண்கள்' அவளுக்கிருந்தன. 'இவள் முகமும் ஜோராராகத்தானிருக்கிறது' என்ற திருப்தி சிவகாமிக்கு ஏற்பட்டது.

அவள் மறுபடியும் திரும்பி நோக்கினாள். முகம் மலர்ச்சியுற அந்த இடத்திலேயே நின்று விட்டாள்.

அவனுக்கு வியப்பும் திகைப்பும் உண்டாயின. அவன் அவள் அருகே வந்ததும், அவள் சிரித்துக்கொண்டே, 'என்ன சிவகாமிநாதன், எப்ப வந்தே? சௌக்கியமெல்லாம் எப்படி? வீட்டிலே எல்லாரும் சௌக்கியமா?' என்று விசாரித்தாள்.

'இவள் யார்? எனக்கு ஞாபகத்துக்கு வரமாட்டேன்குதே!' என்று அவன் உள்ளத்தினுள் தவித்தபோதிலும் உரிய விடைகளைச் சொன்னான். 'நீ யாரு?' என்று கேட்கவும் மனம் வரவில்லை. இவ்வளவு பரிவுடன் நலம் விசாரிப்பவள் நம் வீட்டுக்கு வந்து போனவளாகத் தான் இருக்க வேண்டும்; சொந்தக்காரப் பெண்ணாககூட இருக்கலாம்; தூரத்து உறவாக இருக்குமென்று அவன் மனம் சமாதானம் கூறிக் கொண்டிருந்தது.

'இவ்வளவு தூரம் வந்தவன் எங்க வீட்டுக்கு வரக் கூடாதாக்கும்? உம், பவானி இருக்கிற படி இருந்தால், ரயிலைவிட்டு இறங்கிய உடனேயே நீபவானி மச்சி வீடு தேடி

வந்திருப்பாய். அதுக்கப்புறம்தான் கோயிலுக்கே போவே. ஊம். என் விதிதான் நான் இப்படி இருக்கிறேனே!' என்று அவள் அலுத்துக்கொண்டாள்.

பேச்சுதான் வறட்டுப் பேச்சாக இருந்ததே ஒழிய, அவள் முகம் மலர்ந்து, உதடுகள் சிரிப்பில் நெளிந்து, கண்கள் உணர்ச்சிக் குறுகுறுப்பில் நீந்தி உற்சாகத்தைக் கொட்டிக் கொண்டு தானிருந்தன.

'என் ஞாபக சக்தியை வாரியலாலே வெளும்பச் சாத்தணும். தரித்திரம் பிடித்தது! பவானியை மறந்து விட்டதே. இவளிடம் நீ யார் என்று கேட்டிருந்தால், இவளுக்கு எப்படி இருக்கும்? இவள் குத்தலாகப் பேசினால், என் மூஞ்சி செத்துப்போகாதா செத்து?' என்று அவன் உள்ளம் கண்டனக் குரல் கொடுத்தது. அவன் கண்கள் அவள் முகத்தையும் அழகையும் பருகி மகிழ்ந்து கொண்டிருந்தன.

'அதெல்லாமில்லே. நான் சுவாமிதரிசனம் பண்ணி விட்டு' என்று இழுத்தான் அவன்.

'நேரே ரயிலேறிவிடுவே. சனியன் மாதிரி நான் உன்வழியில் குறுக்கிட்டுவிட்டேன். இல்லையா?' என்று சொன்ன அவள் குறும்பாகச் சிரித்தாள்.

அவன் பதில் எதுவும் சொல்லவில்லை.

'சரி, இப்போ என் கூடவே வாயேன். வீட்டைத்தேடி அலைகிற சிரமம் மிச்சமாகும்' என்றாள் பவானி.

'நீ முதல்லே போ. நான் அவசியம் வாறேன். வருவேன்னா வந்துவிடுவேன்' என்று அவன் உறுதி கூறினான். அவள் வீடு இருக்கும் தெரு, வீட்டு எண் முதலியவைகளை விளக்கமாகக்கேட்டுத் தெரிந்துகொண்டான்.

அவள் சிரித்துக் கொண்டே போய்விட்டாள்.

பவானி அவனுக்கு உறவுதான். கிட்ட உறவு அல்ல. சுற்றி வளைத்துப் பார்த்தால், எப்படியோ அத்தை முறை ஆகவேண்டிய ஒரு அம்மாளின் மகள். முன்பெல்லாம் அம்மாவும் மகளும் அவ்வப்போது சிவகாமிநாதன் வீட்டுக்கு வந்து போவது வழக்கம். அவளுக்குக் கல்யாணமான பிறகு பவானி அந்தப் பக்கம் வரவில்லை. அவளைப் பற்றிய செய்திகள் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. அவள் மாப் பிள்ளை சரியாக இல்லை, அவளை சரியானபடி நடத்த வில்லை என்று கேள்வி. பிறகு புருஷன்காரன் அவளைத் தள்ளி வைத்து விட்டான், அவள் வாழாவெட்டியாக இருக்கிறாள் என்றும் அவன் கேள்விப்பட்டது உண்டு. அவள் இந்த ஊரில்தான் இருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியாது.

மேலும் அவனுடைய ஞாபக சக்தி வளமானது அல்ல, பார்த்த முகங்களை மறவாது அப்படியே பதிய வைத்துக் கொண்டு, தக்க சமயத்தில் பளிச்சென எடுத்துக் காட்டும் திறமை பெற்றிருக்கவில்லை அது. அதற்காக அடிக்கடி அவன் பட்சாதாபப்படுவது வழக்கம், இப்போதும் தனக்குத் தானே அனுதாபம் கூறிக்கொண்டான் அவன்.

அரை மணிநேரம் கழித்து, அவன் பவானியின் வீடு தேடிப் போனான். அவள் சந்தோஷ மாக வரவேற்றாள், 'வா சிவகாமிநாதன், வா!' என்று கூறி. அவள் அப்ப அழைத் ததும், பிறகும் பேச்சில் அடிக்கடி அவன் பெயரை முழுசாக நன்றாக உச்சரித்ததும், அவனுக்குப் பிடித்திருந்தது; மகிழ்வு ஊட்டியது; அவள்பேரில் அவனுக்கு நல்லெண்ணத்தை உண்டாக்கியது.

காதிலே கழுத்திலே கைகளிலே எதுவும் இல்லாமல்தான் இருந்தாள் அவள். சாதாரண கைத்தறிப் புடவையே கட்டி யிருந்தாள். மெலிந்துதான் காணப்பட்டாள். ஆயினும் அவள் முகத்தில் சதா சிரிப்பு விளையாடிக் கொண்டிருந்தது.

'ஸிம்ப்ளாக இருந்தாலும், விளக்கிப் பொட்டிட்டு பூச்சாத்தி, ஏற்றி வைக்கப்பட்ட குத்து விளக்கு மாதிரி குளுமையாக இனிமையாக, அழகாக விளங்குகிறாள் இவள்' என்று சிவகாமிநாதன் மனம் விமர்சித்து மகிழ்ந்தது.

அதே சமயத்தில் 'நம்ம வீட்டிலும் இருக்குதே ஒரு கோட்டான்! விடியாமூஞ்சி. தங்கத்தையும் பட்டு பட்டாடை களும் சுமந்து கொண்டு! என்ன பிரயோஜனம்? முகத்தை எப்பவும் கொண்டை முடிஞ்சு போட்டது மாதிரித்தொங்க விட்டுக்கிட்டு! சிரிச்ச முகமும் சீதேவியுமா இருக்கத் தெரியலியே' என்றும் அது அலுத்துக் கொண்டது.

'நீ வராமலே போயிடுவியோன்னு நெனைத்தேன். உன் தலையைப் பார்த்துத்தான் கல்லைப் போடனுமின்னு காத்திருந்தேன்' என்று பவானி சொன்னாள். சிரித்தாள். 'பயந்து ஓடி விடாதே! அடுப்பிலே தோசைக் கல்லு போடுறத பத்திச் சொன்னேன்!' என்று கூறி விட்டு, உள்ளே போனாள். தோசை சுடுவதற்கு ஏற்பாடுகள் செய்தாள். அங்குமிங்கும் அலைந்து, அவனிடம் பேச்சுக் கொடுத்தவாறே அடுப்படி அலவல்களைக் கவனித்தாள். பிறகு அவன் எதிர்பாராத அறிவிப்பை உள்ளேயிருந்து ஒலிபரப்பினாள்.

'நீ அங்கேயும் நான் இங்கேயும் இருந்து கத்திக் கொண்டிருப்பானேன்? முன் வாசல் கதவை சாத்தித் தாள்ப்பாள் போட்டுவிட்டு இங்கேயே வாயேன். சுடச்சுட தோசை எடுத்துப் போடுகிறேன்' என்றாள் பவானி.

அவனுக்கு சிறு தயக்க உணர்வு தலைகாட்டியது. இருப்பினும், துணிந்தான். அவள் சொன்னபடியே செய்தான். கல்லிலிருந்து சுடச்சட தோசை எடுத்து அவள் அவன் தட்டில் போடப்போட, அவன் ருசித்துச் சுவைத்துத் தின்றான். ருசிக்கு ருசி ஏற்றும் விதத்தில் அவள் தோசை கல்லில் இருக்கிற போதே எண்ணெய் ஊற்றி, மிளகாய்ப் பொடியும் போட்டுத்

தேய்த்து வைத்தாள். அவளுடைய பார்வையும் பேச்சும் பரிவும் பிரியமும் அவன் உள்ளத்துக்கு இதமளித்தன. 'பாக்கியம் இப்படி ஒரு தடவைகூட அன்பாக நடந்து கொள்வது இல்லையே!' என்ற ஏக்கமும் அவனுள் வளர்ந்தது.

உள்ளுணர்வினால் அவன் ஏக்கத்தைப் புரிந்து கொண்டவள்போல், பவானி குழைவுக் குரலில் கேட்டாள், 'பாக்கியம் இப்படி எல்லாம் செய்து தருவது கிடையாதா? அவள் நல்ல படியாக நடந்து கொள்கிறாள் அல்லவா?' என்று.

அவன் தனது மனக்குறையை எல்லாம் முண முணக்க ஆரம்பித்தான். தன் வாழ்வின் வெறுமையை, ஏமாற்றங் களை, பாழ்பட்டுப் போன பசுமைக்கனவுகளை, கருகிச் சாம்பலாகிவிட்ட ஆசைகளை எல்லாம் அழுது புலம்புவது போல், சொன்னான். அன்போடும், ஆதரவோடும், கனிவு டனும், பொறுமையோடும் அருகேயிருந்து கேட்பதற்கு ஒரு நபர் இருந்தது - அதுவும் அந்நபர் பரிவும் பெண்மையும் மிகுதியாகக் கொண்டிருந்தது, அவனுக்கு ஒரு வித நிறைவும் திருப்தியும் தந்தது.

அவளும் தன் குறைகளை இடைக்கிடை எடுத்துச் சொன்னாள். ஆயினும், அவன் மனக்குறைகளை அறிந்து கொள்வதில் அக்கறை அதிகம் கொண்டவள் போல் நடந்தாள்.

அவன் கை கழுவ எழுந்த போது, 'இந்தா என்ன இது! அதுக்குள்ளே எழுந்திரிச்சிட்டே? இன்னும் ஒண்ணே ஒண்ணு சாப்பிடு!' என்று உபசரித்து, அவன் கையைப் பற்றி இழுத்து உட்கார வைத்தாள் பவானி. அவனுக்கு உடலில் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது.

'வேண்டாமே. நிறையச்சாப்பிட்டு விட்டேன்னு தோணுது' என்று அசட்டுச் சிரிப்புடன் சொன்னான் அவன்,

'அப்ப பாதி எடுத்துக்கோ. உனக்குப் பாதி, எனக்குப் பாதி' என்று பங்கு போட்டாள் பவானி. 'வேணுமின்னா வாயிலே ஊட்டட்டுமா?' என்று குரலை இழையவிட்டு, அகன்ற கரிய விழிகளின் பொல்லாத பார்வையினால் அவனைத் தாக்கி, வசியச் சிரிப்பு சிந்தினாள்.

மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அந்த வீட்டிலிருந்து வெளியேறி, கோயிலை நோக்கி நடந்து கொண்டிருந்த சிவகாமி நாதனுக்கு அவையெல்லாம் எப்படி நடந்தன என்று விளங்கிக் கொள்ள இயலாமல் போய்விட்டது. அப்படிப் பட்ட விஷயங்கள் நடந்து முடிந்திருந்தன இடை வேளையில்.

ஆனால் அவனுக்குச் சில விஷயங்கள் புரிந்தன. அன்பு வறுமையினால் ஏக்க முற்றுக் கிடந்த அவன் உடலுக்கும் உள்ளத்துக்கும், பருவ மழைபோல், குளுமையும் புத்துயிரும் ஊட்டின பவானியின் அன்பு உறவும் ஆசையான நடவடிக்கைகளும். அவளுக்கும் அவனுடைய துணையும் உறவும் தேவைப்பட்டது. உணர்ச்சிகளின் திருக்கூத்துகள்தான் எல்லாம்!

'ஒரு கணத்தின் பலவீனம்' பிறப்பித்துவிட்ட செயல் அது.

'புண்ணிய ஸ்தலத்துக்கு வந்து நான் இப்படியா நடந்து கொள்ள வேணும்?' என்று அவன் மனசின் ஒரு பகுதி குறைகூறியது.

'நம்மால் ஆவது எதுவுமில்லை. ஆண்டவன் காட்டிய வழி. அப்பன் முருகன் தான் என்னை இங்கே வரும்படி அழைத்தான். திருமுருகன் திருவிளையாட்டினால் தான் பவானி என் முன் குறுக்கிட்டாள். நான் ஒரு பாவமும்

அறியேன், முருகா முருகா!' என்று முனகியது இன்னொரு மனம்.

அதன் கட்சி ஓங்கி வலுத்தது. 'ஒரு பெண்ணுக்கு புது வாழ்வு அளிப்பது புண்ணியம் தான். என்னை அமுக்கி வந்த பாவமும் விலகி விட்டது. எனக்கே ஒரு புதுச் சக்தி பிறந்துள்ளதாகத் தோன்றுகிறது' என்று அவன் எண்ணினான்.

புருஷனால் கைவிடப்பட்ட அந்தப் பெண் இப்படித் தான் பிழைப்பு நடத்தி, வயிறு வளர்க்கிறாளோ என்றொரு சந்தேகம் அவனுள் தலைதூக்கியது 'அதனால் என்ன! வாழ்க்கை மகா பயங்கரமானது. புதிர்கள் நிறைந்தது. அதில் சிக்கி மனிதர்கள் எப்படி எப்படியோ உழல நேரிடுகிறது. முருகா முருகா' என்று தன் தலையைத் தடவிக் கொண்டான் அப்பாவி சிவகாமிநாதன். அவன் புண்ணிய பூமியில் 'மயிர்த்தியாகம்' செய்துவிடவில்லைதான். அவன் தலைமுடி கருகருவென்று அழகிய கிராப்பாக மினுங்கிக் கொண்டுதானிருந்தது.

'இந்த ஊருக்கு மாதந்தோறும் வரவேண்டியதுதான். முடிந்தால் இரண்டு தடவை கூட வரவேண்டும்' என்று தீர்மானம் கொண்டுவந்தது அந்த பக்தனின் உள்ளம்.

'வெள்ளிக்கிழமை சாயங்காலம் வந்தால், சனிக்கிழமை லீவு போட்டுவிட்டால், ஞாயிற்றுக் கிழமை திரும்பிப் போக வசதியாக இருக்கும்' என்று திருத்தம் இணைத்தது அவன் மனம்.

'அதுதான் சரி. அப்பனே முருகா!' என்று ஆமோதித்துத் தலையாட்டிக் கொண்டானவன்.

# 13. ஞானோதயம்

ஞானோதயம் - அதாவது அறிவின் விழிப்பு - யாருக்கு, எந்தச் சமயத்தில், எப்படி ஏற்படும் என்று சொல்வதற்கில்லை.

சித்தார்த்தனுக்கு அது என்றோ ஒரு நாள் போதி மரத்தடியில் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள்.

பக்தன் அனந்தசாமிக்கு படுக்கையறைக் கட்டிலின் பக்கத்திலே திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டது. அது ஒரு ரசமான கதைதான்.

அனந்தசாமி, சித்தார்த்தன் மாதிரி மூப்பு, பிணி, மரணம் முதலிய வாழ்க்கைக் கொடுமைகளிலிருந்து மாற்று காண்பது பற்றி சதா சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. 'பிறவிப் பெருங் கடல் நீந்துவது' பற்றியோ மனித குலம் உய்யவேண்டும் என்றோ அவன் கவலைவளர்த்து வாழவுமில்லை.

அவன் சாதாரணப் பேர்வழிதான். மாதம்தோறும் குறிப்பிட்ட வருவாய்க்கு வழிசெய்யும் உத்தியோகம் ஒன்று அவனுக்கு இருந்தது. மாதச் சம்பளம் என்பதைப் பெரிய பாக்கியமாகக் கருதி வாழ்க்கை நடத்துவதில் அளவிலாத

உற்சாகம் காட்ட ஆரம்பித்து, அந்த அல்ப வரும்படி மாதத்தின் முதல் வாரத்திலேயே கரைந்துபோக, மீதமுள்ள நாட்களை எப்படி ஓட்டுவது என்ற 'கவலையை நித்தம் நெஞ்சில் பயிராக்கி', கடன் என்கிற சகாய மார்க்கத்தைத் தேடி அலையும் எத்தனை எத்தனையோ ஆசாமிகளில் அவனும் ஒருவனாக விளங்கினான்.

மனக்கவலைக்குமாற்று செக்ஸ் ஈடுபாடுகள் மிகுதியாக உடைய சினிமாப் படங்களைப் பார்ப்பது தான் என்பதை நடைமுறை மருந்தாகக் கொண்டு விடும் பலரைப் போலவே அனந்தசாமியும் செயல்புரிந்தான். வரவர, படத்துக்குக் கொட்டிக்கொடுக்க வேண்டிய பணத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்ட காரத்தினாலே அவன் காசுசெலவில்லாத பொழுது போக்குகளில் ஈடுபட்டான். அவைதான் எத்தனையோ இருக்கின்றனவே!

வீதி வழியே அழகு நடை போடுகின்ற நாகரிக சுந்தரிகளைப் பார்த்து ரசித்து, 'இவளும் அவளும் நம்மீது ஆசைகொண்டுவிட்டாள்' என்று மனசை நினைவெனும் ஐஸ்கிரீமில் போட்டுக் குளிப்பாட்டுவது முதல், கடலோரத்தில் காத்திருப்பது ஈறாக, 'சேதாரம் இல்லாத' - செலவும் இல்லாத - பொழுதுபோக்குகளில் அவன் உற்சாகம் காட்டி வந்தான்.

இந்தரகமான ஆசாமிகளுக்கு திடீர்பக்தி தோன்றுவது இயல்பு. கோயில்களுக்குப் போவார்கள். 'முருகா முருகா' என்று புலம்புவார்கள். திருத்தணி, பழனி, திருச்செந்தூர் என்று திரிவார்கள். கையில் 'பவன்ஸ் ஜர்னலையோ, 'பரமஹம்சர் அருள்வாக்கு', கீதைப் பேருரை போன்ற எதையோ சுமந்து செல்வார்கள். கிருபானந்த வாரியார் போன்றவர்களின் கதா காலட்சேபங்கள் எங்கே நடந்தாலும் தேடிப் போய், ஆரம்பம் முதல் கடைசி வரை இருந்து கேட்டு,

'ஆகா!' என வியந்து மகிழ்வார்கள். அதே காலத்தில் ஆபீஸ்களில் பணி புரியும் உத்தியோகப் பெண்களில் எவள் எவளை, எவன் எவன் 'கணக்குப் பண்ணுகிறான்', நாமும் எவள்மீது வலைவீசலாம் என்றும் யோசித்து சகாக்களுடன் அவை பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள். வறண்ட வாழ்க்கையிலே வேறு என்ன ஐயா இருக்கின்றன?

ஆகவே, அனந்தசாமியும் அந்தரீதியில் ஒழுங்காக இயங்கலானான்.

குடியிருந்த வீடு வசதியானது. அவனுக்கு வாய்த்திருந்த மனைவி 'ஆவரேஜ்' பெண்மணி. அதனால், சராசரிப் பெண்களுக்கு இருக்கக்கூடிய விருப்பு, வெறுப்புகள், ஆசைகள், ஏக்கங்கள், எதிர்பார்த்தல்கள், ஏமாற்றங்கள், மனக்குறைகள், கொதிப்புகள் எல்லாம் அவளிடமும் இருந்தன. அவற்றின் பாதிப்புகளுக்கு அதிகம் ஆளாகாமலிருப்பதற்காகவும் அனந்தசாமி அதிக நேரத்தை வெளி இடங்களில் கழித்தாக வேண்டிய ஒரு அவசியத்தை வளர்த்துக் கொண்டான்.

அவனுக்கு அருளுரை வள்ளல், தேன் பேச்சு அரசு, கதைக் கடல், பக்திப் பெருநிதி, தவத்திரு அன்பானந்த அடிகள்மீது ஒரு 'அட்மிரேஷன்' ஏற்பட்டு வளர்ந்தது வியப்பு மோகமாய், பக்தியாய் கொழுந்து விட்டது. அவர் பேச்சைக் கேளாத நாள் எல்லாம் பிறவா நாளே என நம்பினான் அவன். அவர் புகழ்பாடிப் பரவசம் அடைந்தான். அவருக்குக் காணிக்கைகள் வழங்கினான். அவர் திருமுன் விழுந்து வணங்கி, அவரது அறிமுகம் பெற்று, அவரோடு இரண்டொரு வார்த்தை பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பையும் தேடிக்கொண்டான்.

அன்பானந்தருக்கு அவனைப் பிடித்துவிட்டது. அவன் மூலம் 'அதுஇது' என்று சில பல சில்லறைக் காரியங்களைப் பூர்த்திசெய்து கொள்ளமுடிந்தது. எனவே அனந்தசாமி

அடிகளின் தனிக் கவனிப்புக்கு உரிய விசேஷ அன்பர்களில் ஒருவன் ஆகிவிட்டான்.

அன்பானந்த அடிகள், சிவப் பழம், பக்திச் சுடர். 'கலிகாலக் கடவுள்' என்றுகூட அவருடைய பக்தர்கள் சொன்னார்கள். அவருக்குப் பணிவிடை செய்வதற்குக் கொடுத்துவைத்திருக்க வேண்டும்' என்றும் கூறுவர். அப்படி 'கொடுத்து வைத்தவர்கள்' பட்டியலில் அனந்தசாமியும் ஒருவன் ஆகிவிட்டான்.

அன்பானந்தர் அவன் உள்ளத்தில் கோயில்கொண்டு விட்டார். அவர் புனிதத்தின் திருஉருவம், அறத்தின் அவதாரம், உத்தம குணங்களின் உறைவிடம் என்றெல்லாம் அனந்த சாமி நம்பினான். அந்த நம்பிக்கையை இதர அன்பர்களும் வளர்த்து வந்தார்கள். ஆகவே அடிகளைப்பற்றி யாராவது குறைவாகப் பேசினால் அனந்தசாமி தன் கைகளால் காதுகளை மூடிக்கொண்டு, 'முருகா முருகா!' என முணு முணுப் பான். 'சே என்ன ஜனங்கள்! இவரைப்பற்றி இப்படி மோசமாக எண்ண இவர்களுக்கு எப்படித்தான் மனம் வருதோ' என்று தவிப்பான்.

அடிகளைப் புகழ்ந்துபோற்றும் நபர்களைப்பற்றி அறிய நேர்ந்ததால், 'அவர்களல்லவா உண்மையை, உயர்வை, சிறப்பை உணரும் ஆற்றல் உடையவர்கள்!' என அக மகிழ்வான் அனந்தசாமி. 'தெரிய முடிந்தவர்களால்தான் தெரிந்து கொள்ளக்கூடும்' என்று ஏதோ சுலோகம்மாதிரி சொல்லுவான்.

ஆனால் பரிகாசம் பேசும் சுபாவம் உடையவர்களோ அட்டகாசமாய் சிரிப்பார்கள். 'ஆமா தெரிஞ்சவாளுக்குத்தான் தெரியும் செம்மறியாட்டு முட்டை!' என்று புரளி பண்ணு வார்கள். அப்பாவி அனந்தசாமிக்கு கோபம் வரும். ஏலாக் கோபம்தான். அவன் மற்றவர்களை என்ன செய்துவிட

முடியும்? அடிகளுக்கு கௌரவமோ, சுக சௌகரியமோ அதிகரித்தால், மண்டூகங்கள், மகானின் மதிப்பைக் குறைக்கலாம் என்று கத்துகிறதுகள்! அவர் மதிப்பு மங்காமல் உயர்ந்துகொண்டே தான் போகிறது' என்று இவன் ஆனந்தம் கொள்வான்.

சூரியகாந்தம்மா என்றொரு அம்மையார் பணச் செழிப்பும் பவிஷும் அவள் மேனியில் பளிச்சென மின்னும். வெண்ணெயும், நெய்யும், பாலும் பழமும், பச்சரிசியும் பருப்பும் வருஷக் கணக்கிலே ஊட்டம் கொடுத்து வளர்த்திருந்த தேகம். நல்ல சிவப்பு நிறம். முகம் பளிச்சென்று புதுக் 'காலண்டர் பிக்சர்' மாதிரி மிளிரும். கண்கள் ஆகா! அவை அற்புதமான கவிதா ஊற்றுகள். அவளுக்கு வயசு நாற்பதுக்கு மேலிருக்கும். அவள் புருஷன் ஏதோ கம்பெனியில் டைரக்டரோ என்னவோ, சரியான பிசினஸ் பிச்சு. பணம் பணம் என்று திரட்டி முடிவதிலேயே கருத்தானவர். அம்மாளுக்கு ஆத்மீக விஷயங்களில் ஈடுபாடு ஏற்பட்டது. அவள், புனிதர், புண்ணியர், பூஜ்யர் அன்பானந்த அடிகளின் மதிப்பைப் புரிந்து கொண்டு அவர் பக்தை ஆகிவிட்டாள்.

அடிகள் எந்த ஊருக்குப்போனாலும் அம்மாளும் வந்துவிடுவாள். சில தினங்கள் தங்கி சுவாமிகளுக்குப் பணிவிடை செய்துவிட்டுப் போவாள். அடுத்த ஊருக்குப் போனதும், வசதியான இடத்தில் தங்கியதும், அடிகள் அம்மையாருக்கு தந்திகொடுத்துவிடுவார். பக்தை பறந்தோடி வருவாள்.

இது வழக்கமாக நடைபெற ஆரம்பித்ததும், பலர் பலவிதமாகப் பேசுவதும் தலையெடுத்து வேக ஆட்டம் போடலாயிற்று. 'கலியுகக் கண்ணன்' என்றும், 'கண்ணனின் ராதை' என்றும் அவ்விருவரையும் குறிப்பிட்டார்கள் அநேகர்.

இவ்விஷயம் மெதுமெதுவாக அனந்தசாமி காதிலும் புகுந்தது. 'சீ, என்ன மனிதர்கள்! சாக்கடைப் புழுக்கள்! இவர் களுக்கு சாக்கடைப் புத்திதானே இருக்கும்?' என்று நொந்து கொண்டான்.

இப்படியாகக் காலம் ஓடிக் கொண்டிருந்தது.

இந்தக் கதை நிகழும் சந்தர்ப்பத்தில், அனந்தசாமியின் வீட்டில் யாரும் இல்லை. மனைவியும் குழந்தைகளும் ஊருக்குப் போயிருந்தனர். அவ்வட்டாரத்தில், ஒரு சபாவில், அடிகளின் சிறப்புச் சொற்பொழிவுக்கு ஏற்பாடாகியிருந்தது. அவன் சீக்கிரமே போய்விட்டான். அடிகள் அவனிடம் அன்பாகப் பேசினார். அவனுடைய சேம லாபங்களை விசாரித்தார். குடும்பம், வீடு, வருவாய், வாழ்வு பற்றி எல்லாம் பரிவுடன் கேட்டார்.

'ஆங், இப்ப வீட்டிலே யாரும் இல்லையா? வீடு வசதியான இடம்னா சொல்கிறே?' என்றும் கேட்டு வைத்தார்.

அன்று அடிகளின் சொற்பொழிவு பிரமாதமாக இருந்தது. வழக்கத்தைவிட அதிகமான நேரம் பேசினார். வைரமும் தங்கமும் பட்டுமாய் மின்னிய மாதரசிகள் சபையில் பாதிக்கு மேல் இருந்ததுதான் இதற்குக் காரணம் என்று சில குறுகிய நோக்கர்கள் கூறினார்கள்.

இந்தக் கூட்டத்துக்கு சூரிய காந்தம்மா வந்திருப்பதும், அவள் மிகப் பிரமாதமாகத் திரட்டுப்பால் தயாரித்துக் கொண்டு வந்து அடிகளுக்கு உதவியதும் அவருடைய உற்சாகத்தைத் தூண்டியிருக்கலாம் என்று 'விஷயம் அறிந்த' வம்பர்கள் பேசிக்கொண்டார்கள்.

'இப்படி எல்லாம் அம்மாளுக அன்பையும் அமுதத் தையும் வாரி வாரி வழங்குகிற போது அன்பானந்தர் கட்டை விடாமல் வெண்கலச்சிலை மாதிரி இருப்பதில் வியப்பு

எதுவும் இல்லை தான். அவருக்கு அடுத்த வருஷம் மணிவிழாவாமே? ஆளைப் பார்த்தால் அறுபது வயசு ஆசாமி மாதிரியா தெரியுது? சரியான உண்டுருட்டன்காளை!' என்றார் ஒருவர்.

'அவ்வளவும் நெய் ஐயா நெய்யி! பாலு, பாதாம், தேன் வகையராவும் உண்டு!' என்று விளக்கினார் இன்னொருவர்.

ஊர் என்றால் நாலு பேர் நாலு சொல்லாமல் இருப் பார்களா? இஷ்டம்போல் பேசினார்கள்.

'மடையன்கள்!' என்று அவர்களைப் பற்றி முடிவு கட்டினான் அனந்தசாமி.

'அப்பனே அனந்தசாமி!' என்று அடிகள் அவனை அருகழைத்தார்.

அவன் பக்தி பரவசத்துடன், பணிவோடு, அவரருகில் சென்றான்.

'உன் வீட்டில் யாரும் இல்லை அல்லவா? இன்று ராத்திரி நான் அங்கு தங்கியிருப்பதில் உனக்கு ஆட்சேபனை எதுவும் இராதே?' என்று அடிகள் கேட்டார்.

'உங்கள் விருப்பம் என் பாக்கியம்' என்றான் பக்தன். முன்னாடியே வீட்டுக்குப் போய், அவர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அடிகள் எழுந்தருளப் பதினோரு மணிக்குமேல் ஆகிவிட்டது. ஒரு காரில் வந்து இறங்கினார். அவரோடு சூரியகாந்தம்மாளும் வந்து இறங்கினாள். அவள் காராகத் தான் இருக்க வேண்டும் அது.

'இவங்க ஏன் கூடவே வாறாங்க' என்ற அனந்தனின் மனம் கேள்வி எழுப்பியது. அது அநாவசியமான கேள்வி என்று அவன் அடக்கிவிட்டான்.

கார் அங்கேயே ஒரு ஓரத்தில் நின்றது. அந்த அம்மையாரும் போவதாய் தெரியவில்லை. அடிகளுக்குப் பணிவிடை செய்வதில் மனச்சாந்தி தேடமுயலும் மற்றுமொரு பக்தமணி என்று அனந்தசாமி எண்ணிக் கொண்டான்.

விசாலமான அறை. அதன் ஓரத்தில் அகலமான கட்டில் கிடந்தது. அதில் படுக்கை பரப்பி, தலையணை தட்டி, சரிப்படுத்தி வைத்தாள் அம்மாள்.

அனந்தசாமி முற்றத்தில் ஒரு இடத்தில் படுத்துக் கொண்டான். அவனுக்கு அலுப்பு. சீக்கிரமே தூங்கிப் போனான்.

இரவு எனும் மர்ம வித்தைக் காரன் இருள் படுதாவினால் உலகை மூடி வைத்திருந்தான். அவன் பாச்சா பலிக்க விடாது நிலா வெளிச்சத்தை கொட்டிப் பூசியது.

அந்த வீட்டிலும் நிலவொளியால் இருள் வெளிறித் தெரிந்தது.

அனந்தசாமி திடுக்கிட்டு விழித்தான். மணி என்ன இருக்கும் என்ற சந்தேகம் அவனைப் பிடித்து ஆட்டியது. அதைத் தெரிந்து கொள்ளா விட்டால் தூக்கம் வராது என்று தோன்றியது.

அவன் எழுந்து, கடிகாரம் இருந்த இடத்தை நோக்கிப் போனான். அவன் பார்வையில் கட்டில் நன்கு புலனாயிற்று. அதன்மீது அவன் கண்டகாட்சி அவனை அதிர வைத்தது.

அன்பானந்த அடிகள் சுகநித்திரையில் இருந்தார். அவரை ஒட்டி, அவர்தோளில் கை போட்டு அணைத்தவாறு, சூரிய காந்தா தன்னை மறந்த இன்ப உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தாள். அவர்களுடைய ஆடைகள் அலங்கோலமாகக் கிடந்தன.

அப்போதுதான் அனந்தசாமியின் அறிவிலே ஒரு மின்னல் வெட்டியது. அடிகள் பற்றிய உண்மை அவனுக்குப் பளிச்சிட்டது. அந்த வேகத்தைத் தாங்கமாட்டாதவனாய் அவன் செயலற்று ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டான்.

அதிகாலையில் - சுற்றுவட்டாரம் விழிப்பதற்கு முன்னரே - அன்பானந்தரும் அவருடைய ராதையும் கார் ஏறிப் போய்விட்டார்கள். அவனிடம் சொல்லிக் கொள்ள அவர் சிரமப்படவில்லை. அவருக்கு நல்ல மனசு! 'தூங்கிக் கொண்டிருப்பான், பாவம் அவனை எழுப்புவானேன்?' என்று அவர் எண்ணியிருக்கலாம்.

ஆனால், அனந்தசாமி தூங்கவில்லை. அவன் அறிவும் கண்மூடவில்லை.

'ஹெ ஹெ ஹெ!' என்று சிரித்தான் அவன். 'கவலையை மறக்கணுமா? சினிமாவுக்குப் போ. கூட ஒரு ஜோடியையும் கூட்டிக் கொண்டுபோ! ஏஏய், என்ஜோடி எங்கே காணோம்? அன்பானந்தர் இழுத்துக் கொண்டு போய் விட்டாரா? ஆகா, அருமையான உலகம்! ஜோர் ஜோராய் கதை பண்ணு. சொகுசான பொம்பிளை உன்னைத்தேடி வருவாள். இந்த விதமாகப்புலம்ப ஆரம்பித்து விட்டான் அனந்தசாமி.

ஞானோதயம் இருக்கிறதே - அதுதான் அறிவின் விழிப்பு - அது யாரை எவ்வாறு பாதிக்கும் என்று சொல்ல முடியாதுதான்.

சித்தார்த்தனை அது புத்தனாக மாற்றியது. அப்பாவி அனந்தசாமியை ஒரு பித்தனாக மாற்றி விட்டதே!

# 14. எல்லைவெளி

ஏதோ ஒரு இருள் ஜந்து என் மண்டைக்குள் ஒரு மூலையில் சுகமாக அமர்ந்துகொண்டு. அவ்வப்போது, ஆக்டோபஸ்ஸின் குளிர்ந்த தும்பிக்கை போன்ற வலிய பற்றும் அங்கத்தை நீட்டி என் மூளை மடிப்பில் கிசுகிசு மூட்டுவது போல், சில சமயம் குத்திக்குடைவதுபோல, சிலவேளை அரித்துத் தின்பதுபோல, ஓரோர் நேரம் இறுகக் கவ்விச்சுண்டி இழுப்பது போலெல்லாம் தோன்றுகிறது.

சில கணங்களில் மூலையின் நெளிவு வளைவுகளில், சதுப்பு நிலத்தின் வெடிப்புகளிலும் பிளவுகளிலுமிருந்து உஷ்ணமான ஆவி சுருண்டு எழுந்து அசைவதுபோல், புகை மயமான ஒன்று பொங்கி, மண்டைக்குள் நெடுகிலும் படர்ந்து பரவி, ஒரு கொதி நிலையை உண்டாக்குவது போல் இருக்கிறது.

அந்நேரங்களில் என் மண்டையைத் திறந்து பார்த்தால், அடுப்பில் கொதிக்கும் இட்டிலிக் கொப்பரையின்மேல் மூடியைத் திறந்தால் குப்பென்று சூடான ஆவி எழுந்து மூஞ்சியில் தாக்குவதுபோல், உஷ்ண மயமான புகையோ

பனியோ கானல் அசைவுகளோ போன்ற ஒன்று வந்து என் முகத்தில் தாக்கும் என்ற எண்ணம் எனக்கு உண்டாகிறது.

நான் சூழ்நிலை மறந்து சிரிக்கிறேன். அருகில் இருப்பவர்கள் என்ன என்று கேட்க, ஒன்றுமில்லை என்று தலையை ஆட்டுகிறேன். அவர்கள் ஒரு தினுசாகப் பார்க்கிறார்கள்.

என்னிடம் எத்தனையோ பேர் சொல்லியிருக்கிறார்கள். ஆதி நாளில் என் அம்மாவே சொல்லியிருக்கிறாள். விளை யாட்டு, வேடிக்கை, திருவிழாக் கூட்டம் என்றெல்லாம் உற்சாகமாகப் பொழுது போக்காது, சதா புத்தகங்களிலேயே மூழ்கிக் கிடப்பதைக் காணும் போதெல்லாம் சொல்வாள்: "ஓ யாமல் என்ன படிப்பு? இப்படிப் படிச்சால் மூளை கொதிச் சுப் போம். சும்மா எப்ப பார்த்தாலும் படிச்சுக் கிட்டே இரு க்கப்படாது!"

சீட்டாட்டம். சினிமா, ஜாலிப் பேச்சு. உல்லாச உலா என்று அவர்களோடு சேர்ந்து, அவர்களைப் போல் நாளோட்டு வதில் விருப்பம் கொண்டிராத என்னைப் பார்த்து என் நண்பர் களும் அன்பர்களும் அயலவர்களும் அடிக்கடி சொல்லியி ருக்கிறார்கள். 'ஏ, இப்படி ஒரே அடியாப் படிச்சுக் கிட்டிருந்தா மூளைக் கொதிப்பு ஏற்பட்டுவிடும். பைத்தியம் புடிச்சிரும் டேய்!' என்று.

இருக்குமோ? பிடிச்சிருக்குமோ? பிடித்துக் கொண்டிருக்கின்றதோ? எனக்குப் புரிய வில்லை.

என் நினைப்புகள், கனவுகள், விழிநிலைக் கனவுகள், கனவுநிலைச் சுழிப்புகள், தூங்கியும் தூங்காமலும் - துயில் நிலையும் விழிப்பு நிலையும் கலந்து பின்னித் தெளிவும் தெளிவில்லாத் தன்மையுமாய் - தொய்ந்து கிடக்கிறபோது மூளைக்குள் குட்டிக்குறளிகள் நடத்துகிற கூத்தும்; காதருகில்

'ஙொய ஙொய' என்று ஒலியில்லா ஒலியில் என்னென்னவோ பேச்சுகளும் பாடல்களும் நெளியும்படி பண்ணுவதும்...

சில நினைவுகள் என்னை மிரளவைக்கின்றன. இவற்றை நான் முன்பே எண்ணிவிட்டேன் போலும், அல்லது முன்பு கனவில் கண்டேன் போலும், அன்றி எப்பவோ ஏதோ ஒரு புத்தகத்தில் படித்தேன் போலும் என்றொரு குழப்பம்...

எதிரே ஒரு ஆள் வருகிறது. இவரை முன்பு நான் பார்த்தி ருப்பேனோ?.. அல்லது. சொப்பனத்தில் பார்த்தி ருப்பேனோ?... ஒருவர் கும்பிட்டுக் கொண்டோ, சலாமிட்ட வாறோ, புன் முறுவல் பூதத்தவாறோ வருகிறார். இவர் யார். இவரை நான் பார்த்திருப்பதாக ஞாபகமில்லையே? வேறு யாருக்காவது கும்பிடோ, சல்யூட்டோ, புன்னகையோ இருக்குமோ... நான் திரும்பி பின்னே நோக்க, அங்கே யாரும் இல்லாதிருக்க, நான் குழப்பத்தில் கும்பிடு அல்லது சலாம் அல்லது சிரிப்பு செய்யாது நடக்க, அவர் என்னை ஒரு மாதிரி யாகப் பார்த்தபடி போகிறார். அவர் என்னைக் குறித்து என்ன வேண்டுமாயினும் எண்ணமுடியும். சிறிது தூரம் போன பிறகு அல்லது ரொம்ப நேரம் ஆன பின்னர் - அந்த ஆள் யார் என்பது எனக்கு ஞானோதயமாகிறது என்ன பிரயோசனம்?

ஒரு சந்தர்ப்பத்தை என்னால் மறக்க முடியவில்லை. ரொம்ப வருஷங்களுக்கு முன் நடந்தது.

வீட்டில், உள் அறை ஒன்றில், நாங்கள் இருந்தோம். பேசிக்கொண்டோ, சாப்பிட்டவாறோ வெளிக் கதவு - கம்பிக் கதவு - சாத்தப் பட்டிருந்தது. திடீரென்று ஒருவர் கதவருகில் நின்று அதைத் திறந்து கொண்டு உள்ளே வர முயற்சி செய்வதைக் கண்டு நான் 'ஏஏய், ஏன் கதவைத்திறக்கிறே? திறக்காதே வேய்... ஓய் ஏன் அதைத் திறக்கறே?' என்று கத்தினேன். வெறித்தனமாக. உரத்த குரலில். மற்றவர்கள் வெளியே பார்த்தார்கள் 'ஏன் இப்படிக் கத்துறே? நம்ம மூக்க

பிள்ளை மாமாயில்லா? எப்பவும் நம்ம வீட்டுக்கு வாறவங்க தானே. இப்போ ஏன் வரவேண்டாம்னு கத்துதே?' என்றார்கள். அந்த ஆள் யாரோ ஒரு பைத்தியக்காரனாய். பிச்சைக்கு வந்த நபராய், எனக்குப்பட்டது ஏன்? அநேக முறைகள் கண்டு பேசிப் பழகிய ஒரு நபர் அன்று, பட்டப்பக லில் நல்ல வெளிச்சத்தில். எவனோ ஒரு அந்நியனாய் என் பார்வையில் திரிந்து தோன்றியது ஏன்? நான் எதற்காக அப்படிக் கூச்சல் போட்டேன்? எனக்குத் தெளிவாகப் புரிய வில்லை - அன்றும். இன்றும்கூட

பைத்தியத்தின் வித்துஅன்றே என்னுள் உறைந்திருந்தது போலும்!

இதைவிட விசித்திரமான, ஆனால் இதே போன்ற, இன்னொரு நிகழ்ச்சி -

சிற்றூர்கள் செல்லும் பஸ் ஒன்றில் நான் இருந்தேன். ஏகப்பட்ட கூட்டம். நல்ல வெயில் வேளை. பஸ் வேகமாக ஓடுகிறது. காற்று சுகமாக வீசியது. சிலர் இரைந்து பேசிக் கொண்டிருந்தார்கள். கண்டக்டர் ஏதோ கத்தினான். எனக்குத் தூக்கம் என்று சொல்வதற்கில்லை. நல்ல விழிப்பு நிலையில் இருந்தேனா? தெரியவில்லை. இருந்திருந்தால், அப்படி நடந்து கொண்டிருக்கமாட்டேன் என்று எனக்கு அப்புறம் தோன்றியது. அதை எண்ணுகிறபோதெல்லாம் இந்த நினைப்பு எழும். பஸ்ஸுக்குள்ளேயே பெருத்த சண்டை ஏற்பட்டு விட்டதாகவும், யாரோ யாரையோ வைது தாக்கு வதாகவும், கண்டக்டர் கையாலாகாத்தனமாய் கத்திக் கொண்டிருப்பதாகவும் எனக்குத் தோன்றியிருக்க வேண்டும். நான் திடீரென்று 'ஹோல்டான்! ஹோல்டான்!' என்று கத்தினேன். பஸ் நிற்காமல் ஓடவும். பயந்து பதறி மேலும் 'நிறுத்துங்க. பஸ்ஸை நிறுத்துங்க!' என்று சத்தம் போட்டேன். பஸ் நின்றது. பலரும் என்னைப் பார்த்தார்கள். கண்டக்டர்.

'என்ன என்ன விஷயம்?' என்றான். நான் திருதிருவென விழித்தேன். 'ஏனய்யா இப்படிக் கூச்சல் போட்டு, பஸ்ஸை நிறுத்தச் சொன்னீங்க?' என்று என் பக்கத்திலிருந்தவன் கேட்டான். என்ன சொல்வது? எனக்கு ஒரே குழப்பம். பரிதாபகரமாக விழித்தேன். 'தூக்கக் கலக்கம் போலிருக்கு!' என்ற கண்டக்டர் 'ரைட், போகலாம்!' என்றான். பஸ் ஓட ஆரம்பித்தது. என் மனசு சரியில்லாது போய்விட்டது. தூக்கக் கிறக்கத்தில் சொப் பனத் தடுமாற்றம்தானா? அரைகுறை விழிப்பு நிலையில் வெறித்தனம் செய்த கூத்துதானா? புரியவில்லை.

என் மனமே என் அறிவைக் 'காலை வாரி விட்டு' விழவைக்கிற வேளைகள் இப்படி எத்தனை எத்தனையோ! ஒரு சந்தர்ப்பத்தில் என் முதுகுத்தோல் பிய்ந்து போயிருக்க வேண்டும்தான்! நல்ல காலமாகத் தப்பினேன்.

மாலை நேரம். நான் சும்மா உலா போய்க்கொண் டிருந்தேன். எதிரே ஒரு பெண்வந்தாள். இளம்பெண், வட்ட முகம். 'மூக்கும் முழியும் எடுப்பாக' நன்றாகத்தானிருந்தாள். முகத்தில் சிரிப்புகளை. என்னைக் கண்டு சிரிப்பது போலி ருந்தது. எதிர் வெயில் அவள் முகத்துக்கு ஒரு ஜீவனும் விசேஷ அழகும் பூசியது. அவளை நான் முன்பே அறிந்தி ருந்தேன் என்று என் மனசுக்குப் பட்டது. உறவினர் வீட்டுக்கு அருகில் வாடகைக்குக் குடியிருப்பவள் போல் தோன்றியது. அவள் என் அருகில் வந்ததும், 'என்ன சௌக்கியமா? ஏது இந்தப் பக்கம்?' என்று விசாரித்தேன். அவள் பார்த்தாள் நான் சும்மா சிரித்து வைத்தேன். 'மூஞ்சியைப் பாரு! தனியாப் போற பொம்பிளையைப் பார்த்து சிரிச்சுக்கிட்டு பேச்சு கொடுக்கிற தைப் பாரு! கரிக்கொல்லன்!' என்று கத்தினாள். தூ என்று காறித் தரையில் துப்பிவிட்டு நடந்தாள். எனக்கு வெலவெலத்தது. என் நெஞ்சு திக்திக்கென அடிக்கலாயிற்று.

இவள் எவளோ ஒருத்தி. தெரியாதவள்! அவள் ஏசிக் கொண்டே நடந்தாள். 'ஆளைப் பார்க்கையிலே நல்லவன் மாதிரித்தான் தோணுது. அயோக்கியத்தனம் அவன் பேச்சிலும் சிரிப்பிலும் தெரியுதே. என்னன்னு கேட்டால், கையைப் புடிச்சு இழுத்திடுவான் போலிருக்கு. தெருவிலே ஆள் நடமாட்டமே இல்லை அல்லவா? இவனுக்குத் துணிச்சல் வந்திருக்கு!' யாரும் எதிர்ப்பட்டு, அவள் பேச்சைக் கேட்டு, அநேகரைக் கூட்டிக்கொண்டு, என்னை மடக் குவதற்கு முன்னால் நான் அங்கிருந்து போய்விட வேண்டும் சாமியே கடவுளே என்று எண்ணி, வேகமாக நடந்து ஒரு சந்தில் புகுந்து, வேறொரு தெருவில் சேர்ந்து, பெரிய தெருவை அடைந்தேன். மடத்தனம், சுத்த மடத்தனம் என்று என் மனமே குறை கூறியது.

இதுபோன்ற சமயங்களில் பொம்பிளைகள் என்ன வேண்டுமானாலும் சொல்லத் தயங்கமாட்டார்கள்; அவர்கள் என்ன சொன்னாலும் எல்லோரும் பொம்பிளைகள் பேச்சையே நம்புவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஒரு சமயம், எனக்குத் தெரிந்த ஒருவன், கோயிலுக்குப் போய்க்கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்து - அவள் அவனுக்குத் தெரிந்தவள் தான் - என்ன. பூ வேணுமா? என்று கேட்டு வைத்தான்.அவள், ஐயோ பைத்தியம் என் தலையிலே பூ வைக்க வருது என்று கூச்சலிட, அநேகர்கூட, என்ன ஏது ஏன் என்று எதுவும் கேட்காமலே அவனை மொத்து மொத்தென்று மொத்த, அவன் அன்று உயிர்பிழைத்தது அவன் பெற்றோர் செய்திருந்த பூஜாபலன்தான்! அது போன்ற ஒரு நிலை எனக்கு ஏற்படாமல் நான் தப்பிவிட்டதும் என் முன்னோர்கள் செய்த தவப்பயனால்தான்!

விசித்திரமான நினைப்புகளும் விபரீதமான எண்ணங் களும் என் மண்டைக்குள் ஓயாது குறுகுறுத்துக் கொண்டிருக் கின்றன.

அழகான சிறு குழந்தையைக் கண்டால் அதைக் கண்டு மகிழாமல், அம்மை கண்டு அந்தப் பிள்ளை எப்படி அழகு குலைந்து காணப்படும் என்று ஒரு சித்திரத்தைத் தீட்டி மகிழும் என் மனம்.

யாருக்காவது சீக்கு வந்தால், அவர் குணமாகி எழுவார் என்று நம்புவதற்கு மாறாக, அவர் செத்துக் கிடப்பதையும் பலபேர் அழுவதையும், பாடை தயாரிக்கப்படுவதையும் 'தத்ரூபமாக'க் கண்டு களிப்படையும் அது.

ஒருவன் வெளியே போனான்; வீடு திரும்பக் காணோம்; ரொம்ப நேரமாச்சு என்று யாராவது பேசக் கேட்டால், அந்த நபர் எங்கோ ஓரிடத்தில் லாரியால் மோதுண்டு நசுங்கி மண்டை பிளந்து கிடப்பதையும். ரத்தம் ஓடிக்கறை படிந் திருப்பதையும் பளிச்செனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி உற்சாகம் கொள்ளும்அது.

நான் ரஸ்தாவில் நடக்கிறேன். அகன்ற வீதியைக் கடக் கிறேன். பஸ் வருகிறது. மோதுகிறது. சர்ரக். பிரேக் ஒலி. சதக் என் உடலின் ஏதோ ஒரு பகுதி நசுங்குகிறது. கும்பல் கூடுகிறது. பலவித சத்தங்கள். பரபரப்புகள் - இப்படி என் மனம் படம் பிடித்துக் காட்டாத நாள் அதன் கணக்கில் வீணான நாளே!

நெடுந்தூரப் பயணத்தில் நான் 'துரித ஓட்ட நீராவித் தொடர் வண்டி'யில் செல்லும் போதெல்லாம், பாலங்கள் உடையும், என்ஜின் ஆற்றில் விழும், வண்டிகள் தடதட வென்று சரியும். அல்லது, வேறு விதமான கோரவிபத்துக்கள் நிகழும். பிணங்கள் கணக்கில. காயம் பட்டோர் எண்ணிலர். நானும் என் மனசின் 'மூடு'க்கு ஏற்ப. காயம் பட்டோ பிணமா கவோ கிடப்பது பழக்கம். நான் புறப்பட்ட இடத்தில் இருப்ப வர்களுக்கும் போய்ச் சேர வேண்டிய ஊரில் உள்ளவர்க ளுக்கும் இது தெரியாது. நான் சுகமாக இருப்பதாக அவர்கள்

நினைத்து அவரவர் அலுவல்களில் ஈடுபட்டுக் கிடப்பார்கள் அவர்கள் ஏமாறுகிறார்கள். இப்படி மற்றவர்கள் ஏமாற்றம் அனுபவிப்பதை எண்ணி என் மனம் கெக்கலி கொட்டிக் களிக்கும்.

நான்தான் சொன்னேனே - என் மனசில் ஏதோ ஒரு கோளாறு. "தேர் இஸ் ஸம்திங் ஸைக்கலாஜிக்கலி ராங் வித் யூ' என்று என் நண்பர் ஒருவர் அநேக தடவை சொன்னது உண்டு. அது சரியாகத்தான் இருக்கவேண்டும்! இல்லையெனில் என்னுள்ளே இந்த விதமான குளறுபடிகள் ஏற்படுவதேனோ?

விழிப்பு நிலையில் இப்படியும் இன்னும் பல் வேறு வகைகளிலும் வேலைத்தனங்கள் பண்ணுகிற மனம், என் தூக்க நேரங்களில் இஷ்டம் போல் சித்து விளையாட்டுக்கள் புரிகிறது. நிஜ நிகழ்ச்சிகள் போல் இயங்க வைத்து, உணர்ச்சிகளை முறுக்கிவிட்டு, என்னைக் குழப்பமுற்றுத் திண்டாடவும், அச்சமுற்று அலறவும் தூண்டி விடுகிறது மீள முடியாத இக்கட்டுகளில் சிக்கித் திணறி நான் பயந்து தெளிவாகக் கூச்சலிடுவதாக நம்பிக் கொண்டு கூவ, எனது தூக்க நிலையில் என்னிடமிருந்து கிளம்புகிற தெளிவற்ற, அர்த்தம் புரியாத, அலறல் ஓலங்களைக் கேட்டு மற்றவர்கள் தூக்கம் கெட்டுப் பயந்து விழித்தெழுந்து, விளக்கேற்றிக் கொண்டு என்னை எழுப்பிக் கேட்க, நான் 'ஒண்ணுமில்லையே!' என்றுசொல்லிக் குழப்பிய தடவைகள் ஐந்தா, பத்தா? அதிகம் அதிகமே.

இனம் புரியாத, பேச்சும் புரியாத, குண்டுத்தடிநபர்கள் குதித்தாடும் இடத்தில் நான் எப்படியோ வந்து சேர்கிறேன். அவர்கள் என்னைப் பிடித்து, கழுத்தில் கயிறு மாட்டி, தூக்கு மரத்தில் ஏற்றிக் தொங்கவிடுகிறார்கள். உற்சாகமாகக் கூச்சலிடுகிறார்கள். நான் கால்களை உதைத்துக்கொண்டு கத்துகிறேன்.

பெரிய மைதானத்தின் நடுவிலே தனியே நிற்கும் என்னை, கொடூரமான கருஞ்செவலை மாடு ஒன்று தாக்கி, முட்டித் தள்ளுவதற்காகப் பாய்கிறது. நான் வெறும் கால்களால் அதை அடித்து விரட்ட முயல்கிறேன். 'போ போ' என்று கத்துகிறேன்.

குட்டி யானை ஒன்று, தன் கண்களை உருட்டி விழித்தவாறு, (அப்படி அது முழிக்கிறபோது ஒரு ஒளி பளிச் பளிச் என மின்ன) சிரித்துக் கொண்டே என்னைத் துரத்துகிறது. அதன் பிடியில் அகப்படாமல் தப்பி ஓட முயன்றும், முடியாமல் கூச்சலிடுகிறேன்.

என்னை ஒருவன் ஒரு அறைக்குள் அழைத்துச்சென்று, ஒரு மூட்டையைக் காட்டி, இதைத் தூக்கு என்கிறான் நான் தூக்கவும், அது என் நண்பன் ஒருவனின் சவமாகக் காட்சி அளிக்கிறது. பல்லிளிக்கிறது. நான் பதறி, அதைக் கீழே போட்டுவிட்டு வெளியே ஓடப் பார்க்கிறேன். கதவு மூடப் பட்டுக் கிடக்கிறது. என்னை இட்டு வந்த ஆளைக் காணோம். பேய்த்தனமான சிரிப்பு கேட்கிறது. நான் பயந்து கூப்பாடு போடுகிறேன்.

கடல் மணலில் இருக்கிறேன். கடல் பேரார வாரத்தோடு பொங்கி எழுந்து, யானை உயரம் பனை உயரம் அலைகளை வீசிக்கொண்டு முன்னேறிப் பாய்கிறது. நான் எழுந்து தப்பியோட முயல்கிறேன். அலைகள் என்னை விழுங்க வருகின்றன. நான் ரஸ்தாவுக்கு வந்துவிட்டேன். பெரிய அலை ஒன்று வந்து என் காலைப் பற்றி இழுக்கிறது ஓகோகோ என உறுமுகிறது. நான் விழுகிறேன். கதறுகிறேன்.

இதுபோல், இன்னும் பயங்கரமான - விழிப்புற்றதும் தெளிவாக நினைவுக்கு வராத - கனவு அனுபவங்கள். அந்த வேளைக்கு நிஜமாகவே நிகழ்வன போன்ற உணர்ச்சி

நாடகங்கள். இவை எல்லாம என் மூளையின் கொடூர விளை யாடல்கள்தான். ஏன் இப்படி அது விளையாட வேண்டும்? எனக்குப் புரியவில்லை.

நேற்று என்ன நடந்தது தெரியுமா? தூக்கத்தில்தான். மே ற்குத் கடற்கரை ஓரத்தில் ஒரு இடம். பூமி மிக உயர்ந்து, மேடு களும் பள்ளங்களுமான மலைப்பகுதியாக விளங்கும் ஒரு எல்லையில், செங்குத்தாய் செம்மையாய் முடிந்து நிற்கிறது. எங்கு பார்த்தாலும் தென்னை மரங்கள். பசுமைக் காட்சிகள் கீழே. வெகு வெகு கீழ் மட்டத்தில், தென்னை மரங்கள் - கடல் மணல், வெள்ளை வெளேரென்று. அதற்கும் அப்பால் நீலக்கடல். அற்புதமான. அமைதிமயமான. அழகுக் காட்சி மேலே நீலவானம். வெள்ளொளி வீசிப் பிரகாசிக்கிறது சூரியன். அதன் ஒளி எங்கும் அற்புதக் கவர்ச்சி ஏற்றித் திகழ்கிறது. மேலே நானும் இன்னும் சிலரும். பூமி ஓரத்தில் நின்று கிடுகிடு பள்ளத்தை எட்டிப் பார்த்தால் தலை சுற்றுவது போல், கீழே உள்ள தென்னைகள் மிகச் சிறியனவாயும். மணலில் நடக்கும் ஒன்றிரு மனிதர்கள் விசித்திரக் குள்ள உருவங்களாகவும் தோன்றுகிற அளவுக்கு மிக உயரமான இடத்தில் நாங்கள் நின்றோம். ரசித்து வியக்கப்பட வேண்டிய அபூர்வமான இடங்களில் இதுவும் ஒன்று. வியந்து கொண்டிருந்த என்னை, அருகில் நின்ற இருவர் சட்டென்று பிடித்துத் தள்ளிவிடுகிறார்கள். நான் பயந்து குழம்பி அலறி ஓலமிட்டுக் கொண்டே விழுகிறேன்... விழுகிறேன்.

என் உடல் நடுக்கமுற, வேர்வை பெருக, நான் ஊமைக் குரலில் உளறிக் கத்தியவாறு விழிக்கிறேன். திருதிருவென்று விழித்து, சுற்று முற்றும் பார்க்கிறேன். வழக்கமாக நான் படுத் துறங்கும் இடம்தான். உயரே தொங்கும் விளக்கு எரிகிறது. என் அலறலால் தூக்கம் கெட்டவர்கள் என்னைச் சுற்றிலும் நி ற்கிறார்கள். என்ன? ஏன்? எதுக்காக இப்படிச் சத்தம் போட்டே? எவ்வளவு பயமாக இருந்தது? அநேக குரல்கள்.

புரியாத குழப்பத்தில் எழுந்து, தெளிவு பெறுவதற்காக ஒலிக்கும் பற்பல கேள்விகள்.

கெட்ட சொப்பனம் என்றேன்.

என்றாலும், என்னுள், என் குழப்பம் அதிகரிக்கிறது. எனக்குப் பைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறதா? இல்லை, என்றேனும் ஒரு நாள் அது பிடித்துவிடுமா?

அறிவுத் தெளிவுக்கும் பைத்திய நிலைக்கும் இடையேயுள்ள எல்லை மிகவும் நுண்மையானது. அது எப்போது, எப்படி, ஏன் பிறழும் என்று சொல்ல முடியாது என்று விஷயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள். நான் அந்த எல்லைவெளியில் அந்தப் பக்கம் ஒரு காலும் இந்தப் பக்கம் ஒரு காலும் வைத்தபடி நிற்கிறேனா?

எனக்குப் புரியவில்லை.

எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது எனக்கு!

# 15. செல்லரிக்கும் நெஞ்சு

விண்ணையும் மண்ணையும் விரிகடலையும் பார்த்துக் கொண்டிருந்த விநாயகமூர்த்தி, முன்பு ஒருகவிஞன் 'நீல வானிலும் நெரித்த திரைக்கடலிலும்' காதலியின் அழகு முகத்தைக் கண்டதுபோல, ஆசைமுகம் எதையும் பார்க் கவில்லை. அப்படிப் பார்க்க அவர் ஆசைப்பட்டால் அது நிறைவேறாது. காரணம், காதலி என்று எவளும் இதுவரை அவர் வாழ்வில் வந்து சேரவில்லை என்றாலும் அவர் பார்வையும், நினைவும் சதா காதலர்களையும் காதலையும் தான் சுற்றிவந்தன.

இப்போதுகூட - மணி என்ன? பிற்பகல் மூன்று தான் ஆகிறது - ஆள் நடமாட்டம் இல்லாத கடலோரத்தில், கடற் கரை ரஸ்தாவை ஒட்டிய பள்ளத்தில் குளுகுளுவென நின்ற பசுமையான மரங்கள் பரப்பியிருந்த நிழலில் அமர்ந்திருந்த விநாயகமூர்த்தியின் பார்வை உல்லாச ஜோடி ஒன்றைத்தான் விழுங்கிக் கொண்டிருந்தது.

நல்ல வெயில்தான். 'காதல் செய்யக்' கிளம்பும் யுவனும் யுவதியும் நேரத்தைப் பற்றி யோசிக்கிறார்களா? வெயிலைப் பற்றிக் கலைவப்படுகிறார்களா? அவர்கள் தனி உலகில்

சஞ்சரிக்கும் தனிப்பிறவிகள் போல் அல்லவா நடந்து கொள்கிறார்கள்! என்ன சிரிப்பு! எவ்வளவு குதூகலம்!

விநாயகமூர்த்தி பெருமூச்செறிந்தார்.

எல்லை இலாது பரந்து கிடந்து இயற்கையின் ஊதாரித் தனத்தை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும் மாகடலின் நீலமோ, அதனோடு போட்டியிடுவது போல் வியாபித்துள்ள வானத்தின் நீலமோ, மணல் வெளியின் வெறிச்சிட்ட தன்மையோ, பிறவோ, அவருடைய பார்வையை, கவனத்தை, எண்ண ஓட்டத்தை வெகுநேரம் பிடித்து வைத்துக் கொள்ள இயலவில்லை. நீலத்துகில் அணிந்து, கனகாம்பரம்சூடி, கவர்ச்சியாக விளங்கிய சுந்தரி அருகில் அசைந்து நகர்ந்த இளைஞன் மீது இடித்துக் கொண்டு விலகியும் மீண்டும் ஒட்டியும், ஏதோ பேசிச் சிரித்தவாறு அழகுற அசைந்த கோலக் காட்சியே அவர் கண்களை நிறைத்தன; உள்ளத்தில் அரிப்பு உண்டாக்கின.

'கொடுத்து வைத்தவன்' என்ற எண்ணம் புகையும் அவர் உள்ளத்துள் நெளிந்து கொடுத்தது.

விநாயகமூர்த்திக்கு ஐம்பத்து நான்கு அல்லது ஐம்பத்து ஐந்து வயசிருக்கும். அவர் ஜன சமுதாயக் காட்டிலே தனி மரமாகத்தான் இருந்தார். 'ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல' என்று எண்ணித்தானோ என்னவோ அவர் 'எங்கள் ஊர்' என்று எந்த ஊரையும் சொந்தம் கொண்டாடவில்லை. சொந்தக் காரர்கள் என்று யாரையும் ஏற்றுக்கொள்ளவுமில்லை. எந்தெந்த ஊரில் எல்லாமோ வசித்துப் பார்த்துவிட்டு, நாகரிகமும் ஜனப்பெருக்கமும், அர்த்தமற்ற அவசரமும் ஆழமற்ற பரபரப்பும் மிகுந்திருந்த பெருநகரத்துக்கு வந்து சேர்ந்த அவருக்கு அச்சூழ்நிலை பிடித்துவிட்டது. எப்படி எப்படியோ வாழமுயன்று, ஆசைக்கோட்டைகள் கட்டி, கனவுகள் வளர்த்துவந்த அவரது சுபாவத்துக்கு உகந்த

இடமாக அமைந்தது அது. 'அஞ்ஞாத வாசத்துக்கு அருமை யான இடம்' என. அவர் மனம் அங்கீகரித்துவிட்டது. 'நம்மை இன்னார் என்று பிறர் அறிந்து கொள்ள முடியாது. அவர்களை நாம் கவனிக்கிறோம் என்பதை மற்றவர்கள் உணர் வதுமில்லை. ஆகவே, எல்லாரையும் எல்லாவற் றையும் அதாவது உலகத்தையே, ஆராய்ந்து அறிவை விசாலப் படுத்திக் கொள்வதற்கு இதுதான் தகுந்த இடம்' என்று அவர் முடிவு செய்தார்.

அறிவை விரிவு செய்து, அகண்டமாக்கி, அனுபவ ஞானம் பெறும் ஆர்வத்திலேயே அவர் அலைந்து திரிந்ததால், சதா புத்தகங்கள் - எழுதும் காகிதம். பேனா என்று உறவாடிக் களித்ததனால், சராசரி மனிதர்களைப் போல அவர் வாழவில்லை. குடும்பம், மனைவி, மக்கள் என்பதெல்லாம் வீண் தொல்லைகளுக்கும் எல்லையில்லாக் கவலைகளுக்கும் முடிவற்ற பொறுப்புகளுக்கும் தம்மை ஆளாக்கி விட்டுவிடும் என்று கருதியதனால் அவர் தனிநபராகவே காலம் கழித்தார்.

காலம் அவரை அறியாமலே அவரிடம் கேட்டு விடை பெற்றுக்கொள்ளாமலே ரொம்பவும் ஓடி சில மாற்றங்களைப் புகுத்தி வந்திருப்பதை அவர் நின்று கணிக்கவில்லை. அப்படிக் கணிப்பதற்கு அவருக்கு நேரம் இல்லை! ஆயினும், வயசு அதிகமாக ஆக அவர் ஒருவித வெறுமையை உணர முடிந்தது. விரக்தி மனோபாவம் வலிமைபெற்றது. தம்மைச் சுற்றிலும் வளர்ந்து வருகிற மக்கள் கூட்டத்தைக் காணுகிற போது, பழைய நபர்களின் முதிர்ச்சியை, இளையவர்களின் வளர்ச்சியை, புதிய புதிய பிறவிகளின் மலர்ச்சியை வளப்பத்தை எல்லாம் காணக் காண, அர்த்தமற்றது என்றும், சாரமற்றது பயனற்றது வறண்டது என்றும், தாம் வெறுத்து விட்ட வாழ்க்கையில் எங்கோ பொதிந்துகிடந்த சாரத்தை சத்தை, ஜீவரசத்தை, பசுமையை உணர அவர்தான் தவறி விட்டார் என்றொரு உறுத்தல் அவருள் தைக்கலாயிற்று.

அத்துடன் ஒரு ஏக்கம் வளர்ந்தது. சூழ்நிலையையும் சுற்றியுள்ளவர்களின் போக்குகளையும் கவனிக்கக் கவனிக்க அவரையே அரித்தது அவர் உணர்வு.

விநாயகமூர்த்தி வாழ்க்கையில் செய்த மகத்தான தவறு, அவர் அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அறிவையே பெரிதாய், ஆதார சக்தியாய், தனிப்பெரும் தத்துவமாய் வழிபட்டு - அறிவு பூர்வமாக வாழ முயன்றதுதான். அறிவின் பக்தராக வாழ்கின்ற காலத்திலேயே அவர் உணர்ச்சிகளுக்கும் போதிய கவனிப்பு கொடுத்து அவற்றை திருப்தி செய்திருந்தால், அவரது பலவீன கட்டத்தில் உணர்ச்சிகள் அவரை மேய்த்து ஏற்றம்கொள்ள முற்பட்டிரா. ஆனால் அவர் உணர்ச்சிமயமான வாழ்வை அற்பமானது, மட்டமானது, மிருகத்தனமானது என்றல்லவோ ஒதுக்கியிருந்தார்? உணர்ச்சி பூர்வமாக வாழ்ந்து கொண்டிருந்த சராசரி மனிதரை 'உயர் வாழ்வு வாழக் கற்றுக்கொள்ளாதவர்கள்' 'முதிரா அறிவினர்' என்றல்லவோ அவர் மதிப்பிட்டார்?

அவருடைய அறிவுப்பசி மந்தமுறுகிற சந்தர்ப்பங்களில், நிறைவேறாது - திருப்தி செய்யப்பெறாது அவருள் ஒடுங்கிக் கிடந்த உணர்வுகள் துடுக்குத் தனமாகத் துள்ளாட்டம் போடுவது சகஜமாயிற்று.

இப்போதும் அப்படித்தான்.

தங்கள் உணர்ச்சிக் களிப்பிலே சூழ்நிலை மறந்தவராய். தொட்டும் பிடித்தும், இடித்தும் தள்ளியும், தட்டியும் தடவியும், பரஸ்பரம் பார்த்தும் மகிழ்ச்சி வளர்த்தவாறு நடந்து கொண்டிருந்த யுவனும் யுவதியும் விநாயகமூர்த்தியின் சபல உணர்ச்சியை ஊதி விடும் விசிறிக் காற்று ஆக விளக்கினர்.

'எனக்கும் ஒரு காதலி கிடைத்திருந்தால், பொழுது இன்பமயமாக மாறுமே!' என்றொரு நினைப்பு ஊர்ந்தது

அவர் உள்ளத்தில். அந்த எண்ணம் கிளப்பிய பெருமூச்சுப் புகையிலே செல்லம்மாவின் உருவெளித்தோற்றம் நிழலிட்டது.

தீக் கொழுந்துபோல் தகதகத்தாள் செல்லம்மா, அழுத்தமான வர்ணப் புடவைகளையே விரும்பி அணிந்த குமரி, குறுகுறுக்கும் விழி வண்டுகள் சதா மொய்ப்பதற்கு வாலிபர் கும்பலை நாடிக்கொண்டிருக்கும். எப்போதும் ஜம்மென்று சிங்காரித்துக் கொண்டு, வீட்டுக்கும் வாசலுக்கும் ஆயிரம் தடவை நடப்பதும், தெருவாசலில் போஸ்கொடுத்து நிற்பதும்தான் அவளது தொழிலாகவும் பொழுதுபோக்கு ஆகவும் அமைந்திருந்தன.

விநாயகமூர்த்தி வசித்த வீட்டுக்கு பக்கத்து வீட்டில் குடியிருந்தாள் அவள், தாயாருடனும் தம்பியோடும். பக்கத்து வீட்டிலிருந்த வாலிபன்மீது அவள் பார்வை வீச்சுப் படாமல் இருக்குமா? பார்த்தாள். சிரித்தாள். தம்பியை அனுப்பி, கதைப் புத்தகங்கள் இரவல் கேட்டாள். ஒன்றிரண்டு புத்தகங்கள் பெற்ற பிறகு, 'காதல் கதை உள்ள புத்தகங்களாக இருந்தால் தான் எனக்குப் பிடிக்கும்' என்று அவளே அவனிடம் அறிவித்தாள்.

சங்கோஜ சுபாவம் மிகுதியாகப் பெற்றிருந்த விநாயக மூர்த்திக்கு அந்தப் பெண்ணின் பேச்சும் சிரிப்பும் செயல்களும் ஊக்கமோ துணிச்சலோ தரவில்லை. வெட்கமும் ஒருவித அச்சமும்தான் அவரைப் பற்றிக் கொண்டன. அப்போது அவருக்கு இருபத்திரண்டு வயசு இருந்திருக்கலாம்.

'வேறொருவனாக இருந்தால் செல்லம்மா அலைந்த அலைச்சலுக்கு, என்னென்னவோ செய்திருப்பான். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு வாழ்வின் இனிமைகளை நுகர்ந்திருப்பான்' என்று பிறகு அவரே அடிக்கடி எண்ணிப் பெருமூச்செறிவது வழக்கமாகிவிட்டது.

ஒரு சந்தர்ப்பத்தை அவர் மறக்கவே முடிந்ததில்லை.

அவர் வீட்டினுள்ளிருந்துவெளியே வந்து கொண்டிருந்தார். செல்லம்மா தெருவாசலில் நின்றுவிட்டு உள்ளே வந்தாள். ஒரு சுவர்த்திருப்பம். அந்த இடத்தில் இரண்டு பேரும் மோதிக்கொள்வதுபோல், எதிரும் புதிருமாக, நெருங்க நேர்ந்துவிட்டது. தற்செயல் நிகழ்ச்சி. அந்தப் பெண்ணின் நெருக்கமும், மிக அருகிலிருந்த முகமும் சிரிக்கும் இதழ்கள், படபடத்த கண்கள், மினு மினுத்த கன்னங்கள் எல்லாமும் கழுத்தும், அங்கு அழகாய் துவண்ட மெல்லிய தங்கச் சங்கிலியும் அதன் டாலர் தொங்கிய இடத்தில் இருபுறமும் விம்மி நின்ற சதைத்திரட்சிகளும் 'குளோஸப் காட்சி'யாய் அவரைத் தாக்கின. அவளிடமிருந்த பரவிய இனிய வாசனை அவரைக் கிறக்கியது. அவள் விலகாமல்-விலகிக் கொள்ள அவசரம் காட்டாமல் - அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவருக்கு அவர்தான் பெருத்த தவறைச் செய்து கொண்டிருப்பதுபோன்ற பதைப்பு. சட்டென விலகினார். அவள் சிறிது அசைந்ததனால் அவள் சேலைத் தலைப்பு அவர் கையில் பட்டுப் படிந்தது. அவர் திரும்பிக் கூடப் பார்க்காமல் வேகமாக நடந்து விட்டார்.

'மடத்தனம். நான் மடத்தனமாக நடந்து கொண்டேன். சரியான மடச்சாம்பிராணி!' என்று பிற்காலத்தில் அவர் அதற்காகத் தன்னையே நிந்தித்துக் கொண்ட தடவைகள் பலவாகும். அந்த மாம்பழக் கன்னத்தில் டபக்கென்று ஒரு முத்தம் கொத்தியிருக்கலாமே? பழச்சுளை உதடுகளில் அவசரமாக நம் உதட்டால் வேகமாக முத்தம் பதித்திருக்கலாமே? இவ்வாறெல்லாம் அவர் மனக்குதிரை தறிகெட்டுத் தாவும். அவர் கழி விரக்கத்தோடு 'உம். பொன்னான சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டேன்!' என்று எண்ணுவார்.

மறுநாள் அவள் 'ஐ லவ் யூ' என்று ஒரு தாளில் எழுதி, புத்தகத்தினுள் வைத்து அவரிடம் கொடுத்தாள். 'பயந்தாங்

குளி' யான விநாயக மூர்த்தி, அந்த இடத்தில் தங்கியிருந்தால் ஆபத்து என்று அஞ்சி, அன்று மாலையிலேயே ஊர்சுற்றக் கிளம்பிவிட்டார். பல ஊர்களுக்கும்போனார். அவர் திரும்பி வருவதற்குள். செல்லம்மாளுக்குக் கல்யாணம் முடிந்து அவள் கணவன் வீடு சென்றிருந்தாள். 'நல்ல காலம்' என்று நிம்மதியாக மூச்சுவிட்டார் விநாயகமூர்த்தி.

விவேகானந்தர், ராமதீர்த்தர், சிவானந்தர் முதலிய ஸ்வாமிகள் போதனை நூல்களை அவர் விரும்பி விரும்பிப் படித்துக் கொண்டிருந்த காலம் அது. ஆகவே, ஒரு பெண் ணின் துணிச்சலான காதல் செயலை வெறுத்து ஒதுக்கி, தன்னைத் தற்காத்துக் கொண்டதைப் பெரிய சாதனை என்றே விநாயகமூர்த்தி அந்நாட்களில் பெருமையோடு கருதினார். ஆனால், காலப்போக்கில் உணர்ச்சிகள் குழப்பும் அவர் உள்ளமே அவரைக் குறைகூறியது. அவர் செயலை அசட்டுத் தனம், பைத்தியக்காரத்தனம், முட்டாள்தனம் என்று கடுமையாக விமர்சிக்க லாயிற்று. செல்லம்மாவோடு காதல் உறவு கொண்டு இளம்பருவ நாட்களை 'தெய்வ நாட்கள்' ஆக மாற்றியிருந்திருக்கலாம். அவளையே கல்யாணம் செய்து கொண்டிருக்கலாம் என்று ஏக்கத்தை அது வளர்க்கலாயிற்று.

கடலோரத்தில் அலைகளை வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்துவிட்ட நீலப்பூந்துகில் மங்கையும் அவள் அன்பனும் விநாயகமூர்த்தியின் கண்களை விட்டு அகல வில்லை. 'இவள் செல்லம்மாவைப் போலவே இருக்கிறாள்' என்றது அவர் மனம்.

பொதுவாக மனித மனமே விசித்திரமான ஒரு தத்துவம் என்றால், விநாயகமூர்த்தியின் மனம் அதி விசித்திரமானது என்றே சொல்ல வேண்டும். வக்கிரமானது என்றும் கூறலாம். இல்லையெனில், சம்பந்தமில்லாமல் - தேவை இல்லாமல் எதையாவது நினைவுக்குக் கொண்டு வந்து குழப்பம் உண்டாக்குமா என்ன?

இப்பொழுதும் அவர் மனம் வீணத்தனம் தான் செய்தது. எப்பவோ ஒரு வருஷத்தில், எங்கோ ஒரு ஊரில் நிகழ்ந்த ஒரு உணர்ச்சி நாடகத்தை இப்போது அவரது மன அரங்கில் நிழலாட்டமாகக் கொண்டுவந்து இயக்கியது அது.

நண்பர் ஒருவரின் அழைப்புக்கு இணங்கி அவர் அந்த ஊருக்குச் சென்றிருந்தார். சில தினங்கள் அங்கே தங்கியிருந்தார். அவருக்கு வசதிகள் எல்லாம் செய்த தரப்பட்டிருந்தன. தனி அறை, படிக்கப் புத்தகங்கள் எல்லாம்தான். அவர் காற்றோட்டமுள்ள வராந்தாவில் கட்டிலில் படுத்துக் தூங்குவது வழக்கம். ஒருநாள் அதிகாலையில் அவர் முகத்தின் மீது சிலீர் என்ற உணர்வு படர்ந்தது. அவர் திடுக்கிட்டுக் கண்விழித்தபோது, கட்டிலுக்கு அருகில் ஒரு இளம் பெண் நிற்பதைக் கண்டார். நன்கு விளைந்துள்ள சர்க்கரைவள்ளிக் கிழங்கு மாதிரி புஷ்டியான தோற்றம். குறுகுறுவென்று சுழலும் கண்கள். குறும்புச் சிரிப்பு. அவள் அவ்வீட்டில் அங்குமிங்கும் திரிவதையும். அவரை அடிக்கடி பார்வையால் விழுங்குவதையும் அவர் கவனித்திருந்தார். இருளை ஒளி விழுங்க முயன்று கொண்டிருந்த அவ்வைகறைப் போதில், அவள் நீராடிவிட்டு ஈரத்தணியோடு வந்து நின்றாள் என்பது அவருக்குப் புரிந்தது - நன்கு பிழியப்படாத துணியில் நீர்மை நிறைந்திருந்தது. அம்மெல்லிய வெண்துகில், சதைப் பிடிப்பு மிகுந்த சிவப்பு மேனியில் அங்கு மிங்கும் ஒட்டிக்கொண்டு அவளது உடல் வளப்பத்தை நாசூக்காக விளம்பரப் படுத்தியது. அவள் சீலையின் முந்தானைதான் அவர் முகத்தை வருடியிருக்கவேண்டும். அவள் சீலையில் ஈரம் கசிந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது போலவே, அவள் மனசிலும் உணர்வுக் கசிவு ஏற்பட்டிருந்தது போலும்! ஆசை அவர் பக்கம் சொட்டிக்கொண்டிருந்தது போலும்! அவள் பேசாத உணர்ச்சியை அவளுடைய பார்வை தெளிவாகத் பேசிக் கொண்டிருந்தது. அவர் அவள் உடலையும் முகத்தையும்

பார்த்துக் கொண்டிருந்தார். அவளோ அப்படியே அவர் அருகில் கட்டில்மீது அமர்ந்து, அவர் மேல் சாய்ந்து, முகத்தின் மேல் முகம் வைத்தாள். அவர் படபடப்போடு, அவளை விலக்கித் தள்ளிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார். 'சீ போ! வெட்கமில்லே? என்ன வேலை இது?' என்று சீறினார். அவள் பயந்து விலகி அங்கிருந்து ஓடினாள்.

அப்படி அவள் ஓடுகிறபோது அவள் பின்னழகு மேனி வளத்தை, அங்கு நிகழ்ந்த அசைவு நாட்டியத்தை, அவர் ரசிக்கத் தவறவில்லை. இதை அவர் உள்ளம் பிற்காலத்தில் அடிக்கடி எண்ணி ஏங்குவது வழக்கமாயிற்று. 'பெரிய பீஷ்ம அவதாரம்! மண்டூகம்! தேடி வரும் இன்பங்களைச் சுவைத்து அனுபவிக்கத் தெரியாத பதார்த்தம்!' என்று அவர் மனசின் ஒரு பகுதி காரித்துப்புவதும் சகஜமாகிவிட்டது.

ஈரத்துணி ஒட்டிய வளமான பெண் உடல் துள்ளிக் குதித்தோடுகிற எழிலைப் பின்பக்கமிருந்து பார்த்து ரசிக்கும் நினைப்புதான் இவ்வேளையில் அவருள் எழுந்தது. அவள் வாழாவெட்டியானவள், நண்பருக்கு ஏதோ ஒரு வகையில் உறவு என்பதை அவர் மறுநாளே புரிந்துகொண்டார். அப்போது, தமது புலனடக்கத்துக்கு மற்றுமொரு வெற்றி என்று இறுமாந்துபோன அவர் உள்ளம்தான் காலப் போக்கில் வேறு விதமாக அரிக்கத் தொடங்கியது. அதே நினைப்புதான் இப்பவும் அவர்மனசில் ஊர்ந்தது.

'புத்தி கெட்ட தனமாக நடந்து கொண்டேன். மகாப் பெரிய ரிஷிமாதிரி. பெரிய பெரிய ரிஷிகள்கூட சில சமயங் களிலே தங்கள் உணர்ச்சியின் ஆளுகைக்குத் தலைவணங்கித் தான் போயிருக்கிறார்கள். நான் அவர்களைவிடப் பெரிய சூரன் மாதிரி நடந்துகொள்ள ஆசைப்பட்டது தப்பு இல்லாமல் என்ன? வசதியான அறை இருந்தது. உணர்ச்சித் துடிப்புள்ள பெண் கனிந்த கனிபோல் கையில் வந்து விழுந்தது. நான் அதைப் புறக்கணித்தது மடத்தனம்!'

இந்த எண்ணம் எழவும் விநாயகமூர்த்தி 'துணிச்சல் வேணும். மனத்துணிவு உள்ளவங்கதான் சகல வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொண்டு நன்றாக வாழ்கிறாங்க. வாழ்க்கையை அனுபவிக்கிறாங்க!' என்று அறிவுரை கூறிக்கொண்டார்.

'மற்றுமொரு ஜோடி!' என்று அவர் கண்கள் படம் பிடித்துக் காட்டின. ஜாலியாகக் கைகோத்தபடி, சிரித்துப் பேசியவாறு, நடந்த ஜோடி 'நாங்கள் காதல் வளர்ப்பவர்கள். காதல் இன்பம் பெறுகிறவர்கள்' என்று சொல்லாமல் விளக்குவதுபோல் காட்சி அளித்தது.

'இவர்கள் முறைப்படி திருமணம் செய்துகொண்டவர்கள் இல்லை.

இவனும் இவளும் ஒரே இடத்தில் உத்தியோகம் பார்க்கிறவர்களாக இருக்கலாம். வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறாத பாக்கியசாலிகள்!' என்று அவர் மனம் முணுமுணுத்தது.

இவ்விதம் வாழ்க்கையை ஜாலிப்பாதையில் ஓட விடும் ஆசையும் துணிச்சலும் அவருக்கு இருந்திருக்குமானால்! விநாயகமூர்த்திக்கு வாய்ப்புகள் எதிர்ப்படாமல் இல்லை. முக்கியமாக தேவகியின் போக்கை அவர் குறிப்பிடலாம்.

அவர் பல வருடகாலம் குடியிருந்த ஒரு வீட்டின் சொந்தக்கார அம்மாளின் செல்வமகள் தேவகி. அவளுக்கு இருபத்துநான்கு வயசிருக்கும். கல்யாணமாகியிருந்தது. கணவனுக்கு தூரத்து ஊர் ஒன்றில் உத்தியோகம். அதனால், தேவகி, 'காடாறு மாசம் நாடாறு மாசம்' என்று வாழ்க்கை முறை அமைத்துக்கொண்ட விக்கிரமாதித்தன்போல, கணவன் வீட்டில் ஆறுமாதம் அம்மா வீட்டில் ஆறுமாதம் என்று நியதி வகுத்து, அதை வருஷம் தோறும் தவறாது கடைப்பிடித்து வந்தாள்.

தேவகி முற்றிய நாகரிகமும் அல்ல, சுத்தக்கட்டுப் பெட்டியுமல்ல. ஸ்டைல் மிகுந்த பட்டணத்துப் பெண்ணு மில்லை. பழம்பசலிப் பட்டிக்காட்டு ரகமும் இல்லை. அவள் ரொம்பப் படித்தவளுமில்லை; படிப்பு வாசனை அற்றவளும் இல்லை. காதல் கதைகள் மலிந்த புத்தகங்களையும் பத்திரிகைகளையும் ஆசையோடு படிப்பாள். அதைவிட அதிகமான ஆர்வத்தோடு, காதல் காட்சிகள் மிகுந்த, தமிழ் படங்களைப் பார்ப்பாள். பிறகு அப்படங்களின் காட்சி களையும், பாட்டுகளையும் வசனங்களையும் வர்ணித்துப் பொழுது போக்கி மகிழ்வாள் அவள் தாராளமாக யாருடனும் பேசிப் பழகும் சுபாவம் பெற்றிருந்தாள்.

விநாயகமூர்த்தியுடனும் அவள் சகஜமாகப் பழகினாள். அவர் வசித்த வீட்டுக்குள் இஷ்டம்போல் வருவாள். போவாள். அவரிடமும் தான் கண்ட சினிமா நபர்களை, உரிய அபிநயங்களோடு, விவரிப்பாள். தனக்குத் தேவைப்படும் சில சாமான்களை வாங்கிவரும்படி அடிக்கடி பணம் கொடுத்து அனுப்புவாள். 'நீங்க ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?' 'என்னைப்போல் ஒருத்தியைத் தேடிப் பிடித்துக் கல்யாணம் பண்ணிக் கொள்வதுதானே?' என்று நச்சரிப்பாள். ஒருநாள், 'எனக்கு மட்டும் கல்யாணம் ஆகாம லிருந்தால் நான் உங்களையே கல்யாணம் செய்து கொள்வேன். நீங்க எவ்வளவுதான் மறுத்தாலும் யாரு விடுவாங்க?' என்று அவள் அறிவித்தாள். சில சமயம் அச்சம், மடம், நாணம் முதலிய பெண்மைப் பண்புகளைக் காற்றோடு போக விட்டுவிடுகிற குணம் பெற்றவள் தான் அவள்.

ஒரு சமயம் தேவகி தனக்குத்தேவையான 'உள்பாடி'யை ரெடிமேட் கடையிலிருந்து வாங்கிவரும்படி அவரை ஏவினாள். அவர் வாங்கிவந்த 'பிரேஸியர்' அவளுக்குப் பிடித்திருந்தது. வீட்டுக்குப்போய் அந்த நாகரீக டிசைன் 'பிரா'வை மட்டும் அணிந்து கொண்டு அவர் இருந்த

இடத்துக்கு வந்துசேர்ந்த தேவகி, ஸ்டைலாக வெளிச்சமிட்டு 'ஜம்னு இருக்குது இல்லை? ஜோராக இல்லை?' என்று கேட்டாள். மேலாடையை நழுவவிட்டு, எடுப்பாக நிமிர்ந்து வளைந்தும் குனிந்தும் அழகு எக்ஸிபிஷனாக விளங்கியவள். அவரை விதம் விதமானப் பார்வைகளால் கொத்தினாள். முடிவில், 'நீ ராஜா - நான் ரோஜா!' என்று கொஞ்சும் குரலில் கூறி அவர் கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டு வெளியேறினாள்.

இப்படி அவள்ஆடிய ஆட்டங்கள் எத்தனையோ! நாற்பது வயதைத் தாண்டிவிட்ட வினாயகமூர்த்தி பற்பல வருடங்கள் அச்சிறு இனிமைகளை ரசித்து வியந்துவந்தார். அவர் உள்ளம் மேலே செயலுக்குத் தூண்டவில்லை. பின்னர்தான் அது ஏங்க ஆரம்பித்தது. நாகரீக நகரத்தில் என்னென்னவோ நடக்குது. எவ்வளவோ திருவிளையாடல்கள்! நானும் சிறிது துணிந்து செயல் புரிந்திருந்தால், தேவகியோடு எவ்வளவோ இன்பவிருந்து அனுபவித்திருக்கலாமே!' என்று மிக வருத்தப்பட்டார் அவர்.

விநாயகமூர்த்தி லட்சியவேகம் எதையும் வளர்த்து, அதை எய்துவதற்காக ஒரே வெறியோடு செயலாற்றவில்லை. ஆன்மீகம், தேசீயம், சமூகப் பணி, இலக்கிய உபாசனை, கலைவிஞ்ஞான ஆராய்ச்சி என்ற எத்துறையும் லட்சிய தாகமாய் அவரை வாட்டி வதைக்கவில்லை. பொறுப்பற்று வாழும் கட்டுகளற்ற தனிவாழ்வு அவருக்குப் பிடித்திருந்தது. இஷ்டம் போல் காலம்போக்க முடிந்தது. போக்கினார். லட்சிய மற்ற வாழ்க்கைமுறை வறண்டதாய் அவரை தகிக்கவும், தனிமை அவரை வாட்டியது. உணர்ச்சித் தீ அவரைக் கருக்கியது. அதன் சுவாலை அவர் உள்ளத்தைத் தீய்த்துக் கொண்டிருந்தது. செயல் துணிவு இல்லாது. வெறும் எண்ணங்களைக் கொண்டே அந்தத் தகிப்பை அடக்க முயன்றார் அவர்.

அவருடைய அஞ்ஞாதவாசத்துக்கு வசதியான சூழ்நிலை என்று அவர் கருதிய நாகரீகப் பெருநகரம் அவியாத அவருடைய உணர்ச்சிக் கங்குகளை விசிறி நெருப்புப்பொறிகளை மேலெழத் தூண்டுவதற்கும் உரிய சூழலாக அமைந்துவிட்டது. இதை அவர் ஒவ்வொரு நாளும், ஒவ்வோர் கணமும் உணர்ந்தார். ரோட்டிலும் தியேட்டர்கள் முன்னும், பஸ் ஸ்டாப்பிலும், ஓட்டல் களிலும், அலுவலகங்களிலும், கடலோரத்திலும் - எங்கும் எப்போதும் இதையே உணர்ந்தார். ஒடுங்காத உணர்வும் உள்ளமும் சதா அரிப்பதை அவரால் தடுக்க முடியாமல் போய்விட்டது.

அவர் பார்வையில் எந்நேரமும் பட்டுக்கொண்டிருந்த உல்லாசிகளின் தோற்றங்கள் போக, அவருடன் பேசிப் பொழுதுபோக்கவரும் நண்பர்களின் சுவையான பேச்சுக் களும் அவருடைய உள்ளத்தில் சலனமும் உணர்வில் கிளர்ச்சியும் உண்டாக்கின. ஒரு சிலர் தங்களுடைய 'அட்வென்ச்சர்'களைப் பெரிதாக அளந்தார்கள். சிலர் மற்றவர்களுடைய போக்குகளையும் பண்புகளையும் வர்ணிப்பார்கள். எல்லாரும் ஆண் பெண் விவகாரங் களையும், முறைதவறிய உறவுகளையும் பற்றித்தான் ரசித்துப்பேசினார்கள். அப்படி ஈடுபாட்டுடன் வர்ணிப் பதற்குத் தமது பாதையில் ரசமான அனுபவங்கள் குறுக்கிட வில்லையே, தாம் வேட்டைமீது நாட்டமுற்று முயன்று வெற்றிபெற்றது இல்லையே என்ற வருத்தமும் ஏக்கமும் அவர் நெஞ்சை அரிக்கும்.

அவ்வாறு வாய்ப்பு வலியத்தேடி வந்திருந்தால்கூட அவர் மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பயன்பெற்றிருப்பாரோ என்றொரு சந்தேகம் அவருள் அலைமோதாமல் போக வில்லை. பண்பாடு, தர்மங்கள், ஒழுக்கமுறைகள், நல்வாழ்வு, நீதிநேர்மை என்றிருக்கிற, கண்ணுக்குப்

புலனாகாத தளைகளையும் வேலிகளையும் மதித்துப் போற்றி, தம் அன்றாட வாழ்வில் அனுஷ்டித்தும் பழகிப் போன அவருக்கு அவற்றை மீறிக்கொண்டோ தகர்த்தோ செயல்புரிவதற்குத் துணிச்சல் வராது, கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும் இது அவருக்கே நன்றாகப் பட்டிருந்தது.

ஒரு சந்தர்ப்பம் அவர் நெஞ்சை உறுத்தும் நினைவாய் அசைந்தது. ஓர் இரவு, பத்து மணிக்கு மேலிருக்கும். விநாயகமூர்த்தி அவருடைய அறையில் படித்துக் கொண்டிருந்தார். சுற்றுப்புறத்தில் இருட்டும் அமைதியும் கனத்துக்கிடந்தன. யாரோ கதவைத் தட்டும் மெல்லிய ஓசை எழுந்தது. அவர் நிதானித்தார். மீண்டும் 'டொக், டொக்' சத்தம் கேட்டது. அவர் எழுந்து கதவைத்திறந்தார். வெளியில் இரண்டு பெண்கள் நின்றார்கள். முதியவள் ஒருத்தி. அலங்காரங்கள் பளிச்சிடும் பகட்டுப்பாவையாக நின்ற இளையவள் ஒருத்தி. அவள்வெளிச்சத்தில் சிறிது நின்று தன்னை விளம்பரப்படுத்திய பிறகு, மற்றவளின் பின் ஒதுங்கி இருட்டில் மறைந்தாள். பெரியவள் சிரித்தாள். 'தனியாகத் தான் இருக்கீங்களா? தூக்கம் வரலியா?' என்றாள். இளையவள் களுக்குச் சிரிப்பு உதிர்த்தாள். அவளிடமிருந்து வாசனை அலைகள் பொங்கிக் கொண்டு வந்தன. 'துணை வேணுமா? பொம்பிளைத் துணை! இந்த சரோஜாவை சேர்த்துக் கொள்ளுங்களேன்' என்று ரகசியக்குரலில் சொன்னாள். 'இரவு ராணி தாக்குதல் இப்படியும் நடக்குதா?' என்றது அவருடைய அறிவு . 'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்லிவிட்டு உள் வாங்கினார் அவர். 'குட்டியைப் பாருங்க. ஜம்னு இருக்கிறா' என்று மூத்தவள் சொல்லவும், இளையவள் தன் கவர்ச்சி அம்சங்களை வெளிச்சமிட்டு எடுப்பாகக் காட்டி விளக்கொளியில் வந்து வசியப்போஸ் தந்து நின்றாள். 'சீ போ!' என்று சீறி விழுந்து விட்டு, கதவைச் சாத்தித் தாழிட்டார் அவர்.

பிறகு அவர் மனம் உளையத்தான் செய்தது. 'இந்த விருந்து எப்படி இருக்கும் என்று சுவைத்துப் பார்த்திருக் கலாமே. கெடுத்து விட்டேன்!' என்று வருத்தம்.

'சிறு வயசிலிருந்து நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்கிற பழக்க வழக்கங்களும் பண்புகளும் - அவை நல்லவையோ கெட்டவையோ - நம்மை இறுகப் பிணித்து விடுகின்றன; விலங்குகள் மாதிரி. நல்ல சுபாவங்களும் நற்பண்புகளும் பொன் விலங்குகளாக இருக்கலாம். பொன் கொண்டிழைத்து மணி கொண்டு புதைத்தவையாக இருந்தாலும், விலங்குகள் விலங்குகள் தானே? அவற்றைத் தகர்த்து எறியவும், உடைத்து விட்டு இஷ்டம்போல் செயல் புரியவும் எவ்வளவோ துணிச்சல் வேண்டும். மனத்துணிவும் செயலாற்றலும் தான். இவ்வளவு காலத்துக்குப் பிறகு அவற்றை நான் பெறுவேன் என்று எனக்குத் தோன்றவில்லை' என்று அவரே சிந்தித்துக் கொண்டார்.

நேரம் ஓடியிருந்தது. கடல் ஓரத்திலும் மணல் வெளி யிலும், ரஸ்தாவை ஒட்டிய நடை பாதையிலும் ஜன நடமாட்டம் அதிகரித்துவிட்டது. தனி மனிதர்களும், ஜோடி களும் 'பொம்மெனப் புகுந்து மொய்க்கும்' மனோகரமான வேளைதானே!

விநாயக மூர்த்தி கண்களுக்கு விருந்து அளிக்கும் எண்ணத்தோடு எழுந்து நடந்தார். பார்வை விருந்து அவர் மனப்பசியைக் கிளறிவிடத்தான்செய்யும்! அதை அவர் தடுத்துவிட முடியாதுதான்.

# 16. வாழ்க்கைப் போராட்டம்

குளிர் காற்று வெறித்தனமாய் சுழன்று கொண்டிருந்தது. அப்போது மழை இல்லை. எனினும் சற்று முன் வரை அழுது சிணுங்கியவாறிருந்த தூறல் மீண்டும் வரும் என்பதற்கு அறிகுறிகள் இருந்தன. அழுக்குப் போர்வைகளைக் கொண்டு மூடப்பட்டது போல் தோன்றிய வானத்தில், சூலுற்ற மேகங்கள் கனத்துத் தொங்கின.

மூன்று நாட்களாகவே மழை இப்படித் தான் தொல்லை கொடுத்து வந்தது. 'சனியன் ஒரே அடியாய் பெய்து தொலைத்தோம் என்றில்லையே. நசுநசுன்னு அழுகுணித் தூற்றலாக இருக்கு. இதனால் சனங்களுக்கு சீக்குதான் வரும். ரோடு, வீடு எல்லாம் ஒரே ஈரக்காடாயிட்டதே' என்று பலரும் முணுமுணுப்பது சகஜமாயிற்று.

நிரந்தரமான ஒரு சீக்காளி கிடையாய் கிடந்த அந்த வீட்டில் முணுமுணுப்பும் மனப்புழுக்கமும் அதிகரித்திருந்தன.

'சவம் இருந்தபாடாவுமில்லை, செத்துத் தொலைஞ்சோமின்னும் இல்லே. இப்படி விழுந்து கிடக்கிறதுனாலே

அவருக்கும் தொல்லை; இருக்கிறவங்களுக்கும் சிரமம்தான். யாராலே தினம் பாடு பார்க்க முடியுது?'' என்று வீட்டு அம்மாள் மீனாட்சி அடிக்கடி அலுத்துக் கொண்டாள்.

அவளைக் குற்றம் சொல்வதற்குமில்லை. அவள் அதிகாலை ஐந்து மணிமுதல் இரவு பத்து, பத்தரை வரை இயந்திரம்போல் உழைக்க வேண்டியிருந்தது. வீடு, குடும்பம் என்றால் எத்தனையோ வேலைகள். சிறுசும் பெரிசுமாக ஏகப்பட்ட அலுவல்கள். புருஷனுக்கு எங்கோ ஒரு கடையில் ஏதோ ஒரு வேலை. 'ஆனா அவெ கலெக்டர் உத்தியோகம் பார்க்க மாதிரித்தான். தோரணைகளுக்கும் அதட்டல் களுக்கும் குறைச்சல் கிடையாது. பிள்ளைகளோ அதுக்கு மேலே!' பொருளாதார நிலைமை படுமோசம். 'அரக்கப் பறக்கப் பாடுபட்டும் அரைவயிற்றுச் சோற்றுக்கு வழி யில்லை,' அவளுக்குப் பெரும்பாலான பொழுதுகளில் 'பருக்கையும் தண்ணியும்' தான் வயிற்றை நிரப்பும். பருக்கைகளைவிடத் தண்ணீரே அதிகம் இருக்கும் அநேக சமயங்களில்.

வறுமை வாழ்க்கை அந்தக்குடும்பத்தை வெகுவாகச் சோதித்தது. அவர்கள் மனசை, குணங்களைப் பெரிதும் பாதித்தது. இன்னும் அதிகமாகச் சோதிக்கவும் பாதிக்கவும் வந்து சேர்ந்தார் ஆண்டபெருமாள் பிள்ளை. மீனாட்சியின் மாமனார்.

'சாகதுக்கு இடம்தேடி இங்கே வந்தாராக்கும்! ஏன், இத்தனை நாள் இருந்தது மாதிரி மகள் வீட்டிலேயே இருக்கப்படாது? இல்ல. பெரிய மகன் வீட்டுக்குப் போனா என்னவாம்? கெதியாயிருக்கையிலே எல்லாம் அங்கே இடம் இருந்தது. சீக்கு வந்ததும், சின்னமகன் நெனைப்பு வந்துட்டதாக்கும்?'' என்று மீனாட்சி புலம்பினாள்.

'நம்ம வீட்டிலேயும் கொஞ்சநாள் இருந்துட்டுப் போகட்டுமே! இப்ப என்ன கெட்டுப் போச்சாம்?' என்று அவள் கணவன் சிதம்பர்ம சொல்லி வைத்தான். பிறகு, ஏன்டா சொன்னோம் என்றாகிவிட்டது அவனுக்கு.

வீட்டுக்காரி பிடிபிடி என்று பிடித்து விளாசி விட்டாள். பேச்சினால்தான்.

'உங்களுக்கு ஒரு மண்ணும் தெரியாது. கையிலே பசை இருக்கிற வரைக்கும் மகள் அப்பா அப்பான்னு கொஞ்சினா. இருக்கதையெல்லாம் கறந்தாச்சு, இனி பத்துறதுக்கு ஒண்ணு மில்லேன்னு தெரிஞ்சதும் ஆளையே வெளியே பத்திட்டா. சாப்பாடு போடது, வெந்நி தண்ணி அது இதுன்னு தேவை களைக் கவனிக்கிறது, இப்படி எவ்வளவோ செலவுகள் நம்ம தலைமேலே விழுந்திடுமேன்னு பயந்துட்டா அவ. அதும் போக இந்தக் கிழம் எந்தச் சமயம் வாயைப்பிளந்து வைக் குமோ யாருகண்டா? அப்புறம் சாவு செலவு நம்மைப் பொறுத்திடுமேன்னு பயம்வேற. அதனாலே மகளும் மருமகனும் நைஸா இவரை மகன் வீட்டுக்கு அனுப்பிவைச் சுட்டாங்க. பெரிய மகள் வீட்டிலே கிழத்துக்கு எப்படியாப் பட்ட வரவேற்பு இருக்கும் தெரியாதா? உங்க மதினி லேசுப் பட்டவளா? அவளும் பயந்துபோயி இவரை வெளியேத் திட்டா. போக்கத்தவங்க நாமதானே. கிழம் இங்கே வந்து பலமா டேராப் போட்டாச்சு. இனிமே மண்டையைப்போட வேண்டியதுதான் பாக்கி. நாம மட்டும் பணத்தை பொட் டணம் கட்டி வச்சிருக்கமா? நம்ம வீட்டிலே பொன்னும் பொருளும் மூலைக்கு மூலை குவிஞ்சுகிடக்கா? நம்மளுக்கே காணமாட்டேங்குது. இந்தக் கிழத்துக்கு பாலு, ஆரஞ்சிப் பழம், சவ்வரிசிக் கஞ்சி, பார்லிக்கஞ்சி, லொட்டு லொசுக் குன்னு வேளாவேளைக்கு மணி தவறாமல் பார்த்துப் பார்த்துக் கொடுக்க யாரோலே ஆகும்? எப்படிக் கட்டுபடியாகும்? கிழம் சீக்கிரமே செத்தாப் பரவால்லே.

இழுத்துக்கிட்டே, மூச்சைப் புடிச்சு வச்சுக்கிட்டே, இருந்து துன்னு சொன்னா நாம எத்தனை நாளைக்குக் கொட்டி அழமுடியும்?

பிறகு, செத்ததும் சாவு செலவுகளுக்கெல்லாம் நம்ம கிட்டே எங்கே இருக்கு? எழவு கேட்டு வாறேன். துக்கம் விசாரிக்க வாறோம்னு இருந்தான் குடியா எல்லாரும் வருவாங்க. யாருக்கு ஆவி இருக்கு? இல்லை, வாறவங்க போறவங்களுக்கெல்லாம் வெந்து தட்ட யார் கிட்டே ஐவேசு இருக்கு? இவருக்கென்ன, இவரு பெரிய கலெக்டர்துரை, உடம்பிலே புடியாமே சொல்லிட்டாரே, இருந்துட்டுப் போட்டுமே; இப்ப என்ன கெட்டுப்போச்சுன்னா... ஹே! எதையும் எட்டி யோசிக்க வேணாம்?...'

இந்த ரீதியில், ஓயாது அழுது எரிச்சலூட்டும் மழை மாதிரி மீனாட்சி புழுபுழுத்தாள்; புலம்பிக் கொண்டே யிருந்தாள்.

எரிச்சல் பொறுக்க மாட்டாது சிதம்பரம் வள்ளென விழுந்தான். 'இப்ப என்ன செய்யணும்கே? கிழத்தை வெளியே இழுத்துப் போடணும்கிறியா?' என்றான். 'நான் சொன்னா உடனே நீங்க செஞ்ருவீக! பெரிய மன்னபிலி தான். எங்க மன்னபுலியை, யேயம்மா, மாடு கண்டா விட்டிருமான் னாளாம் ஒருத்தி!' என்று கெண்டை பண்ணினாள் அவள்.

இவ்வாறு மொணமொணத்தும், குத்திப் பேசியும், பேச்சால் அரித்தும், அவள் அவன் மனசைக் கரைத்து விட்டாள்.

கிழவர் அந்த வீட்டுக்கு வந்து மூன்று நாட்களாகி விட்டன. அவர் வந்ததும் வெளியே பெய்யத் தொடங்கிய மழை விடாது ஆட்சி புரிந்தது. சாடி மோதும் ஒரு கணம். சோவெனப் பொழியும் சில நேரம். தொணதொணப்பனின்

பேச்சு போலச் சளசளக்கும் சிலமயம். விட்டு வழி வாங்குவது போல் வெறிக்கும். பிறகு சிறு தூறலாய் விரையும். கனக்கும். குறையும். அழும். சிணுங்கும். சீறும். காற்றுடன் குலவிக் கொட்ட மடிக்கும். சூரியனை முகம் காட்டவிடாது மேகப் பட்டம் விடும். குளிரைப் பரப்பும். இரவு பகலாய் அதன் லீலைதான் எங்கும்.

கிழத்துக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. சட்டை, கோட்டு எல்லாம் போட்டிருந்தார். எனினும் குளிர் உடலை நடுக்கியது. தரைமீது சாக்கு பரப்பி, அதன்மேலே கம்ப்ளி, சமுக்காளம் என்று விரிக்க வேண்டியதாயிற்று. போர்வையும் தேவைப்பட்டது.

அதனால் பிள்ளைகளுக்கும் மீனாட்சிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. புகைந்து கனன்று கொண்டிருந்த மீனாட்சி யின் உள்ளம் பற்றி எரியலாயிற்று.

'சாகப்போகிற கிழத்துக்கு இத்தனை சுகம் என்னத்துக்கு? இதைப் பேணி பாதுகாக்க நானும் என் புள்ளைகளும் என்ன பாடெல்லாம பட வேண்டியிருக்கு? சாகிற சனியன் சீக்கிரம் செத்துத் தொலைச்சா என்ன?' என்று அவள் குமைந்தாள். கொதித்தாள். வெடித்தாள்.

அப்பாவியான அவள் புருஷன் 'பெண்டாட்டியாத்தா பெரியாத்தா, பிழைக்க வழி நீ சொல்லத்தா!' என்று கும் பிட்டுப் பணிவிடை செய்யச் சித்தமாகி விட்டான். அவனுக்கு அவன் சுக சௌகரியங்கள் குறையக் கூடாது. மீனாட்சியை பகைத்துக் கொண்டால் எதுவும் நடக்காது என்பது அவன் அனுபவபூர்வமாகப் பெற்றிருந்த ஞானமாகும்.

தந்தை ஆண்டபெருமாளிடம் அவனுக்கு ஒட்டுதலோ, பிரியமோ எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. அவரும் மகன் களிடம் காட்டிய பாசத்தைவிட அதிகமான அன்பை மகளிடம்தான் வைத்திருந்தார். அவருடைய மனைவி

இறந்துவிட்ட பின்னர், கொஞ்ச நஞ்சமிருந்த சொத்தையும் பணத்தையும் ஊதாரித்தனமாக கரைத்துவிட்டு, ஓடியாடி ஒடுங்கிக் கிடக்க நேரிட்டதும் மகள் வீடே சௌகரியமான இடம் என்று தேர்ந்து கொண்டார். எப்படியோ கிடைத்து வந்த சிறுபணத்தை அவ்வப்போது மகளுக்கே கொடுத்து வந்தார். எப்பவாவது பெரிய மகன் வீட்டுக்குப் போவதும், சில நாட்களில் அங்கே பிடிக்கவில்லை என்று வெளியேறிச் சிதம்பரம் வீடு தேடி வருவதும், இங்கே போதுமான வசதிகள் இல்லை என்று மறுபடியும் மகள் வீடு சேர்வதும் அவரது வாழ்க்கை நியதி ஆகியிருந்தது. இந்தத் தடவையும் அவர் அப்படித்தான் வந்திருந்தார். ஆனால் உடல் நிலை மிகவும் மோசமாகியிருந்தது. கால ஓட்டத்தில் மிகுதியும் பொக் காகிப் போன உடம்பு. வரவர சத்தான உணவுப் பொருள்கள் அவருக்குக் கிடைக்க வழி இல்லாது போய்விட்டது. அவரிடம் சொத்தும் ரொக்கமும் இருந்திருக்குமானால், அவற்றின் மீது கருத்து வைத்து, மகன்களும் மகளும் அவரை உபசரிப்பதில் சிரத்தை காட்டியிருப்பார்கள். அவர் வெறும் நபராகி விட்டபடியால், 'கிழம் சாகமாட்டாம அலையுது! இதுக்கு ஆர்லிக்சும் டானிக்கும் வாங்கி அழ யாருகிட்டேப் பணம் இருக்கு?' என்று அலட்சியமாக மதித்தார்கள் அவர்கள்.

அனைவரிலும் வெறுப்பை மிக அதிகமாகக் கொட்டியவள் மீனாட்சிதான்.

ஆண்டபெருமாள் பிள்ளை அவள் வீடு தேடி வந்ததும் தொடர் மழையும கூட வந்துசேர்ந்தது அவளது ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. 'இந்த ஆக்கங்கெட்ட கிழடுதான் இப்படி மழையையும் கூட்டிக்கிட்டு வந்திருக்கு' என்று குற்றம் சாட்டவும் அவள் தயங்கவில்லை. அவளது எரிச்சலையும் கசப்பையும் தூண்டி விடும் விதத்தில் பெரியபிள்ளையைக் கடுமையான நோய் பற்றிக் கொண்டது.

பலவீனத்திலும் அதிகமான குளிரினாலும் நோஞ்ச உடம்பில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு விட்டது. வாய் கோணி, முகத்தின் ஒரு பகுதி விகாரமாக இழுப்புண்டது; நாக்கும் பேச முடியாதபடி பாதிக்கப்பட்டிருந்தது. சிதம்பரத்துக்குப் பழக்கமான 'நாட்டு வைத்தியர்' ஒருவர் வந்து பார்த்தார். 'இது ஒருவிதப் பக்கவாத நோய். குணமாகிறது கஷ்டம் தான். அவருக்கு வயசும் ஆச்சு; தேகத்திலும் பலம் இல்லை. எதுக்கும் இந்த மருந்தைக் கொடுத்துப் பார்ப்போம். தொடர்ந்து ரொம்ப நாள் சாப்பிட வேண்டியிருக்கும்' என்று சொன்னார். ஏதோ மருந்தைக் கொடுத்தார். ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு போனார். அப்புறம் அவர் வரவில்லை. சிதம்பரம் அவரை அழைக்கவுமில்லை. அழைத்து வர வேண்டாம் என்று அன்னமிடும் மணிக்கரம் ஆணை காட்டி விட்டது.

மீனாட்சி தீவிரமான திட்டம். அதை செயல் புரியவும் துணிந்தாள். சிதம்பரம் அவளுக்கு உதவ வேண்டியது அவசியமாயிற்று.

இரவு பத்து மணி இருக்கும். பிள்ளைகள் படுத்துத் தூங்கி விட்டன. வெளியே குளிர் காற்று ஊளையிட்டுச் சுழன்று கொண்டிருந்தது. மாலையில் சற்று ஓய்ந்திருந்த தூறல் முன்னிரவிலிருந்து சிணுங்க ஆரம்பித்து விட்டது.

மீனாட்சியும் சிதம்பரமும் சேர்ந்து கிழவரைத் தூக்கி வெளித் திண்ணையில் கொண்டு வந்து படுக்க வைத்து விட்டார்கள். தரையில் சாக்கு விரித்து, ஒரே ஒரு படுக்கை விரிப்பை அவர்மீது பரப்பி வைத்தார்கள். அவரது விழிகள் பரிதாபமாகமாய், குறைகூறுவது போலவும் கெஞ்சிகேட்பது போலவும், மகனையும் மருமகளையும்மாறி மாறிப் பார்த்தன. அந்தப் பார்வை மீனாட்சியின் உள்ளத்தைத் தொடவில்லை. அவளது கடுமையான பார்வை சிதம்பரத்தின் மனசை ஒடுக்கிவிட்டது.

திண்ணை சற்று அகலமானது. பாதுகாப்பாகக் கம்பி அழி இடப்பட்டிருந்தது. என்றாலும் காற்றுக்குப் பாதுகாப்பானது அல்ல. மழை வலுவாய் பெய்தால் உள்ளே சாரலடிக்கும்.

அதை எல்லாம் பற்றி மீனாட்சி கலைப்படவில்லை. கிழவரை சுவர் ஓரமாகக் கிடத்திவிட்டு இருவரும் உள்ளே போய் கதவைத் தாளிட்டுக் கொண்டார்கள். 'கிழடுக்கு நல்ல மனசு இல்லை. வாய்தான விளங்காமல் போயிட்டுதே தவிர, கண்ணும் காதும் கூர்மையாகத்தான் இருக்கு. தன்னாலே நல்லபடியா உண்ணத் தின்ன முடியலியே, மத்தவங்க எல்லாரு இஷ்டம்போல் தின்கறாங்களேன்னு ஏக்கமும் வயித் தெரிச்சலும் அதுக்கு இருக்கு. அது பார்க்கிற பார்வை யிலேயே அது மனசுதான் தெரியுதே. அப்புறம் யாரு என்ன பேசுறா, ஏது சொல்லுறான்னு சதா காது கொடுத்துக் கேட்டுக் கிட்டே இருக்கு. வயிறு எரிஞ்சு கெடு நினைப்பு நினைக்கும். அது நம்ம குடும்பத்துக்கு ஆகாது. கிழடு திண்ணையிலேயே படுத்துக் கிடக்கட்டும். அது நல்ல இடம். வசதியாகத் தானிருக்கு' என்று அவள் உறுதியாக அறிவித்தாள்.

'அது சரிதான்' என்றான் சிதம்பரம். அவர்கள் நிம்மதி யாக உறங்கத் தொடங்கினார்கள்.

பாம்பு மாதிரிச் சீறி நெளிந்து கொண்டிருந்த வாடைக் காற்று வலுத்தது. குடிகாரனைப் போல் வெறித்தனமாய் இரைச்சலிட்டுச் சுற்றிச் சுழன்றது. எங்கும் மோதியது. திறந்த இடங்களில் புகுந்து சாடியது. கனமேற்று விட்ட பெருந் தூறலைக் கண்டபடி அலைக்கழித்தது.

குளிர்காற்றும் மழை நீரும் கிழவர் கிடந்த திண்ணையில் புகுந்து உற்சாகமாக விளையாடின.

கிழவர் மீது தண்ணீர் படவில்லை. எனினும் குளிர் அவரை உலுக்கி எடுத்தது. மழையும் காற்றும் இன்னும்

பேய்த்தனம் பெற்றுத் தன்னை வெகுவாகத் தாக்கி விடக்கூடும் என்ற அச்சம் அவரைப் பிடித்தாட்டியது. அந்தச் சூழ்நிலையில், கன்னக் கனிந்த இருளில், தனித்து விடப் பட்டதனால் அவருள் இனம் புரிய முடியாத ஒரு கலவரமும் பயமும் புகுந்து கொண்டன. அத்துடன் செத்துப் போவோமோ எனும் அச்சமும் சேர்ந்து பிறாண்டியது.

ஆண்டபெருமாள் தவியாய் தவித்தார். கத்த வேண்டும் என்ற உணர்வு அவரை உந்தியது. ஆனால் கத்துவதற்கு நாவும் வாயும் வழி செய்யவில்லை. தனது இயலாமையை எண்ணி, தனக்கு நேர்ந்துவிட்ட இந்த நிலையை எண்ணி கண்ணீர் வடித்தார்.

மழையும் காற்றும் வெறிக் கூத்து ஆடிக் கொண் டிருந்தன. நெடுகிலும் மின்னல் இடைக் கிடை பளிச் பளிச் சென ஒளிநாட்டியம் ஆடியது.

செயலற்று மிரண்டு குழம்பும் மிருகம் போலானார் அவர். எப்படியாவது எழுந்து நடந்து கதவருகில் சென்று கதவைத் தட்ட வேண்டும்; உள்ளே இருப்பவர்கள் திறக்கிற வரையில் தட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்று உள்ளுணர்ச்சி அவரை இயக்கியது.

முயன்று போராடி எழுந்தார். நிற்க முடியவில்லை. தள்ளாடியது. சுவரைப் பிடித்துக் கொண்டு சமாளித்தார். பலவீன நிலையில் நடக்க இயலவில்லை. தலை கிறு கிறுத்தது. மேலே போர்த்தியிருந்த துணி கால்களைச் சுற்றி விழுந்து தடங்கல் ஏற்படுத்தியது. மீறி நடக்க முயல்கையில், சாக்கு மடிப்புண்டு இடறி விட்டது. நிலைதவறி அவர் கீழே விழுந்தார். தலை கதவுமேல் மோதியது. கதவின் மீது அலங்காரத்துக்காக அமைக்கப்பட்டிருந்த இரும்புக் குமிழ் களில் ஒன்று சரியானபடி விசாரித்தது. அவ்வளவுதான். அப்புறம் அவருக்கு எவ்வித உணர்வுமில்லை.

விடிவதற்குமுன்னரே தெளித்துக் கோலம் போடுவதற்காகக் கதவைத் திறந்த மீனாட்சி பதறினாள். விளக்கை எடுத்துவந்து பார்த்ததும், கிழவர் கட்டையாயக் கிடந்த நிலை தெளிவாயிற்று. அவள் செயலிழந்து நின்று விடவில்லை. அவசரம் அவசரமாகக் கணவனை எழுப்பினாள்.

இரண்டு பேரும் சேர்ந்து, சவமாகி விட்ட கிழவை உள்ளே கொண்டு போய் நல்ல இடத்தில் படுக்கவைத்தார்கள். உடையைச் சீர்செய்து, உடலைப் போர்வை கொண்டு மூடினார்கள். பக்கத்தில் குத்து விளக்கை ஏற்றி வைத்தாள் மீனாட்சி.

'முதல்லே உங்க அண்ணன் கிட்டேப் போய் விஷயத்தைச் சொல்லுங்க. கையோடு பணமும் எடுத்து வரும்படி சொல்ல மறந்திடாதீங்க. அடுத்தாப்லே தங்கச்சிக்காரி வீட்டுக்குப் போய் சொல்லுங்க. நம்ம கையிலே தம்பிடிக் காசு கிடையாதுன்னும் பேச்சோடு பேச்சா, அவ காதிலே போட்டு வையுங்க' என்று உபதேசித்தாள் அந்தக் குடும்ப விளக்கு.

சிதம்பரமும் தலையை ஆட்டிவிட்டு விடுவிடென்று வெளியே நடந்தான்.

அப்போது சிறு தூறல் கூட இல்லை. காற்றும் அமர்ந்து விட்டது. சூரியன் அன்று தன் முகத்தைக் காட்டக் கூடும் என்பதற்கு அறிகுறியாய் கீழ்வானம் சிவப்பேறித் தோன்றியது.

# 17. மனம் செய்யும் வேலை

பாக்கியம் பிள்ளை திய தர வர்க்கத்தைச் சேர்ந்த சராசரி மனிதர்கள் எல்லோரையும் போன்ற ஒரு சாதாரண நபர் தான். ஆகவே அந்த வர்க்கத்தில் பெரும்பாலானவர்கள் பெற்றுள்ள, வளர்த்து வருகிற, ஆசைகள், கனவுகள், எண்ணங்கள், ஏக்கங்கள் வகையராவை உள்ளத்துள் மண்ட வைத்துக் குமைந்து கொண்டிருக்கும் பேர்வழியாகத் தான் அவரும் காலத்தை ஓட்ட நேர்ந்தது.

வாழ்க்கையின் உயர்வுக்கும் சுக சௌகரியங்களுக்கும் உண்மையாக உழைத்து உருப்படியாகப் பணம் தேடிச் சரிக் கட்ட முடியாது என உணர்ந்து, 'திடீர் வரவு' ஆக எங்கிருந் தாவது எப்படியாவது 'லம்ப் ஆக'ப் பணம் வந்து சேரும், நாம் ஜோராக வாழ்க்கையை அனுபவிக்கலாம் என்று ஆசைப் படுவதும் எதிர் பார்ப்பதும் மத்திய தர வர்க்கத்துச் சராசரி மனிதர்களின் குணாதிசயங்களில் ஒன்று ஆகும். இதற்கு மந்திரம்போல் நம்பிக்கை ஊட்டுகிற பல விஷயங்கள் உண்டு. கல்யாணம் மூலம் கிடைக்கக் கூடிய பெண்டாட்டி வீட்டுச் சொத்து, குடும்பத்தில் - தூரத்து உறவில் - 'கொள்ளி முடிந்து போகிறவள்' சேர்த்து வைத்து 'இந்தாப்பா!' என்று தரக்கூடிய

சொத்து, லாட்டரிப் பரிசு, குதிரைப் பந்தய அதிர்ஷ்டம் என்று பலப்பல.

வாழ்க்கைப் பாதையில் முக்கி முரண்டியடித்துத் திண்டாடித் திணறிக் கொண்டிருந்த பாக்கியம் பிள்ளை, வாழ்வெனும் பந்தயத்தில் வெற்றிகள் பெற்று ஜாம் ஜாம் என்று அனுபவித்துச் சுகமாகக் காலம் தள்ள வேண்டும் என்ற ஆசையோடு, அவ்வப்போது நம்பிக்கை வைத்த 'லாட்டரி' களும், 'பந்தயக் குதிரை'களும் பலவாகும். விளைவுகள்? தெரிந்த விஷயம் தானே!

சுலபமாகப் பணம பண்ணுவதற்கு ஏற்பட்ட சுருக்கு வழிகளில் ஒன்று என 'மாப்பிள்ளை வீட்டுக்காரர்'களினாலும் கல்யாணப் பிள்ளையினாலும் கருதப்படுகிற கல்யாணம் என்கிற லாட்டரி பாக்கியம் பிள்ளைக்குத் தேடிக் கொடுத்த மனைவி எனும் 'அதிர்ஷ்டப் பரிசு', அவருக்கு செலவுக்கு வழி வைக்கும் தொல்லையாகவும் சுமையாகவும் தான் அமைந்ததே தவிர, 'வலது காலை முன்னே வைத்து' வரும் போதே அள்ளிக் கொண்டு வரும் சீதேவியாகவும், அப்புறம் அடிக்கடி அம்மாவீட்டிலிருந்து அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு வரும் ஆற்றல் படைத்த திருமகளாகவும் விளங்க வில்லை.

திட்டமான மாத வருவாய்க்கும், அதைவிட அதிகமான 'மேல் வரும்படி'க்கும் வகை செய்யக் கூடிய உத்தியோகம் ஏதாவது அவசியம் தேவை என்று நம்புகிற மத்தியதர வர்க்கத்தின் சரியான பிரதிநிதியான பிள்ளை, அதற்குத் துணைபுரியக்கூடிய படிப்பிலும் பரீட்சையிலும் நம்பிக்கை வைத்தது என்னவோ உண்மை. ஆனால், பரீட்சைகளில் தேறுவதற்கே அவர் 'லாட்டரி அடிக்க' வேண்டியிருந்ததே! அவர் எங்கே பெரும் படிப்புப் படித்து, பட்டங்கள் பெற்று, சம்பளமும் கிம்பளமும் கிடைக்கக் கூடிய நல்ல உத்தி

யோகத்தை அடைவது? படிப்பு எனும் ரேஸ் குதிரை அவரைக் கீழே தள்ளிவிட்டது.

அத்தியாவசியச் செலவுகளையும் குடும்பத் தேவை களையும் சரிக்கட்டுவதற்காக அவர் என்னென்னவோ பண்ண வேண்டியிருந்தது. சிலரது விவகாரங்களையும் விவசாயத் தையும் 'மேல் பார்த்தல்' (மேனேஜ் பண்ணுவது). கல்யாணத் தரகு, நிலவிற்பனை புரோக்கர் தொழில் முதலிய பலரகக் கமிஷன் வேலைகள் - இப்படி எத்தனையோ இழுத்துப் போட்டுக் கொண்டு ஓடி ஆடி உழைத்தார் அவர். அவரே அடிக்கடி சொல்லிக் கொண்டது போல, 'ஆனையைத் தூக்கிப் பானையிலே போட்டு, பானையைத் தூக்கி அடுப்பிலே போட்டு, ஊரை அடிச்சு உலையிலே கொட்டி, என்னென்னவோ திருகுதாமெல்லாம் பண்ணி' ஒரு தினுசாகக் காலம் கழித்து வந்தார்.

இப்படி எவ்வளவு காலம் வாழ முடியும்? வயசும் ஆகிவிட்டது. முதுமைப் பருவத்திலாவது கொஞ்சம் 'விட் டாத்தியாக இருக்க வேண்டாமா?' கவலையற்று, ஹாயாகக் காலம் கழிப்பதற்கு இப்போதும் பிள்ளை ஒரு 'பந்தயக் குதிரை'யைத் தான் நம்பினார். அது அவருடைய புத்திர பாக்கியம் செல்லையாதான்.

'செல்லையா நல்லாப் படிச்சு, பரீட்சை எல்லாம் பாஸ் பண்ணி, மேல் படிப்புப் படித்து, பெரிய உத்தியோகத்துக்குப் போகணும். என்ஜினீரு, டாக்டரு - இப்படி என்னென்னவோ சொல்றாங்க. ஒவ்வொருத்தன் ரெண்டு கையாலேயும் அத்துப் புடுங்கிக் கிட்டு வாறான். மோட்டாரு சைக்கிளுங் கிறான், காரு இங்கிறான். வீடு இங்கிறான், பாங்கிலே பணம்கிறான்... ஆங்! நம்ம செல்லையாவும் ஏன் அப்படி வராப்படாதுங்கேன்? அது மாதிரி உசந்தாச்சுதுன்னு சொன்னா, பொண்ணு வீட்டுக்காரனுக விழுந்தடிச்சு வரமாட்

டானுகளா என்ன? எட்டாயிரத்துக்கு நகை போடுதேன், பத்தாயிரத்துக்கு நகை போடுதேன், மாப்பிள்ளை வரிசை ஐயாயிரம் தாறேன், ஆறாயிரம் தாறேன்னு போட்டி போடுவாங்களா சும்மாவா? ஹாங்? அப்புறம் வெள்ளியும் எவர்சில்வருமா சீர்வரிசை, டெரிலினும் டெரீகாட்டுமாக டிரசுகளின்னு கொண்டாந்து குவிக்கத் தயாராக யிருப்பாங்க.. டேய் செல்லையா, ஒரு கை பார்த்துடணும் தெம்பாக இரு!' என்று பாக்கியம் பிள்ளை தன் மனைவியிடமும் மகனிடமும் சொல்வது வழக்கம்.

இவ்வளவுக்கும் பையன் எஸ்.எஸ்.எல்.சி. தான் படித்துக் கொண்டிருந்தான். பரீட்சை எழுதி விட்டான். முடிவு தெரிய வேண்டும்.

முடிவை, அவனைவிட அதிகமான ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தார் பெரியவர். பையனை கல்லூரி யில் சேர்க்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். எல்லோரிடமும் பேசினார்.

அவனுக்கு ஒரு இடம் பிடித்துக் கொடுக்கும்படி பலரிடம் சொல்லியிருந்தார். எப்படியும் இடம் கிடைத்து விடும். காலேஜில் படிப்பது என்றால் பணம் செலவாகத்தான் செய்யும். அதைப் பார்த்தால் காரியம் நடக்குமா? - இந்தவிதமாக அவர் எண்ணக் கோட்டைகள் கட்டி வந்தார்.

'பாஸாகி விடுவோம்' என்று தான் எண்ணினான் பையன், சில சமயம் 'பெயிலானாலும் ஆகி விடுமோ?' என்ற சந்தேகமும் பயமும் அவனைக் குழப்பின. செல்லையா படிப்பிலே மக்கு அல்ல. ரொம்ப 'பிரைட்'டும் இல்லை. அதனால்தான் இந்தச் சஞ்சலம்.

அவனுடைய 'இரண்டுங்கெட்டான்' நிலையைத் தீர்த்து வைக்கக் கூடிய ரிசல்டும் வந்து சேர்ந்தது. பத்திரிகையில்

வந்திருந்த முடிவை பாக்கியம் பிள்ளை அலசி, அரித்து அவனது நம்பரை வலைபோட்டுத் தேடிக் கொண்டிருந்த போது பையன் வீட்டில் இல்லை. பத்திரிகையில் அவன் நம்பரும் இல்லை.

தந்தை மீண்டும் மீண்டும் கண்களை மேயவிட்டார். அடுக்கு அடுக்காக எண்கள் முட்டி நெருக்கி அடைத்துக் கிடந்த பத்திகளில் அவர் தேடிய அந்த எண் இல்லவே இல்லை.

பையன் 'ஒப்பேறவில்லை' என்று நம்புவதற்கே கஷ்டமாக இருந்தது அவருக்கு. நம்பாமல் இருக்கவும் முடியாதே. பையன் தேறிவிடுவன் என்ற நம்பிக்கையை அஸ்திவாரமாக்கி அவர் மனம் கட்டி வந்த ஆசைக் கனவுக் கோட்டைகள் எல்லாம் திடுமெனச் சாய்ந்தும் மளமளவெனச் சரிந்தும் மண்ணாகி விட்டது போன்ற உணர்வு அவருள் கப்பியது. 'சனியன் புடிச்ச பய! கெடுத்துப் போட்டானே! என்று கொதித்தது அவர் உள்ளம்.

'பய எங்கேயாவது பார்த்துக் தெரிஞ்சுக் கிட்டிருப்பான். அதுதான் பம்மிட்டான். சவத்துப்பய இப்ப மட்டும் என் முன்னாலே இருந்தா, எனக்கு வர்ற வரத்துலே, அவனைப் புடம் போட்டிருவேனா சும்மவா? பின்னே என்ன? எவ்வளவு பாடுபட்டு, பணத்தைக் கொட்டி, படிக்க வச்சேன். நல்லாப் படிச்சு பாஸ் பண்றதை விட உனக்கு வேற என்னலே வேலை? படிக்கேன் படிக்கேன்னு தினம் புத்தகத்தைப் பிரிச்சு வச்சுக் கிட்டு நீ என்ன தான் செஞ்சியோ; கண்ணை முழிச்சுக்கிட்டே தூங்கியிருப்பான் போலே. இல்லை, சொப்பனம் தினுசு தினுசாக் கண்டுக்கிட்டு இருந்தானோ! எல்லாத்தையும் கெடுத்துப் போட்டானே!'

பாக்கியம் பிள்ளைக்கு உள்ளத்தில் பற்றி எரிந்தது. பையன் வந்ததும் அவனை வாயாற ஏசி, முதுகில் இரண்டு

பூசைக்காப்பு கொடுத்தால் தான் அவருடைய ஆத்திரம் கொஞ்சம் தணியும். இதைத் தெரிந்து கொண்டு தானோ என்னவோ பையன் வீட்டுப் பக்கம் தலைகாட்டவில்லை.

'எங்கே போயிருப்பான்? சாப்பிடக்கூட வரலியே? சாப்பிடாமல் பட்டினி கிடந்து, பாவம்...' என்று அம்மாக்காரி முணுமுணுத்துக் கொண்டிருந்தது தந்தையின் எரிச்சலை அதிகப்படுத்தியது.

'கழுதை எங்கே சுத்தினாலும் தீவனத்துக்கு வந்து சேந்திரும் கவலைப்படாதே. தினம் நாலு வேளை தின்னு தின்னு உடலை வளர்த்ததுதான் மிச்சம்' என்று கனன்று பொறிந்தார் அவர்.

நேரம் ஓடியது. பையன் வரவில்லை.

'எந்தப் பொந்திலாவது பதுங்கிக் கிடப்பான். ராத்திரி நேரத்துக்கு வந்து சேருவான்' என்று தந்தை கருதினார். தாயின்மனம் தான் 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது. இனம் புரியாத ஒரு கலவரம் - ஒருவித பயம் - அவளைக் குழப்பியது. வாய்விட்டுப் புலம்பவும் துணிச்சல் இல்லை. அவர் 'சள்ளொள் என்று எரிந்து விழுவாரே' எனும் அச்சம். அவளைப் பொறுத்தவரை நேரம் கனத்துத் தொங்கியது.

அவள் பயந்தது சரியாகத்தான் போச்சு! மணி மூன்று மூன்றரை இருக்கும். அந்தச் செய்தி கிடைத்தது. யார் கொண்டு வந்தால் என்ன? மகா மோசமான செய்தி. மிகுந்த துக்கரமானது.

அந்த ஊருக்கு இரண்டு மைல் தள்ளித்தான் ரயில் நிலையம் இருக்கிறது. ஆயினும் இருப்புப் பாதை வளைந்து ஊரை நெருங்கிச் செல்கிற இடம் ஒன்று வடக்கே இருந்தது. அதுகூட ஒரு மைல் தூரத்துக்கு அப்பால்தான். வடக்கே 'உச்சம் பரம்பு' எனும் பெயர் பெற்ற வறண்ட பகுதி. செம்

மண்ணும் சரளைக் கற்களும் சிறுசிறு பாறைகளும் காய்ந்த புல்லும் நிறைந்த அந்தப் பிராந்தியத்தை அடுத்து ஒரு காடு. ஊர் மாடுகள் அங்கேதான் மேயப் போகும். காட்டுக்கும் பரம்புக்கும் எல்லைக்கோடு போல் நீண்டு கிடந்தது தண்டவாளம்.

அத் தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்து, ஓடிய வண்டித் தொடருக்கு தன் உயிரை அர்ப்பணித்து விட்டான் செல்லையா. எப்படித்தான் மனம் வந்ததோ? ஏன்தான் அவன் புத்தி இப்படி வேலை செய்ததோ? பரீட்சையில் தோற்று விட்டால் என்ன? வாழ்க்கை அஸ்தமித்துப் போச்சு என்றா கொள்ள வேண்டும்? ஆசைகள் பொய்த்துப் போனதால் அப்பா அடிப்பார். தினம் தினம் ஏசிக் கொண்டிருப்பார். மானத்தை வாங்குவார், நாலு பேர் மத்தியிலும் 'நாக்கிலே நரம்பில்லாமல் பேசுவார்' என்றெல்லாம் அவன் குழம்பியிருக்க வேண்டும். என்ன செய்வது என்று புரியாத ஒரு குழப்பத்தில், அவன் இந்த முடிவைத் தேர்ந்திருக்கலாம். தன்னம்பிக்கை இல்லாத அப்பாவி, பாவம், தன் கதையை முடித்துக் கொண்டான்.

இந்தச் செய்தியையும் நம்புவதற்குக் கஷ்டப்பட்டார் பெரிய பிள்ளை. நம்பியே தீர வேண்டியிருந்தது. 'ஏன் இப்படிச் செய்தான்? பைத்தியக்காரப் பிள்ளை இப்படியா பண்ணும்? சே!' என்று முனகினார். இந்த அதிர்ச்சி அவரை வெகுவாகப் பாதித்தது. துக்கம், வேதனை ஏமாற்றம் எல்லாம் அவருள் குழம்பிப் புரண்டு அவரைப் பித்துப் பிடித்தவர் போல் ஆக்கின. அன்று மட்டுமல்ல; பல நாள் வரையிலும்.

வாழ்வின் கடைசிக் காலத்திலாவது சுகசௌகரியங் களைப் பெறுவதற்குத் துணைபுரியக் கூடும் என்று பாக்கியம் பிள்ளை நம்பிக்கை வைத்திருந்த 'பந்தயக்குதிரை' அவர்

எதிர்பார்த்தபடி வெற்றி பெறாதது அவருக்கு ஏமாற்றம் அளித்தது.எனினும் அந்த ஏமாற்றம் அவருள் மூட்டிய ஆத்திரத்தையும் வெம்மையையும் வெறுப்பையும் அவிந்து அடங்கும்படி செய்துவிட்டது அந்தப் 'பந்தயக் குதிரை'யின் அழிவு. இது அவர் உள்ளத்தை வெகுவாகப் பாதித்தது. பிள்ளை தமது முந்திய கோபத்தையும் கொதிப்பையும் மறந்துவிட்டே பேசினார்.

'அநியாயமா இப்படிப் பண்ணிப் போட்டானே! பரீட்சையிலே பெயிலாகிறது சகஜம். அதுக்காக உயிரையே அழிச்சுக்கிடணுமா என்ன? இன்னுமொரு வருசம் நல்லாப் படிக்கிறது. அட, உனக்கு படிப்பிலே ஈடுபாடு இல்லை. உன் மூளையிலே படிப்பு ஏறலேயின்னே வச்சுக்கிடுவோம், விட்டுடு. ஏதாவது ஒரு வேலை கிடைக்காமலா போயிரும்? நம்ம புஸ்தகக் கடைப்பிள்ளைவாள் கிட்டேச் சொன்னா ஒரு வேலை போட்டுக் கொடாமலா இருப்பாக? வீணா இப்படிச் செஞ்சிட்டியேடா பாவி!' என்ற அங்கலாய்த்தார் தந்தை. வந்தவர் போனவர் எதிர்ப்பட்டவரிடமெல்லாம் இவ்வாறு சொல்லிப் புலம்புவது அவர் வழக்கமாகி விட்டது.

இந்தக் கதை இங்கேயே முடிந்து விடவேண்டியதுதான். ஆனால் பாக்கியம் பிள்ளையின் மனப்போக்கின் ஒரு கோணப் பார்வையாக மட்டுமே இக்கதை பிறக்கவில்லை. மனித மனம் விசித்திரமானது; தானே தன்னுடைய மனதை அறிந்து கொண்டிருப்பதைவிட அவனுடைய மனதை மற்றவர்கள் அதிகம் அறிந்துவிட்டதாக நம்புகிறார்கள்; ஆகவே அவன் 'மனசார' ஒன்று சொன்னால்கூட, மற்றவர்கள் அதை அவ்வாறே ஏற்றுக் கொள்ளாது தத்தமது மனம் போன போக்கெல்லாம் விளக்கமும் விரிவுரையும் பொருள் பேதமும் பாடபேதமும் தருவதில் உற்சாகம் காண்கிறார்கள். இதைக் கூறுவதற்காக இக்கதை வேறு சிலரது மனதை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது?

பாக்கியம் பிள்ளையின் புதிய தொண தொணப்பை ஓயாது கேட்டுச் சகித்துக் கொள்ள வேண்டியதை தவிர்க்க இயலாக கடமையாகப் பெற்றுவிட்ட அவருடைய மனைவி மீனம்மாளின் மனம் தனக்குத் தானாகவே சித்திரித்துக் கொண்ட விஷயம் ரசமானது. அவள் நினைத்தாள்.

செல்லையா வீடு திரும்புகிறான். 'டேலே, பேப்பரைப் பாத்தியா? உன் நெம்பர் வந்திருக்காடா?' என்று எக்காளமாகக் கேட்கிறார் தந்தை.

'என் நம்பர் அதுலே இல்லே' என்று முணுமுணுக்கிறான் பையன்.

'நீ ஒழுங்காப் படிச்சு, பரீட்சை நல்லா எழுதி, பாஸ் பண்ணியிருந்தால் தானே நம்பர் வரும்?' என்று கனன்ற பெரியவர் சீறிப் பாய்கிறார். 'ஏலே, நீயெல்லாம் எங்கேலே உருப்படப் போறே? புஸ்தகத்தைக் கையிலே பிடிச்சுக்கிட்டு, சாப்பாட்டை நெனைச்சுக்கிட்டே இருப்பே. மூக்கு முட்ட ஒரு இழுப்பு. வேளாவேளைக்கு ஒரு வெட்டு. படிக்கிற புள்ளைக்கு வயிறு முட்டச் சோறு போடப்படாது. அது அந்த முண்டத்துக்கு எங்கே தெரியுது? திணி திணியின்னு சோத்தைத் திணிக்கிறா, நீ குதிரு மாதிரி வளர்ந்துட்டே. தலையைச் சீவிட்டு, நெல்லுக் கொட்டி வைக்க உபயோகப்படுத்தினாலும், ரெண்டு கோட்டை நெல்லு நிரப்பலாம். அப்படி உடலு பெருத்திருக்கு. என்ன பிரயோசனம்?' என்று ஏசுகிறார். அவன் பக்கமாகக் காறித் துப்புகிறார்.

ராத்திரி பூராவும், மறுநாளும் தினம் தினம் ஏசிக் கொண்டேயிருக்கிறார். தாய் தவறாது சாப்பாடு கொடுப்பதற்காக அவளையும் திட்டுகிறார். 'தெண்டத்துக்கு பணம் செலவு பண்ணி, உன்னை ரெண்டாம் வருசமும் அதே வகுப்பில் படிக்க வைக்க வேண்டியிருக்குத. எங்கேயாவது

போயி மூட்டை தூக்கிப் பிழையமிலே!' என்று கூட வசை பாடுகிறார்.

மூட்டைப் பூச்சிக் கடியையும் முணுமுணுப்பையும் எவ்வளவு தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்? ஒருநாள் பையன் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டே ஓடிவிடுகிறான்.

அப்படி எல்லாம் நடக்கிறதை விடஅவன் 'ஒரே போக்காகப் போய்விட்டது' நல்லது என்று கூட ஒரு கணம் அவள் மனசுக்குப் படுகிறது! இருந்தாலும் தாய்ப்பாசம் வேறு. சோகம் கவிந்த உள்ளம் வேதனையால் கனக்கிறது.

பாக்கியம் பிள்ளையின் புலப்பத்தை அவ்வப்போது கேட்க நேரும் நிலையில், அதே தெருவில், வசித்த பரதேசி யாபிள்ளை சுவாராஸ்யமான பேர்வழி. அவர்மனம் உள்ளதை உள்ளபடி ஏற்றுக் கொள்வது கிடையாது. இஷ்டம் போல் கற்பனைகளை வளரவிடுகிற சுபாவம் அதற்கு உண்டு. அந்த மனம் படம் பிடித்துக் காட்டிய சித்திரம் இது.

வேய் இந்தப் பாக்கியம்பிள்ளை இருக்கானே, சுத்த பிசினாறிப் பய, பணத்தைச் செலவு பண்ணவும் பண்ணு வான். கூடவே, ஐயோ பணம் செலவாகுதே - செலவாகுதே யின்னு வயிற்றெரிச்சல் படவும் செய்வான். பையனை படிக்க வைக்கிறே, சரி அவன் பிற்காலத்திலே கைநிறையச் சம்பாத் தியம் பண்ணி உனக்குச் செலவுக்குத் தருவான்னு தானே இப்ப நீ செலவு பண்ணுறே? பின்னே புலம்புவானேன்? பையனுக்கு நோட்டுயின்னும் புத்தகமின்னும், துணிமணி யின்னும் ஏகப்பட்ட பணம் செலவாகுது வேய் இன்னு என்கிட்டே இவன் அடிக்கடி புலம்புவான். இப்போ அவன் செலவு செய்த எல்லாப் பணமும் அநியாயமா நஷ்டமா யிட்டுதே யின்னு ஏங்குறான். ஐயா, அந்தச் செல்லையா பரீட்சையிலே பாஸ் பண்ணி விட்டான்னே வையும்.

அப்பவும் பாக்கியம் பிள்ளை புலம்பத்தான் செய்வான். புலப்பம் அவனைப் பிடித்திருக்கிற தீராத வியாதி.

'அப்பா நான் பாஸ் பண்ணிட்டேன்'னு பையன் சந்தோஷமாகச் சொல்ல வாறான். இவனுக்கும் உள்ளுக் குள்ளே திருப்திதான். இருந்தாலும் வெளியே காட்ட மாட்டான். 'இதுக்கு ஒரு துள்ளாட்டமா? நீரு பட்ட கஷ்டம் ரொம்பவாக்கும். தெரியாதோ! நான் பணத்தைப் பணமின்னு பாராமல், வாரி வாரிச் செலவளிக்கப் போய்த்தானே உம்மாலே படிக்க முடிஞ்சிது? எங்க அப்பன் எனக்காகப் படிப்புச் செலவுயின்னு ஒரு ரூபா கூடக் காலி பண்ணல்லே. அவரும் நோட்டு நோட்டா எடுத்து விட்டிருந்தால், நானும்தான் பாஸ் பண்ணியிருப்பேன்!' என்றுதான் இவன் பேசுவான்.

மேல்படிப்பு படிக்க வைப்பான். ஆனால் தினம் 'உன்னாலே ஏகப்பட்ட பணம் செலவு. எவ்வளவு பணம் காலியாகுது!' என்று குத்திக்கொண்டே இருப்பான். இதுவரையும அப்படிச் செய்தவன்தானே? செல்லையா உணர்ச்சி மிகுந்தவன். ஏசுறது அப்பன்தான்னு சொன்னாலும் பையனுக்கு எருமைமாட்டுத் தோலு இல்லை பாருங்க, சுடுசொல் தாங்க முடியாமல், அடிக்கடி மனம் புழுங்கி மௌனமாகக் கண்ணீர் வடிப்பான். வே, பையன் சாப்பி டறதைப் பார்த்துக்கூட வயிறு எரிவான் ஐயா இவன். வேளைக்கு அஞ்சு தோசையை முறிச்சு உள்ளே தள்ளுறான், பத்து இட்லி வெட்டுதான். சோறுயின்னு சொன்ன ஒரு புடி புடிக்கிறான். இந்தத் தீவனம் இருக்கப்படாது. நிறையத் தீனி தின்னால் அறிவு மந்திச்சுப் போகும். வயிறு காயக்காய, மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யும். படிக்கிற பையன் அரை வயிறு முக்கால் வயிறுதான் சாப்பிடணும் என்கிறான் ஐயா தகப்பன்காரன். இந்த வயித்தெரிச்சலை பையன் எத்தனை காலம் சகிக்க முடியும்? அவன் செய்தது கரெக்ட்!

இவ்வாறு அடித்துப் பேசியது பரதேசியா பிள்ளை மனம்.

சொக்கையாப் பிள்ளை ஒரு டைப். வாழ்க்கையில் ரொம்பவும் அடிப்பட்டவர். அவர் மனமும் பாக்கியம் பிள்ளையின் 'அதிர்ஷ்டம்' பற்றி ஒரு படம் பிடித்துக் காட்டியது.

செல்லையா செத்துப் போயிட்டான். அப்பனுக்குத் துக்கம் இருக்கத்தான் செய்யும். ஒரு விதத்திலே இதை அதிர்ஷ்டம்னு சொல்லணும். பையன் பாஸ் பண்ணி, மேல் படிப்புப் படிச்சு, இஞ்சினீரு வேலைக்கும் வந்து விடுகிறான்னே வச்சுக்கிடுவோம். ஒரு பேச்சுக்குச் சொல்லுதேன். அவனுக்குப் பெரிய இடத்திலே கலியாணமும் ஆயிடுது. சரி, இவரு எதிர்பார்க்கிறபடி இவருக்கு சுக சௌகரியம் எல்லாம் கிடைச்சுடுமா? அது ஏது? இந்தக் காலத்துப் புள்ளைகளைத் தெரியாதா? பெண்டாட்டியாத்தா பெரியாத்தாயின்னு அவள் கொடுக்கைப் புடிச்சிட்டு பல்லை இளிச்சுக்கிட்டு அலைகிறானுகளே. அந்த இனத்திலேதான் இந்தச் செல்லையாப் பயலும் சேருவான். அப்போ பிள்ளைவாளுக்கு நஷ்டக் கணக்கு ஜாஸ்தி. ஏமாற்றம், மன வேதனை, தலைக்குனிவு எல்லாம் அதிகமாக இருக்கும். இப்போ அதுக்கெல்லாம் இடம் இல்லாமல் போச்சு பாருங்க.

இந்த விதமாகப் பலவித மனமும் பலரக அபிப்பிராயங்களை உலுப்புவதற்கு பாக்கியம் பிள்ளையின் புலம்பல் வழி செய்தது.

ஆகா, மனசின் ஆற்றல்தான் என்னே, என்னே!

# 18. மணநிறைவு

அதிகாலையில் கண்விழிக்கும் போதே அவனுள் ஆயிரம் பூக்கள் மலர்ச்சியுற்றது போல் ஒரு புத்துணர்வு படர்ந்தது. வழக்கத்தை விட அதிகமான உற்சாகமும் விசேஷமான குதூகலிப்பும் பாய்ந்து பரவுவது போல் இருந்தது.

புலர்ந்தும் புலராத அந்தப் புதுநாள் அவனுக்காக ஏதோ அதிசயங்களை வைத்துக் கொண்டு காத்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. என்னவோ புதுமையாக நிகழ இருப்பது போல - ஏதோ ஒரு புதிய அனுபவம் சித்திக்கப் போவது போல - அதை எதிர்பார்த்து, விழிப்புற்றது போல் அவன் உள்ளம் சிலிர்த்தது.

உலகம் மிக இனியது என்று அவன் பார்வை பிடித்துத் தந்த ஒவ்வொன்றும் அவனுக்கு உணர்த்தியது.

செம்மை பெற்று வந்த கிழக்கு வானத்தின் ஒளி வீச்சு எங்கும் பரவிய ஒளியை வரவேற்று ஆரவாரித்த பறவை இனங்களின் மகிழ்ச்சி ஒலிகள் மரங்களின் பச்சைப் பசிய இலைக் கூட்டங்கள் நீலவானம் எல்லாமே விழித்தெழுந்த சந்தோஷத்துக்கு உரமூட்டின.

வழக்கமான அலுவல்களில் ஈடுபட்ட அவன் மனம், இன்று ஏதோ புதுமையாக நடக்கப் போகிறது. இதுவரை கண்டறியாத என்னவோ ஒரு நிகழ்வு என்று குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தது. எதிர்பார்ப்பு உணர்வைத் தூண்டியது அது.

இயல்பான வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் காலத்தின் மடிக்குள் அன்று அவனுக்காகப் பதுக்கி வைக்கப் பட்டிருக்கிற அதிசயம் என்னவாக இருக்க முடியும்? அது எப்போது, எப்படி, எவ் உருவில் அவன் முன்னே உதறப்படும்?

நேற்று போல் இன்று - இன்று போல் நாளை என்று இயந்திர கதியில் ஓடிக் கொண்டிருக்கிற சாதாரண வாழ்விலும் கூட. எப்போதாவது எதிர்பாராதது நடந்து விடுகிறது, அதனால், ஒவ்வொரு நாளும் ஏதேனும் புதுமையை எதிர்பார்த்துக் காத்திருக்கத் தூண்டுகிறது மனம்.

அன்றும் அவன் மனம் அப்படி ஒரு எதிர்பார்த்தலை வளர்த்தது. யாராவது அவனைத் தேடி வரலாம், இருண்ட அறைக்குள் புகும் ஒளிக்கதிர் போல; புழுக்கமான இடத்தினுள் பிரவேசிக்கும் இனிய காற்று போல. அந்த வருகை சிறு நேர இன்பமும் புத்துணர்வும் சேர்க்கலாம். அப்படி யார் எங்கிருந்து வரக் கூடும் இன்று? அவனது கற்பனை எங்கெங்கோ இருக்கும் யார் யாரையோ தொட்டு இழுத்தது. எவரும் வரலாம் என்று எண்ணிக் கொண்டான் அவன்.

அல்லது, தபாலில் புதுமையாக ஏதாவது வரலாம் தானே?

அவ்விதம் அவனைத் தேடி வந்த திடீர் தபால்களை நினைக்கையில் அவன் மனம் சிரித்துக் கொண்டது. அதிர்ஷ்டத்தை சோதிடம் கூறும் கடிதம் ஒன்று வந்தது ஒருநாள். அதிர்ஷ்டச் சீட்டுகள் மூன்று இணை சேரும் தபால் வரும் ஒரு நாள்; எதிர்பாருங்கள்; விசேஷப் பரிசு கிட்டும் என்று உறுதி கூறியது அந்தக் கடிதம்.

பல நாட்களுக்குப் பின் 'அதிர்ஷ்டச் சீட்டுகள்' இணைசேரும் கடிதமும் வந்தது. நூறு ரூபாய் விலை உள்ள அரிய நூல்; உமக்கு எழுபது ரூபாய்க்குக் கிடைக்கும்; இணை சேர்ந்த சீட்டு லேபிள்களை உரிய அட்டையில் ஒட்டி கையெழுத்திட்டு அனுப்புக; பணம் அனுப்ப வேண்டாம். புத்தகம் வி.பி. போஸ்டில் வந்து சேரும் என்று ஆசை காட்டியது அந்த தபால்.

நாகரிக யுகத்தில் வியாபார காலத்தில் விளம்பர சாமர்த்தியம் எப்படி எப்படி எல்லாம் வேலை செய்கிறது பாரேன் என்று எண்ணிக் கொண்டது அவன் மனம்.

இன்னொரு சமயம் பூச்சாண்டி காட்டியது தபாலில் வந்த ஒரு கடிதம். ஸ்ரீவெங்கடாசலபதி துணை. இதை ஒரு கார்டில் இருபது தடவை எழுதி விலாசதார்ர்களுக்கு அனுப்பு. (தனித் தனிக் கார்டுகள். இருபது பேருக்கு) இச்சங்கிலி அறுபடாமல் உடனே எழுதி அனுப்பு. உனக்கு நன்மை உண்டாகும். அலட்சியம் செய்து அனுப்பாமல் நிறுத்தி விட்டால் அல்லது குறைவாக எழுதி அனுப்பினால் இருபது நாடகளுக்குள் உனக்கு எதிர்பாராத ஆபத்து வந்து சேரும். இவ்விதம் எழுதி அனுப்பாமல் பரிகாசம் செய்த ஒருவன் விபத்தில் சிக்கி மிகவும் சிரமப்பட்டான். இருபது கார்டுகள் எழுதி அதைப் பெறுகிற இருபது பேரும் தனித் தனியே இருபது இருபது நபர்களுக்கு எழுதி அனுப்பி

அவற்றைப் பெறுகிறவர்கள் ஒவ்வொருவரும் இருபது பேர்களுக்கு அனுப்பி இந்த விதமாக ஸ்ரீ வெங்கடாசல பதியின் பெருமை பரவுவதற்கு வகை செய்ய வேண்டும். இச் சங்கிலி தொடர்ந்து வளர வளர உனது வாழ்க்கையில் வளங்கள் பெருகும்; சந்தோஷம் அதிகரிக்கும். இதை அனுபவ பூர்வமாக அறியலாம். வெங்கடாசலபதி சகாயம்.

ஒரு தடவை அவனை வள்ளலாக மதித்து ஐநூறு ரூபாய் கடன் கேட்டது ஒரு கடிதம். மகளை கல்லூரியில் சேர்ப்ப தற்காகப் பணம் தேவை என்று எழுதியிருந்தார் ஒரு அன்பர். அன்றாடச் செலவுகளுக்கே இழுபறி நிலையில் இருக்கிற அவனிடம் ஐநூறு ரூபாய் கடன் கேட்டு ஒருவர் எழுதியது பெரிய தமாஷாகப் பட்டது அவனுக்கு.

இவர்கள் எல்லாம் எப்படித் தான் அவனுடைய விலாசத்தை அறிந்து கொள்கிறார்களோ என்ற ஆச்சர்யமும் அவனுக்கு ஏற்பட்டது.

அதே மாதிரி அன்றும் ஏதாவது ஒரு கடிதம் வந்தாலும் வரலாம். ஏன் வரக் கூடாது? இது அவனது மனக் குறுகுறுப்பு.

ஆனால் அன்றைய தபால் அற்புதமான அல்லது விபரீதமான, குதூகலமான அல்லது ஆனந்த மயச் செய்தி எதையும் கொண்டு தரவில்லை. வழக்கமான சாரமற்ற விஷயங்களே வந்திருந்தன.

அது அவனுக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை. விழித் தெழுகையில் அவனுள் பூத்த பல நூறு பூக்களும் வண் ணங்கள் ஒளிரச் சிரித்துக் குலுங்குவதாக அவனுக்குத் தோன்றியது. வளரும் பொழுதோடு அவனுடைய உணர்வுக் குதூகலிப்பும் அதிக உயிர்ப்பு பெறுவது போலிருந்தது.

யாருக்காகவோ அல்லது எதுக்காகவோ தான் காத்தி ருப்பதாக அவனுக்குப் பட்டது.

அந்தப் பெரிய வீட்டில், ஆள்நடமாட்டமற்று அமைதி எந்நேரமும் கோயில் கொண்டிருந்த சூழலில், தன்னந் தனியனாய் பொழுது போக்க நேரிட்டு விட்ட அவனுக்கு இப்படி ஒரு உள்ளுணர்வு எப்போதுமே சிறகடிப்பது உண்டு.

பார்க்கப் போனால் யார்தான் காத்திருக்கவில்லை இந்தவாழ்க்கையிலே? பஸ்சுக்காக தபாலுக்காக பணத் துக்காக வேலைக்காக திருமணத்துக்காக - இவ்வாறு எது எதுக்காகவோ மனிதர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோருமே

அறிந்தோ, அறியாமலோ - அவரவர் சாவுக்காகக் காத்திருக்கிறார்கள் தானே! அல்லது மரணம் ஒவ்வொருவரது கால முடிவுக்கும் காத்திருக்கிறது என்று சொல்லலாமே!...

தனியாக இருக்கும் அவன் மனம் இந்த ஒரே எண்ணத்தை அடிக்கடி ஓட விடும்.

மனம் விசித்திரமானது தான். இருண்ட எண்ணங்கள் மண்டும் குகையாக இருக்கிற அதுவே ஒளிக் கோடுகள் நீத்திக் களிக்கிற விசால வெளியாகவும் தோன்றுகிறது. சுடர்க் கோளங்கள் சுழலும் ஆகாயமாகத் தோன்றும் அதுவே முத்துக்களும் விந்தைச் சிப்பிகளும் சிக்கலான கொடிகளும் விகார ஜந்துக்களும் விதம் விதமான ஜீவராசிகளும் நீந்திக் களிக்கும் ஆழ்கடலாகவும் தோற்றம் காட்டுகிறது. வண்ண மலர்கள் பூத்து மணமும் ஒளியும் வீசுகிற வனம் போலவும் அது விளங்குகிறது. சில சமயம் அர்த்தமற்ற கலவரத்தையும் தெளிவற்ற குழப்பத்தையும் காரணமில்லா பயத்தையும் இனம் புரியாத சோகத்தையும் தாங்கிக் குமைகின்ற மனம் சில

வேளைகளில் களிவெறி கொண்டு கூத்தாடுகிறது; எதிர் பார்ப்புகளை விதைக்கிறது; காத்திருத்தலை வளர்க்கிறது.

ஒரு ஆராய்ச்சி மாணவனின் விழிப்பு உணர்வோடு தனது மனசின் இயல்புகளையும் ஆய்வு செய்து வைத்திருந்த அவனுக்கு அன்றைய மனக் குதூகலிப்பின் காரணம் புரியத் தானில்லை.

இருப்பினும் என்னவோ புதுமை தன் எதிரே வரப்போகிறது என அவன் மனம் அரித்துக் கொண்டே யிருந்தது.

வழக்கமான அலுவல்களில் நேரம் கரைந்து நாள் வளர்ந்தது. மனிதரின் பலநிலை வடிவங்கள் - குழந்தைகள் சிறுவர் இளைஞர் முதியவர் - இயங்கி உயிர்ப்பூட்டும் பேற்றினைப் பெற்றிராத அந்த பெரிய வீட்டில் சின்னஞ்சிறு குருவிகள் சுதந்திரமாகக் கும்மாளியிட்டன. தத்தித் தத்தி நடந்தன. பறந்து திரிந்து கூச்சலிட்டன. தமக்குள் சண்டை போட்டன. இன்பமாய் விளையாடி மகிழ்ந்தன. இரண்டு குருவிகள் மாறி மாறிக் கண்ணாடியைக் கொத்திக் கொத்தி மயங்கின.

அவன் சாப்பிடும் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு காக்கை. அவன் தோசைத் துண்டை அல்லது இட்டிலித் துணுக்கை வீசியதும் உற்சாகமாகக் கத்தும். இதர காகங்கள் ஓடி வரும். ஒன்றிரண்டு வாசல் படி ஏறி நெருங்கி வரும்.

உயிரியக்கம் அற்ற அந்த அமைதிச் சூழ்நிலைக்கு ஜீவத் துடிப்பு தந்தன அவை. அவற்றை அவன் ஆதரித்தான். ஒரு வித நட்புணர்வோடு. அதில் பறவைகளுக்கும் அவனுக்கும் தனி சந்தோஷம் வளர்ந்ததாகவே தோன்றியது.

திடீர் சந்தோஷம் பாய்ந்து வந்தது போல் குதித்து வாசல் படியில் உட்கார்ந்தது அழகின் குறள் வடிவம். வண்ணங் களின் இனிய சேர்க்கை. ஒரு சிறு பறவை.

அவன் - வாசல் படியை விட்டுச் சற்று தள்ளி ஒரு நாற்காலியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தவன் அதிசயமாய் கவனித்தான்.

இதுவரை அந்த அறையினருகிலும் வருகை தந்திராத ஒரு மரங்கொத்திப் பறவை. குஞ்சு.

பறந்து பழகும் போது திசை தெரியாது தடம் மாறி வந்ததோ? வெளிச்சம் மிகுந்த விரிவானில் இதுக்கு வழி தவறிப் போச்சோ? எந்தத் தேடலின் உந்துதல் இதை இங்கே கொண்டு சேர்த்ததோ? - அவன் மனத்தறி எண்ண நாடாவை இழுத்து விட்டது.

அவன் மனசில் ஒரு பொறி வெடித்தது; ஏதோ புதுமை நிகழப் போகிறது என்று உணர்வு சொல்லிக் கொண்டிருந்ததே அது இந்த வருகைக்காகத்தான்.

அந்த அழகிய பறவை மைச்சொட்டுகள் போன்ற கண்களால் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

அக்கரிய விழிகளை கூர்மையாய் நீண்டு வளைந்திருந்த அதன் மூக்கை தலையை மென்மையான பட்டு ரோமங்கள் புசுபுசுத்து நின்ற சிறு கழுத்தை இனிய வர்ணங்கள் புதிய டிசைன்களில் விரவிக் கிடந்த அதன் உடல் பகுதிகளை அவன் ரசனையோடு பார்த்தான்.

என் இனிய நண்பனே, உன்னை இங்கு கொண்டு சேர்த்தது எது? இன்றையத் தனிமை உணர்வோ? உன்னுள் கிளர்ந்த ஒரு நட்பு மலர்ச்சியோ? விளக்க முடியாத

முன்னைப் பழம் தொடர்பு எதுவும் தானோ? எதைத் தேடி இங்கே நீ வந்தாய்? புதியவனே!

அவன் மனம் கேள்விகளை அடுக்கி மகிழ்ந்தது.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த புதிய பறவை உவகைக் குரல் ஒன்றைச் கிரீச்சிட வைத்தது. சுற்றிலும் நோக்கியது. துள்ளிப் பறந்து சுழன்று ஜிவ்வென ஒளி வெளியிலே பாய்ந்து உயர்ந்தது.

அவன் பார்வைப் புலனிலிருந்து மறைந்து போனது.

அவனுள் பூத்துக் குலுங்கிய பலப்பல வண்ணப் பூக்களிலிருந்தும் புதியதோர் மணம் எழுந்து அவனுள் நிரம்பியது போலிருந்தது அவனுக்கு. எங்கும் மோகனமாய் பரவி சூழ்நிலையை அற்புத எழிலாய் மாற்றி விடும் அமுத நிலவொளி போல் ஒரு ஆனந்த நிறைவு அவன் மனசில் நிலைப் பெற்றது இப்போது.

# 19. வெளிச்சம்

**வா**ழ்க்கை இருண்டு விட்டதாகத் தோன்றியது சிவசிதம்பரத்துக்கு.

எங்கும் இருட்டு. எதிலும் இருட்டு. எப்போதும் இருட்டு. வீட்டிலும் வெளியிலும் ஒளி இல்லை என்றே அவருக்குத் தோன்றியது. அவர் உள்ளத்தில் இருட்டு நிலவியதுதான் காரணம்.

சிவசிதம்பரம் இந்தவாழ்க்கை அர்த்தமற்றது என்ற நினைத்தார். மனிதர்கள் எல்லோரும், இயந்திர ரீதியில் செய்ததையே செய்து கொண்டு, எண்ணியதையே எண்ணியும் பேசியதையே பேசியும், பொருளற்ற தன்மையில் பொழுதுகளை ஓட்டிக் கொண்டிப்பதாக அவருக்குப்பட்டது.

நேற்றுப் போல் இன்று; இன்று போல் நாளை; என்றும் ஒரே மாதிரித்தான். திடீரென்று ஒருநாள் மரணம் வந்து அழித்து விடுகிறது. அனைத்தையும் அர்த்தமற்றதாக்கி விடுகிறது.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில், ஒவ்வொருவரும் சுயநலத்தோடும், சுயப்பெருமையோடும், சுயவிளம்பரத்

தோடும் என்னென்ன நாடகமெல்லாம் ஆடித் தீர்க்கிறார்கள்! முடிவில் சாவு வந்து கொத்திப் போகிறது. இதெல்லாம் எதுக்காக?

வாழ்க்கையே ஒரு போராட்டம் என்றால், அந்தப் போராட்டம்தான் எதுக்காக? காலத்தோடு போட்டி போட்டுக் கொண்டு, பயனுள் ளனவும் பயன் இல்லாதனவுமான காரியங்கள் பலபலவற்றையும் செய்து கொண்டு, பல விதமான உணர்ச்சிகளினாலும் எற்றுண்டு அலைக்கழிக்கப் பட்டு, குழம்பித் தவித்து, தன்னைச் சேர்ந்தவர்களையும் பிறரையும் குழப்பித் திணற வைத்தும் கோபித்தும் சண்டை போட்டும், வாழ்க்கையை அமைதியும் ஆனந்தமும் இல்லாததாக மாற்றிக் கொண்டு இறுதியில் செத்துப் போக வேண்டியிருக்கிறது! எனவே, வாழ்க்கைப் போராட்டத்தில் மனிதனுக்குத்தான் தோல்வி...

இப்படி சிவசிதம்பரம் அடிக்கடி எண்ணிக் கொண்டிருந்ததனால், அவர் உள்ளத்தில் இருட்டு கனிந்து கனத்தது.

அவர் மனிதர் யாரையும் நம்பத் தயாராகயில்லை. எவருடனும் பழக முன் வரவில்லை. தனிமை அவருக்குப் பிடித்திருந்தது. அந்தத் தனிமை அவரது விரக்தி உணர்வு கொண்டு வீசிப் படர்ந்து செழிக்கத் துணைபுரிந்தது.

சிவசிதம்பரத்துக்கு நண்பர்கள் இல்லை. அவர் யாருடனும் சுமுகமாகப் பேசிப் பழகுவதில்லை. அவருடைய இயல்புகளை உணர்ந்த அக்கம் பக்கத்தினரும் உற்றார் உறவினரும் அவரை விட்டு விலகியே போனார்கள்.

அவர் ஒரு உத்தியோகம் பார்த்தார். அதிலேயே ஆழ்ந்திருந்தார். கண்டிப்பாகவும் கறாராகவும் நடந்து வந்தார். எப்போதும் எதையாவது படித்துக் கொண்டிருந்தார். படிக்காத நேரங்களில், ஏதோ தீவிர யோசனையில் ஆழ்ந்திருப்பது போல் உம்மென்று உட்கார்ந்திருப்பார்.

அவருடைய நாட்களில் சந்தோஷங்களுக்கே இடம் இல்லாது போயிற்று. என்றோ வரக் கூடிய மரணத்தை எதிர்பார்த்து அவர் காத்திருப்பது போலிருந்தது. சில சமயங் களில் அவருடைய மனமே அதை சொல்லிச் கொண்டது. சாவு சீக்கிரமே வந்துவிட்டால் நல்லது. அர்த்தமற்ற வாழ்க்கையில் வீணாக எது எதையோ செய்து பொழுது போக்குவதில் என்ன பிரயோசனம்? செத்துப் போவதே தேவலை.

இந்த நினைப்போடுதான் சிவசிதம்பரம் அந்த வேளையில் ரஸ்தாவில் நடந்து கொண்டிருந்தார். மாலை நேரம். பொங்கிப் பிரவாகித்துச் சுழித்து அலை ஏற்றிப் புரண்டோடும் நதி மாதிரி நாகரிக ரஸ்தா இயங்கிக் கொண்டிருந்தது.

விதம் விதமான வேக வாகனங்கள். அவசரம் அவசரமாக விரையும் பலரகப் போக்குவரத்து சாதனங்கள். பரப் பரப்போடு செல்லும் பாதசாரிகள். அங்கங்கே தடைகளாய் நின்று விடும் சில வண்டிகள், மனிதர்கள்.

அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. வெறுப்பு நுரையிட்டது. சனியன்கள்! எதுக்கு இத்தனை வேகம்? என்ன எழவுக்கு இத்தனை அவசரம்? சாகப் போகிற பீடைகள்.

தன்னுள் அலைபுரண்ட எண்ணத்தில் லயித்திருந்த சிவசிதம்பரம் தன்னை அறியாமலேயே ரஸ்தாவின் ஓரத்தை விட்டு நகர்ந்து மத்தி என்று சொல்லப்பட வேண்டிய அளவுக்கு ரோட்டில் வந்து விட்டார்.

அப்போது அவர் எதிர்பாராத அதிர்ச்சி அவருக்கு நேரிட்டது.

வேகமாக எதிரே வந்த மோட்டார் பைக் அவரை மோதுவதுபோல் நெருங்கியது. பின்னேயிருந்து ஒரு ஆட்டோ ரிக்ஷா வெகு அவசரமாக வந்தது.

இரண்டில் எதிலாவது ஒன்றில் - அல்லது இரண்டிலுமே அடிபட்டுக் கீழே விழப் போகிறோம் என்று அவருக்குத் தோன்றியது. அநியாயமாக நடுரோட்டில் சாகப் போகி றோமே என்றொரு உணர்ச்சி. அவர் உடல் நடுங்கியது.

இருட்டில் வாழ்கிற பூச்சி திடீர் செயலற்று வெளிச்சம் தாக்கியதும் திணறித் தவிப்பது போல அவரும் திண்டாடினார். இதோ மோட்டார் பைக்... இதோ ஆட்டோ மோதப் போகிறோம் -

அட பாவிகளா என்று அலற விரும்பினார் சிவசிதம்பரம். அலறிவிட்டதாக நினைத்தார். வாயை திறந்து திறந்து மூடி னாரே தவிர அவரால் எவ்விதமான ஒலியும் எழுப்ப இயல வில்லை. பயம் அவரை நிலை குலையச் செய்து விட்டது.

கிரீச்சிட்டு நின்றது ஆட்டோ. 'ஸடன் பிரேக்' போட்டு திறமையாக வண்டியை நிறுத்தி விட்டார் அதன் டிரைவர்.

மோட்டார் பைக் ஆசாமி சிறிது வெட்டி முறித்துத் தன் வண்டியை விலக்கி வழியோடு சென்றார். 'மடையன்! ரோட்டிலே ஓரமாக நடக்கணுகிற அறிவு இல்லே?' என்று திட்டிக் கொண்டே பறந்து போனார். அவர் அவசரம் அவருக்கு!

ஆட்டோ ரிக்ஷா டிரைவரும் 'ஏன்யா, வீட்டிலே சொல்லிட்டு வந்துட்டியா? பார்த்துப் போ' என்று உபதேசித்து விட்டு, வண்டியை நகர்த்தி ஓட்டிச் சென்றார்.

சிவசிதம்பரத்தின் உடல் படபடப்பு குறையவில்லை. நெஞ்சு திக்திக்கென்று அடித்தது. ஒருவித பயம் உள்ளத்தில் நிறைந்திருந்தது. சாவு நெருங்கி வந்ததில் சிறிதளவு சந்தோஷம்கூட அப்போது அவருள் தலைகாட்டவில்லை. நல்லவேளை பிழைத்தோம் என்ற திருப்திதான் இருந்தது.

அவர் நின்று, கவனித்து, நிதானமாக ரோடு ஓரத்தில் நடக்கலானார். சாவு பற்றி சர்வ சாதாரணமாக எண்ணி

னாலும், சாவை வரவேற்று எதிர்நோக்க நாம் தயாராக இல்லை. பயம் தான் முந்துகிறது. உயிராசை வலியது. சாவை வரவேற்று இயல்பாகத் தழுவிக் கொள்வதற்குத் தனி தைரியம் வேண்டும்.

இந்த விதமாக எண்ணத் தொடங்கியது சிவசிதம்பர மனம்.

அது முதல் அவருள் மாற்றங்கள் அரும்பலாயின.

'ஐயா, பிச்சை!' என்று கை நீட்டி அருகே வந்து கெஞ்சியவர்களுக்கு எதுவுமே கொடுக்க மாட்டார் அவர். பிச்சை போட்டு, இவர்களுடைய சோம்பேறித்தனத்தை ஆதரிப்பது தப்பு என்றே அவர் மனம் பேசும்.

இப்போது அவர் பிச்சை கேட்டவர்களுக்கெல்லாம் காசுகள் தந்தார்.

'ஸார், நான் இந்த ரோடை கடக்க வேண்டும், பயமாயிருக்கு. என்னை இட்டுக் கொண்டு அந்தப் பக்கம் விட்டு விடுங்களேன்' என்று யாராவது தள்ளாதவர்கள், கிழவிகள் அவரிடம் உதவி கோரியது உண்டு. அப்போதெல்லாம் 'வேறே வேலை இல்லையாக்கும்' என முனகியபடி நடப்பதே அவர் சுபாவம். அல்லது அந்தப் பேச்சு வேறு யாரை நோக்கியோ கூறப்பட்டதாக, தனது காதில் அது விழாதது போல், தன் பாட்டுக்கு முன்னேறுவார்.

இப்போது, 'ஏஏய் பார்த்துப் போ... வண்டி வருது... நில்லு நில்லு' என்று எச்சரித்து, அவராகவே வலியப் போய் மற்றவர்களுக்கு உதவி செய்யலானார். முதியவர்களையும், சிறு பிள்ளைகளையும் கையைப் பிடித்து மெதுவாக நடத்தி, அவர்கள் ரோடை பத்திரமாய் கடப்பதற்கு உதவினார்.

அவர்கள் முகம் மலர்ந்து நன்றி கூறிய போது - அல்லது நன்றி உணர்வை சொல்லால் புலப்படுத்தத் தெரியாதவர்களாய் முகமலர்ச்சியாய் காட்டியபோது, அவருக்கு சந்தோஷம் ஏற்பட்டது.

கொடுப்பதில் ஒரு சந்தோஷம் இருக்கிறது; உதவி தேவைப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதில் ஒரு இன்பம் கிட்டுகிறது என்று கண்டு கொண்டது சிவ சிதம்பர உள்ளம்.

ஒருநாள், எதிர்வீட்டுக் குழந்தை அவர் வீட்டு வாசல்படியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது. வெளியே போய் விட்டு வந்த சிவசிதம்பரம் நின்று, 'என்ன விஷயம்? ஏன் அழறே?' என்று கேட்டார்.

முன்பென்றால் எரிந்து விழுந்திருப்பார் 'போ மூதேவி, இங்கே ஏன் உட்கார்ந்திருக்கே?' என்று கத்தியிருப்பார்.

ஏழு வயதுச் சிறுபெண். அழகு என்று சொல்ல முடியாது. அழுதுகொண்டே அது சொன்னது. 'அம்மா அடிச்சா. நோட்டு வாங்கணும். நோட்டு இல்லாமப் போனா டீச்சர் அடிப்பாங்க...' விம்மி விம்மி அழுதது.

சிறுபிள்ளையாய் இருப்பது கவலையில்லாத, சந்தோஷமே மிகுந்த விஷயமில்லை; அந்தப் பிராயத்துக்கும் எத்தனையோ கவலைகள், பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன! சிவசிதம்பரம் இப்படி எண்ணிக் கொண்டார்.

மெதுமெதுவாகப் பேச்சு கொடுத்து, சிறுமியின் தேவையைப் புரிந்து கொண்டு, அதை அழைத்துப் போய் கடையில் ஒரு நோட்டு வாங்கிக் கொடுத்தார். மிட்டாயும் வாங்கித் தந்தார்.

சிறுமியின் அழுகை போன இடம் தெரியாது மறைந்தது. அதன்முகம் சந்தோஷத்தின் அழகுப் பூ ஆயிற்று. அதன் கண்களில் விசேஷ ஒளி சுடரிட்டது.

'இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்' மாணவியாக இருந்தால், 'தேங்க்ஸ்' 'தேங்க் யூ' என்று திரும்பத் திரும்பச் சொல்லியிருப்பாள். இச்சிறுமி சாதாரணக் குழந்தை. 'நன்றி' என வாய்விட்டுச் சொல்லும் நாகரிகம் கற்காத பிள்ளை.

சந்தோஷம் பூத்துக் குலுங்கும் முகத்தை அவர் பக்கம் காட்டியபடி - திரும்பித் திரும்பி நோக்கிச் சிரித்தவாறே - அது பள்ளிக்குச் சென்றது.

அந்தக் காட்சி சிவசிதம்பரத்தின் உள்ளத்தில் தனி ஒளி பாய்ச்சியது. அவர் முகத்திலும் சிரிப்பு ரேகையிட்டது.

அன்று மாலை, அந்தப் பிள்ளையை அழைத்துக் கொண்டு அதன் தாய் வந்தாள். மரியாதை காட்டி வணங்கினாள். தன் கஷ்டங்களை புலம்பினாள். பணம் வந்ததும், நோட்டுக்கு அவர் கொடுத்த காசை திருப்பித் தந்து விடுவதாகச் சொன்னாள்.

'அதெல்லாம் வேண்டாம். அது நல்லாப்படிக்கட்டும். ஒழுங்கா ஸ்கூலுக்குப் போகட்டும். அதை அடிக்காதே' என்றார் அவர்.

'சரி ஐயா' என்று கும்பிட்டாள் தாய்.

'அதுக்கு எப்பவாவது நோட்டு பென்சில் ஏதாவது தேவைப்பட்டால் என்னிடம் கேட்கச் சொல்லு. நான் வாங்கித் தருவேன்' என்றும் கூறினார்.

அவள் தலையாட்டி, கும்பிடு போட்டு, மகளைக் கூட்டிச் சென்றாள்.

சிவசிதம்பரம் இப்படிப் பலருக்கும் சிறுசிறு உதவிகள் செய்வதில் உற்சாகம் கொண்டார். அதனால் அவர் உள்ளத்தில் மகிழ்ச்சி பூத்தது.

அவரிடம் உதவி பெற்றவர்கள், அவருடைய அன்புக்கு இலக்கான அக்கம் பக்கத்தினர், அவரை நேசிக்கலானார்கள். தங்கள் வீட்டில் விசேஷமாக வடை பாயசம் என்று ஏதேனும் செய்தால் அவருக்கும் அன்போடு கொடுத்து அனுப்பினார்கள்.

அன்பு அன்பை வளர்க்கிறது. அன்பு மனித நேயத்தை வளம் பெறச் செய்கிறது. அன்பு உள்ளத்தில் மகிழ்ச்சி பூத்துக்

குலுங்கத் துணை புரிகிறது. அன்பு வாழ்க்கைக்குத் தனி அர்த்தம் தருகிறது.

சிவசிதம்பரம் இந்த உண்மையைப் புரிந்துக் கொண்டார். அவர் உள்ளத்தில் கவிந்து கிடந்த இருட்டு மெதுமெதுவாக விலகியது.

அதன்பின் பேரொளி பிரகாசிக்கிற இடங்களில் இருட்டுக்கு இடம்தான் ஏது?

# 20. முதுகெலும்பு இல்லாதவன்

**கா**மாட்சியா பிள்ளை கடையில் வேலை பார்த்து வந்த ராமலிங்கம் அந்த வேலையை விட்டுவிட்டான்.

இது பலருக்கு ஆச்சர்யம் அளித்தது. அநேகருக்கு சர்வ சாதாரண நிகழ்ச்சியாகத் தோன்றியது. சிலர் 'பின்னே என்ன, அவருகிட்டே மனுசன் வேலை பார்க்க முடியுமா? இவன் இவ்வளவு காலம் அந்தக் கடையிலே ஒட்டிக்கிட்டு இருந்ததே பெரிசு!' என்று அபிப்பிராயப்பட்டார்கள்.

'என்னடே, கடை வேலையை விட்டுட்டியாமே?' என்று கேட்டவர்களிடம் ராமலிங்கம் சுரத்தில்லாமல் பேசினான். 'ஆமா மானம் வெக்கம் எல்லாத்தையும் உதிர்த்துப் போட்டுத் தான் அங்கே வேலை பார்க்கணும். வாயிலே வந்தபடி எல்லாம் பேசுதாரு. எத்தனை நாளைக்குத் தான் பொறுத்துக்கிட்டு இருப்பது?' என்ற முணுமுணுத்தான்.

'அது சரிதாங்கேன், அவரு எப்பவுமே அப்படித்தான். முழு முழுப் பாட்டாத்தான் அறுப்பாரு!' என்று சிலர் ஆறுதல் கூறினார்கள். அவன் போன பிறகு சிலர், 'இன்னிக்குத்தான் புதுசாப் பேசிப் போட்டாருக்கும்? அவரு சுபாவமே அது

தானே? ஆயிரம் திட்டு ஒரு ஆனைப்பலன் என்று கவனிச்சும் கவனிக்காமலும் போக வேண்டியதுதான். இந்தக் காலத்திலே வேலை கிடைப்பது லேசாகவா இருக்கு? இந்தப் புத்தி கெட்ட பய உள்ள வேலையை உதறிப் போட்டு நிக்கானே. இன்னமே என்ன செய்யப் போறானாம்?' என்று பேச்சு உதிர்த்தார்கள்.

'என்ன தம்பி, இனிமேல் என்ன செய்யதா உத்தேசம்?' என்று அவனிடமே சிலர் கேட்கவும் கேட்டார்கள்.

'ஏதாவது செய்யணும். பார்க்கலாம்' என்று தான் அவனால் வார்த்தைகளை மென்று விழுங்க முடிந்ததே தவிர, இதைச் செய்யப் போகிறேன், அதை அப்படிப் புரட்டப் போகிறேன். எதெதையோ எப்படி எப்படியோ உருட்டித் தள்ள போகிறேன் என்ற ரீதியில் அடித்து விளாச முடியவில்லை. அவ்வாறெல்லாம் பேசுவதற்கு அவனிடம் வாய் இருந்த போதிலும், அப்படி துணிந்து அளப்பதற்கு ஊக்கம் அளிக்கக் கூடிய 'வக்கு' அவனிடம் இல்லை.

அவ்விதம் 'பசை' இருந்திருக்குமானால், 'இந்தக் காமாட்சியா பிள்ளை கடையை நம்பித்தானா ராமலிங்கம் பிறந்திருக்கான்? என்னாலே தனியா வியாபாரம் பண்ண முடியாதா? சின்ன அளவிலே ஒரு கடை, இல்லைன்னா வெறும் வெத்திலை பாக்குக் கடை, வைத்து நடத்த முடியாதா? வேண்டாமய்யா, அப்பப்போ கொஞ்சம் சாமான்களை வாங்குறது; சைக்கிள் பின்னால வச்சுக்கட்டிக்கிட்டு ஊர் ஊராப் போய் தெருத் தெருவா விக்கிறது. இதிலே கணிசமா லாபம் கிடைக்கும். கிடைச்ச வரை போதுமே. செட்டி கப்பலுக்கு செந்தூரான் துணைம்பாக. கப்பலை இழுத்துத் தண்ணீலே விட்டால் அது பாட்டுக்கு மிதந்துக் கிட்டே போகும்!' என்ற தன்மையில் லெக்சரடிக்க ராமலிங்கமும் கூச மாட்டான்தான். அவன் கையில் காசு கிடையாது. அவனுக்குக் கடன் கொடுத்து உதவவோ, நிதி தந்து ஆதரிக்கவோ, ஒரு நாதியும் கிடையாது. அதுதான் அங்கே பெரிய கஷ்டம்.

ஆகவே, ராமலிங்கம் பெருமூச்சு உயிர்ப்பது தவிர வேறு வழி அறியாத நிலையில் இருந்தான். அவன் 'வீட்டுக்காரி' செல்லம்மா எரிந்து விழுந்த போதும், வெடுவெடுத்த போதும், அவன் 'பிடிச்ச பிள்ளையார் மாதிரி' இருக்க முடிந்ததே தவிர, அவளை சாந்தப்படுத்தும் விதத்தில் எதுவும் சொல்ல முடியவில்லை.

'ஆமா. வேலையை விட்டுப் போட்டேன்னு சொல்லிக்கிட்டு திண்டங்காளை மாதிரி வந்து நிக்கீகளே. இனிமே வீட்டுலே அடுப்பு எப்படிப் புகையுமாம்? முதலாளி என்னைக் குத்தான் ஏசிப் பேசலே? அவருக்கு அதே வழக்கமாப் போச்சு. உங்களுக்கு இப்போ மட்டும் ஏன் ரோசம் பொத்துக்கிட்டு வந்திட்டுதோ?' என்று தொடங்கி அவள் 'கொடை கொடுக்க' லானாள்.

இனி இதுக்கு ஒரு முடிவே இருக்காது என்றுதான் ராமலிங்கம் நினைத்தான். பெரு மூச்செறிந்தான். நடந்ததை நடந்தபடி சொன்னால் இவள் இப்படி பேசத் துணியமாட்டாள் என்று அவன் நிச்சயமாக நம்பிய போதும் அதை அவளிடம் சொல்ல அவனுக்கு மனசு வரவில்லை.

முதலாளி காமாட்சியா பிள்ளை 'கண்டபடி' பேசக் கூடியவர்தான். அவரிடம் வேலை பார்க்கிறவர்களை அவர், அல்ப விஷயங்களுக்கெல்லாம், தாறுமாறாகத் திட்டித்தீர்ப்பார். ராமலிங்கத்தையும் எவ்வளவோ ஏசிப் பேசியிருக்கிறார்தான். 'சவத்துப் பயலுக்குப் பொறந்த பயலே' 'அநாதைப் பயலே' 'எச்சிப் பொறுக்கி' என்று ஆரம்பித்து என்னென்னவோ சொல்லியிருக்கிறார். ஒன்றிரண்டு தடவை 'தேவடியா மகனே' என்று கூடத் திட்டியிருக்கிறார். தீவட்டித் தடியா, சோம்பேறிக் கழுதை, முட்டாப் பய புள்ளே என்பதெல்லாம் அவர் வாயில் சர்வசாதாரணமாக வெளிப்படும் வார்த்தைகள்.

ராமலிங்கம் அவருடைய ஏச்சுக்களைக் கேட்கும் போதெல்லாம் குமுறுவது உண்டு. மனச் சூடு பெறுவான். 'தடிப்பண்ணி, எருமை மாட்டுப் பயல்' சதைப் பிண்டம் என்று மனசுக்குள் அவரை திட்டிக் கொண்டே இருப்பான். 'நீ தான் தேவடியா மகன், பல பேருக்குப் பிறந்த பயல்' என்று பதிலுக்கு மனசில் ஏசிவிட்டு, வழக்கம் போல் வேலைகளைக் கவனித் தவன்தான் அவன். ஆனால் நேற்று அவனாலேயே தாங்க முடியவில்லை.

ஏதோ சிறு பிசகு நேர்ந்து விட்டது. யாருக்கும் ஏற்படக் கூடியதுதான். முதலாளி அவ்விதம் எண்ணிச் சும்மா இருந்து விடவில்லை. 'ஏலே, துப்புக் கெட்டப்பயலே. ஒழுங்கா வேலை செய்ய லாயக்கு இல்லாத பயல்லாம் எதுக்காக வேலைக்கு வரணும்? நீ உடல் வளைஞ்சு உழைச்சுப் பிழைக்க லாயக்கில்லைடா. பெண்டாட்டியை கூட்டிக் கொடுத்து சுகமா வாழ்றதுக்குத்தான் லாயக்கு' என்று எரிந்து விழுந்தார்.

அந்தப் பேச்சு அவனுக்கு சுரீர் என்று தைத்தது. வேறு யாராவது அப்படிச் சொல்லியிருந்தால், பேசியவன் பல் உதிர்ந்து போயிருக்கும். எதிரே இருந்தது, முதலாளி! அவரை ஒன்றும் செய்ய முடியாது அவனால். எதிர்த்துப் பேசக்கூட முடியாது; தலை குனிந்து நின்றான். ஒருதரம் அவரை ஏறெடுத்துப் பார்த்தான்.

'என்னலே முறைக்கிறே? ஒழுங்கா வேலை செய்யத் தெரியாத பயலுக்கு முறைப்பு ஒரு கேடா?' என்று உறுமினார் முதலாளி.

அவன் அடிபட்ட அப்பாவி நாய் மாதிரி ஒதுங்கி விட்டான். மறுநாள் கடைக்குப் போகவில்லை. காரணம் கேட்டவர்களிடம் 'முதலாளி வாயிலே வந்தபடி பேசுதாரு. எனக்குப் பிடிக்கலே. நின்னுட்டேன்' என்றுதான் சொன்னானே தவிர, சூடாக உறைக்கும்படி அவர் என்ன சொன்னார் என்பதைச்

சொல்லவில்லை. மனைவியிடம் சொல்லக்கூட அவனுக்கு மனசு எழவில்லை.

ராமலிங்கத்துக்கு மளிகைக் கடையில் கையாளாக இருந்துஅனுபவம் உண்டே தவிர, வேறு எவ்விதமான வேலை செய்தும் பழக்கம் இல்லை. வேறு வேலைகள் பார்ப்பதற்கு வேண்டிய தகுதியும் ஆற்றலும் அவனிடம் இல்லவுமில்லை. 'பட்டணமும் அல்லாத, பட்டிக்காடும் இல்லாத' அந்த 'ரெண்டுங் கெட்டான் ஊரிலே' வேலை வாய்ப்புகளும் அதிகம் கிடையாது.

பஜார் என்று ஒன்று இருந்தது. அதில் பலரகமான கடைகளும் இருந்தன. அவனுக்கு வேலை என்று எதுவும் கிடைக்க வேண்டுமானால் அவற்றில் எதிலாவது கிடைத்தால்தான் உண்டு.

ராமலிங்கம் ஒவ்வொரு கடையாக முயன்று பார்த்தான். ஒவ்வொரு முதலாளியும் 'நீ ஏன் காமாட்சியா பிள்ளை கடையை விட்டுவிட்டே? அவர் கடையிலே வியாபாரம் எப்படி? லாபம் எவ்வளவு வரும்?' என்பன போன்ற விவரங்களை அறிந்து கொள்வதில் அதிக அக்கறை காட்டினார்கள். புதிதாக எதுவும் தெரிந்து கொள்ளவதற்கில்லை என்று உறுதிப்பட்டவுடன், இப்ப ஒண்ணும் வேலை இல்லையே டேய், நீ அவசரப்பட்டு அந்த வேலையை விட்டிருக்கப்படாது என்று நல்லுரை புகன்று அனுப்பி வைத்தார்கள்.

ராமலிங்கம் பெருமூச்செறிந்து 'பச்சுத் தண்ணி'யைக் குடித்து வயிற்றை ரொப்பிக் கொண்டு பக்கத்து ஊர்களிலும் அலைந்து பார்த்தான்.

வீட்டில் பசியும் வறுமையும். செல்லம்மா அக்கம் பக்கங்களில் முன்பே கடன் வாங்கியிருந்தாள். இப்போது புதிதாகக் கடன் பெயர வழி இல்லை. வீட்டில் கிடந்த கொஞ்சம்

அரிசியை கஞ்சியாக்கி, இரண்டு பிள்ளைகளுக்கும் கொடுத்து வந்தாள். வெறும் கஞ்சி குழந்தைகளுக்கு இறங்கவில்லை. வீட்டு வாடகை இரண்டு மூன்று மாதங்களாக பாக்கி. குடும்பத் தலைவன் வேலையை விட்டு விட்டு ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான் என்றறிந்த வீட்டுக்காரன் வந்து, 'வாடகைப் பணம் வந்தாகணும், இல்லைன்னு சொன்னால், சாமானை எல்லாம் தூக்கித் தெருவிலே வீசிப் போடுவேன்' என்று குதித்துப் போனான். செல்லம்மாளுக்கு இதனால் எல்லாம் ஆத்திரம் அதிகரித்திருந்தது.

'பெண்டாட்டி பிள்ளைகளை வைத்துக் காப்பாத்தத் துப்பு இல்லாதவங்க கல்யாணம் ஏன் பண்ணிக்கிடணும்? குடும்பம் நடத்த ஏன் ஆசைப்படணும்? கடன்காரங்க வந்து வீட்டு முன்னாலே நின்னு கூத்தாடுற போது மானம் போகலையாக்கும்? முதலாளி ரெண்டு வார்த்தை பேசினதிலே மானம் போயிட்டுதாக்கும்?' என்று அவள் புலம்பிக் கொண்டிருந்தாள். 'கூலி வேலை பார்த்தாவது சம்பாதிக்கத் தெம்பு உண்டா உம்மகிட்டே? விறகு வெட்டியோ, மண்ணு வச்சோ, உழுது பாடுபட்டோ அன்னன்னைக்கு ஏதாவது காசு தேடிக்கிட்டு வந்து பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாத்த முடியுமா உம்மாலே? உமக்குத் தெரிஞ்சது - உம்மாலே முடிஞ்சது - பலசரக்குக் கடை அலுவல்தானே? அதை ஏன் விடணும்? வேலையை விட்டு நாலு நாளாச்சு. வீட்டிலே மூதேவி தான் குடியிருக்கு. இன்னைக்கு ராத்திரி பிள்ளை களுக்கு சாப்பாட்டுக்கு என்ன செய்றது...?'' அவள் புலப்பம் இப்படி வளர்ந்து பெருகியது.

வெயிலில் எங்கெங்கோ திரிந்து விட்டு வேலையும் இல்லை, காசும் இல்லை, இனி என்ன செய்வது என மனம் குமைந்து வீடு நோக்கி வந்த ராமலிங்கத்துக்கு வீட்டில் அமைதியும் கிடைக்காது என்பது புரிந்தது.

பணம் இருந்தால்தான் அமைதி, வீட்டுச் சுகம் எல்லாம் கிடைக்கும். வெளியிலே மதிப்பு பெறுவதற்கு மாத்திரமல்ல; வீட்டுக்குள் அமைதியும் மதிப்பும் பெறுவதற்குக் கூட பணம் தேவை. மானம், மரியாதை இன்னும் என்னென்னவோ எல்லாம் 'பசி வந்திடப் பறந்துபோம்' என்று யாரோ சொன்னார்களே. அது முழுவதும் சரி ஆகாது. பணம் இல்லையென்றால் எல்லாம் பறந்து போய்விடும். பணம் இல்லாதவன் எல்லாம் மானமாக வாழமுடியாது. அப்படி வாழ விடமாட்டாங்க மற்றவங்க. இன்னைய வாழ்க்கை முறை அப்படியிருக்கு...

வீட்டுக்குள் நுழையாமலே தெருவில் இறங்கி கால்போன போக்கிலே நடந்த ராமலிங்கத்தின் மனம் புழுங்கிக் கொண்டிருந்தது.

முடிவாக அவன் நின்றபோது முன்னே காமாட்சியா பிள்ளை கடை தான் இருந்தது.

'என்னடே நீ பாட்டுக்கு சொல்லாமப் புரையாமல் போயிட்டா என்ன ஆகிறது? காரியமெல்லாம் எப்படி நடக்குமின்னு நெனச்சே? இப்ப ஏன் தீவட்டித் தடியனாட்டம் வெளியே நிக்க? உள்ளே போ. போயி ஒழுங்கா வேலையைப் பாரு. சவத்துப் பயலுக்குப் பொறந்த பய, அவன் அப்பன் வீட்டுக் கடை மாதிரித்தான். நினைச்சா வாறது, திடீர்னு வராம ஒழிஞ்சி போயிறது...' என்று முதலாளி வழக்கமான பாணியில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அவனுடைய உழைப்பாற்றல் அவருக்குத் தெரியும். அவன் இல்லாமல் நான்கு நாட்கள் அவர் பட்ட கஷ்டமும் அவருக்குத்தான் தெரியும்.

ராமலிங்கம் மௌனமாகத் தனது வேலைகளில் ஈடுபட்டான். 'சவத்துப் பயதான். உணர்ச்சிகள் செத்துப் போன சவம்தான் இனிநான்' என்று முணுமுணுத்தது அவன் மனம்.

'காமாட்சியா பிள்ளை கடையில் ராமலிங்கம் மறுபடியும் வேலையில் சேர்ந்து விட்டான்' என்ற சேதி எங்கும் பரவ வெகுகாலம் தேவைப்படவில்லை.

'அந்தக் கடையை விட்டால் அவனுக்கும் வேறே போக்கு கிடையாது. அவனை விட்டால் அவருக்கும் வேறே நல்ல ஆள் கிடைக்காது' என்று ஊர்காரர்கள் பேசிக்கொள்ளத் தவறவில்லை.

'இந்த மட்டுக்காவது அவுகளுக்கு நல்ல புத்தி வந்ததே!' என்று சிறிதளவு சந்தோஷம் கொண்டாள், ஸ்ரீமதி ராமலிங்கம் எனும் சமூக அந்தஸ்தைப் பெற்றிருந்த செல்லம்மா.

# 21. காகித ராஜா

எப்படியோ ஏகப்பட்ட பணம் சேர்த்துவிட்ட அருளானந்தர் புகழ் சேர்த்துப் பெரிய மனிதர் ஆகிவிட ஆசைப்பட்டார்.

அவர் படித்திருந்த வரலாறு அவருக்கு சாம்ராஜ்யக் கனவுகளைத் தூண்டி விட்டது. 'தனிக்கொடி, தனி ராஜ்யம், தனி மன்னராக நாமே நாம்' என்று அவர் மனம் முனகல் குரல் எழுப்பியது.

'வாளைவிட வலியது பேனா' என்ற பழமொழி அவருக்குத் தெரியும். பேனாவையும் பேனா பிடிக்கிறவர் களையும் ஆட்டிவைக்கும் ஆற்றல் பெற்றது பணம் என்பதை அவர் அறிந்திருந்தார்.

தனி ராஜ்யம் காண்பதற்காக, தனக்கென ஒரு கட்சி தேவை என்று அவர் கருதினார். கட்சி மூலம் வாய் வீச்சர் களைத் தயாரித்து அனுப்பி, மக்கள் மத்தியில் பெரும் பேச்சுகளை விதைத்து, தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்வது சுலபம் என்பதை நாட்டு நடப்பு அவருக்கு உணர்த்தி வந்தது.

வாய் வீச்சர்களைவிட, சொல்லடுக்கு மேஸ்திரிகளைப் பயன்படுத்தினால் நிரந்தரமான நீடித்த பலன் ஏற்படக் கூடும் என்று அருளானந்த மூளை மின்வெட்டியது. ஆகவே அவர் வார ஏடு ஒன்றும், நாளிதழ் ஒன்றும் துவக்கினார்.

ஏமாந்தவர்கள் மிகுந்திருப்பர், எளிதில் ஏற்றம் பெற்று விடலாம்; ஏன் பணம் அதிகம் செலவு செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவருக்கு ஏற்பட்டது. அதனால், 'பேனாக் கொம்பர்'களையும், 'எழுத்து பீரங்கி'களையும் அவர் தன் பக்கம் சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. அவர்களுக்கு பணம் அதிக அளவில் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுமே!

'கற்றுக் குட்டி'களையும், பள்ளியிலிருந்து வெளியுலகில் வந்து திசை தெரியாது விழித்து நிற்கும் பையன்களையும் பேனா வீரர்களாகவும் எழுத்து மன்னர்களாகவும் மாற்றி விட முயன்றார் அவர்.

வெற்றி சுலபத்தில் கிட்டாது எனப் புரிந்ததும், 'மக்களுக்கு எது தேவை என்பது எமக்குத் தெரியும்; அதை எல்லாம் அள்ளிக் கொடுப்போம்' என்று திட்டம் தீட்டினார்.

அக்கப்போர், வம்பளப்பு, காமப் பேச்சு, செக்ஸ் விவகாரங்கள், கொலை கொள்ளை குடிகெடுத்தல் வகையரா பற்றிய சூடான விஷயங்கள் - இவைகளைப் பற்றிப் பேசுவதில் தான் சாதாரண மக்கள் காலத்தையும் கருத்தையும் செலவிடுகி றார்கள். அவர்களுக்கு சிந்தனைக்கு வேலை கொடுக்கும் விஷயங்கள் பிடிக்காது. சும்மா பொழுதுபோக்கவும், பேசிச் சிரிக்கவும் நிறைய விஷயங்கள் தேவை. அவற்றை நாம் தருவோம் என்று அருளானந்தர் தீர்மானித்தார். அவருடைய பத்திரிகைகள் புத்துயிரும் விறுவிறுப்பும் பெற்றன.

'இரவு ராணி'களைப் பற்றியும் 'இடி ராஜா'க்களை பற்றியும் சுவையான செய்திகள்; இரட்டை அர்த்தம் தொனிக்கும சொல்லட்சி; சமூகத்தில் நாற்றமடிக்கும் சாக்கடை விஷயங்கள்; 'வெளிச்சமிடும்' மேனிமினுக்கிகளின் படங்கள், பேட்டிகள்; மட்டரகமான கடிதங்கள் - இவ்வாறு பலதரப்பட்ட விருந்துகளையும் தயாரித்து விநியோகிக்கும் தொழிற்கூடம் ஆயிற்று அருளானந்தரின் அலுவலகம்.

அவருடைய ஏடும் தாளும் சூடான தோசைகள் போல் 'டிமாண்ட்' உண்டாக்கின.

அச்சடிக்கப்பட்ட தாள்களை வெள்ளை விலைக்கு விறுவிறுப்பாக விற்பனை செய்வதன் மூலம் பெறுகிற பணத்தை விட, அதிகமான லாபத்தை, அச்சடிக்காத காகிதத்தை கறுப்பு விலைக்கு விற்பதன் மூலம் வேகமாகப் பெற முடியும் என்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

எனவே அவர் பிசினஸ் இரு தன்மைகளிலும் வெற்றிகரமாக வளர்ந்தது. அவருடைய ஏட்டுக்கும் தாளுக்கும் விசேஷமான கவனிப்பும் பெயரும் கிட்டின.

காகிதக் கட்டுகளையே சிம்மாசனமாகக் கொண்டு, பணமூட்டையை செங்கோலாக ஏற்று, 'நானே பேப்பர் ராஜா; எனது பேப்பர்களே அதிகம் அதிகமாகச் செலவாகின்றன. ஆகவே, எனக்குத்தான் பிரஜைகள் அதிகம்' என்று மிக மகிழ்ந்து போனார் அருளானந்தர்.

'சரியான அரசியல் கோமாளி!' என்று சிரித்தது காலம்.

சிரிக்க வைப்பது கோமாளியின் தொழில். சில கோமாளிகள் சிந்தனை புரிந்து, சிரிப்போடு கண்ணீரையும் கலந்துதந்து, மக்களையும் சிந்திக்கும்படி முயற்சி செய்வதும் உண்டு. அவர்கள் மேதைகள்; லட்சியவாதிகளும் கூட.

ஆனால், பேதைகள் நிறைந்தது மக்கள் கூட்டம் என நம்பிய அருளானந்ததின் லட்சியம் தமது பணநிலை உயர்ந்துகொண்டே போக வேண்டும்; முடிந்தால் புகழும் அதிகார பலமும் வந்து சேர வேண்டும் என்பதுதானே?

ஆகவே, அவர் மக்களின் கீழ்த்தர உணர்வுகளுக்குத் தீனி போடுவதிலேயே தீவிர ஆர்வம் காட்டினார். 'எமது சக்தி மெது மெதுவாக வேலை செய்யும். கண்ணுக்குத் தெரியாத விதத்தில் ஆழமாகக் கிளையிட்டுப் பரந்து மக்களை ஆட்டி வைக்கும்' என்று அவர் மகிழ்ந்தார்.

'சமூகத்தில் மெதுவாகப் பரவி நாச வேலை செய்யும் விஷம் அது. இளம் சந்ததியினரையும் கெடுத்து, அவர்கள் மனசையும், அறிவையும் கறைப்படுத்தும் அசுத்தம் அது' என்று அருளானந்தரின் ஏட்டையும் தாளையும் பற்றி நல்லவர்கள் எண்ணினார்கள். பசுமையும் வளமைத் தோற்றமும் காட்டி, தான் வளர்ந்துணை புரியும் நல்மரத்தின் சத்தை உறிஞ்சி நாசம் செய்யும் புல்லுருவி போன்றவர் புதுத் தலைவர் அருளானந்தர். அவர் செயலின் விளைவு இன்று பளிச்செனப் புரியாது. கால ஓட்டத்தில் சமுதாய வாழ்வே சீர்குலைந்து, மனித உள்ளம் பாழ்பட்டு நசித்துவிடும் என்று சிந்திக்கத் தெரிந்தவர்கள் வருத்தப்பட்டார்கள்.

காகித ராஜா, காகித நோட்டுகள் சேகரித்து 'பேங்க் பேலன்ஸை' அதிகப்படுத்துவது தான் வாழ்க்கை லட்சியம்; நமது லட்சியம் வெற்றி பெறுவதைக் காணச் சகிக்காத மற்றவர்கள் பொறுமுகிறார்கள். அது மனித இயல்பு!' என்றே கருதினார்.

மக்களின் விழிப்பு உணர்வு, அறிவுக் கனல். சிந்தனைத் தீ ஆகியவைதான் காகித ராஜாவின் கோட்டைக்கு வேட்டு வைக்க முடியும். இன்னும் மக்கள் அவற்றை பெருவாரியாகப்

பெறவில்லையே என்று வேதனை மூச்சுயிர்த்தது 'மனிதம்'. 'காலம் மாறும். அறிவு வளரும். புல்லுருவிகள் கருகிச் சாவார்கள்' என்று கூறியது நல்லவர்களின் சிந்தனை.

அதுவரை 'மனிதர்களைப் போலவே காட்சி அளித்து வெற்றிகரமாகப் பிழைப்பு நடத்துகிற கயவர்கள்' வாழ்ந்து கொண்டு தான் இருப்பார்கள். சகிப்புத் தன்மை பெற்ற மனிதம் தனக்கே கூறிக் கொண்ட ஆறுதல் மொழி இது.

# 22. காலமும் கடவுளும்

**கா**லப் பாழில் கவனிப்பாரற்ற வெறும் வெளிபோல் கிடந்தது அந்த இடம்.

பழமை இருள் கவிந்த அப் பெருவெளியில் பூண்டுகளும், புதர்களும் கள்ளியும் களையும் மண்டிக் கிடந்தன. பொட்டுப் பூச்சிகளும் புன்மைத் தேரைகளும் மல்கிக் கிடந்தன.

அது ஒருவர் மனசை உறுத்தியது.

அவரும் மற்றவர்களைப் போல், 'நாம் உண்டு, நம் பிழைப்பு உண்டு' என்று வாளா இருந்தாரில்லை. 'இந்த இடத்தின் விதி இதுதான். இங்குள்ளோர் இதை அனுபவிக்கட்டும்' என்று ஒதுக்கிவிட்டு, தான் ஒதுங்கி வாழத் துணிந்தாரில்லை.

இருள் சூழ்ந்த பெருநிலத்தில் தமது அறிவின் வலிமையால் சிந்தனை ஒளி பரப்பினார் அவர். 'இது நச்சுப் பயிர். இது நாசச் செடி. இது களை' என்று சுட்டிக்காட்ட முன் வந்தார். வாழ விரும்புவோர் இவற்றை அகற்றியாக வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

கசப்பான உண்மைகளைக் காரமாகச் சொன்னார் அவர். அவரது அறிவொளி அநேகரை வசீகரித்தது. அவர் சிந்தனை

திறம் சிலரை அவருடைய பக்தராக்கியது. வியப்பர்களும் அன்பர்களும் அவரைச் சுற்றிக் குழுமினர்.

காலப் பாழில் கவனிப்பாரற்ற இருள் நிலம் போல் கிடந்த அந்த இடத்தில் சிந்தனை ஒளியும் செயல் சலசலப்பும் சிறிது சிறிதாகப் பரவின.

அன்பர்களின் ஒரு அன்பர் அவரது பெரும் பக்தர் ஆனார். அவருடைய உள்ளம் உண்மையை வணங்கியது. உண்மையை எடுத்துச் சொன்ன நல்லவரை வாழ்த்தியது.

'அவர் தலைவர். அவர் வழிகாட்டி. அவர் கடவுள்' என்று துதிபாடத் தொடங்கினார் பக்தர்.

அவரைப் பிரதம சீடராக அங்கீகரித்தார் வழிகாட்டி. பக்தர்கள் பலரும் 'அவர் தலைவர், அவர் கடவுள்' என்று பிரசாரம் செய்தார்கள்.

காலப் பாழில் கவனிப்பற்ற இருள் நிலம் போல் கிடந்த அந்த இடத்தில் புதுமைகள் பூத்தன. உணர்ச்சி நெளிந்து கொடுத்தது. உயிர் மூச்சு விட்டது.

விழிப்புற்றவர்கள் வழிகாட்டியின்அறிவொளியால் வசீகரிக்கப்பட்டதுபோல், விழிப்புறாதோர் பக்தர்களின் அழகுப் பேச்சால், அடுக்குப் பாடல்களால், எடுப்பான முழக்கத்தால் கவரப்பட்டார்கள்.

'அவர் தலைவர். அவர் கடவுள்' என்ற ஒலி எங்கும் பரவியது. பக்தர்கள் அன்பளிப்பு என்றும், காணிக்கை என்றும் அள்ளிக் கொடுத்தார்கள்.

வழிகாட்டி கசப்பான உண்மைகளை சூடாக அள்ளி வீசிக் கொண்டுதான் இருந்தார்.

அவற்றைச் சுவையாக, இனிமையாக, அழகாக எடுத்துச் சொன்னால் கவனிப்பு அதிகம் கிட்டும் என்று உணர்ந்தார் பெரும் பக்தர். அவ்விதமே செய்தார்.

இளைஞர்களும் உணர்வுக் கிளுகிளுப்பு உடையோரும் அவரைச் சுற்றித் திரிந்தார்கள். சரித்திரம், காவியம், கலை எல்லாம் காம மினுமினுப்போடு அங்கே கூத்திடலாயின.

'இவர் தலைவர். இவர் கடவுள். இவர் வழிகாட்டி' என்றார்கள் புதிய அடியார்கள்.

தனியான ஞானோதயமோ, பிறரின் உந்துதலோ, காலப் பாழில் கவனிப்பற்ற இடமாய் கிடந்த அந்தப் பகுதியிலே பெரும் பக்தர் தனிமடம் கண்டார். அவர் அடியார்களும் அங்கே வந்து சேர்ந்தனர். 'இவர் தலைவர்; இவர் கடவுள்; இவர் வழிகாட்டி' என்ற புகழ்மொழி ஓயாது அர்ச்சிக்கப்பட்டது.

ஒரு காலத்தில் கவனிப்பற்றுக் கிடந்த அந்தப் பெருவெளியில் பழமை இருள் விலகி, புதிய மேகங்கள் சூழ்ந்தன. நச்சுச் செடி கொடிகள் குறைந்திருந்தன. ஆனால் புதிய காளான்களும், நாசக் கொடிகளும் பின்னிப் படர்ந்தன.

அவற்றின் மத்தியிலே, அவற்றின் பாதுகாப்போடு, புதிய வழிகாட்டியின் மடம் எடுப்பாகக் கொலுவிருந்தது.

அங்கு குழுமிய அடியார்களுள் ஒரு அடியார் மடத் தலைவரின் அன்புக்குரிய சீடர் ஆனார். ஆகவே, 'இவர் தலைவர். இவர் கடவுள்' என்று ஓங்கிக் கூவி வந்தார் அவர்.

அவர்களைச் சுற்றி காமம் ஜிலு ஜிலு நாட்டியம் புரிந்தது. சிற்றின்பங்கள் சிங்காரமாய் கொலுவிருந்தன. வரலாறு, வாழ்வு, காவியம் எல்லாம் அவர்களுக்கு ஏவல் புரியலாயின.

பக்தர்கள் பரிசுகள் கொடுத்தனர். கொடுக்காவிட்டால் கேட்டுப் பெறுவோம் என்று திட்டமிட்டார் இளம் அடிகளார்.

'பணம், பட்டம், பதவி - நம்மை வாழ்விக்கும் மூல மந்திரங்கள்' என்பது அம் மடத்தார்களின் குறிக்கோள் ஆயிற்று.

இளம் அடியாரின் பேச்சு, கூத்து, தோற்றம் காரணமாக அவருக்கென்று பல அன்பர்கள் சேர்ந்தார்கள். அவருடைய பேச்சாற்றலின் கலகல நாதம் பலரை மயக்கியது சொல்ஜாலம் எத்தனையோ பேரை வசீகரித்தது.

காலப்பாழின் கவனிப்பற்ற இடத்தின் இருள் மண்டிய உள்ளத்தர் பலரை வசீகரிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார் அழகனார் என்பவர். அவரது பணகாந்தி இளம் அடியாரை வசீகரித்தது. அடியாரின் சொல் காந்தி அழகனாரைக் கவர்ந்தது.

'இவர் இளம் தலைவர். நல்லதோர் வழிகாட்டி' என்று புகழ்ந்தார் அழகனார்.

'இவர் தலைவர். இவர் கடவுள்' என்று பாராட்டினார் இளம் அடியார்.

வாரி வழங்கும் வள்ளல் ஆனார் அழகர். மடத் தலைவர் இருவரையும் பாராட்டினார். அவருக்குப் பணமும் புகழும் கிடைத்துக் கொண்டேயிருந்தன. அதற்கு வழிவகுப்போரைப் பாராட்டாது இருக்கலாமா?

காலப் பாழில் கவனிப்புக்கு உரிய இடமாக மாறிவிட்ட அந்தப் பெருநிலத்தில் புதிய புதிய புதர்கள் மண்டி வளர்ந்தன. ஊழல் பொய்கைகளும் நச்சுக் குழிகளும் வாய்பிளந்து நின்றன.

பணம், பதவி, பட்டம் என்ற மந்திர ஒலி மடத்தினுள் பல நாதங்களில் முழங்கிக் கொண்டிருந்தது.

இளம் அடியாரின் சித்த வெளியில் புதிய புதிய ஒளிகள் மின்னலிட்டன. அவர் மனக் குகையில் புத்தம் புது ஆசைகள் உறுமின. அவரது ஆற்றலில் அவருக்கு அளவிலா நம்பிக்கை வளர்ந்தது. 'நீரே செயலுரு. நீரே உணர்வின் வடிவம். நீரே

மடத்தின் உயிர். நீரே எங்களின் ஒளி! இவ்விடத்துக்குச் சரியான வழிகாட்டியாவீர்' என்று அவருடைய பக்தர்கள் போதைத் தூபம் போட்டு வந்தார்கள்.

ஒரு நாள் -

காலப் பாழின் கவனிப்பு மிகுந்த அந்த மடத்திலே பிளவு ஏற்பட்டது. தகர்ந்து பிளந்த ஒரு பகுதி சுவர் மீது ஏறி நின்றார் இளம் அடியார். சரியும் சுவருக்கு முட்டுக் கொடுத்து நின்றனர் அவரது வியப்பர்கள்.

மோகனப் புன்னகையோடு, நிதி முடிச்சுகளோடு, அளவிலா நம்பிக்கையோடு அவர் முழக்கமிட்டலானார்:

'நான் தலைவன். நான் கடவுள். நான் வழிகாட்டி. பணம், பதவி, பட்டம் எல்லாம் என்னுள் அடக்கம்!''

'அருள் புரியும் ஐயனே! உதவுக!' என்று அவரைச் சுற்றியும் கூட்டம் கூடியது. பலரது இயல்பு அது.

# 23. ரொம்பப் பெரியவர்

அவர் மாமேதை. மகாப் பெரியவர். தனக்கென வாழாத் தனிப்பெரும் ஞானி. உலகம் ஏற்றிப் போற்ற வேண்டிய அறிவாளி. அரசியல் நீதிகளை வகுத்துக் காட்டிடும் சாணக்கியர் - இவ்வாறு போற்றினார்கள் பலர்.

அவர்தான் கலியுகக் கடவுள். மக்களை உய்விக்க வந்த அவதாரம். காலத்துக்கு ஏற்றவாறு வழிகாட்டி வாழ்விக்கும் ஒளி விளக்கு. தன்னலகம் துறந்த கலிகால ரிஷி. அவர் கை அசைத்தால் மழை பொழியும். அவர் நாவசைத்தால் அருளுரைகள் பொங்கி வழியும். அவர் கண்மூடி ஓய்ந்து உட்கார்ந்து விட்டால் நாட்டு மக்கள் வாழ்க்கை அஸ்தமித்துப் போகும். இந்த விதமாகத் துதி பாடிக் கொண்டிருந்தார்கள் சில பக்தர்கள்.

அறிவுத் திறனும் சிந்தனை ஒளியும், குயுக்தியும் குள்ளநரித்தனமும் பெற்றிருந்தார் அவர். அவர் நாட்டுக்காக உழைத்தார். மக்களுக்கு நல்லது விரும்பிப் பாடுபட்டார். புகழ் அவரை வந்து சேர்ந்தது. பதவிகளும் கிட்டின.

புகழ்பாடிகளும், முகஸ்துதியர்களும், முதுகு சொறிஞ்சிகளும் பஜனைக் கூட்டம்போல் சேர்ந்தார்கள். 'நீங்களே உலகப்பெரும் அறிவர். அதை இங்குள்ளவர்கள் உணரவில்லை. நீங்களே வழிகாட்டும் வான்பொருள். நீங்களே

வாழவைக்கும் தெய்வம்!' என்று அர்ச்சித்து வந்தார்கள். அவருடைய பக்தர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைந்தார்கள்.

புகழ் போதையும் அதிகார ஆசையும் பெருமைப் பித்தும் அவரை கிறுகிறுக்கச் செய்தன போலும்!

ஒளி வீசும் விளக்கின் அடியில் இருளே நிழலிடுவது போல், அவரது அறிவொளி அவர் உள்ளத்தில் அகந்தை இருட்டைப் புகுத்தியது போலும்!

'மெத்தப் படித்த மூஞ்சூறை காடிப் பானையில் வீழ'ச் செய்யும் உந்துதல் சக்திபோல், சாதாரண மக்களுக்கெல்லாம் அறிவுரை கூற உதவிய அவருடைய ஞானத்தின் பின்னே அவரையே சுயநலத்தில் தள்ளிவிடும் சிறுமைப்புத்தி குடியிருந்தது போலும்!

'நான் தியாகங்கள் பலப்பல செய்தவன். நான் எல்லோரையும் விட அறிவில், அனுபவத்தில், ராஜதந்திரத்தில் பெரியவன். திட்டங்கள் தீட்டுவதில் தீரன். வழிகாட்டுவதில் சூரன். ஆலோசனை கூறுவதில் அற்புத வீரன். ஆயினும், இங்குள்ளவர்கள் என்னை சரியாக மதிக்கவில்லை. எனக்குப் பிறகு தோன்றியவர்கள், என்னைவிடத் தாழ்ந்தவர்கள், வேகமாக உயர்ந்து விடுகிறார்கள். உயர்த்தப்படுகிறார்கள்' என்று அந்த மகாப் பெரியவருடைய மனம் அடிக்கடி புலம்ப ஆரம்பித்தது.

எப்படியாவது உலகத்தின் கவனத்திலே நிலைத்திருக்க ஆசைப்பட்டார் அந்தப் பெரியவர், மக்கள் மீது அதிகாரம் செலுத்த தவித்தார். அதனால், பெரிய பதவி, சிறிய பதவிய என்று எதுவந்தாலும் லபக்கெனப் பற்றிக் கொள்ளத் தயாராக இருந்தார்.

'அவர் ஆத்ம ஞானி. ஆத்மாவுக்கு உயர்வும் கிடையாது, தாழ்வும் கிடையாது, மழை அதை நனைக்காது, வெயில் அதைச் சுட்டெரிக்க முடியாது. எங்கள் மகாப் பெரியவருக்கும் எல்லா நிலைகளும் சமம்தான். போற்றுதல்களும் புகழ்ச்சிகளும் அவரை குஷிப்படுத்திவிடா. தூற்றுதல்களும் வசைகளும் அவரை பாதிக்க மாட்டா!' என்று அவருடைய பக்தர்கள் பிரசாரம் செய்தார்கள்.

காலப் போக்கில், பதவிகள் கிட்டாமல் போனதும், அவருடைய உண்மைத் தன்மையை உணர்ந்த மக்கள் அவரது உபதேசங்களையும் வழிகாட்டல்களையும் ஒதுக்கிவிடத் தயாரானதும், மகாப் பெரியவருக்கு ஆத்திரமும் ஆவேசமும் ஏற்பட்டது.

'மக்களுக்கு புத்தி புகட்டுவோம். மக்களின் மதிப்பைப் பெற்றிருப்பவர்களை ஒழித்துக் கட்டுவோம். அதற்காக ஒரு தனிக்கட்சி அமைப்போம்!' என்று திட்டமிட்டார் அவர்.

கட்சி பிறந்தது. பக்தர்கள் கூடினர். அவர் தயவினால் சுயலாபம் பெற ஆசைப்பட்ட பண மூட்டைகள் அவர் கட்சிக்கு முட்டுக்கொடுக்க முன்வந்தன.

எல்லாவற்றையும் சமமாக மதிக்கும் ஞானம் பெற்றவர் என விளம்பரப்படுத்தப்பட்ட பெரியவர் மக்கள் நம்பிக்கைக் கட்சியினரை மோசமானவர்கள் என்று கண்டித்துப் பேசுவதிலும் எழுதுவதிலும் தமது ஆற்றலையும் காலத்தையும் செலவிடலானார்.

எல்லோரது கவனத்தையும் கவருவதற்காக எல்லா விஷயங்களைப் பற்றியும் எப்போதும் அறிக்கைகள் விடுவதில் ஆர்வம் காட்டினார். காதல் முதல் கருத்தடை வரை, விலை உயர்வு முதல் அயலார் உறவு வரை இப்படி என்னென்ன விவகாரங்கள் உண்டோ அவை பற்றி எல்லாம் அவர் கருத்தை உலகத்தினர் அறியாமல் இருக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு

கட்டுரைகளும், கருத்துரைகளும் புறப்பட்டன. பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதங்கள் எழுதியும் தமது எண்ணங்களை எடுத்துரைக்கத் தவறுவதில்லை அவர்.

முக்கியமான விவகாரம் ஒன்று தலையெடுத்தது. அது குறித்துத் தமது திடமான அபிப்பிராயத்தை வற்புறுத்த வேண்டியது அவசியம் என்று மகாப் பெரியவர் நினைத்தார்.

ஊரோடு ஊராகச் சேர்ந்த பொது இடத்தில் சொந்தம் கொண்டாடி முரட்டுத்தனமாகச் சண்டித்தனம் செய்தான் ஒருவன். அவனுக்குப் பாடம் கற்பிக்க ஊர் மக்கள் வெகுண்டெழுந்தனர். அவர்களைத் தட்டிக் கொடுப்பது போல் பேச ஆரம்பித்தார் பெரியவர். 'அவன் தொல்லை தீர வேண்டுமானால், அந்த இடத்தில் அவனுக்கு உரிமை கொடுத்துவிட வேண்டும்' என்றும் யோசனை கூறினார்.

'இப்படிச் சிறுசிறு தொல்லைகளும், பிய்ச்சுப் பிடுங்களும் ஏற்படாமல் இருக்க ஒரே வழிதான் உண்டு. முதலாளிக் காவல் நாயை தாஜா செய்து அதன் அருளைப் பெறுங்கள்' என்றும் அவர் போதித்தார்.

'ஆகா. மகாப் பெரியவரின் வாக்கு காலத்தின் கட்டளை. நல்ல வழிகாட்டி!' என்று அவரைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள்.

ஆனால், முரடனின் செயலாலும், அவன் போக்கிரித் தனத்தைப் பார்த்து வாலாட்டிக் கொண்டிருந்த முதலாளிக் காவல் நாயின் போக்காலும் எரிச்சல் பெற்றிருந்த மக்கள் மகாப்பெரியவரை விரட்டி அடித்தார்கள். 'நீர் ரிஷி என்றால் கல்லாய் மண்ணாய் சிலையாய் இரும். துரோகி என்றால் சிறைதான் உமக்கு சரியான இடம்' என்றார்கள் விழிப்புற்று வீறு கொண்ட மக்கள்.

'மக்கள் குரல்தான் மகாதேவன் வாக்கு!' என்று ஓங்காரம் செய்தது காலம்.

# 24. வள்ளலின் கேடயம்

விளம்பரப் புகழ்பெற்ற வள்ளல் ஒருவர் இருந்தார். அவரிடம் ஒரு கேடயமும் இருந்தது.

அந்தக் கேடயம் மிகவும் சிறப்பு உடையது. தனக்கெனத் தனி வரலாறு பெற்றது.

அவ்வாறே வள்ளலுக்கும் தனி மதிப்பும், சிறப்பான வரலாறும் இருந்தன.

வள்ளல் கலைத்துறையில் பணியாற்றி, பெரும் பணம் பண்ணி, ராஜபோகமாக வாழ்ந்து வந்தார். அவருக்கு நல்ல மனம் இருந்தது. ஆகவே, தாராளமாகப் பொருள் உதவி புரிந்து வந்தார். தனிநபர்களுக்கும், சங்கம் சமூகம், நிறுவனம், கட்சிகள் முதலிய பலவற்றுக்கும் அவர் பணம் கொடுத்தார். அவை அவரைப் புகழ்ந்தன. அவரிடம் மேலும் உதவி எதிர்ப் பார்த்தன. அதனால் அவர் கொடுத்துக் கொண்டே இருந்தார். இதனால் என்ன ஆயிற்று? புகழப் படுவதில் மகிழ்ந்து, புகழை எதிர்பார்த்தே அவர் பண உதவி செய்கிறார் என்ற கருத்து பரவலாயிற்று.

அவர் ஏழை எளியவர்களுக்கும், கஷ்டப்படுகிறவர்களுக்கும் உதவி செய்தார். ஆகவே, நல்ல உள்ளம் பெற்ற பொதுநல வள்ளல் என்று மக்கள் அவரைப் புகழ்ந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்ட சுய லாபமும் சுயவிளம்பரமும் பெற ஆசைப்பட்டார் அன்பர் 'சுளை விழுங்கி.'

திருவாளர் சுளை விழுங்கி ரொம்பப் பெரிய ஆள். எல்லோர் கண் முன்னாலும் இருக்கிற பழங்களைக் கூட தோல் பூரணமாக இருக்கும் படி விட்டுவிட்டு, சுளையை நைசாக விழுங்கி ஏப்பம் இடும் வல்லமை பெற்றவர் இவர்.

இவர் திட்டமிட்டார்; வள்ளல் பாராட்டு விழாவுக்கு ுருகதையானவர். அவர் பெயரைச் சொல்லி, விழா எடுக்கவும், ரிசு கொடுக்கவும் நிதி வசூல் செய்தால், நாட்டு மக்கள் தாராளமாகவே கொடுப்பார்கள். ஏராளமாகப் பணம் வந்து சேரும். விழாவுக்கும் பரிசுக்கும் ஒரு சிறு தொகையைச் செலவு செய்து விட்டு மீதியை நாம் பைக்குள் போட்டுக் கொள்வோம்!

'அபாரமான ஐடியாடா தம்பி!' என்று அவர் மனம் அவரையே பாராட்டிக் கொண்டது.

திட்டமிட்டபடியே தடபுடல்படுத்தினார் திருவாளர் சுளை விழுங்கி. வள்ளல் கலையரசு அவர்களுக்கு ஒளி விழா நடத்துவோம்; தங்கக் கேடயம் பரிசு தருவோம்; பெரிய அளவுக் கேடயம் முழுதும் தங்கத்தினால் செய்யப்பட்டு, மத்தியில் வைரக் கற்கள் பதித்த அருமையான கேடயம். கலை ரசிகர்களின் - மக்களின் - காணிக்கையாக அவருக்கு அளிக்கப்படும் இதற்கு பல ஆயிரம் ரூபாய் தேவை; எல்லோரும் பொருளுதவி செய்யுங்கள் என்று விளம்பரம் செய்தார். தீவிரமாக முயன்றார்.

சுளை விழுங்கியின் முயற்சி நல்ல பலனளித்தது. திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது.

பெரிய விழா நிகழ்ந்தது. கேடயம், தகதகவென மிளிர, வள்ளல் கலை அரசு அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

தோழர் சுளைவிழுங்கி கேடயத்தின் மதிப்பு பல ஆயிரம் என்று ஒரு பெரும் தொகையைக் குறிப்பிட்டார். மொத்தம் எவ்வளவு வசூல் ஆயிற்று. என்ன செலவு ஆயிற்று. மீதம் எவ்வளவு என்று அவர் வெளியிடவில்லை.

பல மாதங்களுக்குப் பிறகு, நாட்டின் நெருக்கடியைத் தவிர்க்க பொதுநிதி திரட்டப்பட்டது. மக்களின் அன்புக்கும் போற்றுதலுக்கும் உரிய மாபெரும் தலைவர் நிதி கேட்டார். தங்கமும் வெள்ளியும் பணமும் வந்து குவிந்தன.

வள்ளல் கலைஅரசு சும்மா இருப்பாரா? தனக்கென எதுவும் வைத்துக் கொள்ள ஆசைப்படாத - தன்னிடமுள்ள எதையும் எடுத்துக் கொடுத்துவிடச் சித்தமாக உள்ள - கர்ணன் இல்லையா அவர்? 'மக்கள் எனக்கு அன்புடன் அளித்த தங்கக் கேடயத்தை நாட்டின் நலத்துக்காக நான் மனமுவந்து அளிக்கிறேன்' என்று விளம்பரம் செய்தார். அதற்காக ஒரு விசேஷ நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதை அறிந்த சுளைவிழுங்கி திடுக்கிட்டார். 'இது ஏதடா ஆபத்து!' என்று பதறினார். தனக்கும், கலை அரசுவுக்கும் 'ரொம்பவும் வேண்டிய ஒரு பெரியவரை அணுகி விஷயத்தைச் சொன்னார். 'கேடயம் கைவிட்டுப் போனால் உண்மை அம்பலமாகி விடும். அது சுத்தத் தங்கத்தினால் செய்யப்பட்ட வில்லை. அதில் உள்ளவை வைரக் கற்களும் இல்லை. தங்கமுலாம் பூசப்பட்டு, மலிவான போலிக்கற்கள் பதிக்கப் பெற்றுள்ள அதன் மதிப்பு பல ஆயிரங்களும் இல்லை. இதெல்லாம் வெளியே தெரிந்தால் கேவலம்' என்று அழாக்குறையாகக் கெஞ்சினார்.

பெரியவர்தான் விழாவுக்குத் தலைமை வகிப்பதாக ஏற்பாடு. அவர் 'நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று சொன்னார். பிறகு இரண்டுபேரும் திட்டமிட்டு, சில பணமூட்டைகளை தாஜா செய்து ஒரு பெரும் தொகை நிதியாகப் பெற்றுக் கொண்டு, கேடய அளிப்பு விழாவுக்கு வந்தார்கள்.

வள்ளல் பெருமையாகப் பேசி கேடயத்தை பொது நிதிக்குத் தந்துவிடும்படி தலைவரிடம் கொடுத்தார். தலைவர், வள்ளலின் கொடைத் தன்மையைப் பாராட்டினார். மக்கள் அன்பின் காணிக்கையாக அளித்த பரிசு இது. இதை வள்ளல் மனமுவந்து நாட்டின் நலனுக்கு அளிக்கிறார். இது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அன்பின் பரிசான இது நமது அன்புக்கு உரியவரிடம் இருக்க வேண்டும் என்று தானே நாம் ஆசைப்படுவோம் ? ஆகவே, வசதி உள்ளவர் எவரேனும் முன் வந்து கேடயத்தை விலை கொடுத்துப் பெறத் தயாராக இருந்தால், அந்த விலையை பொதுநிதிக்குத் தந்துவிட்டு, கேடயத்தை கலை அரசு அவர்களிடமே அளிப்போம், இதோ ஏலம் கூறுகிறேன்' என்றார்.

எல்லாம் முன்னேற்பாட்டின் படியே நிகழ்ந்தன. ஒரு செல்வர், பெரும் தொகையைக் கொடுத்தார். திட்டமிட்டு, தலைவர் சிலரிடமிருந்து வாங்கி வந்து, அவரிடம் முன்னதாகவே கொடுத்து வைத்திருந்த பணம்தான் அது.

அத்தொகை நிதிக்கு அளிக்கப்பட்டது. கேடயம் இரண்டாவது முறையாக வள்ளலுக்கு அளிக்கப்பட்டது.

சில வருஷங்களுக்குப் பிறகு, மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. பொதுநிதி திரட்டப்பட்டது. மக்கள் தங்கமும் பணமும் உதவினர். வழக்கம்போல் வள்ளலும் முன்வந்தார். தங்கக் கேடயத்தை நிதிக்குத் தருவேன் என்று விளம்பரம் செய்தார்.

'இவர் பெரிய தொல்லையாக இருக்கிறாரே!' என்று கருதிய திருவாளர் சுளைவிழுங்கி இம்முறை அவரிடமே உண்மையை அறிவித்து விட்டார். 'அப்புறம் உங்கள் இஷ்டம்!' என்று சொன்னார்.

தங்கமுலாமும் கண்ணாடிக் கற்களும் கொண்ட கேடயத்தை தங்கக் கேடயம், வைரம் பதித்தது என்று தான் நம்பிக் கொண்டிருந்த அறியாமையை எண்ணி வேதனைப் பட்டார் வள்ளல். 'நாம் ஏமாற்றப்பட்டோம். பரவாயில்லை. நாட்டின் நலம் நாடுவோரை ஏமாற்றும் எண்ணம் நமக்கு இல்லை' என்று நினைத்தார் அவர். தமது சொந்தப் பணத்திலிருந்து பெருந்தொகை ஒன்றை நிதிக்கு உதவி விட்டு, 'கம்மென்று' இருக்கத் திருவுளம் கொண்டார்.

# 25. ஆறும், அழகிய சொக்கரும்

பிழைப்புக்காக பட்டணத்தில் தங்கியிருந்த அழகு சொக்குப் பிள்ளைக்கு சொந்த ஊரான மணலூருக்குப் போவது என்றாலே தனி உற்சாகம்.

ஊருக்குப் போவது என்று தீர்மானித்த உடனேயே அவர் மனசு கும்மாளி போடும். ஆ, தினசரி ரெண்டு வேளையும் ஆற்றிலே முங்கிக் குளிக்கலம் என்று.

அழகிய சொக்கர் என்ற பெயரை அவர் ஊர்க்காரர்கள் அழகு சொக்குப்பிள்ளை என்று தான் சொல்லி வந்தார்கள். அதில் அவருக்கு வருத்தம் ஒன்றும்இல்லை.

அழகான சிற்றூரான அவர் ஊருக்குப் பொருத்தம் இல்லாத ஒரு பாடாவதிப் பெயராக மணலூர் என்று வந்து வாய்த்ததே என்கிற வருத்தம் அவருக்கு உண்டு.

அழகு சொக்குப் பிள்ளைக்கு அவருடைய ஊர் மீது அபாரமான பற்றுதல் என்று அவ்ஊர்க்காரர்கள் நம்பினார்கள். அதனால்தான் வசதிகள் மிகுந்த பட்டணத்தை விடுப் போட்டு, வருடம் தோறும் இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்து இரண்டு மூன்று மாதங்கள் தங்கிப் போகிறார் என்று அவர்கள் கருதினார்கள்.

"உங்க ஊர் பேரிலே உங்களுக்கு ரொம்பப் பிரியமோ அண்ணாச்சி? இங்கே வந்து இப்படி ஹாயா இருக்கீகளே!?' என்று 'தம்பிச்சி' எவராவது அவரிடம் அவ்வப்போது கூறுவது உண்டு.

அவ்வேளையில் அழகு சொக்கு அலட்சியமாக ஒரு சிரிப்பு சிரிப்பார். 'பிரியமா! எனக்கா! இந்த ஊர் பேரிலேயா? அஹஹ அப்படிப் பந்தமோ பாசமோ ஏற்பட்டு விடும்படியா இந்த ஊரிலே என்ன இருக்கு?' என்பார்.

'பின்னே வருடம் தவறாம இந்த ஊருக்கு வாறீக; மூணு நாலு மாசம் தங்குறீங்க?' என்று தம்பியாபிள்ளை இழுப்பார்.

'அது வந்து தம்பி, ஊருக்குப் பக்கத்திலே ஓடுதே ஆறு, அது மேலே எனக்கு ஒரு ஒட்டுதல். சின்ன வயசிலே இருந்தே இந்த ஆற்றுமேலே எனக்கு ரொம்ப ஆசை. எனக்கு இது வெறும் ஆறு இல்லே. என்னை ஈர்க்கிற தனி சக்தி அது. இந்த ஆற்றிலே குளிப்பது ஒரு சுகம். இனிய ஆனந்தம். அதுக்கு இணையான சந்தோஷம் வேறு எதுவுமே கிடையாது' என்று உற்சாகமாக விவரிக்க ஆரம்பித்து விடுவார்.

ஆற்று நீரில் அமிழ்ந்தபடி அழகிய சொக்கர் அளப்பதை கேட்டிராதவர்கள் எவருமே இருக்க முடியாது.

'பட்டணம் பட்டணமின்னு பறக்கிறாக, பட்டணத்திலே இப்படி குளிக்க வசதி உண்டுமா? ஒரு பக்கெட் தண்ணியிலே உடலை நனைச்சிப் போட்டு, குளிச்சாச்சுயின்னு நம்மளை நாமே ஏமாத்திக்கிடுறதுதான் பட்டிணத்துக் குளியல்! இந்த ஆத்திலே நீராடுகிற சுகம் வேறே எங்கே வரும்?' என்ற ரீதியில் பேசிக் கொண்டே முழுக்கு போடுவார். சீக்கிரம் கரையேற மாட்டார்.

அந்த ஆற்றின் மீது அவ்வளவு மோகம் அவருக்கு. ஆறு அவருக்கு உற்ற சிநேகிதி. இனிய தோழி. அருமையான துணை.

காலப் போக்கில் அந்த ஆறுகூட அழகு குலைந்து போனதே என்ற தவிப்பு அவருள் என்றும் இருந்தது. சின்ன வயசிலே ஆறு எப்படி இருந்தது! வெள்ளி குருத்துபோல மணல் பரவிக் கிடக்கும். நடுவிலே அழகா, களங்கமில்லாமல், தண்ணீர் வளைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருக்கும். பிறகு நாணலும் என்னென்னவோ புல்லுவகைகளும் முளைச்சி அடர்ந்து வளர்ந்து ஆற்றின் அழகைக் கெடுத்தது. அப்புறம் மேற்கே மலையூரிலே, அணைகட்டி ஆற்றை மறிச்சு என்னமோ பண்ணி வச்சாங்க. அன்றிலிருந்து எல்லாம் கெட்டுது போ. மணல் இல்லாமப் போச்சு. தண்ணீர் அழுக்கும் சாக்கடையுமா ஆச்சு. கரை நெடுக முள்ளு மரங்கள் மண்டி வளர்ந்தன. மழை காலத்திலே வெள்ளம் வரும். அது வற்றிய பிறகு சேறும் சகதியுமா ஆற்றுப் படுகையே மோசமாயிடும்.

இவ்விதம் அழகு சொக்குப் பிள்ளை குறை கூறுவது வழக்கம். இருந்தாலும் ஆற்றின் மீது அவருக்கிருந்த பற்றுதல் வற்றிப் போகவில்லை. கேட்க ஆள் கிடைத்து விட்டால், அவர் பாட்டுக்கு அலுக்காமல் பேசிக்கொண்டேயிருப்பார். ஆற்றைப் பற்றித்தான்.

'இந்த ஆற்றிலே வெள்ளம் புரண்டு ஓடுவதை பார்க்கணுமே. ஆஹ், என்ன ஒய்யாரமான காட்சி! இருகரையும் பொழிஞ்சு, தண்ணி அசைவது தெரியாம ஓடும். ஏதாவது கொப்பு கிளை மிதந்து வரும்போதுதான் வெள்ளம் எவ்வளவு வேகமாக ஓடுது என்பது புரியும். அதோ அங்கே மண்டபம் இருக்குதே, அதிலே மோதி வெள்ளம் பிரிஞ்சு அலை புரண்டு முன்னேறதை எவ்வளவு நேரம் வேணும்னாலும் பார்த்துக் கிட்டே நிக்கலாம். அப்படி ஒரு மிடுக்கு, ஒரு கம்பீரம். படைகள் நகர்ந்து போறமாதிரி, யானைகள் சாடி முன்னேறுகிற மாதிரி, வெள்ளப் பெருக்கு நுங்கும் நுரையுமா, கண்டது எல்லாம் இழுத்து கிட்டுப் போகும். ஏயம்மா, எவ்வளவு தண்ணி, இவ்வளவு நீரும் இத்தனை நாளா எங்கிருந்தது? இப்ப

இவ்வளவு அவசரமா எங்கே போகுதுன்னு அதிசயிக்காமல் பார்க்க முடியாது!' என்பார் பிள்ளை.

ஒருசமயம் அவரே சொல்லுவார். 'வே, இந்த ஆறு மோசம் பண்ணினாலும் பண்ணிப்போடும். இது கொம்பேறி மூக்கன். எப்ப சீறிப் பாயும். எப்போ ஒடுங்கிப் பம்முமின்னு சொல்ல முடியாது. திடீர்னு வெள்ளம் வரும். சில சமயம் தண்ணீரே இல்லாமல் வரண்டு போகும். அங்கே இங்கே ஊற்று மாதிரி தண்ணீர் கிடைக்கும். நம்ம ஊரு சொர்ணம் பண்டுவனை சாகடிச்சது இந்த ஆறுதானே? அவன் வைத்தியம் பார்க்க ஊரு ஊராப் போவான். தினம் ஆத்தைக் கடந்து வருவான். போவான். ஒரு சமயம் என்னாச்சு தெரியுமா? சொர்ணம் அக்கரைக்குப் போக ஆத்திலே இறங்கிட்டான். தண்ணி அதிகமா வர்ற மாதிரி இருந்தது. அவன் போயிர லாம்கிற தைரியத்திலே நடந்தான். இடுப்புக்கு இருந்தது தண்ணி. வேகமாக வர்றதாவும் தோணிச்சு. அவன் பாதி ஆறுதான் போயிருப்பான். ஓயின்னு பெருத்த இரைச்சல் கேட்டுது. வெள்ளம் பெரும்படை மாதிரி முன்னேறி வருது. சொர்ணத்துக்கு என்ன பண்றதுன்னே புரியலே. அவனுக்கு நீச்சலும் தெரியாது. தெரிஞ்சிருந்தாலும் பயன்பட்டிருக்காது. வெள்ளம் வேகமாக வந்து அவனை உருட்டித் தள்ளி புரட்டி இழுத்துக் கிட்டு போயிட்டுது. இவ்வளவையும் நான் கரை மேட்டிலே அந்தப் பனைமரத்துக்குப் பக்கத்திலே நின்னு பார்த்துக்கிட்டேதான் இருந்தேன். நான் என்ன பண்ண முடியும்? சும்மாவா சொல்றாங்க - மனிசன் நீரு கிட்டேயும் நெருப்புகிட்டேயும் எதிர்த்து நின்னு எதுவும் பண்ண முடியாதுன்னு?'

இப்படி அனுபவக் கதைகள் பல உண்டு அழகிய சொக்கரிடம்.

அழகு சொக்குவுக்கு அந்த ஆற்றை ஒட்டிப் பல கனவுகள், பல ஆசைகள். அவற்றில் ஒன்று, ஆறு மலையில்

உற்பத்தி ஆகி, சிறு ஓடை போல் நகர்ந்து பெரிதாகி, ஒரு இடத்தில் அருவியாய் விழுந்து, தரையில் நதியாய் நெளிந்து நடந்து முன்னேறிச் செல்வதை கண்ணாறக் காண வேண்டும் என்பது. கரை மீதாகவே நடந்து ஆற்றின் வளர்ச்சியை ஊர் ஊராகப் போய் பார்க்க வேண்டும். கடைசி சங்கமுகம் வரைப் போய் கடலோடு சங்கமிப்பதை தரிசிக்க வேண்டும்.

இது நிறைவேறாத ஆசையாகவே இருந்தது. கூட வருவதற்கு ஒன்றிரண்டு பேர் துணை சேர்ந்திருந்தால், அவர் இத்திட்டத்தை நிறைவேற்றியிருப்பார். யாரும் அவருடன் சேர்ந்து வரத் தயாராகவில்லை.

ஆயினும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில், ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு, அழகிய சொக்கர் சில சில ஊர்களுக்குப் போக நேர்ந்தபோது, அங்கங்கே உள்ள ஆற்றுப் பகுதிக்குப் போகத் தவறியதில்லை. இதன் மூலம் ஆற்றின் பல முகங்களை அவர் காண முடிந்தது. அதில் ஒரு திருப்தி அடைந்தார் அவர்.

இந்த வருடம் வழக்கமான உற்சாகத்துடன் ஊர் வந்து சேர்ந்தார் பிள்ளை. காலையிலும் மாலையிலும் ஆற்றுக்குப் போனார். புல்தரையில் சிறிது நேரம் படுத்துக் கிடந்த பிறகு, ஆற்று நீரில் வெகுநேரம் குளித்து மகிழ்ந்தார்.

நாட்கள் மனோகரமாக ஓடின.

ஒருநாள் அவர் உறவினர் ஒருவர், 'நான் மேற்கே போறேன். அந்த ஊரும் அங்கே உள்ள ஆறும் விசேஷ மானவை. புண்ணிய ஸ்தலம். நீங்களும் வாங்களேன்' என்று அழைத்தார்.

அழகிய சொக்கரும் அவருடன் போனார். கோயிலும் சூழ்நிலையும் மனோரம்மியமாக இருந்தன. கோயிலை ஒட்டிய ஆறும் படித்துறையும் வசீகரமாக அமைந்திருந்தன.

குளித்து விட்டு கோயிலுக்குள் போய் சாமி தரிசனம் பண்ணலாம்' என்றார் உறவினர்.

அவ்வேளையில், ஒரு நிகழ்ச்சி அழகு சொக்குவை பதை பதைக்க வைத்தது.

படித்துறைக்கு சற்று தள்ளி வழக்கமாக ஆட்கள் குளிக்கிற இடத்தை விட்டு விலகி - ஒரு இடத்தில் ஒரு சிறுபெண் ஆற்றில் இறங்கியவள் பயத்தோடு அலறினாள். அவள் உடல் உள்ளே ஆழ்ந்து கொண்டிருந்தது. அவளைப் பிடித்து இழுக்க முயன்று கொண்டிருந்தான் ஒருவன். அவனும் ஆற்றுக்குள் ஆழ்த்து கொண்டிருந்தான்.

பதறிப் போன பிள்ளை அவர்களுக்கு உதவ முன்னே பாய்ந்தார்.

'அண்ணாச்சி... அண்ணாச்சி... போகாதீங்க... அது புதை மணல் உள்ள இடம். சொறிமணல் ஆளை உள்ளே இழுத்திரும் அண்ணாச்சி...'

உறவினர் அலறினார்.

ஆனால் அழகுசொக்கு ஆவேசமாகப் பாய்ந்து அந்த இடத்தில் காலூன்றினார். புதைந்து கொண்டிருந்த ஆளைப் பிடித்து இழுக்க முயன்றார். அம்முயற்சியிலேயே அவரும் ஆற்றினுள் புதைந்து போனார்.

'ஐயோ அண்ணாச்சி!' என்று கதறினார் உறவுக்காரர். அந்த இடத்தில் சிறு கும்பல் கூடியது.

'இந்த ஆத்திலே இந்த இடம் சண்டாளமில்லா! எத்தனை உசிருகளை காவு கொண்டிருக்கு! இன்னிக்கே மூணு உசிருக பலியாயிட்டிதே' என்று புலம்பினார் ஒருவர்.

'விதி வசம் அப்படி!' என்று முனகினார்கள் பலர்.

ஆறு ஆறு எனத் தவிச்சாரு அண்ணாச்சி. ஆத்திலேயே ஐக்கியமாயிட்டாரு. அவர் ஆத்மா சாந்தி அடைஞ்சிரும். அதிலும் ரெண்டு உசிரைக் காப்பத்தத்தானே தன் உயிரைக் கொடுத்திருக்காரு. நல்ல சாவுதான்.

உறவுக்காரர் தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்டார் இவ்விதம்.

# 26. மணநிலை

அவன் - பெருமாள். சாதாரண மனிதன்.

அவ்வேளையில் அசாதாரண மான சூழ்நிலையில் தனித்து விடப்பட்டிருந்தான்.

அதனாலேயே அவன் உள்ளம், இனம்புரிந்து கொள்ள முடியாத உணர்வுகளினால் கனமேறிக் கொண்டிருந்தது. ஒருவித பயம், குழப்பம், அழுத்தும் சோகம், ஏதோ ஒரு வேதனை கவிந்து, கணத்துக்குக் கணம் பாரமாகி வந்தன.

அவன் பார்வை ஒரு மிரட்சியுடன், மேலும் கீழும்: அங்கும் இங்கும், ஏறி இறங்கிப் புரண்டு அலைபாய்ந்தது. அவன் கண்களில் பட்டனவெல்லாம் அவனை அச்சுறுத்தின.

மலைகள். எல்லாப் பக்கங்களிலும் மலைப்பகுதிகள். விரிந்து பரந்து கிடந்தன. ஓங்கி நிமிர்ந்து நின்றன. முண்டும் முடிச்சுமாய் முகடுகள் தொங்குவனபோல் தென்பட்டன. ஒருபுறம் விண்ணைத் தொடமுயலும் உயர் சுவர் வளைந்து நெளிந்து சென்றது, பாதை சற்றுத் தள்ளி சரிவாக இறங்கிக் கிடந்தது மலை. அதை ஒட்டிப் பெரும் பள்ளம். நெடுகிலும் உயர் மரங்கள். பச்சை செறிந்த மரத்தலைகள், வகை வகைப் பூக்கள் காடாய் அடர்ந்து வளர்ந்த செடிகள், கொடிகள்.

அவை பெருமாளுக்குப் பயம் தந்தன. தனிமையே அவனை அச்சுறுத்தியது. ஆழ்ந்த அமைதி - சத்தங்களற்ற இயற்கைச் சூழ்நிலை - அவனைக் கலவரப்படுத்தியது.

கண்கள், வறண்ட கற்பாறைகளின் அடர் வளர்த்தியை, விதம் விதமான அடுக்குகளை, அவற்றின் நீள அகல உயரங்களைப் பிடித்துத் தந்தன. செடிகள், கொடிகள், மரங்கள் எல்லாம் அவனை வளைத்துப் பிடித்துச் சிக்கலில் மாட்டி வைக்கத் தயாராக நிற்பன போல் அவனுக்குத் தோன்றின.

பெருமாள் நடந்து கொண்டிருந்தான். மலையடிவாரச் சிற்றூரிலிந்து புறப்பட்டு, நடந்து, நடந்து, ஏறி ஏறி, மலைப் பகுதிகளூடே வெகுதூரம் வந்திருந்தான். இன்னும் ஏறிப் போயாக வேண்டும் அவன். தனித்து விடப்பட்ட உணர்வு அவனைத் தொல்லைப் படுத்தியது. பெரும் சுவர்கள் மாதிரி ஓங்கி நிமிர்ந்து நின்ற மலைப் பகுதிகள். எங்கெங்கும் காட்சி தந்த மலைமுகடுகள், மலையின் மிக உயர்தூரத்து முடிகள் - மொத்தத்தில் கற்பாறைகளின் பூதாகாரத் தோற்றங்கள் - அவனை மிகப் பாதித்தன. தான் தனியனாய் இங்கு வந்து அகப் பட்டிருக்கவேண்டாம் அவன் ஏற்றுக் கொண்ட பணியை வேறு ஒருவனிடம் கொடுத்திருக்கலாம் என்று அவனுள் எண்ணம் ஓடியது.

ஊர்க்காரர்கள் - முக்கியமாக பெண்கள் - அவனிடம் அந்த வேலையை ஒப்படைத்தபோது அவன் துணிச்சலோடுதான் கிளம்பினான். நீண்டு, நெடிது உயர்ந்து, பசுமையாய் வளர்ந்து காணப்பட்ட மலைத்தொடர்மீது, மலையின் மீது மலையென ஓங்கி நின்ற மலைப் பகுதிகள் இரண்டு மூன்றைக் கடந்து மேலே போக வேண்டும். அங்கே கோயில் கொண்டிருந்த மலை நம்பிக்கு பூசனை செய்ய அநேகர் போயிருக்கிறார்கள். அவர்கள் முக்கியமான - இல்லாமல் தீராது என்ற தன்மை உடைய - இரண்டு பூசைப் பொருள்களை எடுத்துச் செல்ல மறந்து விட்டார்கள்.

விடுபட்டுப் போன பொருள்களை மலைமீதுள்ள ஊர்வாசிகளிடம் கொண்டு கொடுக்கும்படி கீழே இருந்தவர்கள் பெருமாளைக் கேட்டுக் கொண்டார்கள். வேண்டுவது போலவும், கெஞ்சுவது போலவும் கோரினார்கள். 'உனக்குப் புண்ணியம்ப்பா. பூசைக்குரியது. இது இல்லாமல், சாமி குத்தம் ஏற்பட்டுவிடப்படாது' என்று பெண்கள் பேசினார்கள். 'நம்பிக்கையான ஆளு வேறு யாருமில்லை. நீதான் போய் இதுகளைக் கொண்டு அவங்ககிட்டே கொடு. நீ இந்தப் பாதையிலேதான் முன்னாலே கூடப்போய் வந்திருக்கியே. நீ ஆம்பிளைதானே! ஒத்தையிலே போக முடியாதா என்ன உன்னாலே?' என்று அவனுக்கு உந்துதல் அளித்தார்கள்.

அவனும் பூசைப் பொருள்களுடன் கிளம்பிவிட்டான். அவை ஒரு சுமையும் இல்லை. ஒது துணிப் பையில் கனமற்றே இருந்தன.

பெருமாள் நடந்தான். தனிமையும் தானுமாய் - மலைப் பகுதிகளினூடே சென்ற ஏற்ற இறக்க ஒற்றை யடித் தடத்தின் வழியாக. நடக்க நடக்க வழி வளர்ந்து கொண்டே இருந்தது.

கற்சுவரென, பெரும் மதிலென, வளர்ந்து காணப்பட்ட மலையின் தொடர்பகுதிதான் அவனுக்குத் துணை வந்தது. அதன் தோற்றம் அவனுக்கு அலுப்பு ஏற்படுத்தியது. அதனுடைய உயரமும், பரப்பும், சர்வ வியாபகமும் அவனை என்னவோ செய்வது போலிருந்தது. மலையின் நெடுகிலும், பள்ளத்தாக்கு களிலும், சரிவுகளிலும், தூரத்து உயர்முடிகளிலும் மௌனமாய் நின்ற மரங்களின் அடர்த்தியும், காட்டின் செறிவும், மிகமிக உயரே விரிந்து கிடந்த வானமும் அவனைச் சின்னவனாய், அல்பமாய், உணரச் செய்தன. இவற்றின் அருகே, இவற்றின் நடுவே, நாம் மிகச் சிறு உருவம்; நாம் ஒன்றுமே யில்லை என்றொரு நினைப்பு அவனுள் ஊர்ந்தது.

நடக்க நடக்க, உயர்ந்து செல்லும் தனிப் பாதையில் மேலே ஏற ஏற, இந்தச் சிறுமை உணர்வு. வலுப்பெற்றது. அது ஏன் - என்னது என உணர முடியா ஒருவிதக் குழப்பத்தை - அர்த்தம் புரிந்து கொள்ள முடியாத ஒரு பீதியை அவனுக்குள் பரவச் செய்தது.

அது பகல் நேரம்தான். வெயில் ஒளிமயமாய்ப் படிந்து கிடந்தது. சூழ்நிலை - மலைப்பகுதிகள் மரங்கள், உயர்வானம் - எல்லாம் பளீரெனப் பிரகாசித்தன. அவை அவனுடைய வெறுமையை, மனிதனின் சிறுமையை, தனக்கு எடுத்துக் காட்டுவதாகவே பெருமாளுக்குத் தோன்றியது. அவனுள் ஒரு வேதனை - அமைதியற்ற தன்மை - அழுத்தியது. திக்குத் தெரியாத பெரும் வெளியில் துணையற்று விடப்பட்ட சிறு பிள்ளை என அவன் தன்னை உணர்ந்தான். தனக்கு ஆதரவாக யாரும் இல்லாத நிலையில், ராட்சதத்தனமான சுற்றுப்புறத்தில், செயலற்ற தன்மையில் தனித்து விடப்பட்ட ஒரு பரிதாப நிலையில் அவன் இருப்பதாக அவன் மனம் கருதியது.

அந்த நிலை அவனது சோகத்தை அதிகப்படுத்தியது. ஓங்கி ஓங்கி வீசி எழும் அலைகள் புரளும் கடல் ஓரத்தில் முன்பொரு சமயம் அவன் அப்படித்தான் உணர்ந்தான். பாலை என விரிந்து கிடந்த ஒரு மணற் பெருவெளியில் ஒரு சந்தர்ப்பத்தில் இத்தகைய உணர்வு அவனை இப்படித் தாக்கியதுண்டு. இப்போது இந்த நீண்ட நெடிதுயர்ந்த - தனிமையின் ஆழ்ந்த அகன்ற உயர் சூழலில் பெருமாள் பெரிதும் பாதிக்கப் பட்டான்.

எதுவும் செய்யத் திராணியற்ற சிறுபிள்ளையாய்த் திகைத்து விட்டபெருமாள், இப்போது அழுதான். பொங்கிப் பொங்கி அழுகை எழ, அப்பாவியென அழுதுகொண்டே அவன் நடந்தான்.

இத் தருணத்தில், தனக்குத் தெரிந்த மனிதர் யாரையாவது காண வேண்டும் என்றொரு விசித்திர எண்ணமும் அவன் உள்ளத்தில் நெளிந்தது.

சில சமயம் அதிசயமாக மனிதரின் ஆசை - கனவு அல்லது தீவிர எண்ணம் - நிறைவேறி விடுவதும் உண்டு. பெருமாளுக்கும் அப்படி ஒரு பேறு வாய்க்க வேண்டும் என்றிருந்தது.

பெருமாளின் ஊர்க்காரனான கைலாசம் எதிரே வந்து கொண்டிருந்தான். உயரே இருந்து இறங்கி வரும் ஏதோ உருவமாய்த் தோன்றி, பிறகு அது ஓர் ஆள் எனத் தெரிந்து, அது 'அட, நம்ம கைலாசம்!' என்று பெருமாளுக்குப் புரிவதற்கு, சிறிது நேரம் தேவைப்படத்தான் செய்தது.

அப்பவும் பெருமாளின் அழுகை தொடர்ந்து கொண்டு தானிருந்தது.

கைலாசம் நெருங்கி வந்ததும் வியப்புடன் பெருமாளைப் பார்த்தான். அவனிடம் ஏதோ சரியில்லை என்பது புரிந்தது அவனுக்கு. 'என்ன பெருமாள்? என்ன விஷயம்?' என்று கேட்டான்.

பெருமாள் மலையையும் சரிவுகளையும், பக்கத்துப் பள்ளத்தாக்கையும் பார்த்தபடி நின்றானே தவிர, தன் உணர்ச்சிகளை வாய்விட்டுச் சொல்லும் திராணியைப் பெற்றானில்லை.

'என்னடே, இங்கே எப்படி வந்தே? ஏன் அழுகிறே?' என்று பரிவுடன் விசாரித்தான் கைலாசம்.

'ஒண்ணுமில்லே!' என்று முணு முணுத்தான் பெருமாள்.

கைலாசம் சிரித்தான். அவன் சந்தோஷமாக இருந்தான். ''நாங்க பூசை செய்யவேணும்னு நேற்றே புறப்பட்டு

வந்தோமா? மேல் மலையை, நம்பி கோயிலை, அந்தி நேரத்திலே அடைந்து விட்டோம். ராத்திரி அங்கே உள்ள செங்கத்தேறி கட்டடத்திலே தங்கினோம்... ஏ பெருமாள்! மலைமீது ராத்திரி வேளையில் தங்கியிருப்பது எவ்வளவு அற்புதமான அனுபவம் தெரியுமா? ஆகா, குளிர், பனிப் படலம். அருமையான நிலா ஒளி. 'எங்கும் அமைதி.' ஆனாலும் உண்மையான அமைதி கிடையாது.

விதவிதமான பூச்சிகள் வண்டுகள் ஓயாமல் இரைச் சலிட்டுக் கொண்டே இருக்கின்றன. ரகம் ரகமான ஒலிகளின் கலவை. திடீர்னு இராப் பறவை ஒன்று அலறுது. ஏதோ ஒரு மிருகம் கத்துது. தூரத்திலே ஓடுகிற ஆற்றுத் தண்ணீர், மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுகிற ஓசை... அது ஓடுகிற மெல்லொலி பின்னணி இசைபோல ஒலித்துக் கொண்டே யிருக்கிறது...

'பெருமாள்! நீ கவனிச்சியா? எங்கும் வளர்ந்து நிற்கிற மரங்கள். செறிவாகத் தென்படுகிற பசுமைப் பரப்பு. செடி கொடிகள். மலையின் பகுதிகள். தூரத்து மலைமுடிகள். இந்த வானம்... இதெல்லாம் எவ்வளவோ ஆனந்தத்தை உண்டாக் குது. மனம் விசாலமாகி, இயற்கையோடு சேர்ந்து, உயிரே உயிரே பறக்கத் தொடங்குது. இந்த மண்ணும், மலையும், மரமும், வானமும் நம்மோடு சொந்தம் கொண்டாடுகிற மாதிரித் தோணலையா? நாமும் இவற்றுடன் உயர்ந்து நிற்கிற மாதிரி - இந்த மலையெலாம் நான்; மரங்களும் விண்ணும் நான்; எல்லாமே நான் என்று பெருமைப்பட வைக்கிற ஓர் உணர்வு நம்முள் சிலிர்த்தெழுகிறது. இந்த மலையை, மண்ணை, அருவியை, விண்ணை, மனித சமுதாயத்தை அப்படியே தழுவிக் கொள்ளவேண்டும் என்றோர் எழுச்சி ஏற்படுகிறதே. நீ ஏன் வருத்தமா இருக்கிறே, பெருமாள்? ரொம்ப நேரமா நீ அழுகிற மாதிரித் தெரியுதே? ஏன் அழறே?''

பெருமாள் பெருமூச்செறிந்தான்.

''பூசை செய்ய வந்தவங்க முக்கியமான பூசைச் சாமான் இரண்டை எடுத்திட்டு வர மறந்து போனாங்க. என்னை அனுப்பியிருக்காங்க, கீழே போயி அதுகளைக் கொண்டுவர'' என்றான் கைலாசம்.

''இதோ இருக்கு. கீழே உள்ளவங்கதான் என்கிட்டே கொடுத்து அனுப்பினாங்க'' என்று பெருமாள் பையை நீட்டினான்.

''நல்லதாப் போச்சு... வா, கோயிலுக்குப் போவோம்'' என்று அவனை அழைத்தபடி திரும்பி நடந்தான் கைலாசம்.

போகிறபோதே அவன் மலையின் கம்பீரத்தை, அதன் வனப்பை வியந்து பேசினான், 'மலை மட்டுமல்ல; கடலும், வானின் விரிவும், இயற்கையின் எடுப்பான, மிடுக்கான, வனப்பான சக்திகள் பலவும் இன்னும் கிளர்ச்சி ஏற்படுத்தும். மனிதன் இவற்றோடு இணைந்தவன், இவற்றால் ஆனவன், இவற்றை ரசித்துப் பயன்படுத்தி அனுபவிக்கக் கற்றவன் என்ற பெருமித உணர்வு எனக்குள் உண்டாகும். உனக்கு எப்படியோ?'' என்று பெருமாள் முகத்தைப் பார்த்தான்.

''நான் சாதாரண ஆளப்பா. நீ கவிஞன். கவிதை எழுதாவிட்டாலும், கவிஞனாக வாழ்கிறவன்'' என்று பெருமாள் சொன்னான்.

காசுகளைக் குலுக்கிப் போட்டது போல், கலகலவெனச் சிரித்தான் கைலாசம்.

# 27. மன தைரியம்!

'ஆச்சி, பொழுது விடியறதுக்கு முன்னால் நீ ஆத்துக்குப் போவையில்லா, அப்ப என்னையும் கூப்பிடு. நானும உன்கூட ஆத்துக்கு வாறேன் ஆச்சி!' - தெரு வாசலில் நின்று கொண்டு சிவகாமி உரத்த குரலில் பேசினாள்.

வீட்டுக்குள் இருந்த வள்ளி ஆச்சிக்கு எரிச்சல் ஏற்பட்டது. 'ஏ கூறுகெட்ட கோப்புரம்! வாசல்லே நின்னுக்கிட்டு ஏன்ட்டி இப்படிக் கத்துதே?' என்று நீட்டி முழக்கினாள்.

பக்கத்து வீட்டுப் பேத்தி மூஞ்சியை சுளித்தாள். 'நீ வீட்டக்குள்ளே இருந்துக் கிட்டு கத்துறது எட்டு வீட்டுக்கு கேக்கு. நான் சத்தம் போட்டு பேசுனதிலேதான் பொத்துக்கிட்டு தாக்கும்' என்று குறை கூறினாள்.

'அதுக்கில்லேட்டி. சித்தெ உள்ளே வா, நான் சொல்லு தேன்,' என்று பிரியமாக அழைத்தாள் ஆச்சி.

என்ன விசயம்னுதான் தெரிஞ்சுக்கிடலாமே என்று மனம் முண முணக்க, செல்ல நடை நடந்து சிவகாமி உள்ளே போனாள். 'என்ன ஆச்சி?' என்று கேட்டாள்.

'அந்தி சந்தியிலே, முந்திக் கறுக்கு நேரத்திலே, வாசல்லே, தெருவிலே நின்னுக்கிட்டு, நம்ம விருப்பத்தை, ஆசையை, வாய்விட்டுச் சொல்லப்படாது சிவகாமி.'

'சொன்னா என்னவாம்?' என்று குறுக்கு விசாரணை பண்ணினாள் பேத்தி.

'சூரியன் மறஞ்சு, கருகருன்னு இருட்டு வாற நேரத்திலே காத்து கறுப்புகளெல்லாம் மானத்திலே குறுக்கும் நெடுக்குமா திரியும்...'

'காத்து கறுப்புகன்னா என்ன ஆச்சி?'

'அதுதான்ட்டி பேய், பிசாசுக, கெட்ட ஆவிக. அதுக யாரை புடிக்கலாம், எவரை மயக்கி இழுத்துக் கிட்டுப் போயி அடிச்சு ரத்தம் குடிக்கலாம்னு அலையும். மனுசங்க சொல்றதை அதுக கேட்டுக்கிட்டு, இருட்டோடு இருட்டா கள்ளத்தனமா வந்து, குரலு மாத்திக் கூப்பிட்டு, கூடவே கூட்டிக் கிட்டுப்போகும். சமயம் பாத்து அடிச்சுப் போடும்' என்று உரிய பாவங்களோடு சொல்லி முடித்தாள் ஆச்சி.

பேத்தி சிவகாமிக்கு உள்ளுக்குள்ளே உதைப்பு தான். இருந்தாலும் நீட்டி முழக்கினாள்: 'போ ஆச்சி, நீ ஒருத்தி! அப்படில்லாம் நடக்குமா என்ன?'

'நீ சின்னஞ் சிறுசு, உனக்கு என்ன தெரியும்!' என்றாள் வள்ளி ஆச்சி.

'நீ தெரு வாசல்லே நின்னு கத்துதே, விடியக் காலையிலே என்னையும் ஆத்தக்குக் கூப்பிடுன்னு. அது ஒரு இது காதுலே விழுந்ததுன்னு வச்சுக்கோ. ஓகோ இப்படியா சேதின்னு தலையை ஆட்டிக்கிட்டுப்போயிரும். அப்றம் அதிகாலையிலே எனக்கு முன்னாடியே வந்த அது ஏட்டி சிவகாமி, ஏந்திரி ஏந்திரி. நேரமாச்சு, ஆத்துக்கு வரலியான்னு கூப்பிடும். நீ என்னோட

ஞாபகத்திலேயே இருப்பியா; உடனே நான்தான் கூப்பிடுதனாக்கும்னு நெனச்சிக்கிட்டு, ஆத்துக்கு கிளம்பிருவே. அது என்னை மாதிரியே உருவம் காட்டி உன்னோட கூட வரும் சரியான இடமும், நேரமும் வாய்ச்சதும், உனக்குள்ளே ஒரு மாதிரி பயம் தோணும். அம்புட்டுத்தான். அது உன்னை அடிச்சுப் போடும்...'

வள்ளி ஆச்சி இழுத்து நீட்டி சுவாரஸ்யமாகப் பேசப் பேச, சிவகாமிக்கு உடல் நளுக்கிக் கொடுத்தது. மனசிலே ஒருவிதமான பீதி பிறந்தது. 'நெசம்மாவா ஆச்சி, இது மாதிரில்லாமா நடக்கும்?' என்று மெதுவாகக் கேட்டாள்.

'நடக்குமாவாவது! நடந்திருக்கேட்டி, நம்ம ஊரிலேயே நடந்திருக்கு', என்று பெருமையாகச் சொன்னாள் ஆச்சி.

'எப்ப ஆச்சி?' பேத்திக்கு உள் பயத்தோடு, விஷயத்தை தெரிந்து கொள்ளவேணும் என்ற அவாவும் வேலை செய்தது.

'இப்படி இரி, சொல்லுதேன்', என்றால் ஆச்சி. 'இன்னம் நல்லா இருட்டலே. கொஞ்சம் நேரம் கழிச்சு விளக்கை பொருத்தலாம்', என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். ஆரம்பித்தாள் -

'நம்ம மேலத் தெரு இரை கக்கியா புள்ளை இருக்காருல்லா...'

'அது யாரு ஆச்சி இரை கக்கியா புள்ளை? அப்படியுமா ஒரு ஆளுக்கு பேரு இருக்கு?' என்று சிவகாமி அதிசயித்தாள்.

'போட்டி! உனக்கு எல்லாம் அதிசயம் தான். அது அவரோட சொந்தப் பேரு இல்ல. அவருக்கு நல்லபேரு உண்டும். வெயிலு கந்தநாத பிள்ளைன்னு.

'வெயிலுப் பிள்ளை நல்லா வயிறு முட்ட சாப்பிடுவாறு. சாப்பிடும்போது, சாப்பிட்டு முடிச்சதும் நெறைய தண்ணீரைக்

குடிப்பாரு. பெரிய செம்புக்கு ஒரு செம்பு தண்ணி குடிச்சிரு வாரு. அது சவம் எதுக்களிச்சிக்கிட்டே இருக்கும். அதுனாலே அவரு துப்பிக்கிட்டே இருப்பாரு. எச்சியிலே தன்ணியும் சோத்துப் பருக்கையும் கலந்து வரும். இப்படி ரொம்ப நேரத்துக்கு கக்கிய படி இருப்பாரு. இதைப் பார்த்த ஒருத்தன் இரைகக் கியா பிள்ளைன்னு அவரை சாட்டிப் பேசினான். மத்தவங்களும் சொல்ல ஆரம்பிச்சாங்க அதுவே அவருக்கு ஒரு பேரா நிலைச்சிட்டுது.'

'சரி, என்னமோ பேயிபத்தி சொல்ல ஆரம்பிச்சியே?' என்று பேச்சை உரிய தடத்திலே திருப்பினாள் சிவகாமி.

'அதைத்தான் சொல்லவாறேன். இந்த இரைகக்கியா பிள்ளையோட அப்பா மாரி ஆடும்பெருமாள் பிள்ளை...'

'அது அவரு நெசப்பேரா, இல்லை, எதாவது காரணத் தாலே ஏற்பட்டபேரா ஆச்சி?' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் சிவகாமி.

'இத அவரோட சொந்தப் பேரு. அப்பா, அம்மா வச்ச பேருதான்... அவரு கீரைத் தோட்டம் போட்டிருந்தாரு. ஊருக்கு வெளியே, அரச மரமும், தெப்பக்குளமும் இருக் குல்லா.. அது பக்கத்திலே இப்ப பொட்டலா, கல்லும் - கட்டியும் கட்டாந்தரையுமா கிடக்குதே, அது முன்பு தோட்டமா பச்சைப் பசேல்னு இருந்த இடமாக்கும். பக்கத்துப் பொட்டலு தோட்டம்தான். அதிலே ஒரு கிணறு, துலாக் கல்லு எல்லாம் இருக்கு - பாத்திருப்பியே? அந்தக் காலத்திலே அங்கே அரைக் கீரை, நல்ல தண்டுக்கீரை, வெண்டை, சீனி அவரைக்காய், மஞ்சள் எல்லாம் பயிர் பண்ணி வந்தாங்க. எல்லாம் செழிப்பா வளர்ந்து பலன் கொடுத்துக்கிட்டுத்தான் இருந்தது.

'புறகு, புறகு மக்களுக்கு சோம்பேறித்தனம், சுகவாச நினைப்பு, நாகரிகம்னு என்னென்ன வெல்லாமோ ஏற்பட்டுப் போச்சு. ஊரு ரொம்ப மாறிப் போச்சு...'

'அதுக்கு நாம என்ன ஆச்சி பண்ண முடியும்? காலம் செய் கோலம் - காலத்துக்கு தக்கபடிதான் மனுசங்களும் நடந்துக் கிடுறாங்க,' என்று பெரியதனம் பண்ணினாள் பேத்தி.

'மாரியாபிள்ளை தோட்டம் பெரிசு. பக்கத்து தோட்டத் தையும் சேர்த்து பயிரு பண்ணியிருந்தாரு அவரு. அதுனாலே ரொம்ப நேரம் தண்ணி இறைக்கணும். துலாவினாலேதான். கிணத்திலே இருந்து தண்ணி இறைச்சுக் கொட்டும் ஒரு ஆளு. ஒருத்தரு பாத்திகளுக்கு சீரா தண்ணீ பாய விடும். வெள்ளங் காட்டிலே வேலைக்குப் போயிருவாங்க. தெக்குத் தெரு மாடசாமி மாரியாபிள்ளைக்கு ஒத்தாசை பண்றது வழக்கம்.

'ஒரு தரம் முந்திக் கருக்கல்லே ரெண்டு பேரும் வெளித் திண்ணையிலே இருந்து பேசிக்கிட்டு இருந்தாங்க. அப்ப மாடசாமி கேட்டான், 'நாளைக்கி கீரைக்கு தண்ணி இறைக்க வேண்டிய முறை இல்லியா அண்ணாச்சி'ன்னு. ஆமா, மாடசாமி! 'நாளைக்கு வெள்ளி முளைக்கதுக்கு முன்னாடியே வந்திரு; சீக்கிரமே போயி பாய்ச்சிப் போடுவோம். வெயிலு வாறதுக்கு முன்னாடி வேலை முடிஞ்சிரும்'னு மாரியா பிள்ளை சொன்னாரு. மாடசாமியும், 'சரி அண்ணாச்சி, அதிகாலை யிலேயே வந்து குரல் கொடுக்கே'ன்னு சொல்லிட்டுப் போனான். ரெண்டு பேரும் சத்தமாத்தான்பேசினாங்க. நம்ம ஊரிலே யாரு மெதுவா பேசுறாங்க? பொதுவா எல்லாருமே தொண்டைத் தண்ணி வத்தி ராப்லே கத்திக் கத்தித்தானே பேசுறாங்க, இல்லையா?'

'ஊம்ம்' கொட்டினாள் பேத்தி. 'அதிகாலையிலே மாடசாமி வந்து மாரியாபிள்ளையை எழுப்பினாராக்கும்?'

'அங்கேதான் இருக்குது விசயம்!' என்றாள் ஆச்சி. 'விடிய துக்கு ரொம்ப நேரம் கிடந்தது. 'அண்ணாச்சி, அண்ணாச்சி யோவ்' கூப்பிடும் குரல் கேட்டு அரக்கப் பரக்க எழுந்திருச்சாரு

மாரியா பிள்ளை. பனியும், குளிருமாத்தான் இருந்தது. அதைப்பாத்தா முடியுமா? ராத்திரியே துலாக் கயிறு, தண்ணி இறைக்கிற பெரிய டப்பா, மம்பட்டி எல்லாம் ரெடியா வச்சிருந்தாரு. அது களை எடுத்துக்கிட்டு அவரு கிளம்பினாரு.

மாடசாமி முன்னாலே போற மாதிரி தெரிஞ்சுது. அவரு தூக்கம் தெளியாமலும், தண்ணி பாய்ச்சிற நெனப்போடவும் நடந்ததுனாலே எதையும்சரியா கவனிக்கவுமில்லே. தோட்டத் துக்குப் போனதும் டப்பாவை துலாவிலே முறைப்படி கட்டினாரு. மாடசாமி, முதல்லே நீ தண்ணி இறைச்சுக் கொட்டு. நான் கடைசியிலே இருந்து பாத்திகளுக்கு பாய்ச்சிறேன். அப்புறம் நான் இறைக்கிறேன்னு சொல்லிட்டு, மம்மட்டி யோட போனாரு. மடையைத் திறந்து பாத்திகளுக்கு சீரா பாய்ச்சினாரு. ஆனா, அவரு வேலை செய்ற வேகத்தைவிட வேகம் வேகமா தண்ணி ஓடி வந்துது. மங்கலான நிலா வெளிச்சம். துலா ரொம்ப வேகமா மேலேயும் கீழேயும் போய் வருது. தண்ணீர் கால்வா, வரப்பு எல்லாத்தையும் உடைச்சுக்கிட்டு வருது. இது மனிசன் இறைக்கிற வேகமாத் தெரியலியேன்னு அவர் மனசுக்குப் பட்டுது. மானத்தைப் பாத்தாரு. விடி வெள்ளியையே காணோம். அடடா, நாம மோசம் போயிட்டோமோன்னு அப்பதான் அவருக்குப் புலப்பட்டுது.'

'என்ன ஆச்சி அது?' என்று பதட்டம் காட்டினாள் பேத்தி.

'மாரியா புள்ளைக்கு புரிஞ்சு போச்சு. பேயிதான் நம்மை ஏமாத்தி இழுத்துக்கிட்டு வந்திருக்குன்னு நெனச்சாரு. அம்மா, தாயே! அறமளத்தா, நீதான் என்னை காப்பாத்தனும்னு மனசிலே சொல்லிக்கிட்டாரு. அறம் வளர்த்த நாயகி என்ற அம்மன்தான் அவரோட குலதெய்வம். அம்மனை நெனச்சதும் அவரு மனசிலே ஒளி தோணிச்சு. அவரு பயப்படலே. அறமளத்தா, அறமளத்தான்னு சொல்லிக்கிட்டு...

'மாரியா பிள்ளை என்ன செஞ்சாரு தெரியுமா? மம்பட்டியை கீழே வச்சாரு. தான் கட்டியிருந்த தலைப்பாவை எடுத்து மம்பட்டிக்கையிலே நைசா வச்சாரு. அதைப் பார்க்கையிலே, தலைப்பாக் கட்டிய ஆளு குத்த வச்சிருக்க மாதிரித் தோணும். அவரு திரும்பிப் பாராம வேகமா நடந்தாரு. தண்டங்கீரையும் ஆமணக்குசெடிகளும் ஆளு உசரத்துக்கு வளர்ந்து அடர்ந்து நிற்கதுனாலே, அவரு வெளியே வந்தது தெரியாது. அவரு அம்மனை நினைச்சுக்கிட்டு, வேகமா வீடு வந்து சேர்ந்தாரு. வாசல்லே நின்னு மூணு தடவை துப்பிப் போட்டு, வீட்டுக்குள்ளே புகுந்து கதவை சாத்தி தாப்பா போட்டாரு. நல்லா மூடி மூக்காடிட்டு படுத்திட்டாரு. மனசு மட்டும் அறமளத்தா பேரை சொல்லிக் கிட்டே இருந்தது.'

'அந்தப் பேயி என்ன செஞ்சுது ஆச்சி?' என்று அவசரப்பட்டாள் சிவகாமி.

'அது பாட்டுக்கு துலாவிலே தண்ணி இறைச்சுக்கிட்டே இருக்கு. அதுக்கா அலுத்தப் போனதும், ஏலே ஏன்னா, நான் தண்ணி இறைச்சிக்கிட்டே இருக்கேன். போதும் போதாதுன்னு சொல்லாம இருந்தா என்னாலே அர்த்தம்னு உறுமூச்சு. ஆங்காரமா வந்தது. ஓகோ, நான் கஷ்டப்பட்டு தண்ணி இறைக்கேன், நீ உக்காந்துக்கிட்டு தூங்குதியாலேன்னு கத்தியபடி ஓங்கி ஒரு அறை அறைஞ்சது. மம்பட்டிக் கைப்பிடி தூள் தூளா சிதறித் தெறிச்சுது. இரும்பு துள்ளி விழுந்தது. பேய் ஓடியே போயிட்டுது. பேய்களுக்கு இரும்புன்னா பயம். அப்பதான் விடிவெள்ளி ரொம்ப பிரகாசமா கிழக்கே தோணிச்சு.'

'இது உனக்கு எப்படி தெரிஞ்சுது ஆச்சி?' என்று இயல்பாகக் கேட்டாள் பேத்தி. அவள் கிண்டல் பண்ணுகிறாளோ என்ற சந்தேகம் ஆச்சிக்கு.

'நல்லா விடிஞ்ச பிறகு மாடசாமி வந்தான். தோட்டத்தைப் பார்த்தான். வெள்ளக்காடா தண்ணி பெருகிக் கிடக்கு. மம்பட்டி கைப்பிடி சுக்கு நூறா சிதறிக் கிடக்கு. அவன் பதறி அடிச்சு மாரியா பிள்ளை வீட்டுக்கு வந்தான். கூட ரெண்டு மூணு பேரும் வந்தாங்க. பிள்ளை மெதுவா எழுந்திரிச்சு வந்தாரு. இப்பிடி இப்படி விசயம்னு சொன்னாரு. மாடசாமியும், மத்தவங்களும் தாங்க பார்த்ததைச் சொன்னாங்க. இது இது இன்னின்னா மாதிரி நடந்திருக்கும்னு ஊகிச் சாங்க. இந்த விசயம் எல்லாருக்கும் ஒரு எச்சரிக்கையா திரும்பத் திரும்ப சொல்லப் படுறது ஊரிலே ஒரு வழக்கமா நிலைச்சிட்டது', என்று வள்ளி ஆச்சி விளக்கினாள்.

'சவத்து மூதி பேயிக ஏன் தான் இந்தப் போக்கு போகுதுகளோ!' எனறு அலுத்துக்கொண்டாள் சிவகாமி.

'நாம முழிப்பா இருக்கணும். பயப்படக் கூடாது. அதுதான் முக்கியம்' என்றாள் வள்ளி ஆச்சி.

# 28. மீனுக்குட்டி

மீனு என்ற மீனுக்குட்டி என்கிற மீனாம்பாளுக்கு நான்கு வயதுதான் ஆகிறது. ஆயினும் அவள் தன்னுடைய பிரசன்னத்தை அவ்வீட்டிலே நிரந்தரமாகவும் அழுத்தமாகவும் நிலைநாட்டி விட்டாள். அவளைப் பற்றி அவள் பாட்டிக்குப் பெருமை; அப்பாவுக்கு அபாரப் பெருமை; அம்மாவுக்குப் பெருமையாவது பெருமை! ஐயோ!

'மீனுக்குட்டி என் தங்கக் கட்டி - என் செல்லக்கண்ணு!' என்று அம்மா வாய் மணக்க, நா இனிக்க, மனம் குளிரப் பேசாத பொழுது கிடையாது என்றே சொல்லிவிடலாம்.

பாட்டி பார்வதி அம்மாளுக்கோ பேத்தியைக் கொஞ்சுவதும், தூக்கி வைத்துக்கொண்டு அலைவதும், 'எங்க ராசாத்தி மீனம்மா இன்னிக்கு என்ன செய்தாள், தெரியுமா?' என்று ஆரம்பித்து, அவளது புரவோலத்தை எடுத்துச் சொல்வதும் தவிர, வேறு வேலை எதுவும் இல்லை என்றே தோன்றும்.

'எங்க மீனு மகா சமர்த்து. வருங்காலத்திலே அவள் பெரிய டாக்டராக வரப்போகிறாளாக்கும்... அப்படியாக்கும்,

இப்படியாக்கும்...' - இந்த ரீதியில் தான் ஒலிக்கும் அவள் அப்பா சொர்ணம் பிள்ளையின் பேச்சு.

மேளம் கொட்டினால், பூசாரி ஆடுகிறான். உற்சாகப் படுத்தினால், குரங்கு கூத்தாடுகிறது. தாளம் தட்டுவதுபோல் பேசி, செல்லமாகப் புகழ்ந்தால், குழந்தை சும்மாவா இருக்கும்? மீனுக் குட்டி இஷ்டம்போல் செயல் புரிந்தாள். பெரியவர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள். அவள் வாயில் வந்ததை எல்லாம் சொன்னாள். அம்மாவும் பாட்டியும் ரசித்துச் சிரித்தார்கள். ஆகவே மீனு மேலும் அதிகமாக உளறினாள். அப்பா வீடு திரும்பியதும், 'இன்னிக்கு மீனுக் குட்டி என்ன செய்தாள் தெரியுமா?' என்று அம்மாவும், 'மீனம்மா எவ்வளவு சாமர்த்தியமாப் பேசுகிறா என்கிறே!' என்று பாட்டியும் 'ரிப்போர்ட்' செய்யத் தொடங்குவர். இதனால் எல்லாம் மீனு பெரியதனம் பெற்று வந்தாள்.

பெரியவர்களின் சுபாவமே விசித்திரமானதுதான். அவர்களுக்கு மனமிருந்தால் கொஞ்சுகிறார்கள். குழந்தையின் சிறு செயலுக்குக்கூட 'ஆகா-ஊகூ' என்று கூவி மகிழ்ந்து போகிறார்கள். வாழ்க்கை வெயில் அவர்கள் உள்ளத்தை வாட்டுகிறபோது, பெரியவர்கள் தங்கள் எரிச்சலையும் கசப்பையும் குழந்தைகளிடம் பிரயோகிக்கிறார்கள். மீனுவின் அம்மாவும் அப்பாவும், பாட்டியும் மனிதர்கள்தானே!

மீனுக் குட்டியை 'ஏ குரங்கே! தரித்திரம்! சனியன்!' என்றும் அவர்கள் திட்டுவதுண்டு. கோபம் அளவுக்கு அதிகமாகி விடுகிறபோது, 'பாவம், நாலு வயசுக் குழந்தைதானே!' என்ற நினைப்பே இல்லாமல், அதை 'மொத்து மொத்து' என்று மொத்துவார்கள். பிறகு, கொஞ்சாமலும் பாராட்டாமலும் இருந்து விடுவார்களா? இருக்கத்தான் முடியுமா அவர்களால்?

மீனம்மாளுக்கு எல்லாமே பழகிப்போய்விட்டது. பெரியவர்கள் அடித்தால், அழவேண்டியது; ஏசினால் பேசாமல்

கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்: அல்லது தானும் கூடாக ஏதாவது சொல்லவேணும். அப்புறம் தன் இஷ்டம்போல் காரியங்களை செய்யவேண்டியது - இந்த விதமாக ஒரு நியதி ஏற்படுத்திக்கொண்டாள் அவள்.

எனவே, மீனுக்குட்டி எல்லோருக்கும் எப்பொழுதும் 'ஓயாத தொல்லை'யாகவே விளங்கினாள். வீட்டில் உள்ள பொருள்களுக்குக் காலன் ஆகத் திகழ்ந்தாள். அவள் உடைத்த சாமான்களுக்கு ஒரு அளவு கிடையாது. கிழித்த புத்தகங்களுக்கு ஒரு கணக்குக் கிடையாது. குழந்தைகள் என்றால் இவ்வாறெல்லாம் செயல்புரியத்தான் செய்யும். பெற்றோர்கள் ஓரளவுக்குப் பொறுத்துக்கொள்வதும் இயல்புதான்.

மீனு பெரியவர்களின் பொறுமையை மிகுதியும் சோதிக்கத் தொடங்கவும், அவர்கள் திட்டமிட்டார்கள், 'அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டியதுதான்' என்று.

'ஐந்து வயசு ஆனபிறகுதான் குழந்தையைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க முடியும். இருந்தாலும் பரவாயில்லை. 'பாலர் பவனம்' என்று ஒன்று இருக்கிறது. ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அங்கு போதனை தருவார்கள். சிறு பிள்ளைகளுக்கு உற்சாகமான பொழுதுபோக்காகவும் இருக்கும்; புதிய புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பும் ஏற்படும்' என்று ஒருவர் சொன்னார்.

சொர்ணம். பிள்ளையும், மீனுவின் அம்மா ஜானகியும் அதைப் பற்றித் திவிரமாக யோசித்தார்கள். 'மீனு நல்ல பெண்தான். ஆனால், வீட்டிலிருந்தால் வீணாகக் கெட்டுப் போகும். எதுவுமே படிக்கமாட்டேன் என்கிறது. வாய் அதிகமாப் பேசுகிறது. வேற்றிடத்திலே, பல குழந்தைகளோடு சேர்ந்து பழகி விளையாடினால்தான் இதுக்கு நல்லது' என்று தீர்மானித்தார்கள்.

ஆகவே, மீனுக்குட்டி பள்ளிக்கூடம் போகத் தொடங்கினாள். புது கவுன்; புது ரிப்பன்; புதிய பை, பலகை, ஒரு புத்தகம், சிரத்தையான சிங்காரிப்பு - அவளே கண் குளிரக் காண்பதற்கு ஏற்ற பொம்மைபோல் காட்சி அளித்தாள். இந்தப் புது அனுபவம்கூட அவளுக்கு ஒரு விளையாட்டு மாதிரித்தான் தோன்றியது. அவளும் அதில் முழுமனசுடன் ஈடுபட்டாள்.

பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்ததும் மீனுக்குட்டி 'பொரிந்து தள்ளுவதற்கு' ஏகப்பட்ட விஷயங்கள் இருந்தன. வாய் ஓயாது பேசி மகிழ்ந்தாள் அவள். பெரியவர்களும் 'காதில் இன்பத்தேன் வந்து பாய'க் கேட்டு ஆனந்தம் கொண்டார்கள். பெருமைப்பட்டார்கள்.

திடீரென்று சிரித்துக்கொள்டாள் மீனு. தான் பெற்ற இன்பம் எதையோ எண்ணிச் சிரிக்கும் மகிழ்ச்சிப் பெருக்கு அது.

'என்னடி அது? மீனுக்குட்டிக்கு சிரிப்பாணி அள்ளிக்கிட்டுப் போகுதே? என்ன விஷயம்?' என்று அம்மா விசாரித்தாள்.

'அங்கே பத்மா, பத்மான்னு ஒரு பெண் இருக்கிறா. அவளை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு' என்றாள் மீனு.

'அப்படியா?'

'அவளுக்கு என்னென்ன வெல்லாமோ தெரியுது, அம்மா. இன்னிக்கு அவள் ராணி என்கிற பெண்ணைக் கூப்பிட்டாள். ராணி கர்வம் பிடிச்ச கழுதை. தனக்கு எல்லாம் தெரியும்னு பெருமை வேறே. அவகிட்டே பத்மா சொன்னாள் - நான் கண்ணை மூடிக்கிட்டு செய்றதை, நீ கண்ணைத் திறந்து கொண்டே செய்வியா? - என்றாள் ஓ, அது என்ன பிரமாதம் ராணி. உடனே பத்மா என்ன செய்தா? தன் ரெண்டு கணணையும் மூடிக்கிட்டு, மண்ணை எடுத்த முகத்திலே போட்டாள். அப்புறம் அதைத் துடைத்தாள். கண்ணைத் திறந்து

கொண்டே, 'சரிடி ராணி, இப்ப நீ சொன்னதுபோல் செய்து காட்டு' என்றாள். அது எப்படிடீ முடியும்னு ராணி சொல்லவும், பத்மா சண்டை பிடித்தாள். கோபம் வருமா வராதா பின்னே? நீ சொல்லும்மா. ராணி வாயடி அடித்தாள். பத்மா அவளைப் பிடிச்சு, அவள் மூஞ்சியிலே மண்ணை அள்ளிப் போட்டா... இப்ப நினைச்சாலும் சிரிப்புச் சிரிப்பா வருது. ராணியோட கண்ணு, மூக்கு, வாயி எல்லாம் மண்ணு. அவ தூ - தூயின்னு துப்பிக் கிட்டு, கண்ணைக் கசக்கிக்கொண்டு...' மேலும் சொல்ல முடியாதபடி மீனுக்குட்டிக்குச் சிரிப்பு பொங்கிவிட்டது.அவள் கைகொட்டிச் சிரித்தாள். கலகலவெனச் சிரித்தாள்.

'ஐயோ! ஐயோ!' என்றாள் ஜானகி. 'அடப் பாவமே!' என்றாள் பாட்டி.

'டீச்சருக்குத் தெரியாதா? டீச்சர் கிட்டே யாருமே சொல்லலியா' என்று கேட்டார் அப்பா.

ஊகும். பத்மாவைப் பற்றி டீச்சர்கிட்டே யாருமே சொல்லமாட்டாங்களே. பத்மாவைத்தான் எல்லோருக்கும் பிடிக்கும்' என்று மீனு உறுதியாக அறிவித்தாள்.

அம்மா அப்பா முகத்தைப் பார்த்தாள். அப்பா வெறுமனே தலையை ஆட்டினார்.

'இப்படி எல்லாம் செய்யப்படாது, கண்ணு. பத்மா துஷ்டப் பெண் போலிருக்கு. அதுகூட நீ சேராதே' என்று பாட்டி உபதேசித்தாள்.

ஆயினும், மீனுக்குட்டியின் உலகத்திலே பத்மா அசைக்க முடியாத மகத்தான சக்தியாகப் புகுந்துவிட்டாள் என்பதை அவர்கள் ஒவ்வொரு நாளும் உணர முடிந்தது. பள்ளிக் கூடத்தில் பகல் பொழுதைப் போக்கிவிட்டு வீடு திரும்பும் மீனுக்குட்டிக்கு, அப்புறம் தூங்கப்போகிற வரையில் பத்மாவின் நினைப்புதான்; அவளைப் பற்றிய பேச்சுதான்.

'தங்கம்னு ஒரு பொண்ணு. அதுக்கு ரொம்பப் பெருமை. நாம ரொம்ப அழகுங்கிற நெனைப்பு அதுக்கு. நான் எப்படி இருக்கேன் தெரியுமா; ரோசாப்பூ மாதிரி இருக்கேனாக்கும் என்பாள்... அதும் மூஞ்சி! ரோசாப் பூவாம்!... அப்படிச் சொல்லையிலே அதுங் கன்னத்தை நறுக்குன்னு கிள்ளனும், ரத்தம் வரும் படியாப் பிறாண்டணும்னு எனக்கு ரொம்ப ஆசை ஏற்படும். பத்மாவுக்கு எப்படி இராது? இன்னிக்கு அந்தக் குரங்குத் தங்கம் வெள்ளை வெளேர்னு ஜோரா ஒரு கவுன் போட்டுக்கொண்டு வந்திருந்தது. நான்தான் ரோசாப்பூ என்று பீத்தியது. பத்மா ஒரு வேலை செய்தாள். டீச்சர் மேசை மேலே இருந்து சிவப்பு மைக்கூட்டை எடுத்தாள். அத்தனை மையையும் தங்கத்தின் சட்டையிலே கொட்டினாள். ரோசாப்பூ சிவப்பாகத் தாண்டி இருக்கும்; இப்பதான் நீ ரோசாத்தி என்று சொன்னாள். அப்ப தங்கத்தைப் பார்க்கணுமே! சரியான செங்குரங்கு ஆகிவிட்டது அது...'

இப்படி ஒரு நாள் மீனு சொன்னாள்.

'டீச்சர் பத்மாவைக் கண்டிக்கவில்லையா?' என்று அம்மா கேட்டாள்.

'கோபிச்சாங்க. இனிமேல் இப்படி எல்லாம் செய்யப் படாதுன்னாங்க' என்றாள் மீனு.

பிறகு ஜானகி சொர்ணம் பிள்ளையிடம் சொன்னாள்: 'இந்த பத்மா என்கிற பெண் ரொம்பவும் மோசமானதாக இருக்கும் போலிருக்குதே. அது மற்றக் குழந்தைகளைக் கூடக் கெடுத்து விடுமே!'

'நானும் அப்படித்தான் நினைக்கிறேன். அது மாதிரிக் குழந்தைகளை ஏன்தான் பள்ளிக்கூடத்தில் சேர்த்து வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை' என்றார் பிள்ளை.

'அந்தப் பெண் விஷயமாக டீச்சரைக் கண்டு பேசினால் நல்லது என்று எனக்குத் தோணுது. நம்ம மீனுவைப் பற்றி நாம்

ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம்தானே?' என்று அம்மா கூறினாள்.

'ஆமாம் ஆமாம்' என்றார் அப்பா.

எண்ணங்கள் எல்லாமே எளிதில் செயல்பட்டு விடுவதில்லை. ஜானகி தன் எண்ணத்தைச் செயலாக்க இயலவில்லை. எவ்வளவோ அலுவல்கள். எத்தனையோ சந்தர்ப்ப பாதகங்கள். 'சரி, நாளை போனால் போச்சு!.. இன்னொரு தடவை பார்த்துக் கொள்ளலாம்' என்று காலத்தை ஏலத்தில் விட்டு வந்தாள் அவள்.

மீனுக்குட்டி பத்மா புராணத்தை விட்டுவிடவில்லை. பத்மா அதைச் செய்தாள், இதைச் சொன்னாள், சசீயின் தலைப் பின்னலைக் கத்திரித்து விட்டாள், தேவகியின் நோட்டிலே கிறுக்கி வைத்தாள், சாவித்திரி புத்தகத்தை எடுத்து மறைத்து வைத்துவிட்டு, அவளை அழ அழப் பண்ணினாள் - இப்படிப் பல திருவிளையாடல்கள். பத்மா என்னதான் செய்வாள் - அல்லது செய்யமாட்டாள் - என்றே சொல்ல முடியாது. அவள் குறும்புக்காரி. துடுக்குத்தனம் பெற்றவள். துணிச்சல்காரி. இதர சிறுமிகளின் வியப்புக்கு உரிய விளையாட்டுப் பிள்ளை, அதனால் விஷமத்தனங்கள் செய்வதில் அவள் மிகு ஆர்வம் காட்டி வந்தாள்.

மீனம்மாளின் பேச்சைக் கேட்ட அம்மாவும் அப்பாவும் பாட்டியும் இவ்விதம்தான் எண்ண முடிந்தது. பத்மா வின் பெற்றோரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ள முடியவில்லை அவர்களால். 'இப்படியும் ஒரு பெண்ணை வளர்ப்பார்களோ!' என்றே அவர்கள் நினைத்தார்கள்.

ஒருநாள் மீனுக்குட்டி முகவாட்டத்தோடு காணப்பட்டாள். 'ஏன், என்ன விஷயம்?' என்று அம்மா வினவினாள்.

'பாவம் பத்மா! இன்னிக்கு டீச்சர் அவளைக் கோபித்துக் கொண்டார்கள். வெளி வாசல்படி அருகேயே நிறுத்தி வைத்துவிட்டாங்க. 'இனிமேல் இது மாதிரி எல்லாம் செய்தால், 'இங்கே வரவேபடாது' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாங்க' என்றாள் மீனு.

'ஏனாம்?'

'சரசு என்கிற சின்னப் பெண்ணை பத்மா பிடித்துத் தள்ளிவிட்டாள். சரசு கீழே விழுந்ததிலே மூக்கில் பலமான அடிபட்டு ரத்தம் வந்துட்டுது. எவ்வளவு ரத்தம்கிறே... யேயம்மா!' என்று மீனு விளக்கம் கூறினாள்.

'வேண்டியதுதான். அந்த பத்மாக் குரங்குக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். அது சரியான பேய்க் குட்டி யாகத்தான் இருக்கும் போலிருக்கு!' என்று ஜானகி அழுத்தமாக அபிப்பிராயம் தெரிவித்தாள். மீனு பத்மாவுக்குப் பரிந்து பேசாமல் இருந்தது அம்மாவுக்குச் சற்றே ஆச்சரியம் அளித்தது.

இதற்குப் பின்னர், மீனுக்குட்டி பத்மாவைப் பற்றி அதிகமாகப் பேசவில்லை. அவள் பேச்சில் பத்மா தலைகாட்டி னால்கூட, இப்பொழுது புதிய பத்மாபோல் தோன்றலானாள். பத்மா திருந்தி விட்டாள் - திருத்தப்பட்டுவிட்டாள் - என்றே ஜானகி எண்ணினாள். அதற்காக டீச்சரை நேரில் பாராட்ட வேண்டும் என்ற ஆசைகூட ஏற்பட்டது அவளுக்கு. ஆனால், அந்த எண்ணத்தைச் செயலாக்குவதற்குத் தேவையான நேரம் அந்த அம்மாளுக்குக் கிடைக்கவில்லை.

முடிவில் அவள் அவசியம் பாலர் பவனத்துக்குச் செல்ல வேண்டிய ஒரு சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது. அங்கு 'பெற்றோர் தினம்' கொண்டாடப்பட்டது. அதற்கு ஜானகியும் போனாள்.

பவனத் தலைவி காந்திமதி அம்மாள் குழந்தைகளின் சுபாவம் பற்றியும் அவர்களை இஷ்டம்போல செயல்

புரியவிட்டு, விளையாட்டு ரீதியிலேயே திருத்தும் முறைகள் பற்றியும் பேசினாள். அவள் கூற்றில் மிகுந்த உண்மை இருந்ததென உணர்ந்தாள் ஜானகி.

விழா நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு, ஜானகி காந்திமதி அம்மாளைச் சந்தித்தாள். அவளுடன், உபதலைவி கல்யாணியும், ஆசிரியை சாரதாவும் இருந்தாகள்.

'நான்தான் மீனம்மாளின் அம்மா' என்று ஜானகி தன்னை அறிமுகம் செய்துகொண்டாள்.

'சந்தோஷம்' என்றாள் காந்திமதி.

'ஓ! மீனுக்குட்டி உங்களைப் பற்றி அடிக்கடி சொல்லு வாள்' என்று சாரதா கூறினாள்.

'உங்களை எல்லாம் சந்திக்க வேணும் என்ற எண்ணம் எனக்கு ரொம்ப நாளாக உண்டு. வேலைகள் அதிகம். அதனால் வர ஒழியவே இல்லை. மீனு எப்படி நடந்து கொள்கிறாள். எப்படிப் படிக்கிறாள் என்று அறிந்துகொள்ளணும்கிற அவாதான்...''

'உங்களைக் கண்டு பேசவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கும் உண்டு. இப்ப சந்தர்ப்பம் ஏற்பட்டதிலே ரொம்ப திருப்தி' என்று கல்யாணி சொன்னாள்.

'மீனு இங்கு வந்து சேர்ந்த புதுசிலேதான் ஒரு மாதிரி இருந்தாள். குறும்புத்தனமும் பிடிவாதமும் அதிகம். ஆனால், வரவர நல்ல பெண்ணாகி விட்டாள். ஆச்சர்யகரமான மாறுதல் தான்' என்று சாரதா அறிவித்தாள்.

'அதற்கெல்லாம் காரணம் பத்மாதான். அவள் போக்கிரி யாக இருந்து, பல பெண்களின் மனசையே கெடுத்திருக்கிறாள். நீங்கள் உங்கள் அற்புதமான பயிற்சித்திட்டத்தினாலே அவளைத் திருத்திவிடவும், அவள் மற்றவர்களுக்கும் நல்ல முன்மாதிரி

ஆகிவிட்டாள். எங்கள் மீனு எதற்கெடுத்தாலும் பத்மாவைத் தான் குறிப்பிடுவாள்' என்று ஜானகி சொன்னாள்.

தலைவி காந்திமதி வியப்புடன் மற்றவர்கள்மீது பார்வை எறிந்தாள். 'பத்மாவா?' என்று ஆச்சர்யக் குறிப்புடன் கல்யாணி சாரதாவை நோக்கினாள்.

சாரதா சொன்னாள்: 'பத்மா என்று எந்தப் பெண்ணையும் மீனுக் குட்டிக்குத் தெரியாதே. உண்மையில் பத்மா என்று யாருமே எங்கள் வகுப்பில் இல்லை!'

'பின்னே மீனு சொன்னாளே. அடிக்கடி தினசரி சொல்லிவந்தாளே!' என்று முனங்கினாள் தாய்.

'மீனுக்குட்டிக்குக் கற்பனை அதிகம். அதை நான் கவனித்திருக்கறேன்' என்று சாரதா ஸர்டிபிகேட் கொடுத்தாள். லேசாகச் சிரித்தாள்.

மீனுக்குட்டியின் கற்பனை சக்தியை எண்ணி மகிழ வேண்டும் என்ற ஆசை ஜானகிக்கு எழவேயில்லை. 'அவள் தினம் பொய்யா சொன்னாள்? நடக்காததை எல்லாம் நடந்ததுபோல் கதைத்தாளா? அல்லது, உண்மையில்தான் செய்தவற்றை எல்லாம், பத்மா என்று எவளோ செய்தது மாதிரி விவரித்தாளா?' என்று குழப்பம்தான் ஏற்பட்டது அவளுக்கு.

என்ன பேசுவது என்றே புரியவில்லை அந்தத் தாய்க்கு. ஆயினும் ஏதாவது சொல்லியாக வேண்டுமே! 'மீனு இவ்வளவு பொல்லாதவளாக இருப்பாள் என்று நான் எண்ணியதே இல்லை' என்று முனங்கினாள் அவள்.

# 29. பிறப்பு

ஒரு பாம்பு.

சுழலும் காலத்தோடு ஊர்ந்து ஊர்ந்து வயதேறிய ஜந்து அது.

அதன் மேனியிலே கண்ணாடிப் பளபளப்பு ஜொலித்தது. இளவெயில் பட்டுத் தெறிக்கும் போது வானவில்லின் வர்ணஜாலங்கள் சிதறிப் பின்னின அதைச் சுற்றி. நடுப்பகலின் சுட்டெரிக்கும் வெயிலிலே செடிகளின் அடியில் அது சோம்பிக் கிடக்கும் பொழுது, சூரியனின் கதிர்கள் அதன் சில பாகங்களை வருடுவது உண்டு. அவ்வொளி பட்டதும் பிறக்கும் பிரதிபலிப்பு என்ன பளிங்கு உமிழும் பகட்டுக் கதிரா?

சில சமயம் ஜிவ்வென்று சீறியெழும் அது. படம் விரிக்கும். நிமிர்ந்து நிமிர்ந்து ஆடும். சொக்கழகுத் தோற்றம். அந்த திமிர் பாவனையிலே, நெளிந்து நெளிந்து அசையும் ஒய்யார நடையிலே, சிந்தை பறிகொடுத்த நாக கன்னிகள் எவ்வளவோ!

எல்லாம் அந்தக் காலத்தில்! கதையாகி விட்டது இன்று.

பெருமூச்செறிந்தது கிழட்டு நாகம்.

'இதுதான் வாழ்க்கை. இன்பமான பிள்ளைப் பருவம் கனவாய் கழிந்தது. மிடுக்கான இளமை உரிந்து விழுந்த சட்டைகளோடு சருகாய் மறைந்தது. என் மேனியின் மிளிர்வும் எழிலும் எங்கோ போயின, காலத்தோடு ஓடி மறையும் அழகியின் மேனி வனப்பு போல. இனி? என்ன, மரணம் தான்.'

பிறப்பு இறப்பு... பிறந்தால் இறக்க வேண்டுமாம். என்ன நியதியோ? சே, வாழ்க்கை எவ்வளவு குறுகியது! - இப்படியும் அதன் உள்ளம் ஒலிசெய்தது.

மரணம் என்ற எண்ணமே அதை உலுக்கி எடுத்தது மேகத்தை உருட்டி வதைக்கும் இடி மின்னல் போல.

சாவின் மென் ஸ்பரிசம் அதன் உடலிலே, உயிரிலே, கிசுகிசு மூட்டி விட்டதா? பின் அந்தச் சர்ப்பம் ஏன் அப்படி புரளுகிறது? பிரசவிக்கும் தாயின் வேதனை அதையும் பற்றிக் கொண்டதோ? அது ஏன் முகத்தில், சடலத்தில், வேதனை நெளிவுகளுடன் சுழல வேண்டும்?

பாம்பு சுருண்டது. புரண்டது. நீண்டது. நெளிந்தது, குறுகிற்று. அதன் மேல் படிந்திருந்த ஒரு போர்வை கழன்றது.

மீண்டும் வேதனை. துடிப்பு. சட்டை நீக்கம். கிருஷ்ண சர்ப்பம் குறுகிக் குறுகி வந்தது, சட்டை கழறக் கழற.

என்ன வியப்பு! முக்கி முனகிய கிழக் கருநாகம் தானா அது? குழந்தையின் குறுகுறுப்பு அதன் கண்களில் ஒளிர்கிறதே! அழகியின் மென்மை எழில் அதன் மேனியில் பளபளக்கிறது. இளமையின் வீர்யம் அதன் அசைவில் தலைகாட்டும்.

இன்ப மூச்சு பயின்ற நாகம், 'அப்பா! துன்பத்தின் பின் இன்பமா? அவ்விதமானால் இன்பத்தை முழு மதிப்புடன் உணர, துன்பமும் தேவைதான். நான் செத்தேனா, பிறந்தேனா?


புரியவில்லை. இனி அதைப் பற்றி எனக்கென்ன கவலை!' என்று நெளிந்து கொடுத்தது.

எங்கோ ஒரு அசட்டுத் தவளை 'கொர்ர... கொர்ர... கொர்' என இசைக்கும் ஒலி காற்றில் மிதந்து வந்தது. பாம்பின் செவியில் பட்டது. கண்களில் மகிழ்வாய் மலர்ந்தது.

சர்ரெனப் பாய்ந்து சென்றது புத்துயிர் பெற்ற கருநாகம்.

அதன் அசைவால் சலனமுற்ற வாயு முணுமுணுத்தது. 'மரணம் இனியது. அதை எதிரேற்க அஞ்சவும் வேண்டுமா? இறக்காமல் எப்படி பிறப்பு இன்பம் பெறுவது? ஆன்மா நெளிவதும் புரள்வதும் தான் இறப்பும் பிறப்பும். காலத்தின் அசைவும் உருள்தலும் பகலும் இரவுமாய் பரிணமிப்பது போல.'

# புண்ணியம் ஆம் பாவம் போம்!



வல்லிக்கண்ணன்

பத்மா பதிப்பகம்